# உதயன்

www.onlineuthayan.com

50 பக்கங்கள் சுடர் 27 கதிர் 344 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை (04/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00





# பிரதம நீதியரசர் விவகாரத்தை கையில் எடுத்தது ஐ.நா.

## ஆணையாளர் நவநீதம்பிள்ளை தீவிர கவனம்

ஜெனிவா, நவ.4

இலங்கையின் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூடுதல் கவனம் செலுத்தி அதுகுறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார் என்று ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நேற்றுத் தெரிவித்தது.

அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசிடம் விரைவில் விளக்கம் கோரும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் 'உதயனி'டம் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருவதால் இலங்கைக்கான தனது விஜயத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் மீள்பரிசீலனை செய்து வருகின்றார் என்று நம்பகரமாக அறியமுடிகின்றது.

குறிப்பாக இலங்கையின் பிரதம நீதியரசருக்கெதிராக நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்கா உட்பட்ட நாடுகள் விமர்சனங்களை முன் வைத்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்கு ஏதா

பார்க்க பக்கம் 4

## 40,000 பேரின் மரணத்துக்கும் பதில் சொல்ல வேண்டும்

நியூயோர்க்,நவ 04

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட 40 ஆயிரம் பேருக்கும் என்ன நடந்தது என்று விளக்கமளிக்கப்பட வேண்டும் என்று, இலங்கை தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் தலைவரான- இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சுகி தருஸ்மன் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறுதல் என்பதன் அர்த்தம் 40 ஆயிரம் மரணங்கள் எப்படி நிகழ்ந்தன என்று விளக்கமளிக்கப்படுவதே. அது இன்னமும் நடந்துவிடவில்லை. இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில், ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட் டுள்ள சாள்ஸ் பெற்றி யின் அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். நானும் நிபுணர் குழுவின் இரு உறுப்பினர்களும் இந்த அறிக்கையை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என்றும் மர்சுகி தருஸ்மன் மேலும் கூறியுள்ளார். (த)

# '13'ஐ அகற்றுவதை இந்தியா ஏற்காது

## அடித்துக்கூறினார் வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்


புதுடில்லி, நவம்பர் 4

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிப்பதை இந்தியா ஒருபோதும் ஏற்காது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்துசமுத்திர வலய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களை சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

• அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டு

பார்க்க பக்கம் 4



## நீதிக்கே நீதியில்லையா?



சூரியகாந்தி பக்.1


நாடெங்கும் உள்ள அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டு நோயாளர்களுக்கான தேவைகள், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன. 2

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசு தனது கடமைகளை சரியாக செய்யாத காரணத்தால்தான் 30 வருடங்களாகப் போர்ச் சூழலில் மக்கள் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது 5


# தீர்வு குறித்த வாக்கெடுப்புக்கு இலங்கை அரசை அழுத்துங்கள்

## மத்திய அரசிடம் கோருகிறார் கருணாநிதி

சென்னை, நவ.4

ஈழத் தமிழரின் அரசியல் தீர்வு என்ன என்பது தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி மேலும் கூறியதாவது:-

டெசோ மாநாட்டு தீர்மானங்களையும், தி.மு.க.வின் கருத்துக்களும் அடங்கிய விரிவான மனுவை ஐ.நா. சபையில் மு.க.ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் நேரில் வழங்கினார்கள். அதில் டெசோ இயக்கத்தின் சார்பில் தி.மு.க. தலைவர் என்ற முறையில் நான் கையெழுத்திட்டு உள்ளேன்.

பார்க்க பக்கம் 4

### பிரதம நீதியரசருக்கு எதிரான

# பிரேரணையை விசாரிக்க ஐ.தே.க. பின்னடிக்கிறது

கொழும்பு,நவ.4

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஆளும் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தொடர்பாக நியமிக்கப்படவுள்ள விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்க பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பின்னடிக்கின்றது. சட்ட ஆலோசனைகளைப் பெறவேண்டும், சட்ட விற்பன்னர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என அது சாக்குப் போக்கு கூறுகின்றது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்தித்து உரையாடி உள்ளார்.

பிரதம நீதியரசருக்கு

பார்க்க பக்கம் 4

# செல்வம் எம்.பியின் மைத்துனர் கடத்தப்பட்டுச் சடலமாக மீட்பு

## பணத்துக்காகக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ.4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் கடந்த 30ஆம் திகதி கடத்தப்பட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பு, செட்டியார் தெருவில் நகை விற்பனைத் தரகராக பணியாற்றி வந்த சின்னத்துரை இந்திரேஸ்வரன் (வயது-53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொழிலுக்காகச் சென்ற பின்னர் அவர் காணாமல் போயிருந்தார். அவர் காணாமல் போயிருந்தமை தொடர்பில் மறுநாள் கொழும்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த முதலாம் திக்தி நானுஓயா, பங்களாவத்தையில் 111ஆம்

பார்க்க பக்கம் 4

# 'திவிநெகும'வை சட்டமாக்க வாக்கெடுப்புக்கும் தயார்

## அமைச்சர் பஸில் கூறுகிறார்

கொழும்பு,நவ 04

உயர்நீதிமன்றம் அறிவுறுத்துமாயின் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாகவேனும் 'திவிநெகும' சட்டவரைவைச் சட்டமாக்குவோம் எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சூளுரைத்தார்.

'வடக்கு மாகாண சபை இல்லாத நிலையில் வட மாகாண ஆளுநர் இந்த சட்டவரைவுக்கு ஒப்புதலளிக்க முடியுமா? என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு இப்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் வியர்க்கியானம் நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

சில சமயம் இந்த சட்டவரைவுக்கான மக்களின் ஒப்புதலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பெற வேண்டிய தேவையும் எழலாம். நாம் அதற்கும் தயாராகவுள்ளோம். நாம் நீதிமன்

பார்க்க பக்கம் 4

# கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நாளை சீனாவுக்கு பயணம்

## வித்தியாதரன் தலைமையில்

கொழும்பு,நவ.4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூவரடங்கிய விசேட பிரதிநிதிகள் குழு ஒன்று சீன அரசின் அழைப்பின் பேரில் பத்து நாள்கள் பயணமொன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை சீனாவுக்கு புறப்படுகின்றது.

இந்தக் குழுவில் தமிழரசுக் கட்சியின் ஊடகத் துறைக்குப் பொறுப்பான உதவிச் செயலாளரும் மூத்த தமிழ் ஊடகவியலாளருமான

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரச வைத்தியசாலைகளில்

# நோயாளர்களுக்கான சேவைகளை மதிப்பிடும் திட்டம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,நவ.4

நாடெங்கிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டு நோயாளர்களுக்கான தேவைகள், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன. விரைவில் இது நடைமுறைக்கு வரவுள்ளது.

நாடெங்கிலுமுள்ள வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை சுகாதார அமைச்சு கொழும்பில் நடத்தியிருந்தது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகள் அனைத்திலும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்த விவரங்களை வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவற்றிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றில் உள்ள சாதக, பாதக விளைவுகள் பற்றி ஆராயப்பட்டு பாதக விளைவுகளைச் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் பணிப்பாளர், அத்தியட்சகர், பொறுப்பதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களாலும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பற்றிய தரவுகள் உரிய படிவங்களில் குறிப்பிடப்பட்டு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு நோயாளர்களுக்கான சேவைகள் குறித்து மதிப்பீடு செய்யப்படும்.

மக்களின் வரிப் பணத்தை வேதனமாகக் கொண்டு செயற்படும் வைத்தியசாலைகளில் இலவசமாக வசதிகளும், சேவைகளும் செய்யப்படுகின்ற போதும், நோயாளர்கள், தனியார் வைத்தியசாலைகளை நாடிச் சென்று பெருமளவு பணம் செலவிட்டுச் சிகிச்சை பெறுவதற்கான காரணத்தைக் கண்டறியவே சுகாதார அமைச்சு தரவுகளைத் திரட்டலாமென மருத்துவ துறையினர் எதிர்வு கூறியுள்ளனர். (த-4-9)

## விடுதலையாவோர் குறித்து இரகசிய விசாரணைகள்

யாழ்ப்பாணம், நவ.4

நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்படுபவர்கள் தொடர்பில் இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களுடன் தொடர்புபடுகிறார்களா என்பது தொடர்பில் கண்காணிக்கப்படுகிறது என்று யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

கடந்த வாரமும் பல இடங்களில் 10 இற்கும் மேற்பட்ட திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சில சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் தொடர்பில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்படுபவர்கள் தொடர்பில் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. களவு, கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்களா என்பது தொடர்பில் கண்டறியவே அவ்வாறு செய்யப்படுகிறது. அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (த-4)

## கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கிணற்றில் வீழ்ந்து ஐந்து பேர் சாவு

கடந்த ஒருவாரத்தில் மாத்திரம் கிணற்று நீரில் மூழ்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் பெற்றோர் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாரிகாலத்தில் சிறுவர்கள் கிணறுகளை நோக்கிச் செல்வது தொடர்பில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும்.

சிறுவர்களை தண்ணீர் அள்ளுமாறு கூறுவது அல்லது அவர்கள் தாமாக தண்ணீர் அள்ள முற்படுவது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

வடமராட்சி, கெருடாவில்,மிலாவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை குளிப்பதற்காகச் சென்ற சிறுமி கிணற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவராசா சியாத்தா (வயது- 11) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

அதே தினத்தன்று நாரந்தனை மத்தியைச் சேர்ந்த ஜோர்ஜ் சாளினி (வயது - 10) என்ற சிறுமியும் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற போது தவறுதலாக உள்ளே வீழ்ந்து உயிரிழந்தார். ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சங்கானையில் பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த 6 வயதுச் சிறுவன் வழியில் இருந்த வயல் கிணற்றில் நீந்தி விளையாடிய போது நீரில் மூழ்கி உயிரிழந்தார். இதேபோன்று நாவாந்துறை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலும் இரண்டு சிறுவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தனர். எனவே பெற்றோர் இது குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (த-4)

# யாழ். பல்கலையில் அரசியல் தலையீடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

### மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். பல்கலைக்கழகத்தில் அரசியல் தலையீடுகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட்டுப் பல்கலைக்கழகம் சுதந்திரமாகவும் நீதியாகவும் செயற்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழகமானது தமிழ் பேசும் மக்களின் ஓர் அரும் சொத்தாகும். தமிழ் மக்களின் உயர் கல்விப்பீடமாக விளங்கி பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கி, நற்பிரஜைகளை உருவாக்கும் சிறந்ததொரு கல்விக் கூடமாகும். 1974 இல் ஆரம்பிக்கப்பட்டுப் பல அரிய திறமைகள் வாய்ந்த துணை வேந்தர்களால் வழிநடத்தப்பட்டு ஓர் உயரிய நிலையை எட்டியுள்ளது.ஆனால் இன்று தமது சுயலாபங்களை அடைந்து கொள்ளத் துடிக்கும் ஒரு குழுவினரால் யாழ். பல்கலைக்கழகம் தீவிர அரசியல் மயப்படுத்தப்பட்டு வருவதுடன், சட்ட நெறிமுறைகள், தாபன விதிக்கோவைகள் என்பவற்றைப் புறம் தள்ளி முழுப் பல்கலைக்கழக நிர்வாகத்தையுமே அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து தாம் நினைத்த படியெல்லாம் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகப் பேரவையானது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட முனைவதுடன், பதவி வழி உறுப்பினர்களான நேர்மையுடன் செயற்பட நினைக்கும் பீடாதிபதிகளை, அரசியல் நியமனதாரர்கள் அச்சுறுத்தும் இழிநிலை ஏற்படவும் காரணமான சூழல் நிலவி வருவது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும். அரசியல் நியமனமான பேரவை உறுப்பினரான அரசியல் வாதி ஒருவரின் மகளுக்கு சட்டத்தை மீறி தாபன விதிக்கோவை நெறிமுறைகளைப் புறந்தள்ளி பணிநியமனம் வழங்கப்படவில்லை என்ற ஒரே காரணத்துக்காக நேர்மையாகத் தேர்வான பிறரும் பணி நியமனம் பெற முடியாத சூழ்நிலை நிலவுவது இந்த இழிநிலையின் சமீபத்திய உதாரணமாகும். பல்லாயிரக் கணக்கான தமிழ்பேசும் மாணவர்களின் ஒரே உயர் கல்விக் கூடமாகவும், நம்பிக்கைக்குரியதாகவும் விளங்கும் யாழ். பல்கலைக் கழகமானது சுதந்திரமாகவும், நீதியாகவும் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே தமிழ் மக்களின் தேசிய நிலைக்களனாக விளங்கும் யாழ்.பல்கலைக் கழகத்தில் சுயலாபம் கருதிய அரசியல் கட்சிகளின் தலையீடுகள் யாவும் நிறுத்தப்பட்டு பேராசிரியர்கள், நிர்வாகத்தினர் என்போர் சுதந்திரமாக இயங்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தமிழ்பேசும் மாணவர்களின் உயர்கல்விக்கூடமான யாழ். பல்கலைக்கழகம் சுதந்திரமாக இயங்கி, மாணவர் நலனையும் தமிழ்த் தேசியத்தையும் வலுப்படுத்த உழைக்குமாறு அழைக்கின்றோம் என்றுள்ளது. (த)

## வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஊழியர் சம்பள இழுபறி முடிவுக்கு

யாழ்ப்பாணம்,நவ.4

வலி.கிழக்கு பிரதேச சபையின் பணியாளர்களுக்கான கடந்த ஒக்ரோபர் மாத கொடுப்பனவு நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

கடந்த மாதச் சம்பளம் ஒக்ரோபர் 25 ஆம் திகதியளவில் வழமையாக வழங்கப்பட வேண்டும்.

பணியாளர்களுக்கான சம்பளப் பட்டியலில் கையொப்பம் இடுவதற்கு சபையின் செயலாளர் பின்னடித்து வந்தார். இதனால் பணியாளர்கள் விசனமடைந்தனர்.

தமது சம்பளத்தை விரைவில் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து பிரதேச சபையின் தலைவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பணியாளர்களின் சம்பளத்தை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தலைவரும் கோரியிருந்தார்.

எனினும் பணியாளர்களின் சம்பளத்தை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் காட்டப்பட்டு வந்தது.

இதனை அடுத்து அவர்கள் கடந்த வியாழக்கிழமை தமது சம்பளத்தை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை பணியாளர்களின் ஒக்ரோபர் மாதச் சம்பளம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

### கல்விக் கருத்தரங்கு

காரைநகர்,நவ.4

இலங்கை வங்கிக் காரைநகர் கிளையின் கல்விப் பிரிவினால் காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் இவ்வாண்டு க.பொ.த.சாதாரணதர வணிக பாடப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை யாழ்ற்ரன் கல்லூரியில் இடம் பெறஉள்ளது.

இந்தக் கருத்தரங்கில் காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் வணிக பாடத்துக்குத் தோற்றும் மாணவர்கள் பயன்பெற உள்ளனர். (த-250)

## கேப்பாபிலவு மக்களுக்கு சூரியபுரத்திலேயே காணி

### காணி அபிவிருத்தி அமைச்சு நேற்று வழங்கியது

யாழ்ப்பாணம், நவ.4

கேப்பாபிலவு மக்கள் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ள சூரியபுரம் காட்டுப் பகுதியில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கால் ஏக்கர் காணி வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சூரியபுரம் காட்டுப் பகுதிக்குள் தற்காலிகமாக தங்க வைக்கப் படுவதாகக் கூறி குடியமர்த்தப்பட்டனர்.

மனிக்பாம் முகாம் கடந்த செப்ரெம்பர் 25 ஆம் திகதி மூடப்பட்டதன் காரணமாக நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்கள் முல்லைத்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் கேப்பாபிலவைச் சேர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படாமல் சூரியபுரம் காட்டுப்பகுதிக்குள் தற்காலிகமாக தங்க வைக்கப்படுவதாகக் கூறி குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த காட்டுப் பகுதிக்குள் மீளக் குடியமர்த்தப்பட்ட 165 குடும்பங்களுக்கும், மேற்படி காட்டுப் பகுதிக் காணியே இதன்படி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பணிப்புக்கு அமைய ஒவ்வொரு குடும்பத்துக்கும் கால் ஏக்கர் காணி இதன்படி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பொ.குகநாதன், வட மாகாண காணி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-5)

## திருட்டுச் சந்தேக நபர் நீதிமன்றத்தில் சரண்

யாழ்ப்பாணம்,நவ.4

ஆள்கள் இல்லாத நேரம் வீடு புகுந்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்ற நபர் சட்டத்தரணியூடாக யாழ். நீதிமன்றில் சரணடைந்தார். அவரை இரண்டு வார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தச்சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கோப்பாய் பகுதியிலுள்ள வீட்டில் ஆள்களில்லாத நேரம் பார்த்து கதவு பிரித்து உள்சென்று சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

வெளியே சென்றிருந்த வீட்டுக்காரர் வீட்டுக்குத் திரும்பியபோதே இந்தக் கொள்ளைச் சம்பவம் தெரியவந்தது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். பொலிஸார் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டிருந்தனர். எனினும் சந்தேக நபரைப் பொலிஸாரால் பிடிக்க முடியவில்லை.

இந்த நிலையிலேயே திருட்டு இடம்பெற்று ஒரு வாரகாலத்தின் பின்னர் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் அந்த வீட்டில் தானே திருடியதாகக் கூறி சட்டத்தரணி ஜோனி மகாராஜா ஊடாக யாழ். நீதிமன்றில் சரணடைந்தார்.

யாழ். நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டார். அவரை இரண்டு வார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவருடன் மற்றொரு சந்தேகநபரும் திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. எனினும் அவர் தலைமறைவாக இருந்து வருகிறார். அவரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் பல்கலைக்கழகத்தை யாழில் நிறுவக் காணி இல்லை

## ஒதுக்கப்பட்ட நிதி தென்பகுதிக்குச் செல்லும் நிலை

*யாழ்ப்பாணம், செப்.4*

***இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட தொழில் பல்கலைக்கழகத்தை நிறுவ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கான காணி இன்னமும் வழங்கப்படாமையால் மேற்படி நிதி தென்பகுதிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபை தெரிவித்துள்ளது.***

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

2010 ஆம் ஆண்டு, யாழ்.மாவட்ட அரச அதிபராக கே.கணேஸ் இருந்த காலத்தில் இந்திய அரசு, ஹிந்துஸ்தான் பல்கலைக் கழகத்தின் அமைப்பில் யாழ். மாவட்டத்தில் 548.55 மில்லியன் ரூபா செலவில் தொழில் பல்கலைக்கழகத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதற்கான நிலம் தேவையாகவிருந்ததால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காரைநகரில் நிலம் தருவதாகத் தெரிவித்தபோதும் இந்திய அதிகாரிகள் அந்த இடம் பொருத்தமற்றது என்று நிராகரித்தனர்.

இதனால் அப்போதைய அரச அதிபர் கே.கணேஸ், கைதடியிலுள்ள சைவச் சிறுவர் இல்லக் காணியைத் தருவதாக வாய்மொழி மூலமாகத் தெரிவித்திருந்தார்.

மேற்குறித்த இடம் தொழில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு பொருத்தமான இடம் என்று இந்திய அதிகாரிகளும் உறுதி செய்தனர்.

அத்துடன் சைவச் சிறுவர் இல்லக் காணியைத் தருவதாக அப்போதைய இந்து சமய பேரவைத் தலைவராகவிருந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் சம்மதித்துகடிதம்கொடுத்திருந்தார்.

எமக்கு 8 பரப்புக் காணி மாத்திரமே தர முடியும் என்று பிரதேச செயலகம் கூறியதாகவும் கிட்டத்தட்ட இரண்டே முக்கால் ஏக்கர் காணி தேவைப்படுவதாகவும் இதற்கான வேண்டுகோள் கடிதம் தற்போது சாவகச்சேரி பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய தொழில் பயிற்சி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது,

எமக்கு உரிய எழுத்து மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் காணியை வழங்க முடியும். மேலும் தேசிய அருங்கலைகள் அமைப்புக்கும் அந்த இடத்தில் காணி வழங்கப்படவுள்ளதால் ஒரு ஏக்கர் வரையிலேயே பிரதேச செயலகத்தால் இப்போது வழங்க முடியும்- என்றார்.

குறித்த பகுதியில் இராணுவத்தினர் தமது தொழில் பயிற்சி கூடத்தையும் நிறுவியுள்ளனர். இதனால் குறித்த பகுதியில் மேற்படி தொழிற் பயிற்சி அதிகார சபையின் தொழிற் பல்கலைக்கழகத்தை அமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதன் காரணமே இந்திய அரசின் மேற்படி நிதி தென்பகுதிக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

# 38 பஸ் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

### அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றியமைக்காக

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் உரிமையாளர்கள் 38 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்ட நடவடிக்கை தொடரும் என்று யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ்களில் அளவுக்கு அதிகமாக பயணிகள் ஏற்றப்படுகின்றனர். பஸ்ஸினுள் பயணிகள் விலங்குகளைப் போன்று நடத்தப்படுகின்றனர். பயணிகள் மூச்சு விட முடியாத அளவுக்கு பஸ்ஸினுள் திணித்து ஏற்றப்படுவதாகவும் அது மட்டுமன்றி மிதிபலகையில் பயணிகளைத் தொங்கிய நிலையில் ஏற்றுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனால் தாம் பஸ்ஸினுள் அவஸ்தைப் படுவதாக பயணிகள் தெரிவித்தனர்.

பொலிஸாரைக் கண்டவுடன் பஸ்ஸுக்குள் பயணிகளைத் திணித்து விட்டு பின்னர் மேலதிகமாகப் பயணிகளை ஏற்றுவதாகவும் இதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் பயணிகள் தெரிவித்த விடயங்கள் குறித்து இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

குடாநாட்டில் பல பாகங்களிலும் பொலிஸார் இதனைக் கண்காணித்து வருகின்றனர். கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் அளவுக்கு அதிகமாகத் தனியார் ப்ஸ்ஸினுள் பயணிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் தனியார் பஸ் உரிமையாளர்கள் 38 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றார். (த-4)

### வீதி ஓரத்தில் அமைந்துள்ள

# ஆபத்தான கிணறுகளை மூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

பருத்தித்துறை வீதியில் போக்குவரத்துக்குப் பெரும் அபாயமாக அமைந்துள்ள பாதுகாப்பற்ற கிணறுகளை மூடிச் சீர்செய்து தருமாறு வலி.கிழக்கு பிரதேச சபை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக கோப்பாயில் உள்ள பிரதேச சபை அலுவலகத்துக்கு அருகில் பிரதான ஓரமும் பாவனையின்றி இந்தக் கிணறுகள் காணப்படுகின்றன.

தற்போது மாரிகாலம் ஆகையால் இந்தக் கிணறுகள் மழை வெள்ளத்தால் நிரம்பிக் காணப்படுகின்றன.

**கோப்பாயில் உள்ள பிரதேச சபை அலுவலகத்துக்கு அருகிலும் பிரதான ஓரத்திலும் பாவனையின்றி இந்தக் கிணறுகள் காணப்படுகின்றன.**

பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்தக் கிணறுகளால் இரவில் வீதிகளில் பயணிப்போருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உள்ளமையால் அதனை மூடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)



*கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையினால் காரைநகர் பிரதேச வயல்கள் நீரில் மூழ்கி உள்ளன. காரைநகரில் நெல்விதைப்பு மேற்கொள்ளப்பட்டு ஓரிரு வாரங்களில் பலத்த மழை பெய்தமையால் அனைத்து நெற்பயிர்களும் நீரில் மூழ்கி உள்ளன. (த-250)*

# வயல்களில் வெள்ளம் அகற்றும் விவசாயிகள்

கடும் மழையை அடுத்து வயல்களில் நெற் பயிர்களை மூடியுள்ள வெள்ளத்தை அகற்றும் பணியில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நெற்பயிர்களை மேவி வெள்ளம் தேங்கியுள்ளது.

இந்த வெள்ளத்தை வேறு இடங்களுக்கு வயல்களை அண்டியுள்ள வடிகால்கள் ஊடாக அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடு பட்டுள்ளனர். சில வயல்களில் வெள்ளம் முட்டியதால் நெற்பயிர்கள் அழுகிப் பழுதடைந்துள்ளன.

பழுதடைந்த பயிர்களுக்குப் பதிலாக புதிதாக நாற்றுக்களை நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதைக் காண முடி கிறது.

பெரும்பாலான வயல்களில் அண்மையிலேயே விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பயிர்கள் ஓரளவு வளர்ந்து வருவதற்கு முன்னர் அடைமழை பெய்தமையாலேயே நெற்பயிர்கள் அழுகி அழிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# வலி.வடக்கில் அனல் மின் உற்பத்தி நிலையம் தனியார் காணியிலேயே அமைக்கப்படுகிறது

## உறுதிப்படுத்துகிறது மாவட்ட செயலக அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

வலி.வடக்கில் பளை வீமன் காமம் பகுதியில் தனியார் காணிகள் அவர்களின் அனுமதியில்லாமல் அபகரிக்கப்பட்டு அனல் மின் நிலைய உற்பத்தி நிலையமொன்று அமைக் கப்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்த குற்றச்சாட்டை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் மறுத்திருந்தனர். ஆனால் யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் முதலீட்டுச் சபை தொடர்பான விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட் டுள்ளன.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பளை வீமன்காமம் ஜே/236 கிராம அலுவலர் பிரிவில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தனியார் காணியில் தனியார் நிறுவனமொன்று அனல் மின் நிலையமொன்றை அமைத்து வருகின்றது.

மக்கள் பயன்பாட்டுக்கு அந்தக் காணி விடப் படாத போதும் இராணுவத் தினரின் அனுமதியுடன் மேற்படி பகுதியில் கிளிசரீடியா தாவரத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையம் அமைக் கப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை முன் வைத்த போது, வடமாகாண ஆளுநரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மறுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையின் அதிகாரியையும் எதுவும் பேச விடாமல் ஆளுநர் தடுத்திருந்தார்.

ஆனால் யாழ்.மாவட்ட செயலக அறிக்கையில் ஒவ்வொரு துறை தொடர்பான விடயங்களில், இலங்கை முதலீட்டுச் சபையின் விடயங்களில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் செயற்படுத்த வேண்டிய திட்டங்கள் என்ற பகுதியின் கீழ், கே.கே. எஸ்.எனேஜி ஜி லங்கா பிறைவேட் லிமிட்டெட் என்ற நிறுவனம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 773 மில்லியன் ரூபா முதலீட்டில் மேற்படி அனல் மின் நிலையத்தை அமைப்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (த-5)

# சபையில் மோதத் தயாரான ஆளும்கட்சி உறுப்பினர்கள்

## சாவகச்சேரி பிரதேச சபைக் கூட்டத்தின் போது

கொடிகாமம்,நவ.4

பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களிடையே மோதல் உருவாகும் நிலை தோன்றியது.

பின்னர் அது சக உறுப்பினர்களால் தடுக்கப்பட்டது. இரு உறுப்பினர்களும் தண்ணீர்ப் போத்தல் மற்றும் கதிரையினால் தாக்க முற்பட்டதுடன் தகாத வார்த்தைகளையும் சபையில் பயன்படுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகள் பிடித்து விற்பனை செய்ததில் ஊழல் இடம்பெற்றதாக உறுப்பினர் ஒருவர் தலைவரிடம் விளக்கம் கேட்டார். இதன்போது மற்றொரு உறுப்பினர் அதற்கு விளக்கமளிக்க முற்பட்டார். இதனால் கடும் விவாதம் ஏற்பட்டு போத்தல் மற்றும் நாற்காலியை பாவிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகியது.

ஏனைய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவரையும் அடக்க பெரு முயற்சிகள் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்களில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் முறையிடுங்கள்

## பிரதி பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.4

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களில் சிலர் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது, புகைப்படம் எடுப்பது போன்ற சம்பவங்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வருடாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தால் அங்கு சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும் புகைப்படம் எடுக்கிறார்கள் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்படுவதாக ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குப் பதில் அளிக்கையிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களில் இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது தொடர்பில் இதுவரை எதுவித முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை. அவ்வாறு யாராவது முறைப்பாடு செய்தால் அது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கமுடியும் என்று எரிக் பெரேரா மேலும் கூறினார். (த-4)

# சேதமடைந்த படகுகளை திருத்த ரூ 1. கோடி தேவை

யாழ்ப்பாணம், நவ.4

சுண்டிக்குளம் முதல் நெடுந்தீவு வரையான கடற்பரப்பில் கரையில் நங்கூரமிடப்பட்டிருந்த பல படகுகள் காற்றினால் சேதமடைந்துள்ளன. இவற்றைச் சீர் செய்வதற்கு 1 கோடி ரூபா வரையில் தேவைப்படுகிறது என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சம்மேளனத்தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக பெய்த மழையினாலும் பலத்த காற்றினாலும் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த பல படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு சேதடைந்துள்ளன. அந்தப் படகுகளைத் திருத்தியமைப்பதற்கு 1 கோடி ரூபாவரை தேவை.

அத்துடன் புயல் காரணமாகக் கடற்கரைகளில் இருந்த சிறகு வலைகளும் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டன.

தீவுப்பகுதிகளிலும், பருத்தித்துறை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை கிழக்கு, பொலிகண்டி கிழக்கு, இன்பர்சிட்டி ஆகிய பிரதேசங்களிலும் அதிகளவான படகுகள் சேதமடைந்துள்ளன.

**தீவுப்பகுதிகளிலும், பருத்தித்துறை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை கிழக்கு, பொலிகண்டி கிழக்கு, இன்பர்சிட்டி ஆகிய பிரதேசங்களிலும் அதிகளவான படகுகள் சேதமடைந்துள்ளன.**

காரைநகர், சுழிபுரம் ஆகிய பிரதேசங்களில் மீன்பிடி வலைகள் காற்றுடன் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் 118 கடற்றொழிலாளர் சங்கங்களும் 17 கடற்றொழிலாளர் சமாசங்களும் இயங்கி வருகின்றன. சங்கங்களூடாகச் சேத விபரங்களைச் சமர்ப்பித்தால் அது குறித்துக் கவனம் செலுத்த முடியும். - என்றார். (த-13)

# நீதித்துறையில் அரச தலையீடு அமெரிக்கா மீண்டும் கவலை

வோஷிங்ரன், நவ.4

இலங்கையின் தலைமை நீதியரசர் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்றோறியா நுலண்ட், இலங்கையின் நீதித்துறை மீதான தலையீடுகள் தொடர்பாக நாம் ஏற்கனவே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம்.

இலங்கையில் கடந்த மாதம் நீதிபதி ஒருவர் தாக்கப்பட்டது. அரசை விமர்சிக்கும் நிதித்துறையினர் அச்சுறுத்தப்படுவது போன்ற சம்பவங்கள் கவலையளிக்கிறது.

நீதித்துறை சுதந்திரத்தை தடுக்கும் எந்த நடவடிக்கையையும் தவிர்க்குமாறு நாம் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக அரசாட்சி,பொறுப்புக்கூறல், நல்லிணக்க நடவடிக்கைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இலங்கையிடம் உலகின் ஏனைய பங்காளர்களுடன் இணைந்து அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## '13'ஐ...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

மென இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரென்றும், அது தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்று செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்:

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டுமென ஒரு தரப்பு கூறி வருகின்றது.

அதேநேரம் மற்றுமொரு தரப்பு அதற்கு முரண்பாடான கருத்தை வெளியிட்டு வருகின்றது. இருந்தபோதிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

அதேவேளை வடமாகாண சபைத் தேர்தலை 2013ஆம் ஆண்டு நடத்துவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. இதனை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என்றார் சல்மான் குர்ஷித். (த)

## செல்வம்...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

இலக்க மைல் கல்லுக்கு அருகில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் தனது மைத்துனர் தான் என்பதை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அடையாளம் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்:

பணத்துக்காகவே அவர் கடத்திச்செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். மைத்துனரின் சடலம் இன்று (நேற்று) என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் எதிர்வரும் புதன்கிழமை இடம் பெறவுள்ளன- என்றார். (த-5)

## 'திவிநெகும'...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றத்தின் தீர்ப்பை மதித்து இந்தச் சட்டவரைவை உரிய முறையில் சட்டமாக்குவோம்.

வீட்டுத்துறை பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்து நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம் மூலம் மக்களை வறுமையிலிருந்து மீட்பதே 'திவிநெகும திட்டத்தின் நோக்கம்' என்றார். (த)

## பிரதம...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

வது முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்று ஜெனிவாவிலுள்ள 'உதயனி'ன் விசேட பிரதிநிதி அந்த அலுவலகத்தின் பேச்சாளரிடம் வினவினார்.

இதன்போதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்ட ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சபை அலுவலக பேச்சாளர் ஒருவர், பிரதம நீதியரசர் விடயம் குறித்து பல்வேறு தரப்புக்கள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளன என்றும், அவர் இதுதொடர்பில் தீவிர கவனத்தை செலுத்தி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

''மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயம் குறித்து தீவிர கவனம் செலுத்தி உள்ளது.கூடிய விரைவில் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு இதுகுறித்து விளக்கம் கேட்கவுள்ளோம். நீதித்துறையில் தலையீடு செய்வதாக இந்த விடயம் அமைந்துள்ளதென்று பல்வேறு நாடுகளும் தெரிவித்திருப்பதால் இதை ஒரு சாதாரண விடயமாக கருதி விட முடியாது'' என்றும் அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இலங்கையின் மனித உரிமைகள் மேம்பாட்டில் திருப்தியான முன்னேற்ற நிலைமை இல்லாத காரணத்தினால் இலங்கைக்கான பயணத்தை மனித உரிமைகள் ஆணையாளர் சபை நவநீதம்பிள்ளை அம்மையார் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென பல்வேறு மனித உரிமை சபை அமைப்புக்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன என்று தெரியவருகிறது.

## தீர்வு...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

இலங்கையில் ஏற்கனவே நடைபெற்ற, மற்றும் தற்போது நடந்து கொண்டு இருக்கிற நிலவரங்கள் பற்றி ஐ.நா. துணைப் பொதுச் செயலாளர் ஸ்டாலினிடமும், டி.ஆர்.பாலுவிடமும் நேரடியாக கேட்டுத் தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுப் பதாக உறுதி அளித்துள்ளார். இந்த முன்னேற்றம் ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தையும், அரசியல் எதிர் காலத்தையும் ஒளிமயமாக ஆக்குவதற்கு பயன்படும் என்ற நம்பிக்கையை பெற்றுள்ளோம்.

நாங்கள் கொடுத்த ஆவணத்தோடு இலங்கையில் நடந்த கொடூர காட்சிகளையும் சி.டி.யாக தயாரித்து இணைத்துள்ளோம். தி.மு.க. இலங்கை தமிழர்களுக்காக ஐ.நா. சபையை அணுகுவது இது முதல் முறை அல்ல. ஏற்கனவே 1961ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடந்த தி.மு.க. பொதுக் குழுவில் இலங்கை தமிழர் பாதுகாப்பு பற்றி தீர்மானம் நிறைவேற்றி ஐ.நா. சபை தலையிட்டு தமிழர்களை பாதுகாக்க கோரிக்கை வைத்தோம். 1985ஆம் ஆண்டு 1 கோடி கையெழுத்து பெற்று அனுப்பி வைத்தோம். இப்போது பலவேறு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று தமிழர்கள் கண்ணீரும் செந்நீரும் வடிக்கும் நிலை உள்ளது. இனிமேலாவது ஈழத்தமிழர்களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டும். அதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்கான முயற்சியை ஐ.நா. சபை எடுக்க வேண்டும். தேவையான ஒத்துழைப்பை இந்திய அரசும் வழங்க வேண்டும். இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பொது வாக்கெடுப்பு நடத்த வலியுறுத்தி உள்ளோம். அதை செயல்படுத்த இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

பின்னர் பொதுவாக்கெடுப்பு என்பது தனிநாட்டுக்கானதா? என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, இலங்கையில் ஈழம் பிரிந்து தனி நாடு உருவாக்க வேண்டும் என்பது டெசோ தீர்மானம் அல்ல. தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளோம். அதில் நன்மை விழையும் என்று நம்புகிறோம் என்றார்.

மேலும் இந்தியாவில் இலங்கை படையினருக்கு ராணுவ பயிற்சி அளிக்கப்படுவது பற்றிய கேள்விக்கு, இலங்கை ராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் மட்டு மல்ல, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்க கூடாது. தமிழ் நாடும் இந்தியாவில்தான் இருக்கிறது என்றார் கருணாநிதி. (த)

## கூட்டமைப்பின்...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

ந.வித்தியாதரன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன், கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட கிருஷ்ணபிள்ளை சேயோன் ஆகியோர் அடங்குகின்றனர்.

'அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பான கொள்கை மற்றும் வழிமுறைகள்' என்ற தலைப்பில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்துள்ள பல்வேறு அரசியல் கலந்துரையாடல்களில் இந்தக் குழுவினர் பங்கு பற்றுவர்.

அத்துடன், சீன அரசின் முக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்து இக்குழுவினர் பேச்சு நடத்துவார்கள் என்றும், இதன்போது, வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து அவர்கள் சீனப் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்துவார்கள் என்றும் அறியமுடிகின்றது.

இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று அண்மையில் இந்தியாவுக்கு சென்று நாடு திரும்பிய கையோடு சீனத் தூதுவரை சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்ற நிலையிலேயே கூட்டமைப்பின் மூவரடங்கிய பிரதிநிதிகளின் சீனாவுக்கான விஜயம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, இம்மாதம் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இக்குழுவினர் சீனாவில் தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரேரணைக்கு...

தொடர்ச்சி

முன்பக்கத்திலிருந்து...

எதிராக பிரேரணையில் 14 பிரதான குற்றச்சாட்டுக்களும் அவற்றுடன் தொடர்புடைய ஐந்து கிளைக் குற்றச்சாட்டுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- பிரதம நீதியரசர் பதவி வழியாகவும் தனிப்பட்ட முறையிலும் தனது அதிகார எல்லைக்கு அப்பால் செயல்பட்டமை.
- நீதிச் சேவைகள் ஆணைக்குழு செயலாளராக மஞ்சுள திலகரட்ணவை நியமித்தமை.
- நீதிவான்களின் பிரச்சினைகள் தொடர்பாக பராபட்சமாக செயல்பட்டமை உட்பட இன்னும் பல குற்றச்சாட்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சபாநாயகரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் குற்றப் பிரேரணை நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 78 (2) உப பிரிவின் படி நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் பதியப்பட வேண்டும்.

ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுவதற்கு முன் நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். இந்தத் தெரிவுக்குழுவில் ஏழு உறுப்பினர்களுக்கு குறையாத அங்கத்தவர்கள் இடம்பெறவேண்டும்.

அரசமைப்பின் பின் 107 (2) உப பிரிவுக்கு அமைவாக சபாநாயகர் பிரதம நீதியரசருக்கு எதிராக கிடைக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் நாளைமறுதினம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபை உறுப்பினர்களுக்குப் பதிரங்கமாக அறிவிப்பார். அன்றைய தினமே கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமும் கூட்டப்படும் என தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருடன் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமது கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று ஏற்கனவே கூறி இருந்தார்.

ஆனால் பிந்திக் கிடைத்த தகவலின் படி கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க சபாநாயகரை சந்தித்து தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கு முன் சட்ட ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று கூறியதாகவும் தெரியவந்துள்ளது. (ஐ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இளம் சந்ததியினரின் எதிர்கால சமூகப் பெறுமானத்தை உயர்த்த..

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்று மாரி காலத்தில் அடிக்கடி எம்மவர்கள் பேசிக்கொள்வது உண்டு. அதற்குப் பதிலாக, கனமழை வந்தால் தொற்றுநோய்கள் பரவும்; முன்னெச்சரிக்கையுடன் இருங்கள் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தும் நிலை குடாநாட்டில் அடிக்கடி ஏற்பட்டு வருகிறது.

மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே "டெங்கு" என்ற உயிர்க்கொல்லி நோய் குறிப்பிட்ட பல பகுதிகளில் பரவிவரும் அபாயம் குறித்து இப்பத்தியில் முன்னர் ஒரு தடவை தொட்டுக் காட்டியிருந்தோம்.

எனினும் இந்த நோய் ஏற்படுத்தும் தாக்கம் - உண்டாக்கும் உயிர் இழப்புகள் - குறித்து வேண்டிய விழிப்புணர்வு மக்களிடம் உண்டாக வில்லை என்பது கவலைக்குரியதாகும். அது குறித்த விழிப்புணர்வு பல பகுதிகளில் அருகி வருவதாகவும், ஏனோ தானோ என்ற அசட்டைத்தனம் வளர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பொருட்டு, அது காரணமாக சுகாதாரத் துறையினர் விடுத்திருக்கும் எச்சரிக்கையை மக்கள் அலட்சியம் செய்யாது, நோய்த் தடுப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தவறினால், நீங்களோ அல்லது உங்கள் உறவுகளோ குறிப்பிட்ட நோயினால் உயிரிழக்கும் ஆபத்து உண்டென்பதனை மறந்து விடாதீர்கள்.

தண்ணீரால் காவப்படும் தொற்று நோய்களை விடவும், ஏனைய தொற்றுநோய்கள் குறித்தும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்கள் குறித்தும் மக்கள் மனதூன்றிச் செயற்பட வேண்டும். தம்மைத் தாமே நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதனைத் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படுவது இன்றைய தட்டிக்கழிக்க முடியாத தேவை.

மேலும் -

தமிழர்களின் பாரம்பரியமான, எமது இனத்துக்கென உரிய தனிச் சிறப்புகளும், நற்பழக்க நடைமுறைகளும், கடந்த சில ஆண்டுகளாக தமிழர் பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகவும் அருகி வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த மாவட்டத்தில் மது அருந்துவோரின் எண்ணிக்கை வேகவேகமாக உயர்ந்து செல்கிறது என்பதனை புள்ளி விவரங்கள் தெட்டெனத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால் உயிரிழப்புக்கள் உண்டாகின என்ற செய்திகள், மதுப் பிரியர்களை மது அருந்துவதில் இருந்து தடுக்க இயலுமா என்ற வினாவையும் கூடவே முன்னிறுத்துகிறது.

அதுவும் மாணவர்கள் உள்ளிட்ட இளம் வயதினரிடையே மது அருந்தும் பழக்கம் முந்திய காலங்களை விட இப்போது அதிகரித்து இருப்பது எங்கள் எதிர்கால பிரசைகள் எங்கே செல்கிறார்கள், எங்கள் வருங்கால சமூகம் என்னவாகப் போகின்றது என்ற ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.

குடாநாடு வாழ் மக்களில், மது அருந்துவோர் மாதாந்தம் மொத்தம் ஏழு லட்சம் லீற்றரை உட்கொள்கிறார்கள். மாதந்தோறும் சராசரியாக 2 லட்சத்து 82 ஆயிரம் லீற்றர் சாராயத்தையும் 4 லட்சத்து 9 ஆயிரம் லீற்றர் ஏனைய மதுபான வகைகளையும் வயிற்றுக்குள் செலுத்திப் பொல்லாத வியாதிகளைத் தேடிக்கொள்கிறார்கள். அதிலும், மது வகைகளை உடலுக்குள் ஊற்றித் தங்களது உடல் ஆரோக்கியத்தை தாங்களே கெடுத்துக்கொள்வோரில் இருபத்தைந்து சதவீதத்தினர், உயர்கல்வி கற்பதற்குச் செல்வதற்கு முன்னரே 'தண்ணி அடிக்கிறார்கள்'!

இவற்றுக்கு மத்தியில் -

குடாநாட்டை பீடித்துள்ள, மக்களை வாட்டும் சமூக விரோதச் செயற்பாடுகளும் பழையன என்றும் புதியன என்றும் வகுத்துக் கூறக்கூடிய அளவுக்குப் பல்கிப் பெருகிச் செல்கின்றன.

உதாரணத்துக்கு, காசோலை மோசடிகள் பெருமளவில் அதிகரித்துள்ளன.இது குறித்து மக்கள் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்று மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை கட்டுமீறியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டிருப்பது, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்து வருவது, வர்த்தகர்கள் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமல் வியாபாரம் செய்வது, பொருள்களை அதிக விலைக்கு விற்பது போன்ற செயற்பாடுகள் குடநாட்டில் பல்கிப் பெருகிச் செல்கின்றன.

சமூகத்தை, குறிப்பாக எங்கள் எதிர்காலப் பிரசைகளான இளைஞர்களை, அவர்கள் தவறான வழியில் செல்லாமல் தடுப்பது, சமூக விரோதச் செயல்கள் மற்றும் ஒவ்வாத செயல்களில் ஈடுபடுவோரை இனம் காண்பது என்பவற்றைப் பொலிஸாரினாலும் நீதிமன்றங்களினாலும் மட்டும் திருத்த முடியாது. அவர்களை நற்பிரசைகள் ஆக்கவும் இயலாது.

பொது மக்கள் ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டு இவற்றைக் களைவதற்கு ஒன்றுபட்டுச் செயற்பட மனங்கொள்ள வேண்டும்.

நீண்டகாலமாக, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, போரினாலும், அவ்வப்போது உயர்ந்திருந்த அதிகாரத் தரப்புகளாலும் பலவிதமான உயிர் இழப்புகள் உட்பட எண்ணிக் கூறமுடியாத வாழ்வின் பலவித இழப்புகளையும் சந்தித்தவர்கள் தமிழ் மக்கள். அவர்களின் வருங்காலச் சந்ததியினர் இப்போதிருந்தும் இனிமேலும் தங்கள் சமூகப் பெறுமானத்தை உயர்த்துவதற்கு அயராது உழைக்க வேண்டிய தேவை நீண்டு எழுந்துள்ளது. அதில் நாம் ஒவ்வொருவரும் மனங்கொண்டு செயற்பட வேண்டும்.

# மக்களின் பிரச்சினைகளை அரசு சரியாகப் புரிந்துகொள்ளவில்லை

### இதனாலேயே போர் தொடர்ந்தது என்கிறார் புஞ்சிஹேவா

யாழ்ப்பாணம்,நவ.4

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசு தனது கடமைகளை சரியாக செய்யாத காரணத்தால்தான் 30 வருடங்களாகப் போர்ச் சூழலில் மக்கள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனமும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் இணைந்து நடத்திய சிறுபான்மையினரின் மொழி உரிமையை வலுப்படுத்தல் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் வியாழக்கிழமை தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மொழி மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதற்காகவே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசு என்ன செய்ய வேண்டும் என்பதும் பதில் சொல்லப்பட்டுள்ளது. இதில் மொழிப் பிரச்சினைகளும் முன்வைக்கப் பட்டுள்ளன.

அனைத்து அரச திணைக்களங்களிலும் சிங்களம், தமிழ் ஆகிய இரு கரும மொழிகளும் தெரிந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களம் கற்பிக்கப்பட வேண்டும்.

அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் மொழியை அடிப்படையாகக் கொண்டு சிங்களத்தில் மாத்திரம் கடமைகளை வழங்கி கரும மொழியாக சிங்கள மொழி உள்ளதால் தமிழ் மொழியை மறந்து துணிவாக கடமையாற்றுகிறார்கள். இதற்கு துணையாக அரசமைப்பும் உள்ளது.

தமிழர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக உள்ளதென எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட போதும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை. 1987 ஆம் ஆண்டு இந்திய உடன்படிக்கையின் பின்னர் சிங்களம், தமிழ் ஆகியன அரச கரும மொழியாகக் கொண்டுவரப்பட்டன. ஆனால் அரசியல்வாதிகள் மற்றும் சில பேரினவாதிகள் இதனை நீக்க வேண்டும் என போராட்டம் நடத்தினர். 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தின்படி சிங்களம், தமிழ் ஆகியன கரும மொழியாக கொண்டு வரப்பட்டன.

ஆனால் இதில் ஒரு மொழி நீக்கப்பட்டால் கடந்த கால வரலாறுகளைப் போன்று பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்படும். அரச கரும மொழிகள் பிரகடனப்படுத்தப்பட்ட போதும் அவை 30, 40 வருடங்கள் கடந்தும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

1990 ஆம் ஆண்டு அரச கரும மொழி ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள் அரச கரும மொழிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டும், அந்த அறிக்கை வெளியிடப்பட்டும் அவை நடைமுறைப் படுத்தப் படவில்லை - என்றார். (த-14)

# துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள் சிறுவர்கள்

### இது வரவேற்புக்குரியது என்கிறார் யாழ்.அரச அதிபர்



யாழ்ப்பாணம்,நவ.4

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கெதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் சமூகத்தில் வெளிக் கொணரப்படுகின்றன. இவற்றுக்கு காரணம் சிறுவர்கள் விழிப்படைந்து தமது உரிமைகளுக்கு குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள் எனத் தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

யாழ்.மாவட்ட செயலகத்தின் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு அலுவலகத்தின் ஏற்பாட்டில் ''சிறுவர் உலகம் சிறுவருக்கே'' எனும் தலைப்பிலான சிறுவர் தின நிகழ்வு நேற்று சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களை கௌரவிக்கும் வகையில் கடந்த பல வருடங்களாக சிறுவர் தின நிகழ்வுகள் கொண்டாடப் படுகின்றன. இவற்றுக்கு முக்கிய காரணம் சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், சிறுவர்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பவையே.

இந்த நிகழ்வுகள் மூலம் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் குறிப்பாக விழிப்புணர்வு நாடகங்கள் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். தொடர்ச்சியாகப் பல்வேறு கருத்துரைகள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் விழிப்புணர்வு நாடகங்களை சிறுவர்கள் மத்தியில் நடத்தும் போது அவற்றை அவர்கள் ஆர்வத்தோடு அவதானிப்பார்கள்.

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் வெளிக் கொணரப்படுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்பவர்களுக்கு ஏதிராக முறைப்பாடுகள் கொடுக்கப்படுவதுடன் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். சிறுவர்கள் விழிப்படைந்துள்ளமையே இவற்றுக்கு காரணம்.

சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை மட்டுமல்லாது, அரசும் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. - என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பட்டதாரிப் பயிலுநர்களால் 30க்கு மேற்பட்ட பாடசாலைகளில் மேடையேற்றப்பட்ட ''புதிய வேலிகள்'' வீதி நாடகமும், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-14)

# 4000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் உற்பத்தி

யாழ்ப்பாணம்,நவ.4

தேசிய மர நடுகை வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட வனத் திணைக்களத்தினால் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட வட்டவன அதிகாரி ஆர்.ரவிராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மர நடுகை வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டம் முழுவதும் நிழல் தரும் மரங்களையும் பயன்தரும் மரங்களையும் உற்பத்தி செய்துள்ளோம்.

இந்த மரக்கன்றுகள் யாவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ஊடாகப் பங்கிட்டு வழங்கப்படவுள்ளன.

தேக்கு, சவுக்கு, மாகோகனி, கஜூ, பலா, வாகை, சித்திரக் கொம்பு ஆகிய மரக் கன்றுகளே உற்பத்தி செய்யப்படவுள்ளன.

இந்த மரக்கன்றுகளைக் கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியோரும் தமக்கு வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர்.

அரச அதிபருடனான சந்திப்பை அடுத்து ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் மரக்கன்றுகள் பிரித்து வழங்கப்படும். அநேகமாக வீட்டுப் பயனாளிகளுக்கும், வீதிகளில் நடுவதற்கும் இவை வழங்கப்படவுள்ளன. (த-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பு

சுமார் ஐம்பது வீடுகளில், முதல் ஐந்து வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

யாழ்ப்பாணம், நவ. 4

கேப்பாபிலவில் மீள்குடியேற்றப்பட்ட சுமார் 160 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகளை மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் சென்ற மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையிலான குழுவினர், கேப்பாபிலவு பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் குறைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இதன்போது போதிய வசதிகளோ வசிப்பதற்கு வீடுகளோ இல்லாமல் கொட்டும் மழைக்கும் மத்தியில் அவலப்படும் அந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார், இதில் முதற்கட்டகமாக நிர்மாணிக்கப்படவுள்ள சுமார் ஐம்பது வீடுகளில், முதல் ஐந்து வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(த-16-400)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாழைகளுக்கு பெரும் அழிவு

முல்லைத்தீவு,நவ.4

கடுமையாக வீசிய காற்றினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஏராளமான வாழை மரங்கள் அழிந்துள்ளன.

அண்மைய நாள்களாக இங்கு கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வந்தது. இதனால் பயிர்களுக்குப் பெரும் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன.

குறிப்பாக பெருமளவு வாழைப்பயிர்கள் அழிவைச் சந்தித்துள்ளன. இதனால் விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளதைக் காண முடிகின்றது.

கடந்த சில மாதங்களாக வாழைப்பழத்தின் விலை என்றுமில்லாத அளவு ஏறுமுகத்தில் காணப்பட்டது. இதனால் இங்குள்ள விவசாயிகள் வாழையைப் பெருமளவில் பயிரிட்டனர். செழிப்பாக வளர்ந்த வாழை மரங்கள் பயன்தரும் கட்டத்தை எட்டிய நிலையில் அழிவுகளைச் சந்தித்துள்ளதால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடும் மழை வெள்ளம் காரணமாக வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மழை தொடர்ந்து பெய்யுமேயானால் நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்படுமென்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளமையையும் காணமுடிகின்றது. (க- 500)

## மது போதையிலிருந்த சாரதிக்குத் தண்டம்

பளை,நவ.4

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு பொருள்கள் ஏற்றி வந்த லொறிச் சாரதி மதுபோதையில் காணப்பட்டதால் கிளிநொச்சி நீதிமன்றில் 11 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பளை நகரப்பகுதியில் கடமையாற்றிய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் குறித்த லொறியை நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போதும் நிறுத்தாமல் சென்றுள்ளது. பின்னர் பளை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதுதொடர்பாக கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் சாரதி மதுபோதையில் காணப்பட்டதையடுத்து அவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கினை விசாரித்த நீதிவான் வாகனச்சாரதிக்கு 11 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## கடும் மழை காரணமாக வவுனியாவிலும் பாதிப்புகள்

நெளுக்குளம், நவ.4

கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையினால் வவுனியாப் பிரதேசத்தில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பிரதேசத்தில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேரும், வவுனியா தெற்கில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 430 பேரும், வெண்கல செட்டிகுளத்தில் 410 குடும்பங்களைச் சேர்ந்த 1640 பேரும், வவுனியா வடக்கில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஜானக ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

144 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. பகுதியளவில் 446 வீடுகள் சேதமடைந்துள்ளன. வவுனியா பிரதேச செயலர், அரச அதிபர், மற்றும் உதவிப் பணிப்பாளர் தலைமையிலான இடர் முகாமைத்துவ குழுவினர் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சென்று பார்வையிட்டனர். அத்துடன் இவர்களுக்கான உடனடித் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

மேலும் மழை தொடர்ந்து பெய்தால் பெருமளவு மக்கள் பாதிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கான முகாம் அமைத்தல், சமைத்த உணவு வழங்கல், முதலுதவிச் சிகிச்சை நிலையம் அமைத்தல் ஆகிய முக்கிய சேவைகளை ஆற்றுவதற்கு இடர் முகாமைத்துவ சேவை நிலையம் தயாராகவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு 24 மணி நேரமும் அனர்த்த முகாமைத்துவக் குழு தயார் நிலையிலுள்ளது. மினி சூறாவளி ஏற்படும் அபாயம் இருப்பதாக தகவல் கிடைத்திருந்த போதெல்லாம் எமது குழு தயார் நிலையில் இருந்து வந்தது.

இனியும் அவ்வாறான சம்பவம் இடம்பெறும் போது பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு அதற்குரிய பயிற்சிகள் ஒவ்வொரு கிராமங்களிலும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியால் நடத்தப்பட்ட மூன்றாவது இந்து மாநாட்டில் தலைமை உரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்ணாட் நிகழ்த்துகிறார். நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அமர்ந்திருக்கின்றனர். (402)

## வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களில் இலவசமாக நன்னீர் மீன்குஞ்சுகள்

வறட்சிக்கு பின் மழை காலம் வந்ததையடுத்து வன்னி மக்களின் நலன் கருதி வவுனியா மாவட்டத்தில் உள்ள கமக்கார அமைப்புக்கள் ஊடாக இலவசமாக நன்னீர் மீன் குஞ்சுகளை வழங்குவதற்கு மீன்பிடித்துறை அமைச்சு தயாராக இருப்பதாக மாவட்ட அலுவலர் நிருபராஜ் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாத இறுதியில் வவுனியாக்குளத்தில் 50 ஆயிரம் திலாப்பியா மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இதனைப் போன்று இரணைமடு குளப்பகுதியில் 90 ஆயிரம் மீன் குஞ்சுகளும் வவுனியா பாவற் குளத்தில் 80 ஆயிரம் மீன் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன. மேலும் இம்மாதம் மாமடு, மருதமடு, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் தம்புள்ள, உடவளவ, இங்கினியாகல பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகளே விடப்படவுள்ளன.

கிராமசேவகர், கமக்கார அமைப்புகளின் உரிய சிபார்சுடன் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தருவதன் மூலம் இலவசமாக மீன் குஞ்சுகளைப் பெற முடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.

(க-402)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு முல்லையில் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரை விரிப்பு, தரைவிரிப்புக்கள், பாய்கள், பாத்திரங்கள் என்பன அவசியம் தேவைப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மந்துவில் கிராமத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேரும், கோம்பாவில் கிராமத்தில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும், மல்லிகைத்தீவு கிராமத்தில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 227 பேரும், ஆனந்தபுரத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட திருமுறிகண்டியில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவு சிராட்டிக்குளம் கிராமத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 181 பேரும் முல்லைத்தீவு, கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்கிளாய் மேற்கு கிராமத்தில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேரும், கொக்கிளாய் கிழக்கில் 101 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும், அம்பலவன்பொக்கணை கிராமத்தில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 81 பேரும், முள்ளிவாய்கால் கிழக்கு பிரதேசத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேரும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து இரணைப்பாலை கிராமத்தில் உள்ள தற்காலிக முகாமிலும், மல்லிகைத்தீவு பொது நோக்கு மண்டபம், சிராட்டிக்குளம் முன்பள்ளிகள் என்பவற்றில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக சமைத்த உணவு வழங்கப்பட்டது.

மேலும் கூரைவிரிப்புசீற்றுக்கள், பாய்கள், தரைவிரிப்பு தேவைப்படுவதாக பொதுமக்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து இடர் முகாமைத்துவ சேவைகள் பிரிவினரிடம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினரால் இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(க-402)

## இயல்பு வாழ்க்கை திரும்பாத நிலையில் துணுக்காய், பாண்டியன்குளம் மக்கள்

துணுக்காய், நவ.4

பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும் திரும்பாத நிலையிலுள்ளதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசங்களில் கடும் வறட்சிக்குப் பின்னர் இடைவிடாத மழை பெய்ததால் விவசாயிகள் தொடக்கம் சாதாரண பொதுமக்கள் வரை இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் நோயாளர் உள்ளிட்ட பலரும் அவல நிலையில் உள்ளனர்.

கோட்டைகட்டியகுளத்திலிருந்து நீர் பாய்ந்து வருவதால் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதைப் போன்றதொரு நிலையிலேயே ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான் கிராம மக்களும் உள்ளனர்.

மருதங்குளம் வான் பாய்வதால் புத்துவெட்டுவான் ஊடாக மல்லாவி நகருக்குச் செல்ல முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

ஐயன்குளத்திலிருந்தும் நீர் பாய்வதால் இங்குள்ள வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் வைத்தியர்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

மேலும் அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம், புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் கிராமங்களில் வாழும் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் எனப் பலரும் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாமலும் தங்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-415)

## மழை வெள்ளத்தால் குமுழமுனை விவசாயிகள் பெரும் பாதிப்பில்

முல்லைத்தீவு, நவ.4

முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மழை வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவான பயிர் நட்டத்தை எதிர்நோக்கியுள்ள அவர்கள் அதனை ஈடுசெய்ய முடி[illegible] குள்ளாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள சிறிய வெளி, பெரியவெளி, மருதமடு, கரியல்வெளி, ஆறுமுகத்தான்குளம், மணல்பிளவு, மறுச்சுக்கட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல் வேறு வகையில் கடன் [illegible]பெரும்போக பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர்.

ஆனால் கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினால் சிறியவெளி, பெரியவெளியில் 275 ஏக்கரிலும், மருதமடுவில் 50 ஏக்கரிலும், கரியல்வெளியில் 50 ஏக்கரிலும், ஆறுமுகத்தான் குளப்பகுதியில் 20 ஏக்கரிலும் மணல்பிளவு, மறுச்சுக்கட்டி ஆகிய பகுதிகளில் 110 ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் மழை வெள்ளதால் அழிவடைந்துள்ளன.

அழிவடைந்த இந்தப் பகுதியை அரச அதிகாரிக்ள் பார்வையிட்டு உரிய இழப்பீட்டை பெற்றுத்தரும் பட்சத்திலேயே தாம் தொடர்ந்து விவசாயத்தை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தைப் பெற முடியுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு கருமாரி நாகபூஷணி அம்மன் ஆலய கருமாரி நாக பூசஷணி திருமண மண்டப திறப்பு விழா அழைப்பு

அடியார்களே நிகழும் நந்தன வருடம் ஐப்பசி மாதம் 24ஆம் நாள் (09.11.2012) வெள்ளிக்கிழமை தசமி திதியும் பூர நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் 12.15 மணியளவில் இடம்பெற இருப்பதால் அடியார்கள் அனைவரும் திறப்பு விழாவிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.**

அருள்மிகு கருமாரி நாகபூஷணி அம்மன் ஆலயம்
இறம்பைக்குளம், வவுனியா.
T.P:024.2225034.

ஆலய பரிபாலன சபை.

(20948) (10,6,7)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

சங்கத்தானை, சாவகச்சேரியில் (கந்தசாமி கோயில் பின்புறம் - ஞானவைரவர் கோயில் ஒழுங்கை) 5 Bed Rooms, 2Hall கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9585 847, 077 8227 310

(21578)(6-7-45)

## மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

கொழும்பில் சிறிது காலம் பாவித்த ஸ்கூட்டிபெப், ஹீரோ ஹொண்டா பிளசர் கறுப்பு நிறம் X B - x x x x, சிவப்பு நிறம் UN x x x x.
தொடர்பு: 077 7601 224

(24951)(6-7-45)

## வீடு வாடகைக்குண்டு

282, அரசடி வீதி, நல்லூரில் உள்ள மாடி வீடு தனியார் நிறுவனத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 072 2928 781, 072 2058 854.

(சி/4501)(6-7-45)

## விற்பனைக்கு

127 -0636
CD 125. HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 021 4901 519, 077 5804 111.

(சி/4501)(6-7-45)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி, போறம்பலம் தெற்கு, அச்சுவேலியில் 06 (ஆறு) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774404269

(24960)(2-6)

## விற்பனைக்கு

250 ரக டயானா கூலர் (LF-xxxx) மற்றும் பிறீசர்கள் (குளிரூட்டிகள்) விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 0773012524

(24818)(6-7-10)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இரு மோட்டார் சைக்கிள்கள்
YAMAHA CD 90cc,
HONDA SHINE 125 cc
தொடர்பு: 0777554282

(25000)(6-7-10)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் அரியாலை, முள்ளி வீதி, இல.678/11,(கண்டி வீதி, அருகில்) தென்னைமரம், கிணற்றுடன் கூடிய வீடு(1பரப்பு குளி 2) விற்பனைக்கு உண்டு.
(சி/4520)(5-6-7) தொடர்பு:077 711 0065

## தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

கொழும்பை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் நிறுவனத்திற்கு கொழும்பில் வேலை செய்ய பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.
★Dish Antenna பொருத்துநர்.
★Repair செய்யக்கூடிய Technician
உணவு தங்குமிடம் இலவசம். திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.
T.Kumar- 077 771 0785,
I.Prasanth-077 979 8053

(24836)(5-6-7)

## வீடு, காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில்U.N.H.C.R. ஸ்ரோஸிற்கு அருகில் மேற்கே செல்லும் கற்பாதையில் இரண்டாவதாக உள்ள எனது சொந்த 4 ¼ பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. நிறுவனத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0214911206, 0771237063.

(24841)(6-7-10)

## மணமகள் தேவை

1980, பூசம், பாவம் 97 London (Accountant) க்கு PR அல்லது Residence visa உள்ள மணப்பெண் தேவை.
தொடர்பு : 077 2680632

(24812)(6,7,8)

## விற்பனைக்கு

தானியங்கி கிறீம் மெசின் ( கோன் ஐஸ்கிறீம்) மற்றும் குளிரூட்டிகள் ( பிறீசர்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 6071675

(24815)(6,7,8)

## காணி, வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு அருகிலுள்ள 1½ பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 071 2157

(24839)(5-6-7)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், வயது 30, சதய நட்சத்திரம், 12இல் செவ்வாய்,கிரகபாவம் 14 உடைய வங்கியில் பணிபுரியும் அழகிய மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
தொடர்பு: தீர்க்க சுமங்கலி திருமணசேவை 72,அம்மன் வீதி,கந்தர்மடம்.
077 662 7047

(24810)(5-6-7)

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம்,. தசைநெரிவு நாள்பட்ட நோவு விசேஷமாக முள்ளந் தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள் வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள்: ஒவ்வொரு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.
தொடர்புகளுக்கு : 077 6544338
இடம் : யாழ். சிவன் கோவிலடி வைத்தியசாலை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் A.G.A காரியாலயத்திற்கு முன்பாக)
வைத்தியர் : Dr.சோமசுந்தரம், T.விஜயன் Reg No:8688

(24825)(6-7-2)

## மணமகள்மார் தேவை

1979, அவிட்டம் 4 ஆம் பாதம், கிரகபாவம் 144, 1 இல் செவ், சூரி, சந், கேது, அரச ஊழியர், உயரம் 5' 6'' உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளும், 1982, அச்சுவினி 2 ஆம் பாதம், 9 ¼ கிரகபாவம், செவ்வாய்க்குற்றமற்ற Engineerஆக தொழில் புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகளும் தேவை.
(24812)(6,7,8) தொடர்பு : 077 3485967

## நீர் கொழும்பில் காணியுடன் வீடு விற்பனைக்கு

நகரின் மத்தியில் அமைதியான சூழலில், அடித்தளத்தில் 3 படுக்கையறை, 3 குளியலறையும் மேல்மாடி வீடு 75 % முழுமை செய்யப்பட்ட 1700 ச. அடி வீடும் 10 பேர்ச் காணியுடன் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகொள்ள : 077 2208033

(சி/4518)(6,7,8)

## பரிசளிப்பு விழா

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மு.ப 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகா வித்தியாலய அதிபர் வ.நடராஜா ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி. பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் ஆகியோரும் கௌரவ விருந் தினராக சாகவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவாநந்தனும் கலந்து கொள்வர். (வ-9)

## தரம் 6 மாணவர்களுக்கான கணித மதிப்பீட்டு பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 6 மாணவர்களுக்கான கணித மதிப்பீடு- இல.10 மாதிரிப் பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக் கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்டுள்ள புள்ளித்தாளில் மதிப்பீடு இல.10 வரையிலான புள்ளி களைப் பதிந்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (வ-9)

## சாரதி மீது பயணிகள் தாக்குதல்

டிப்பர் வாகனம்- பயணிகள் வானத்துடன் உராய்ந்ததால் கோபமடைந்த பயணிகள் டிப்பர் வாகனச் சாரதியை கொட்டன்களால் தாக்கினர்.

இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி மிருசுவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. பளை மாகா நிறுவனப் பணிப்பாளரான பெல்வத்தை [illegible] (வயது 26) என்பவரே தாக்கப்பட்டவராவர். (வ-9)




## மும் மணிகளை வாழ்த்துவதில் உவகையடைகிறோம்



மானிப்பாயைச் சேர்ந்த பஞ்சாக்ஷரக் குருக்களின் பேரன்களும் சிவஸ்ரீ விநாயமூர்த்திக் குருக்கள் – மனோன்மணி அம்மா தம்பதியரின் புதல்வர்களான

**சிரஞ்சீவி வி. கஜானந்தன் ஐயா (குருக்கள்)**
**சிரஞ்சீவி வி. மதிமுகன் ஐயா (குருக்கள்)**
**சிரஞ்சீவி வி. வாமநேசன் ஐயா**

ஆகிய மூவேந்தர்களையும் வேத சிவாகமங்களின் வழிநின்று சங்கநிதி, பதுமநிதி இரண்டும் பெற்று தரணியில் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ எல்லாம் வல்ல அன்னை நகுலகிரி மணற்றிடலில் நடமாடி உறையும் குமரி மகமாரி ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சிவஸ்ரீ ந. உமாபதீஸ்வரக்குருக்கள், ஆதீனகர்த்தா
கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

(24329)(6,7,8)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு



HONDA HORNET 250CC
உற்பத்தி - 2006, பதிவு - 2008,இருநிறம் (Twin tonel)- கறுப்பு/வெள்ளை.
தொடர்பு:
Dr.S.அருணன்,
727,கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.
077 717 9268
★ தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பின்னர் பார்வையிடலாம்.

(24838)(5-6-7)

## வேலைவாய்ப்பு

ரேடோ ரவல்ஸின் மூலம் ஓமான்,கட்டார், சவுதிஅரேபியா, மலேசியா, லண்டன் போன்ற நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு.
சவுதி அரேபியாவில் பார்மசி கிளினர், சவுதி வோச்சர் கம்பனியில் வேலைவாய்ப்பு.
மலேசியாவில் ஹொட்டலில் ஆண்,பெண் இருபாலாரும் லண்டனில் பெண்களுக்கு மட்டும் ஓமானில் ஹொட்டலில் வேலைவாய்ப்பு.
தொடர்பு: 072 568 3590
Email: subraa 2525@yahoo.com
தொழில் புரிய விரும்புவோர் எட்டு புகைப்படங்களுடனும் கடவுச் சீட்டுடனும் வருகை தரவும்

(20949)(5-6-7)

# மரண அறிவித்தல்

## தனபாலசிங்கம் கந்தசாமி



இல. 231, ஜெயந்திநகர், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி (பெற்றாஸ்) 02.11.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், திலகவதியின் (தேவி) அன்புக்கணவரும், இராமலிங்கம், பத்மினி, நவம், முத்து, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும, புஸ்பா, முகுந்தன, பூவேந்தன், சயந்தன், மயூரி ஆகியோரின் அன்பு தந்தையும், நிமலாதேவி, மலர், தேவநாயகி, தட்சணாமூர்த்தி, நித்தியானந்தமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இல. 329, ஜெயந்திநகர், கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

329, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(23928)(7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு

எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு.

(21583)(5-6-7) தொடர்பு: 077 659 2044



## கடை வாடகைக்கு

ஆரியகுளச் சந்திக்கும் யாழ்.வைத்தியசாலைக்கும் இடையில் அமைந்திருக்கும் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.

(24831)(2-6-7) தொடர்பு: 075 039 5664, 075 729 5249



## ஆடைகளின் அச்சுக்கலை பயிற்சி

**Fabric Printing Training (Manual)**



அரிய சந்தர்ப்பம் – யாழில்

குறைந்த முதலீட்டில் வீட்டிலிருந்தவாறே உங்கள் ஆடைகள் , சாறி மற்றும் துணிகளில் விதம் விதமான டிசைன்களை பல வர்ணங்களில் கைவழி முறையில் பிரிண்டிங் செய்யும் பயிற்சியை தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின் அங்கீகாரம் பெற்ற அகில இலங்கை ரீதியாக கற்பித்துவரும் ஆசிரியர்

**அன்ரோ** B.A.,D.S.Tech.,(S.India)

அவர்களால் இரண்டு நாள் செய்முறை மற்றும் விளக்க பயிற்சியளிக்கப்படுகிறது.

விவரங்கள் : பதிவுகளுக்கு : 077 8904131, 077 7283192, 071 5863151. 2012 நவம்பர் 10,11 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு) (மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை)

தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் வழங்கப்படும்.

CHA Hall, No.90, Bankshall Street, Jaffna

(விஜய் ரீவியில் திங்கள் காலை 9.30 க்கு இந் நிகழ்ச்சியைப் பார்க்கலாம்) குறிப்பு : யாழில் எமக்கு வேறு கிளைகள் இல்லை

(24742)(6.7.8)



## தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புக்கள் உடன் வாருங்கள்

எங்கள் தொழிற்சாலையில் ஜாம், சொக்லேட், கேக், யோக்கட், டொபி, பால்மாவை உற்பத்தி செய்யும் ஜெலி, க்ளவுஸ், டயர் ஆகிய உற்பத்திப் பொருள்கள் லேபல் பிரிவுக்கு 16 முதல் 55 வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சம்பளம் 38,000/= முதல். உணவு, தங்குமிடம் இலவசம். சேர்த்துக்கொள்ளப்படும் இடம்:

**அநுராதபுரம்: 071 3460295**

50,000/=இற்கு மேல் துறைமுகம் (தனியார்) பிரிவிற்கு தச்சர் வெல்டர், சாரதி வேலையாள்கள் தேவை. விமான நிலையம் (தனியார்) பிரிவிற்கு கேட்டரின், சுத்தம் செய்தல், பாதுகாப்பு பிரிவு, மேசன், தச்சர், செடலின், பெயின்டஸ் மயில்ஸ் பாஸ்மார்களும் மற்றும் பாரவாகன ரைவர் JCB Fonclift வில்டஸ் ரோலர் ஒப்பரேட்டர் ஆகியோர் தேவை. சகல பிரதேசத்தவரும் தேவை. வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசம்.

இல. 136/6 A, மெயின் வீதி, அநுராதபுரம்,
(20047) (6-7-45) தொடர்பு: 071 3460 295


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14.10.1953

இறைவன் அடியில்
17.10.2011

திதி: 04.11.2012

# அமரர் பூதத்தம்பி யோகநாதன்

(Director of customs-சுங்கப் பணிப்பாளர்)

உன்னையும் மறப்பதுண்டோ?- மறந்தால்
உள்ளத்தில் அமைதியுண்டோ?
பயிர் மண்ணையும் மறப்பதுண்டோ?
-மறந்தால்
மலரும் மணமும் உண்டோ?.......அண்ணா
நாம் உன்னையும்.... மறப்பதுண்டோ?
எங்கிருந்து நீ பாடுகின்றாயோ?
துன்ப கீதமே பாடுகின்றாயோ?
இந்த நிலை என்று மாறுமோ?
அண்ணா உனைக் காணும்

அன்னாரின் பிரிவால் துயருறும் தம்பிமார்கள்

பூதத்தம்பி மகேந்திரநாதன்-கொழும்பு-03
( கப்பல் பொறியியலாளர்-லண்டன்)

பூதத்தம்பி இரகுநாதன் - கொழும்பு -06
(பொறுப்பதிகாரி, மதுவரி நிலையம்-வவுனியா)

(209..) (..5,7)

# கேள்வி அறிவித்தல் - 2013

## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபையால் 01.11.2012 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் ஏற்பட்ட தவறு பின்வருமாறு திருத்தப்படுகிறது.

| இல. | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT,VAT நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | (ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட தவறானது) ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT,VAT நீங்கலாக) | (திருத்தப்பட்டது) ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | | | மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | |
| 12 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 165,000.00 | 720,500.00 |
| | | | கோழி இறைச்சிக் கடை | | |
| 2 | கிளிநொச்சி இல.02 | 40,000.00 | 1,000.00 | 1,562,000.00 | 1,562,000.00 |
| 3 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | 71,610.00 | 220,110.00 |
| 4 | கிளிநொச்சி இல.01 | 40,000.00 | 1,000.00 | 1,430,000.00 | 1,430,000.00 |

வைத்திலிங்கம் குகராசா,
தவிசாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(4526) (10,6,7)

# வேலணை பிரதேச சபை
# 2013 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 05.11.2012 தொடக்கம் 14.11.2012 வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 16.11.2012 மதியம் 12.00 வரை
கேள்வி திறக்கும் திகதி: 16.11.2012 பிற்பகல் 12.30 மணி

| இல | சந்தை பெயர் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர்த்து) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|
| 01 | துறையூர் மீன்சந்தை - வேலணை | 1000.00 | 10000.00 | 149,600.00 |
| 02 | செட்டிபுலம் மீன்சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 40,150.00 |
| 03 | சரவணை மீன்சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 13,200.00 |
| 04 | அம்பிகைநகர் மீன்சந்தை - வேலணை | 500.00 | 5000.00 | 33,000.00 |
| 05 | அல்லைப்பிட்டி மீன்சந்தை - அல்லைப்பிட்டி | 500.00 | 5000.00 | 44,000.00 |
| 06 | மடத்துவெளி மீன்சந்தை - புங்குடுதீவு | 1000.00 | 10000.00 | 177,100.00 |
| 07 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை - நயினாதீவு | 500.00 | 5000.00 | 27,500.00 |
| 08 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை - நயினாதீவு | 500.00 | 5000.00 | 27,500.00 |
| 09 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை - புங்குடுதீவு | 1000.00 | 10000.00 | 429,110.00 |
| 10 | குறிகாட்டுவான் வாகன நிறுத்துமிடம் - புங்குடுதீவு | 1000.00 | 10000.00 | 1,000,000.00 |
| 11 | சாட்டி சிற்றுண்டிச்சாலை - வேலணை | 500.00 | 5000.00 | 36,000.00 |
| 12 | சாட்டி வாகன நிறுத்துமிடம் -வேலணை | 1000.00 | 10000.00 | 150,000.00 |

* கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தில் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால், அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
* ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
* கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்கு 12% (VAT) பெறுமதிசேர் வரிசெலுத்தப்படல்வேண்டும்.
* கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3, பகுதியையும் 2012.12.05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும்.
* கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
* புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்படவேண்டும்.
* சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
* வாகனத்தரிப்பிடங்களில் வேலணை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச்சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்து சபை, அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத்தரிப்பிட கட்டணம் அறவீடு செய்யப்படவேண்டும். (துவிச்சக்கரவண்டி 5/=, மோட்டார்சைக்கிள் 10/=, கார், ஓட்டோ, லான்மாஸ்ரர்- 30/=, வான் 50/=, லொறி, பஸ் 100/=)
* கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
2012.11.02

(சி/4531) (45.6.7)

சி.சிவராசா
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பணிகளைஇதய சுத்தியுடன் செய்தவர் அமரர் சண்முகலிங்கம்

## இந்து சமயப்பேரவை அஞ்சலி

அமரர் த.சண்முகலிங்கம் நாவலர் வழி நின்று சமயத்தொண்டு செய்த பெரியார் ஆவார். நாவலரின் பணிகளை இதய சுத்தியுடன் செயற்படுத்திய தகைமையாளர்.

இந்துசமயப்பேரவையின் சார்பில் அதன்தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் வெளியிட்ட இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

சமயத்தையும், தமிழையும் நமது பாரம்பரியத்தையும் காக்க முனைப்புடன்செயற்பட்ட சைவ பரிபாலனசபை நமது சமூகத்தின் பெருமைக்குரியவர்களால் வழி நடத்தப்பட்டது.

அவர்கள் வழி நின்று இச்சபையின் தலைவராக சமயத் தொண்டு செய்தவர் பெரியார் அமரர் சண்முகலிங்கம்.சைவ வாழ்வு வாழ்ந்து, சிவநெறிச்செல்வராக, நிறைகுடமாகச் சைவப் பணி செய்த இப்பெரியார் நல்லவர், நாணயமானவர், நாவலர் பணிகளை இதய சுத்தியுடன் செயற்படுத்தும் தகைமையாளர் எனப் பலவாறுபோற்றப்பட்டார்.

நாவலர் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்தவை சிதம்பரத்தில் அவர் ஆற்றிய நற்பணிகள் பலவாகும். இந்தப்பணிகளில் பல செம்மையாக, முன்னெடுத்துச்செல்லப்படாத நிலையில் நாவலர் மறைவுக்குப் பின்னர் அவற்றில் கவனஞ் செலுத்தி யாழ்ப்பாணத்தாரின் முத்திரையை அங்கு பதித்த பெரியார் அவரென்றால் மிகையாகாது.

சைவ சித்தாந்தத்தில் இவருக்குரிய அறிவு இத்துறை சார்ந்த தமிழக அறிஞர்களோடும், ஆதீனங்களோடும் இவருக்கு நல்ல தொடர்பை ஏற்படுத்த அதனைத்தமது உயர்ச்சிக்குப் பயன்படுத்தாது ஈழத்துச் சைவர்களின் மேண்மைக்கும், முன்னேற்றத்துக்கும் பயன்படுத்த இவர் தவறவில்லை.

நாவலர் விட்டுச்சென்ற தருமங்களை ஒழுங்கு படுத்திச் சீர்செய்து பயனுள்ளதாக இவற்றை ஆக்கியவரும் இவரேதான். நாவலர் மீது இவருக்கிருந்த பக்திக்கு எல்லையே இல்லை. இவரின் இப் பக்தியை கடத்தப்பட்ட நாவலர் சிலை மறுபடியும் நாவலருக்கென அமைக்கப்பட்ட மணி மண்டபத்தை அடைந்த போது இவருக்கிருந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்பதை நாம் கண்ணாரக் கண்டுகொண்டோம்.

இவரது முயற்சியால் சைவபரிபாலன சபை சைவ மாநாடுகள் பலவற்றை நடத்தியுள்ளது. இறுதியாக நடைபெற்ற மாநாட்டிலும் இவரது பணி போற்றத் தக்கவாறு அமைந்தது.

அரசியலிலும் இவருக்குள்ள ஈடுபாடு அதீதம். தமிழ்தேசியத்தில் அசையாத நம்பிக்கை உடையவர். தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரிடம் இவருக்கிருந்த ஈடுபாடு சொல்லித் தெரிவதில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வேண்டிய நேரத்தில் சளைக்காது உதவிக் கரம் நீட்டியவர் என்பதைப் ''பழைய'' தமிழரசுக் கட்சிக்காரர்கள் நன்கறிவர்.

இத்தகைய பெருமகனின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திப் போமாக.

# பருத்தித்துறை வீதி புனரமைப்பு இரவிலும் பணிகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ.4

பருத்தித்துறை வீதியின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் இரவு வேளை வரை நீடிக்கப்பட்டுள்ளன.

இதற்கென விசேட மின்சார ஒளி அமைக்கப்பட்டு வீதியின் புனர்நிர்மாணப் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றன.

கோப்பாயில் இருந்து இருபாலை வரைக்குமான பிரதான வீதி கடந்த மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தார்க் கலவை போடப்பட்டு சீர்செய்யப்பட்டும் வருகின்றது. தாரினால் சீராக்கப்பட்டதை அடுத்து விதியின் ஒரு பகுதிக்கு காப்பெற் போடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடும் மழையை அடுத்து ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றத்தைப் பயன்படுத்தி குடாநாட்டின் பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தற்போது சூடுபிடித்துக் காணப்படுகின்றன. (3-17)

# காதலி முகத்தில் அசிட் வீச்சு

## பழிவாங்கிய காதலன்!

தன்னைக் காதலித்து ஏமாற்றியதாகக் கூறி பெண்ணொருவர் மீது காதலன் அசிட் வீசித் தாக்குதல் நடத்தி பழிவாங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை காலி - உடுகம பகுதியில் இடம் பெற்றுள்ளது.

உடுகமவில் இருந்து காலி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் குறித்த பெண் பயணித்துக் கொண்டிருந்த வேளை, ஏமாற்றப்பட்ட இளைஞர் அசிட் வீசிதாக்குதல் நடத்தி யுள்ளார்.

இதன்போது பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான 26 வயதுடைய பெண் காலி கராபிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்கென கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அசிட் வீசப்பட்டபோது பஸ்ஸில் பயணித்த மேலும் 5 பெண்களும் பஸ் நடத்துனரும் சிறு எரிகாயங்களுக்கு உள்ளாகி உடுகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அசிட் வீசிய சந்தேகநபர் இன்னமும் கைது செய்யப்படாத நிலையில் உடுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# மத்திய கல்லூரி முதலிடம்

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட திறந்த பிரிவு நாடகப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி நாடக அணி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் 'எங்களைக்காப்போம்' என்னும் நாடகமே முதலிடத்தைப் பெற்றதாகும். (3)

# ஊடகக்கல்வி மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் ஊடகக் கல்வி கற்கும் பன்னிரெண்டு பாடசாலைகளின் சுமார் நூற்றி எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவகளுக்கு, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும், இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து பயிற்சிப் பட்டறை ஒன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம்கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்தியது.

இந்த பயிற்சிப்பட்டறையில் இலங்கை பத்திரிகை ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இம்ரான்சுபஜர், இலங்கை பத்திரிகை ஆணைக் குழுவின்முறைப்பாட்டு அதிகாரி அமீர் குசையின், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப பொறுப்பதிகாரி பரசாத் செனரத்தினா, டெயிலிமிரார் ஆசிரிய பீட ஆலோசகர் ஜயுப் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முதல் தடவையாக பாடசாலை மாணவர்களுக்கு இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழுவும மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து பயிற்சிப்பட்டறையை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (86)



சாவகச்சேரி பிரதேச சபையினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நடமாடும் நூலக சேவை, கைதடி முதியோர் இல்லத்திலும் நடைபெற்றது. இந்த நூலக சேவையில் இல்ல முதியோர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.(3-17)

# பணம் விதைகள் நடும் திட்டம் வலி.கிழக்கில் தொடர்கிறது

வலி.கிழக்குப் பிரதேச சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பனம் விதை நடுகைத் திட்டம் மீண்டும் தொடர்ந்து முன்னெடுக் கப்படவுள்ளதாக சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார். கைதடியில் இருந்து வல்லை வரையுமான நன்னீர் தடுப்பணை வரைக்குமான பனவிதை நடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்த மழையினால் இந்த பனம் விதை நடுகைத் திட்டம் பாதிக்கப்பட்டது.

அதைவிட கைதடி- நீர்வேலி இணைப்பு வீதியோரமும் இந்த பனம் விதை நடுகை செய்யப்படவுள்ளது.

தற்போது இப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதணல் பனம்விதைகளை நடுகை செய்ய முடியாதுள்ளது.

இப்பிரதேசத்தின் பொது இடங்களில் இந்த பனம் விதை நடுகைத் திட்டத்தை அடுத்த வாரத்தில் மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்கும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (3-17)

# வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் மூன்றாவது இந்துமாநாடு

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி நடத்தும் மூன்றாவது இந்து மாநாடு வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச்செயலர் க.நீலகண்டன், சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கலையமுதா கிருஸ்ணப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை நிகழ்வாக ''த.கனகசுந்தரம் பிள்ளை ஆய்வரங்கு'' வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்றது. இவ்வாய்வு அரங்கின் தொனிப்பொருளாக ''இந்துசமயவாழ்வியலில் சடங்குகள் சம்பிரதாயங்கள்'' என்ற தலைப்பில் இடம் பெற்றது. ஆய்வாளர் ஏ. அனுஷானந்தன் ''பூர்வக்கிரியைகள்'' என்ற தலைப்பிலும் தமிழ்மணி அகளங்கன், ''தொழில்சார் கிரியைகள்'' என்ற தலைப்பிலும் தமிழருவி த.சிவகுமாரன் ''அபரக் கிரியைகள்'' என்ற தலைப்பிலும் ஆய்வரங்கை நிகழ்த்தினர்.

இரண்டாவது அரங்காக இயல் இசை வாரிதி கலாபூஷணம் வீரமணி ஐயர் கலையரங்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுபெற்ற பீடாதிபதி த.இன்ப தேவராஜா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளின் தில்லானா நடனம், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகளின் சிவ நடனமும், வவுனியா மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் 'தாருகாவனம்' எனும் நாட்டிய நாடகமும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் 'பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்' என்ற கலை நிகழ்வும், வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்களின் கரகம், காவடி நடனமும் இடம்பெற்றன. (3-402)

# வவுனியாவில் திருட்டு அச்சத்தில் மக்கள்

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, வவுனியா நெளுக்குளம் பொலிஸாரின் ரோந்து நிறைந்த இந்தப் பகுதியில் இவ்வாறான திருட்டு இடம்பெற்றுள்ளமை பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கந்தசாமி கோயில் வீதியில் நகைக்கடையொன்றில் திருட்டு முயற்சி இடம்பெற்று ஒருவாரத்துக்குள் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் 15 இற்கு மேற்பட்ட திருட்டுக்கள் இந்த வருடத்தில் வவுனியாவுக்குள் இடம்பெற்றுள்ள போதும் இதுவரை அந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் எவரையும் பொலிஸார் கைது செய்யாமை தொடர்பாக பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர் இது தொடர்பாக பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில்; பொதுமக்கள் ஒத்துழைப்பும், சிவில் பாதுகாப்புக் குழுவின் பங்களிப்பும் இருப்பின் திருட்டு சம்பவங்களை தவிர்ப்பதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கைது செய்யமுடியும் எனவும் தெரிவித்தனர். (3-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 06.10.2012 சனிக்கிழமை
இறைபதமடைந்த எங்கள் செல்வப் புதல்வன்
கொக்குவில் இந்துவின் மைந்தன்

## அமரர் ஜெயக்குமார் கீர்த்திகன் (கீர்த்தி)





அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (05.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:**

எமது புத்திரனின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து ஆறுதல் கூறித் தேற்றியோர் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோர் அனைவருக்கும் எமது அன்றைய தவிர்க்க இயலாத சிரம நிலை காரணமாக அடையாளம் கண்டுகொள்ள இயலாமையால் எமது புத்திரனது 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு தனிப்பட்ட முறையில் அழைக்க இயலாத எமது சிரம நிலையைக் கருத்தில் எடுத்து, இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி நிகழ்வில் கலந்து எமது புத்திரனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

சம்பியன் லேன் (7/1, நந்தாவில் லேன்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

# மரண அறிவித்தல்

## தளையசிங்கம் பூரணம்



நானாட்டானைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் பூரணம் 01.11.2012 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாரிமுத்து தம்பதியரின் இளைய மகளும், ஆறுமுகம் தளையசிங்கம் (Retired servant of paddy marketing Department, Nanattan) உடுப்பிட்டி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இலட்சுமி (உடுப்பிட்டி) தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவரான இராஜக்கோன் (K.V.S. Farm - முருங்கன்), அழகேசன் (முன்னாள் கௌதமி நகையக உரிமையாளர்: பிரபல அம்மன் ஜோதிட நிலையம் 78, கன்னாதிட்டி வீதி), ராஜேந்திரன் (India), மனோகரன் (Canada), மனோகரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகவதி (திருநெல்வேலி), நந்ததாஸ் (சுவிஸ்), நிச்சோ (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌதமன் (கொக்குவில் இந்து கல்லூரியின் 2012 A/L மாணவன்), கௌதமி (கொக்குவில் இந்து கல்லூரியின் 2014 A/L மாணவி), நிலாந்தன் (சுவிஸ்), நந்துஜா(சுவிஸ்), அரன் (கனடா), அலிசியா (கனடா), அனுசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகம்மா, கமலம், இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுப்பிரமணியம், வேதநாயகம், தேவி ஆகியோரின் மைத்துனியும், சறோசா, பத்மா, கருணா, திருச்செல்வம், சாந்தலிங்கம், சந்திரா, புனிதா ஆகியோரின் சிறிய தாயும் அம்பிகா, ராணி, சிவகுரு, பரமகுரு, ஈசன்,கெங்கா, மணிமேகலை, குமணன், தீபன், கஸ்தூரி, துளசி, கருணாகரன், இந்திராணி, மோகனேஸ்வரி, சிவாகரன், திருக்குமரன், கமலதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 64/3, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**64/3, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** மனோகரி (சுவிஸ்)- 0041313525812, 0041788150355

(24834)(2-6-7)

தகவல்:-
**த. அழகேசன் (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழில்சார் இதழியல் பயிற்சி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையம், தமிழ் ஊடகப்பரப்பில் முன்னோடியான ஓர் ஊடக பயிற்சி நிலையமாகும்.

2003ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஒரு தசாப்த காலமாக தனது சேவையை மிகுந்த இடர் மிக்க காலகட்டங்களாக தொடர்கிறது.

தமிழ் ஊடகப்பரப்பில் தொழில்சார் ஊடகவியலை வளர்த்தெடுப்பதைத் தனது தூர இலக்காக கொண்டு பணி செய்து வருகின்றது.

தொழில்சார் இதழியல் என்ற பதம் எமது ஊடகச் சூழலில் நன்கு பிரிந்து கொள்ளப்பட வேண்டிய ஏது நிலையிலேயே உள்ளது என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

நடுநிலைமை, ஜனநாயகத்தையும் மனிதவுரிமைகளையும் பாதுகாத்தல் போன்ற அடிப்படைகளில் சரியான, நேர்த்தியான, துல்லியமான, பக்கம் சாரா தகவல்களை ஏதொவொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் ஓர் ஊடகவியலாளன் அறிக்கையிடுகின்றதான நிலையை இது குறிக்கும் எனலாம்.

இந்த உன்னதமான சூழ்நிலை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்கான எதிர்கால ஆளணியினரை உருவாக்குதல் மற்றும் ஏலவே இருக்கின்ற ஆளணியினரை அந்த உன்னத நிலை நோக்கி நகர்த்திச் செல்லுதல் என்ற உயர் இலட்சியத்தை கொண்டு இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது.

கடந்தகாலத்தின் சூழ்நிலைகளுக்கேற்றதாக மட்டுப்படுத்தப்பட்டளவில் இதனது அசைவியக்கம் இருந்தாலும், தற்போது பல பரிமாணங்களில் ஊடக வளங்கள் பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. இதற்கு தற்போதைய நிர்வாகத்தின் தூர நோக்கு மற்றும் இயலாற்றல், செயல்திறன் என்பன உறுதுணையாக அமைந்துள்ளன.

இந்த பயிற்சிமையத்தில் தற்போது பணி செய்கின்ற ஊடகவியலாளருக்கான பகுதி நேர டிப்ளோமா பயிற்சிகளும், புதிதாக ஊடகத்துறைக்குள் நுழைய விரும்புகின்றவர்களுக்கான முழு நேர டிப்ளோமா பயிற்சிகளையும் வழங்கி வருகின்றது. இத்தோடு ஊடகத்துறை ஆர்வலர்களுக்கான குறுங்காலப்பயிற்சிகள் மற்றும் பாடசாலைகளில் ஊடகம் பயிலும் மாணவர்களுக்கான பயிற்சிகள் என்று பல செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

இதற்கு மேலதிகமாக புகைப்படக் கண்காட்சிகள், கருத்தரங்குகள், திரைப் படவிழாக்கள், களவிஜயங்கள், ஊடக நிறுவனங்களில் தொழில் பயிற்சிகள், இந்தியாவில் சென்னைப்பல்கலைக் கழகத்துடன் இணைந்ததான மேலதிக பயிற்சிகளென்று ஓர் ஊடக வியலாளனை உருவாக்குவதற்காக நிறையவே முதலிடப்படுகிறது. நிச்சயம் இவையெல்லாம் வளர்ந்து பெரு விருட்சமாகும் என்ற நம்பிக்கை உண்டு.

இங்கு, இலங்கையில் எந்த வொரு செயல் முறை சார்ந்த ஊடகப்பயிற்சியிலும் இல்லாத வகையில் பதிப்பு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் இணைய ஊடகத்திலும் பயிற்சியளிக்கப்படுகிறது. சர்வதேச ரீதியாக பல அறிவார்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்தவர்களை யாழ்ப்பாணம் வரவழைத்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஊடக வளங்கள் பயிற்சி மையம் தமிழ் ஊடகத்துறையில் முக்கியமான படிக்கல்லென்று குறிப்பிட்டால் மிகையாகாது.

இரண்டுவருட டிப்ளோமா பயிற்சியில் தற்போது ஐம்பது மாணவர்கள் பயில்கிறார்கள். தற்போது இரண்டு வருட முழு நேர பயிற்சிக்காக புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உயர்தரப்பரீட்சையில் பல்கலைக்கழக நுழைவுக்கான தகுதிபெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். (த)

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனப் பணிப்பாளருக்கு ஆசியாவின் வாழ்நாள் சாதனையாளர் விருது





இலங்கையின் காப்புறுதித் துறையின் தந்தை என வர்ணிக்கப்படும் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் உப தலைவரும், பணிப்பாளருமான சந்திரா ஷாஃப்டருக்கு ஆசியாவின் வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதித் துறைக்கு அவர் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் இந்த விருது இவருக்கு வழங் கப்பட்டுள்ளது.

மலேசியாவில் அண்மையில்இடம்பெற்ற16ஆவது ஆசிய காப்புறுதி துறைக்கான விருதுகள் வழங் கும் நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. ஆசியா நாடுகளைச் சேர்ந்த காப்புறுதி துறைகளுக்கு சிறப்பான முறையில் தமது பங்களிப்பை வழங்கியிருந்தவர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கும் நிகழ்வு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகிறது. 16 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுவதற்காக சுமார் 800 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், அதிலிருந்து 40 பேர் மட்டுமே தெரிவு செய் யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விருதுகள் வழங்கும் நிகழ்வில், பிரதான விருதாக அமைந்திருந்த வாழ் நாள் முழுவதும் காப்புறுதித் துறைக்கு ஆற்றிய சேவையை கௌரவித்து வழங்கப்பட்டிருந்த வாழ்நாள் சாதனையாளர் விருது சந்திரா ஷாஃப்டருக்கு வழங்கப்பட்டிருந்தது. 16 வருடங்களாக ஏற்பாடு செய்யப்படும் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வானது, காப்புறுதித் துறையில் மிகவும் உயரிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. (வ)



றோயல் மாட் லிமிடெட்டின் பிராந்திய பழுது பார்க்கும் நிலையம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டது. ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் தலைவர் பெல்கம நிலையத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார். (த)

## காலியில் டிசெ.6 இக்குள் கப்பல் திருத்தும் நிலையம்

### சவூதியுடன் இலங்கை கலந்துரையாடியது



காலி துறைமுகத்தில் 44 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் கப்பல் கட்டும் மற்றும் திருத்தும் நிலையம் ஒன்றை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்குள் திறந்து வைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவுக்கும் சவூதி அரேபியாவின் 'சீகல்ப் சிப்யாட்' கம்பனியின் தலைமை அதிகாரிகளுக்கு மிடையில் கடந்த வியாழக்கிழமை துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்தி மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

காலி துறைமுகத்தில் 44 மில்லியன் அமெரிக்க டொலரில் கப்பல் கட்டும் மற்றும் திருத்தும் நிலை யம்ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் இலங்கை முதலீட்டுச் சபைக்கும் 'சீகல்ப் சிப்யாட்' நிறுவனத்துக்கும் இடையில் கடந்த ஜூலை மாதம் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கப்பல் திருத்தும் தளத்தை அடுத்த மாதம் 6 ஆம் திக திக்குள் திறப்பது தொடர்பி லேயே மேற்படி கலந்துரை யாடல் இடம்பெற்றது.

சவூதிஅரேபியாவில் உள்ள ஹாதி ஹமாம் கம்பனி சார்பில் இலங்கையில் முதலாவது முதலீட்டை மேற்படி 'சீகல்ப் சிப்யாட்' கம்பனி மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த முதலீட்டின் மூலம் இலங்கையில் சுமார் 5000 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும் என்று நம்பப்படுகின்றது. இதேவேளை, இதன்மூலம் கிழக்கு மாகாணத்துக்கு படகுச்சேவைகளை வழங்கலாம், மாகாணத்தின் சுற்றுலாத்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## வங்கிகளின் வளர்ச்சிப் பாதைக்கு வாடிக்கையாளர் ஒத்துழைப்பு தேவை



கடந்த எட்டு வருட காலமாக மானிப்பாய் இலங்கை வங்கியின் விரிவாக்கற் கிளையாக, சங்கானை இலங்கை வங்கி இயங்கி வந்தது. இன்று முதல் சகல செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்ட நிலையான வங்கியாக இவ் வங்கி தரமுயர்த்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம் என சங்கானை இலங்கை வங்கிக் கிளையை தரமுயர்த்துவதற்கான அங்குமார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய, இலங்கை வங்கியின் விற்பனை நெறிப்படுத்தல், பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம் முதியான்சே தெரிவித்தார்.

இந்தக் கிளையின் முகாமையாளர் த.பிருதுவிராஜ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தனதுரையில், வங்கி என்பது வாடிக்கையாளர்களையே நம்பியுள்ளது. இவ்வங்கியைப் பொறுத்தமட்டில் அநேகமானோர் வாடிக்கையாளர்களாக உள்ளனர். இவர்களின் ஒத்துழைப்பு வங்கி வளர்ச்சிக்கு முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

இவ்விழாவில், இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் கே.தர்மசிறி மற்றும் வலிமேற்கு பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கே.சிவகுமார் உட்பட சங்கானை வர்த்தக சங்கத்தலைவர் ச.சாம் பசிவம், மற்றும் வாடிக்கையாளர்கள், ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டனர். (த-29)

## இந்தியவுக்கான யாத்திரை செல்லும் வெற்றியாளர்

வலிவடக்கு, நவ.4

மக்கள் வங்கிக் கிளைகளில் 'பரினதா' கணக்கு வைத்திருப்பவர்களிடையே நடைபெறும் சீட்டிழுப்பில் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் கொக்குவில் கிழக்கத்தைச் சேர்ந்த சின்னையா கோபால கிருஷ்ணசாமி, திருமதி சிவபாக்கியம் கோபால கிருஷ்ணசாமி தம்பதியர் இந்தியாவிற்கான யாத்திரையை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-6)

## இரு மாதங்களில் பங்குப்புரள்வு மிகக் குறைந்த நிலையில்

இரு மாதங்களில் ஆகக் குறைந்த பங்குப்புரள்வு பெறுமதியும், கடந்த ஆறு வாரங்களில் பதிவாகியிருந்த ஆகக்குறைந்த அனைத்து பங்குவிலைச் சுட்டெண் பெறுமதியும் கடந்தவாரம் கொடுக்கல் வாங்கல்கள் நடவடிக்கைகளின்போது பதிவாகியிருந்தன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் ஜோன் கீல்ஸ் பங்குகளின் மீது தமது கவனத்தை செலுத்தியிருந்ததுடன், சிறியளவிலான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோரின் பங்களிப்பு மந்த கதியிலேயே காணக்கூடியதாக இருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5550.88 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 5082.87 ஆகவும், குக ஸ்ரீலங்கா 20 சுட்டி 2997.35 ஆகவும் அமைந் திருந்தன.

கடந்த 22ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறு மதியாக ரூ. 2,108,189,971 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 23,029 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங் கல்கள் 22,215 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 814 ஆகவும் பதிவாகியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
18.06.1944

இறப்பு
05.10.2012

திருமதி சிவானந்தராசா
மீனலோஜினி (தேவி)

அம்மா
அன்றலர்ந்த தாமரை போல் சிரித்திடும்
உம் பூமுகத்தைப் பார்த்துப் பார்த்து
எம் கவலையெல்லாம்
நாம் மறந்திருந்தோம்
இன்றுதிர்ந்து எமை விட்டு
தனியாக எங்கு சென்றீர்கள்
ஈசனே உம் துணையென எண்ணி
அவனடியைச் சேர்ந்தீரோ....?

(24974)(2-6-7)

உம் நினைவில்
புலவனார் வீதி,
கல்வியங்காடு. குடும்பத்தினர்.

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
03.01.1938



விண்ணில்
23.10.2005

அமரர் வேலுப்பிள்ளை வேல்முருகு (மண்டலாய்)

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், அரச வைத்தியசாலை)

திதி:- அபரபக்க சஷ்டி

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் ஐயா,
உறவென்ற கூடு விட்டு
பறந்துதான் சென்றீரோ ஐயா,

கட்டுக்கொம்பரை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
T.P.021 226 3048 (சி/4529) (2-6-7)

உங்கள் நினைவில் வாழும்
சகோதரி, மக்கள்,
மருமகள், பேரன்.

## வீடு விற்பனை

சென். யோசப் வீதி, வளன்புரம்
கொழும்புத்துறையில் 2½ பரப்பு காணியில்
சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு
உண்டு.
தொ.பு: 0776146434 ஜென்சின் ஞாட்ஸ்மரியா.
(24903)(6-7-3)

## தேவை

தேவி அழகு நிலையத்துக்கு டிப்ளோமா
படித்த அனுபவமுள்ள பெண் தேவை.
இல.26, ஸ்ரேசன் றோட்,
வைரவபுளியங்குளம், வவுனியா.
(சன்பிறிட்டிஸ் பிஸ்னஸ் மனேஜ்மன்ற்
கொலிச் அருகில்)தொடர்பு:- 0775763263
(20946)(2-6-7)

## BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வங்கி

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 16.02.2012 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 16.08.2011 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப் படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை (யாழ்.கச்சேரி, யாழ்.பஸ் நிலையம், யாழ்.பிரதான வீதி, விரிவாக்கற்கிளைகள் உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2012 நவம்பர் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு |
| யாழ். 2ஆம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| திருநெல்வேலி | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் | |
| காங்கேசன்துறை (அளவெட்டி, இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம், பளை, பூநகரி விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |
| உரும்பிராய் | |
| சங்கானை | |
| வல்வேட்டித்துறை | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.
செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி (வட பிராந்தியம்), வடபிராந்திய காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே.021 222 4683, 021 222 3126 (பி/4306)(2-6-7)

# மரண அறிவித்தல்

## சிவநெறிப் புரவலர் தம்பியப்பா சண்முகலிங்கம் (J.P)

(உரிமையாளர், நோதேண் இன்டஸ்ரீஸ் (பி) லிமிடெட். யாழ்ப்பாணம்,
தலைவர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்)



சுருவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நீராவியடி, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா சண்முகலிங்கம் (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - கண்ணம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், சுபோதினி, சுபேந்திரன், Dr. வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமனும், சத்யனின் அருமைப் பேரனும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற Dr.இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, ஆனந்தலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குற்றாலம்
43, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
(24967)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மெடிகல் கிளினிக்

புதிய மெடிகல் கிளினிக் யாழ்நகர், நம்பர் 125, பிரதான வீதியில் (Main street) திறக்கப்பட்டுள்ளது.

Dr. ச.சிறீதேவா (MBBS, DcH, DFm, McGP)
Dr. க.சந்திரசேகரம் (Registered medical officer)

ஆகிய வைத்திய நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள்.
ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பார்வையிடப்படும்.

| | |
|---|---|
| Dr. ச.சிறீதேவா | காலை 8 முதல் பி.பகல் 1 மணிவரை |
| Dr. க.சந்திரசேகரம் | பி.ப. 3 முதல் மாலை 5 மணிவரை |

தொ.பே:
0212228100
0775930254

நிர்வாக ஒழுங்கமைப்பாளர்.

(25001) (8-7-10)

## காணியும் வீடும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள நி.ப 1 குளி 10¾ கொண்ட காணியும் அதனுள்ளமைந்துள்ள மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு.

077 6693471 உடன் தொடர்பு கொள்ளவும்
021 7901915

(24711)(6-8)

## பெண் பணியாளர் தேவை

சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைக் கணக்கீடு,நிறுவன கணக்கீடு செய்வதற்கு கணினி அறிவுடைய இரண்டு வருட முன் அனுபவம் உள்ள 25-45 வயதிற்கு இடைப்பட்ட பெண் கணக்காளர் உடன் தேவை. (கொக்குவில், மானிப்பாய் பகுதிகளில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 021 320 7585,
021 221 3027

(சி/4539)(5-6-7)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 29 வயது, 1இல் செவ்வாய், தொழில் பார்க்கும் மணமகளுக்கு அரச தொழில் உடைய மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். லண்டன் / ஆஸ்திரேலியாவும் எதிர் பார்க்கின்றார்கள்.

தொடர்பு:077 679 8656

(24843)(5-6-7)

## பணியாளர் தேவை

யாழ். மாவட்டத்தில்
இயங்கி வரும் ஆயுள்வேத
மருத்துவத்துக்கு

- ★ ஆயுள் வேத மூலிகை தெரிந்தவர்கள் (ஆண்)
- ★ Tally கணினி கற்கை நெறி தெரிந்தவர்கள் (பெண்)


வவுனியா, கிளிநொச்சி,
யாழ்ப்பாணம் கிளைகளுக்கு

தொடர்பு: 077 3614 926

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1988
★
12
★
08

மறைவு
2012
★
09
★
21



அமரர்
### அம்பலவி முருகன் நிர்மலன்

கடந்த 2012.09.21 சிவபதமடைந்த எங்கள் அருமை மகனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று(04.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
காரைநகர். (25884)(5-6-7)

ஆ.அம்பலவிமுருகன்
(ஆதீனகர்த்தா, காரைநகர் சிவன்கோயில்,ஈழத்துச் சிதம்பரம்)

## மரண அறிவித்தல்

### மற்றில்டா ஜெயராணிஜெயராஜா



உடுவிலைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மற்றில்டா ஜெயராணி ஜெயராஜா 02.11.2012 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றொபேர்ட் கனகரட்ணம் மான் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான S.S.முத்தையா தம்பதியரின் அன்பு மருமகளும், முத்தையா அல்பிரட் ஜெயராஜா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற திரோசாதவமணி மற்றும் E.R.மான் அவ்ர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பிலிப் அற்புதராஜா மற்றும் திருமதி புஸ்பராணி சாமுவேல்,காலஞ்சென்ற யோகராணி தேவஆசீர்வாதம் மற்றும் ஜீவராஜா,முத்துராஜா,ரட்ணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(04.11.2012) ஞாயிற்றுக்கிழமை இல. 04, பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் மு.ப. 10.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் பரி.யோவான் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04,பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (24837)(5-6-7)

தகவல்:
மு.அ.ஜெயராஜா
(கணவர்).

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சவுந்தரம் (குமார் அம்மா)



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சவுந்தரம் 01.11.2012 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தவமலர், தவக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சரஸ்வதி, தவமணி, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரியும், உலகேஸ்வரன் (ஈசன்), நவமணிதேவி (தேவி) ஆகியோரின் மாமியாரும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், கபிலன், சுதர்ஷன், கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 08, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.08, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில். (24344) (10,6,7)

தகவல்:
தவக்குமார் (மகன்).

GlaxoSmithKline

**சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலி கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.**

இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது



(சி/4458) (2,6,7)




GREY

பற்களில் எனாமல் கீழே உள்ள மென்மையான பகுதியாகிய டென்ரின் வெளிப்படுவதால் பற்களில் கூர்உணர்ச்சி தோற்றுவிக்கின்றது. சென்சொடைன் பற்களின் அடிப்பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இருதடவைகள் பல்துலக்குவதால் கூர்உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

50 கிராம் - ரூபா 220 100 கிராம் - ரூபா 420

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இரு தடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.4
யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இல.66, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. (3-14)

## திருநாவுக்கரசு ம.வியின் பரிசில் நாள்நிகழ்வு

தென்மராட்சி, நவ.4
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் பரிசில் நாள் விழா எதிர்வரும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

மகாவித்தியாலய அதிபர் வ.நடராஜா, ஆரம்பப் பாடசாலை அதிபர், திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேகாந்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு. சிவானந்தமும் கலந்துகொள்வர். (த-9)

## சிறந்த உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனுக்கு 'நௌ'சஞ்சிகை விருது

ராதிகா சிற்சபேசன் 2012இன் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராக தெரியப்பட்டார். ஸ்காபரோ புதிய ஜனநாயகக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் 'நௌ' சஞ்சிகையால் நேற்று முன்தினம் 2012இன் 'சிறந்த உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர்' விருது வழங்கி மதிப்பளிக்கப்பெற்றார். இதன் போது கருத்துத் தெரிவித்த ராதிகா சிற்சபேசன் இந்த விருது பெறுவதையிட்டு நான் மிகுந்த பெருமையடைவதோடு ஆழ்ந்த நன்றியையும் தெரிவிக்கிறேன்'' என தெரிவித்த ராதிகா சிற்சபேசன் ''அதற்கு முக்கிய காரணம் இந்த விருதுக்காக எனக்கு வாக்களித்தவர்கள் ஸ்காபரோ மற்றும் ரொரன்ரோ பெரும்பாக மக்களே'' என கூறினார்.

ரொரன்ரோவிலிருந்து வாராந்தம் வெளிவரும் 'நௌ' சஞ்சிகை, ரொரன்ரோவில் சிறந்தது' என்ற பட்டியலை வருடாந்தம் வெளியிடுகிறது. அதிலே ரொரன்ரோ பெரும்பாகம் வாழ் மக்கள் பல்வேறு பிரிவுகளிலே தங்கள் தெரிவுக்கு வாக்களிக்கிறார்கள்.

கடந்த காலத்தில் சிறந்த உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் விருது பெற்றவர்களிலே புதிய ஜனநாயகக்கட்சியை சேர்ந்த ஜக் லேய்ற்றன், ஒலிவியா சௌ ஆகியோரும் அடங்குகின்றனர். நான் தொடர்ந்தும் ஸ்காபரோ வாழ் மக்களுக்காக குரல் கொடுப்பேன். என்றார். (3)

## விறகுகளைக் களவாடியவர் பொலிஸாரிடம் மாட்டினார்

யாழ்ப்பாணம், நவ.4
மாங்குளம் வீதியோரங்களில் விறகு விற்பனை செய்துகொண்டிருந்த பொது மக்களின் விறகுகளைக் களவாடிய ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மாங்குளம் வீதியில் அப்பகுதி கிராம மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக விறகு விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தப் பகுதியில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனச் சாரதி, உரிமையாளர் இல்லாத விறகு விற்பனை செய்யும் கடைகளில் உள்ள விறகுகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தார்.

கொடிகாமம் பகுதியில் வீதிச்சோதனையில் நின்ற பொலிஸார் நடத்திய சோதனையில் விறகு ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தினால், வாகனம், வாகனச்சாரதி மற்றும் விறகுகளை கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வடி வாகனத்தில் ஏற்றி வந்த விறகுகள் 8 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தவை என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-13)

## செந்தூரன் பிணையில் விடுதலை மீண்டும் சிறப்பு முகாமுக்கு மாற்றம்

உரிய ஆவணங்கள் இன்றி கடல் வழியாக தமிழகத்துக்கு வந்த இலங்கை அகதிகளை பொலிஸார் கைது செய்து செங்கல்பட்டில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் வைத்து இருந்தனர்.

அங்கு ஏற்பட்ட பிரச்சினையால் பூந்தமல்லியை அடுத்த கரையான்சாவடியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமிற்கு சிலர் மாற்றப்பட்டனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து பூந்தமல்லி சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்ட செந்தூரன் (வயது 34), சிறப்பு முகாம்களில் உள்ள அகதிகளை விடுதலை செய்து திறந்த வெளி முகாமிற்கு மாற்ற வேண்டும், தங்கள் மீதுள்ள வழக்குகளை முடிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி முதல் தொடர் உண்ணா விரதம் மேற்கொண்டு வந்தார்.

செந்தூரனின் உடல் நிலை மோசமானதால் சென்னையில் உள்ள அரச ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை முடிந்து மீண்டும் முகாமில் கொண்டு வந்து அடைக்கப்பட்டார்.

ஆனால் அதன்பின்னரும் அவர், உண்ணாவிரதம் இருந்து வந்ததால் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி செந் தூரன் மீது பொலிஸார் தற் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

பின்னர் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி பிணையில் விடுதலை ஆனார். இதையடுத்து தொடர்ந்து உண்ணா விரதம் இருந்து வந்த செந்தூரனை செப்ரெம்பர் 25ஆம் திகதி பூந்தமல்லி பொலிஸார் மீண்டும் தற்கொலை முயற்சி வழக்கின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தொடர் உண்ணாவிரதம் இருந்து தற்கொலை முயற்சி வழக்கின் கீழ் 2 முறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட செந்தூரன், பிணையில் விடுதலையானார். விடுதலையான செந்தூரனை பொலிஸார் மீண்டும் பூந்தமல்லியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமிற்கு மாற்றினார்கள். (3)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.4
வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் பாதிப்படைந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளைக் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலய திருச் சபை மேற்கொண்டுள்ளது.

வடக்கில் மீள்குடியமர்ந்த பிரதேசம் உட்பட ஏனைய பிரதேசங்களிலும் மழையினால் பாதிப்படைந்த மக்களின் உணவுத் தேவையை நிறை வேற்றிக் கொடுக்கும் நோக்குடன் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் தர்மகர்த்தா டி. எம். சுவாமிநாதன் தலைமையில் உலர் உணவு சேகரிக்கும் திட்டம் இடம்பெறுகின்றது. இந்தத் திட்டத்துக்கு உதவி வழங்கவிரும்புபவர்கள் அரசி, பால்மா, கோதுமை மா, சீனி, பிஸ்கட், குடிநீர் போத்தல், சமையல் பொருள்கள் உட்பட உலர் உணவு பொருள்களை இல.38, ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயம், கொழும்பு-13 எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கலாம் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-14)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:** அவசரத்திற்கு வாங்கியிருந்த பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பழைய கடனைத் திரும்பப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். நினைத்ததை நடத்தி முடிக்கும் நாள்.


**இடபம்:** சோர்வு, களைப்பு நீங்கும். நண்பர்கள் உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்து கொள்வார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும்.


**மிதுனம்:** இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். குடும்பத்தினரை அனுசரித்து போங்கள். வியாபாரத்தில் இரகசியங்கள் வெளிவராமல் பார்த்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.


**கடகம்:** எதார்த்தமாகப் பேசி பழையபிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். தொழில் கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான காரியங்களைக் கூட எளிதில் முடிப்பீர்கள்.


**சிங்கம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்கள் பக்க பலமாக இருப்பார்கள். பழைய கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும்.


**கன்னி:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

## நாளை

ஐப்பசி -20 திங்கட் கிழமை 05.11.2012
திதி: ஷஷ்டி பி.ப. 12.43 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் அமிர்தம் பி.ப 05.15 வரை
சுபநேரம்: 12.05 - 01.35 வரை
ராகுகாலம்: 07.35 - 09.05 வரை


**துலாம்:** நினைத்த வேகத்தில் சில செயல்களை முடிக்க முடியாமல் தடை, தாமதம் ஏற்படும். எதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாக புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைக் குறை கூற வேண்டாம். சகிப்புத் தன்மை தேவை.


**விருச்சிகம்:** சமயோசிதமாகப் பேசி சாதிப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். திறமைகள் வெளிப்படும்.


**தனுசு:** பணப்புழக்கம் அதிகரிக்கும். கடினமான விடயங்களைக் கூட எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.


**மகரம்:** சிறியளவிலான அலைச்சல் இருக்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.


**கும்பம்:** உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துச் செய்ய வேண்டி வரும்.


**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பிரபலங்களைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்வீர்கள். சமயோசிதமாகப் பேசி பல காரியங்களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 5 | | 4 | | | | |
| | 6 | 4 | | 9 | 1 | | 7 | 3 |
| 8 | | | 6 | | 7 | | 5 | |
| 4 | 5 | | 3 | | | | | |
| | 7 | | 4 | | 9 | | 3 | |
| | | | | | 2 | | 9 | 4 |
| | 2 | | 8 | | 5 | | | 9 |
| 9 | 4 | | 1 | 7 | | 2 | 8 | |
| | | | | 2 | | 3 | | 1 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 8 | 3 | 9 | 7 | 6 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 4 | 2 | 1 | 3 | 9 |
| 9 | 3 | 6 | 5 | 7 | 1 | 4 | 8 | 2 |
| 7 | 4 | 9 | 2 | 8 | 3 | 5 | 1 | 6 |
| 5 | 6 | 3 | 1 | 9 | 7 | 2 | 4 | 8 |
| 2 | 8 | 1 | 4 | 6 | 5 | 9 | 7 | 3 |
| 3 | 5 | 2 | 7 | 1 | 6 | 8 | 9 | 4 |
| 4 | 9 | 7 | 3 | 5 | 8 | 6 | 2 | 1 |
| 6 | 1 | 8 | 9 | 2 | 4 | 3 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மாதாந்தம் ஒரு லட்சம் சம்பாதிக்க ஓர் எளிய முறை
(பகுதி நேரம் / முழு நேரம்)

| | |
|---|---|
| Data Erkrt | - 50,000/= + CD |
| Copy Typing | - 25,000/= + Master Card |
| Word / Excel | - 20,000/= + உடன் பதிவு |
| Face book | - 80,000/= |

உங்களுக்கு ஏற்ற வகையில் இன்னும்
300 வேலைகள் உண்டு

பாடநெறி திருப்தியில்லையேல் - Money Back

பதிவுக்கட்டணம் 6000/= மட்டுமே வங்கியில் பதிவும் உண்டு.
உடனே அழையுங்கள்: 077 4194 159- 077 2819 322

சதுரஅடி 30/= 35/= 40/=



மிகத் துல்லியமான,உயர் தரத்திலான
6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர்
பிரின்டிங்



டிஜிற்றல் பனர்,டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள்,முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனா டிஜிற்றல் பிரின்டிங்
JANA DIGITAL PRINTING

மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
(24848)(2,6,7)
T.P077 0731654
E-MAIL; JANADIGITALPRINTING@YAHOO.COM


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## 2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

### யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்கள்



| அ. துஷாயினி | பே. கஜதீபன் | த. மதுஜன் | த. சங்கவி | பா.தர்சினி | க. தர்ஷிகா |
|---|---|---|---|---|---|
| 186 | 175 | 158 | 158 | 157 | 156 |



| சோ. துவாரகன் | தி. மதீசன் | கு. காயத்திரி | மு. அனுஜன் | க. சகானா | ப. லவ்விகா |
|---|---|---|---|---|---|
| 153 | 151 | 150 | 150 | 150 | 149 |

### யா/ மாதகல் சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை மாணவர்கள்



| மோ. விதுஸ்சனா | அ. டில்ஷன் | யூ. சுஜிதன் | வ. சன்சியா | ச. டினேஸ் |
|---|---|---|---|---|
| 167 | 156 | 156 | 155 | 151 |

யா/மாதகல் சென்யோசப் ம.வித்தியாலய மாணவி



ச. சஜிதா
162

யா/மாதகல் நுணசை ம. வித்தியாலய மாணவன்



ர. அபிஷேக்
158

Best Wishes

பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
இவ் வெற்றியாளர்களுக்கு வழிகாட்டிய அதிபர்கள், ஆசிரியர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம்

அருள்ஞானானந்தன் செயலாளர், மா.க.அ.சங்கம் — மாதகல் கல்வி அபிவிருத்திசங்கம். மாதகல் நலன் புரிசங்கம்.


## உடனடி வேலை வாய்ப்பு

வீட்டுப்பணிப் பெண்கள் சம்பளம் 30,000/= உதவியாளர்கள் ஆண்கள் சம்பளம் 32000/= வயது (ஆண்/பெண்) 21-40 வரை சுயவிவரக் கோவையுடன் சமுகந்தரவும்.
தொடர்பு: 077 4193 321
(சி/4454)(6-7-45)

## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் 3 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 0897 387
(சி/4453)(6-7-45)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் A9 - வீதியில் இருந்து 700 மீற்றருக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடும், காணியும், கிளிநொச்சி A9 - வீதியை நகரப்பகுதிகளில் A9 - வீதியை முகப்பாகக்கொண்ட வியாபார ஸ்தலங்களுக்குரிய காணிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 1988 083, 077 7112 807
(சி/4455)(6-7-45)

## அறைகள் வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்குண்டு.
(பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு: 077 0517 355
(25006)(6-7-45)

## கார் விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள
16 - X X X X MAZDA
கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 8474 340
(25003)(6-7-45)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சுவிஸில் வசிக்கும் அனுசம் நட்சத்திரம் பாவக்கிரகம் 80% உடைய மணமகனுக்கு செவ்வாய்குற்றமுள்ள பெண்தேவை.
தொடர்பு: (சுவிஸ்)0041 7791 08511
(யாழ்) 077 3715 867
(25002)(6-7-45)

## மணமகன் தேவை


யாழ். இந்து உயர் கௌரவ, 1979, உத்தரம் 1ஆம், பாதம், 2இல் செவ்வாய், பாவம் 37, உயரம் 5'4",CIMM CMB, NNT IOB Qualified மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. கொழும்பு வீடு சீதனமாகத் தரப்படும்.
தொடர்பு: 077 0726 353
(சி/4457)(6-7-45)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Bio Chem International (pvt) Ltd நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் Office உதவியாளர்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம்.
தொடர்பு: 077 0399 883
(24840)(6-7-45)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நாகராசா



நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராசா கடந்த 01.11.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற தியாகராசா மற்றும் தர்மவதி (பிரான்ஸ்) ஆகி யோரின் சகோதரனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், குகவதனி (ஜேர்மனி), ரகு (லண்டன்), யசிந்தா (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பெரியதர்சினி மற்றும் லக்ஸ்மன் (நாரந்தனை), கிருஸ்ணா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன், பத்மநாதன், ஜேக்குமார், பிரமிளா, சுபாசினி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனனி, யாதவி, அஸ்வினி, சபரினா, சாகிறா, அபிசேக், விதுசா, சதுசா, திலோஜன், விஸ்ணு, கோகிலன், மதுரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில். அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
நாகராசா லக்ஸ்மன்.

(25051) (10,6,7)


# விநியோகஸ்தர் தேவை



பிளாஸ்டிக் தளபாடங்களை உற்பத்தி செய்யும் ISO சான்றிதழ் பெற்ற உலகிலேயே மிகப் பெரிய நிறுவனம் இந்தியாவின் நில்கமல் நிறுவனம் இலங்கையில் ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தமது உற்பத்திகளை கடந்த ஒரு தசாப்பதத்திற்கு மேலாக சந்தைப்படுத்தி வருகிறது. எமது சந்தைப்படுத்தல் வலையமைப்பை விரிவு படுத்துவதற்கு கீழ் காணும் பிரதேசத்திற்கு விநியோகஸ்தர் தேவைப்படுகிறது

## கிளிநொச்சி, முல்லைத்தீவு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உங்களிடம் இருந்தால்

- நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் வங்கி உத்தரவாதம்
- போதியளவு வியாபார மூலதனம்
- போதியளவு களஞ்சிய வசதி
- ஏனைய நிறுவனங்களுடன் விநியோக அனுபவம்
- விநியோகத்திற்குத் தேவையான வாகனம், ஊழியர்கள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டிருத்தல்

உங்கள் விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Nilkamal®

சந்தையிலும் தரத்திலும்
என்றென்றும் முதல்வன்

General Manager Operations,
Nilkamal Eswaran Plastics (Pvt) Ltd.
No.328, Madapatha Road, Batakettara, Piliyandala.
Tel : 0114 215268, 0114 212661-3 Fax : 0112 707046 E mail : mkt@nilkamal.com.lk

TÜV SÜD ISO 9001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in SINGAPORE



**Hotel Management / Food & Bevarages Course**

No Interview
No Sponsor
No IELTS
No Bank Balance

**Free** Visa Arrangements, Air Ticket, Sponsorships, Airport Pickup, One Week Accomodation.

பாட நெறிக்கட்டணத்துடன்,
மொத்த செலவு : 4 இலட்சம் மட்டுமே.

இச்சலுகை முதல் 50 மாணவர்களுக்கு மாத்திரமே.

ஒரு மாதத்தில் உடனடி பயணம்.

**Greenwich College**
34, Galle Road, Dehiwela.
Tel : 2713214 Email : info@greenwich.lk

Reg. No : PV 67191

Colombo - 072-834290, Jaffna - 0777-751-382
Trinco - 0770 152 833 Vavuniya - 0777 967127

(இ/4460) (2-6)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
22 ✱ 06 ✱ 1943

இறப்பு
28 ✱ 10 ✱ 2010

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்

**அமரர் சிவகுரு பொன்னம்பலம் (SLD)**

அன்புள்ள அப்பாவே!
கண் இமைபோன்ற காவலரே!
எங்கள் இதயங்களின் அழும் ஓசை
உறங்கிய உங்கள் செவிகளுக்குக் கேட்டிடுமோ?
நன்மைகளின் போதும் நல்ல நாள்களின் போதும்
உந்தன் ஒளிப்படம் முன் நின்றே
எங்கள் மனத்தின் வலிகளைப் போக்குகின்றோம். அந்த
வேளை எம் அருகில் வந்து ஆறுதல் தாரும்

சாந்தி! சாந்தி! சாந்தி!

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
077 088 5764

குடும்பத்தினர்.


# மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1971 சித்திரை 2இல் செவ்வாய் 22 பாவமுடைய, அரச உத்தியோக மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (உத்தியோக மணமகள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0770783832

(25883) (8-7-10)

# Study in Overseas

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, CYPRUS, UKRAINE, RUSSIA, FRANCE

Start your Higher Studies with Career Guidance
**Australia At Charlton Brown College**

Start You Degree In Malaysia & Transfer to USA OR FINLAND FOR Final Year FOR Free Of Charge

**Study In New Zealand / Europe**
Friendly Environment & Well Reputed College & University
• Minimum O/L • No Need Of IELTS
• Course Fee After Visa


Reserve Your Place Now For November
Forward your CV to : info.reliance.edu@gmail.com

Reliance Overseas Education Consultancy
No:14, 1/1, 37th Lane,
Wellawatta, Colombo - 06.
Tel: 0117 90 99 00

Miss. Zaarah 0778 858 358

(இ/4466) (2-6) RG ads


# நிஜம் ஒன்று நிழலானதே



சிவநெறிப் புரவலர்

**தம்பியப்பா சண்முகலிங்கம் (JP)**

(உரிமையாளர், நோதேண் இன்டஸ்ரீஸ் (பி) லிமிடெட். யாழ்ப்பாணம், தலைவர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்)

ஆயிரம் பிறை கண்ட பெரியாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- பாரதி பதிப்பகம்.**

(இ/4543) (2-6)

# மரண அறிவித்தல்கள்

## சபாரட்ணம் புனிதவதி



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் புனிதவதி நேற்று(03.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா பூரணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், மகேந்திரன் (லண்டன்), மகேஸ்வரி,புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும்,ஜெயக்குமாரி(இந்தியா), ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மாமியும், தர்சிகா,துவாரகன், குகப்பிரியா, குபேந்திரன், கஜானி,கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,விக்கினேஸ்வரன், இராஜரட்ணம்,செல்வரத்தினம், இராஜலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.11.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.2 மணியள வில் புளியங்கூடல்,சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

(25015)(5 6 7)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ருக்குமணி செல்வத்துரை



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் 21/2, வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தபால் அதிபர் செல்வத் துரையின் அன்பு மனைவி ருக்குமணி நேற்று (3.11.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைரெட்ணம், குமரகுரு, இராசாத்தி மற்றும் சந்திரசேகரம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லைலாக்குமாரி, வசந்தா, சிவமலர், செல்வக்குமாரி, காலஞ்சென்றவர்களான லைலாக்குமார், ராஜேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீகந்தா, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், சரஸ்வதி, செல்வநாயகம், விமலாதேவி, மனோகரி, காலஞ்சென்றவர்களான செல்வரெட்ணம், அரசரெட்ணம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், அமுதசுரபி, மதிசுதன், றஞ்சிற்காந்தன், அமுதசக்தி, தனஞ்செயன், கலைஅரசி, கலாதரன், சங்கீதா, தரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


21/2, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(25010) (10,6,7)

தகவல்:
இ.ஸ்ரீகந்தா (மருமகன்)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாமிப்பிள்ளை கந்தசாமி



கோயிற்கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த திருமதி சிவகாமிப்பிள்ளை கந்தசாமி நேற்று (03.11.2012) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தசாமியின் மனைவியும், முருகேசு, கதிர்காமத்தம்பி (நல்லூர்), வேலாயுதம், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரராஜசிங்கம் (UK), நவராசசிங்கம் (முன்னாள் நீதி மன்ற ஊழியர்), பராசக்தி, குணராஜசிங்கம் (கனடா), சிவராஜசிங்கம் (UK), பராநிதி (பரிஸ்), பத்மசோதி (பரிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவராணி, சரஸ்வதி, தர்மரத்தினம் (S.T.R. TRAVELS அராலி), ரதி, ஜெயலட்சுமி, அமிர்தகுணராஜ், ஜோன் செல்வராசா ஆகியோரின் பாசமிகு மாமியும், கலைவாணி, கலைமகள், கலைரூபன், செந்தில்ரூபன், பிரதீபன் (வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களம்), தர்சினி, பிரபாலினி, பிரதாபன், கஜமுகானந், பிரசாந், உருத்திரா, ஜேத்திரா, அசித்திரா, ஜீவந்தி, விஷஜந்தி, பிரசாந்தி, சால்மூன், சலோமி, சிமோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்களுக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


கோயிற்கடவை,
துன்னாலை மத்தி,
தொ.பே. 021 3212 601

(25053) (45,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சண்முகலிங்கம்



வேலணை மேற்கு, முடிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சிவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சண்முகலிங்கம் (01.11.2012) வியாழக்கிழமை சிவ பதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- வாலாம்பிகை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், மாலினி (ஜேர்மனி), இளங்கோ (U.K), காலஞ்சென்ற பவானி மற்றும் ரஜனி (ஆவரங்கால்), நவநீதன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன், சிவதர்ஷினி, பாஸ்கரன் சுஜீவா ஆகியோரின் அன்பு மாமனும், வனேஜா, பிரியங்கா, மாதங்கி, சஸானா, சாதனா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் திருஞானசம்பந்தபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு), பவளவல்லி (கனடா), தவமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற நவரத்தினம் மற்றும் பரஞ்சோதி, சிதம்பரநாதன், கமலாதேவி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் நவரத்தினராசா, சரோஜினிதேவி நடேசன், நவரத்தின ராணி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருள்கப் சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(25064) (10.6.7)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை நடத்திய கே.ஏ. செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை வென்றது மானிப்பாய் இந்துக்கல்லூரி. (ங-23)

### தெல்லிப்பழை கோட்ட உதைபந்து

# இருபிரிவுகளிலும் வயாவிளான் ம.ம.வி. சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.4

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 14, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளிலும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் சம்பியனானது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சனிக்கிழமை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவதாக இடம் பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி முழுத்திறனையும் வெளிப் படுத்தி விளையாடியது. இதனால்1:0 என்ற கோல்கணக்கில் மகாஜனவை வீழ்த்தி வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சம்பியனாகியது.

3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவேவெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தினைத் தனதாக்கிக்கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதிலும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் மல்லாகம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக்கொண்டது. (ங-23)

# நெல்லியடி ம.ம.வி.–வல்வெட்டி சிதம்பரம் இரண்டாவது கிரிக்கெட் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,நவ .4

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெற்கொழு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் கிரிக்கெட் பயிற்றுனர் வி.கே.சண்முகலிங்கம், சிறப்பு விருந்தினராக சிங்கப்பூர் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி ஏ.எஸ். ராஜேந்திரன், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அதிபர் இ.இராசதுரை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் சு.கிருஸ்ணகுமார், வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் முகாமையாளர் ச.சர்வானந்தன், நெல்லியடி நேசன் ரஸ்ட் வங்கியின் முகாமையாளர் த.திருச்செல்வன், கௌரவ விருந்தினராக வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி பிரதி அதிபர் திருமதி கேதீஸ்வரி நகுலேஸ்வரன், இரஜசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றை நிகழ்வில் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் குண்டு எறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா கௌரவிக்கப்படவுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியலய அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ங-23)

## உதைபந்து சுற்றுப் போட்டி ஆரம்பம்

தென்மராட்சி.நவ.4

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகள் நேர காலத்துடன் மைதானத்துக்கு சமுகம் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் குபேரகாந்தன் அறிவித்துள்ளார். (ங-9)

## ஹால்டன் கிண்ணக் கூடைப்பந்து உடுவில் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,நவ.4

ஹால்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஹால்டன் வெற்றிக்கிண்ண தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று சனிக்கிழமை பொலிஸ் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றியீட்டியுள்ளது.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வயம்பா றோயல் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 10:6 என்ற புள்ளியில் வெற்றியீட்டியது.

அடுத்து உடுவில் மகளிர் கல்லூரி அணிக்கும் அவீவா கல்லூரி அணிக்கும் இடையில் போட்டி இடம்பெறவிருந்தது. எனினும் ஆட்ட நேரத்தின் போது அவீவா கல்லூரி அணி சமூகம் தராமையால் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஹால்டன் மைதானத்தில் இடம்பெறவிருக்கும் அடுத்த சுற்று ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி நுகேகொடை சென்.ஜோசப் கல்லூரி அணியுடன் மோதவுள்ளது. (ங-23)

## உதைபந்துப் போட்டிகள்

தென்மராட்சி.நவ.4

தென்மராட்சிக் கல்வி உடற்கல்விப் பிரிவின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் க.சிவ கேஜரியார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 14 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

14 ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு ஆண்கள் பிரிவுக்கும், 15 ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு பெண்கள் பிரிவுக்கும் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ங-9)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட்டுக் கழகம்

பி.ப 4 மணி

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம். (ங-23)

## தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி.நவ.4

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா கலந்துகொள்ளவுள்ளார்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த 30 ஆம் திகதி நடைபெறவிருந்த போதிலும் கடும் மழை காரணமாக அவை இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ங-9)

## ஹோம்ஸ் வெற்றிக்கிண்ண கூடைப்பந்து



யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தும் டபிள்யூ டி.ஹோம்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலை அணிகளைச் சேர்ந்த 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் சுற்றுப் போட்டி எதிர்வரும் 8ஆம், 9 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது. (ங-23)

## சிரேஷ்ட மட்ட மெய்வன்மைப் போட்டிக்கு வடமாகாணத்தில் இருந்து 6 வீரர்கள்

யாழ்ப்பாணம்,நவ.4

இலங்கை மெய்வன்மைச் சம்மேளனம் நடத்தும் 90 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட மட்ட மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15 ஆம், திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் வடமாகாணத்திலிருந்து 6 போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் ஊடாக கே.நவநீதன் (5 ஆயிரம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம்), கே.சதீஸ்குமார் (800 மீற்றர் , 1500 மீற்றர் ஓட்டம் ), ஆர்.புவிதரன் (5 ஆயிரம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம்) ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் ஆர். நிமலேந்திரா (குண்டு எறிதல்), அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்களான காவேரி ,நிஷன் (கோல் ஊன்றிப் பாய்தல்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)

# தங்கம் பெற்ற சகோதரர்கள்




யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாண ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான உமாசங்கர் ஜனனி, உமாசங்கர் வரஜித் ஆகியோர் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

உமாசங்கர் ஜனனி 6 வயதுப் பெண்கள் பிரில் காட்டா, சண்டை ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கத்தினையும்

உமாசங்கர் வரஜித் 10 வயதுப் பிரிவு காட்டா போட்டியில் தங்கப்பதக்கத்தினையும் பெற்றனர்.

இலங்கை கராத்தே சம்மேளனம் வருடந்தோறும் நடத்தும் தேசியமட்ட கராத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ,7 ஆம் திகதி, 8 ஆம் திகதிகளில் சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் இவர்கள் இருவரும் பங்குபற்றவுள்ளனர். இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை இலங்கைக்காகவே "ஐ.பி.எல்"லுக்காக அல்ல



## மலிங்க ஆவேசம்

நான் பணத்திற்கு அடிமையானவன், அதனால்தான் ஐ.பி.எல். தொடரில் மிகச் சிறப்பாகவும் இலங்கை அணி சார்பில் பங்குபற்றும் போது சொதப்பலாகவும் விளையாடுவதாக விமர்சனங்கள் எழுவது எனக்குத் தெரியும். இந்த விமர்சனங்களைச் செய்பவர்கள் நான் படைத்த உலக சாதனைகள் நான்கையும் இலங்கை அணியில் விளையாடும் போதே படைத்தேன், ஐ.பி.எல். அணிகளுக்காக விளையாடும் போது அவ்வாறு சாதனைகள் எதனையும் நான் படைக்கவில்லை என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆவேசமாகத் தெரிவித்தார், இலங்கை அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க.

மலிங்க மேலும் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேசப் போட்டிக்கு நான் டெஸ்ட் வீரராகவே நுழைந்தேன். டெஸ்ட் போட்டியிலேயே பந்துவீசுவது குறித்து அதிகமாகக் கற்றுக் கொண்டேன். புதிய பந்துடன் எவ்வாறு பந்துவீசுவது, பழைய பந்துடன் எவ்வாறு துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாறச் செய்வது, எவ்வாறு இலக்குகளைக் கைப்பற்றுவது என்பதை எனக்கு டெஸ்ட் போட்டியே கற்றுத்தந்தது.

2008 ஆம் ஆண்டு மிகப்பெரிய உபாதைக்கு உள்ளாகியிருந்தேன். அப்போது என்னை யாருமே கணக்கெடுத்திருக்கவில்லை. அதன்போதே நான் அதிக காலம் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு முத்தையா முரளிதரனின் இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் அவரின் கோரிக்கையின் காரணமாகவே பங்குபற்றினேன். முத்தையா முரளிதரன் மீது நான் அதிக மரியாதையை இன்றும் கொண்டிருக்கின்றேன்.

மேலும், நான் பணத்திற்கு அடிமையானவன் என்றும் அதனால் தான் ஐ.பி.எல். தொடரில் மிகச் சிறப்பாகவும் இலங்கை அணி சார்பில் பங்குபற்றும் போது சொதப்பலாகவும் விளையாடுவதாக விமர்சனங்கள் எழுவது எனக்குத் தெரியும். இந்த விமர்சனங்களைச் செய்பவர்கள் நான் படைத்த உலக சாதனைகள் நான்கையும் இலங்கை அணியில் விளையாடும் போதே படைத்தேன். ஐ.பி.எல். அணிகளுக்காக விளையாடும் போது அவ்வாறு சாதனைகள் எதனையும் நான் படைக்கவில்லை என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (5)



## யூவிக்கு ஆறாம் இடமே பொருத்தம்

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் ஆறாம் இடத்துக்கு கடும் போட்டி நிலவினாலும் அந்த இடத்தில் களமிறங்க தகுதியான வீரர் யுவராஜ்சிங்தான் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சௌரவ் கங்குலி கூறுகையில், இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் தற்போது 6 ஆவது துடுப்பாட்ட வீரராக யாரை தெரிவு செய்வது என்பது கடினமான செயலாக உள்ளது. இந்த இடத்திற்கு யுவராஜ் சிங், ரெய்னா, மனோஜ் திவாரி ஆகியோரிடையே கடும் போட்டி நிலவுகிறது.

3 பேருமே சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் தான். எனினும் யுவராஜ்சிங் தெரிவு செய்வது சிறப்பாக இருக்கும். உடல்தகுதி அவருக்கு பிரச்சனை இல்லை. துலீப் கிண்ணத்திலும், இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் அசத்தியுள்ளார் என்றும் பந்துவீச்சிலும் கைகொடுப்பது அவருக்கு கூடுதல் பலம் எனவும் கூறியுள்ளார்.

டெஸ்ட் அணியில் டிராவிட், லக்ஸ்மன், கங்குலி இருந்தபோது, நிரந்தர இடம் பிடிப்பது என்பது மிகவும் கடினமாக இருந்தது. தற்போது யுவராஜுக்கு வாய்ப்பு கிடைக்கத் தொடங்கியுள்ளது. தனது துடுப்பாட்ட திறமை மூலம் இதை உறுதியாக பிடித்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.

இந்த நிலையில், யுவராஜ் சிங் உடற்தகுதி குறித்து தேர்வாளர்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் துலீப் கிண்ணத்தில் யுவராஜ் சிங் இரட்டை சதம் அடித்ததை தேர்வாளர்கள் பார்த்துள்ளனர் எனவும் கூறியுள்ளார். (5)

# சச்சின் சமைத்த மீன் வறுவல்

கிரிக்கெட்டில் மட்டுமல்ல சமையலிலும் சச்சின் ஒரு 'மாஸ்டர்' தான். பல்வேறு நாடுகளுக்கு சென்று விதவிதமான உணவுகளை ருசித்த இவர், சமையல் கலையிலும் கில்லாடியாம்.

இந்திய அணியின் சாதனை வீரர் சச்சின் (வயது - 39). மும்பையில் நடந்த சமையல் தொடர்பான புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்ற இவர், தனது உணவு அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அப்போது சச்சின் கூறியதாவது:

சமையல் செய்யும் போது என் மனம் சற்று அமைதியாக இருக்கும். 1997 அல்லது 98 என்று நினைக்கிறேன், டெல்லியில் உள்ள அஜய் ஜடேஜாவின் வீட்டில் இந்திய வீரர்கள் அனைவரும் இரவுச் சாப்பாட்டுக்கு தயாராகிக் கொண்டிருந்தோம். அரைமணி நேரம் முன்னதாக சென்ற நான், 'பரோட்டா' செய்து அனைவருக்கும் வழங்கினேன்.

### மனைவி பாராட்டு

என் குடும்பத்துக்காக விசேட நாள்களில் சமைப்பது உண்டு. எனது அம்மாவிடம் இருந்து மீன் வறுவல் சமைக்கும் கைப்பக்குவத்தை கற்றேன். மனைவி அஞ்சலிக்கு ஒரு முறை செய்தும் கொடுத்தேன். அதை ஆர்வமாக ருசித்த அவர், வாழ்க்கையில் சாப்பிட்ட மிகச் சிறந்த மீன் வறுவல், என்று வாயார பாராட்டினார்.

### காட்டில் சமையல்

எனது 16ஆவது வயதில் பாகிஸ்தான் சென்ற போது, அங்குள்ள உணவுகள் பிடித்து போக, நிறைய சாப்பிட்டேன். இதனால் என் எடை அதிரித்தது. கடந்த 2000 இல் சிம்பாப்வே சென்ற போது, ஒரு முறை காட்டுப் பகுதிக்குள் சென்றோம். தேவையான உணவுகளை நாங்களே சமைத்தோம். மசாலா தடவிய கோழியை, கம்பி அடுப்பில் வேகவைத்து சாப்பிட்டது நன்றாக இருந்தது. காட்டுப் பகுதியில் சக வீரர்களுடன் இப்படி சமைத்து சாப்பிட்டது, எங்களுக்குள் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது.

### தெருவில் சாப்பாடு

ஒரு முறை தென்னாபிரிக்காவில் பெற்ற வெற்றியை பெரியளவில் கொண்டாட நினைத்தோம். மாலையில் அனைவரும் அங்குள்ள தெருக்களில் ஒன்றாகச் சென்றோம், சாலையிலேயே சாப்பிட்டோம்.

### நத்தை உணவு பிடிக்காது

ஒரு முறை மனைவியின் வற்புறுத்தலின் பேரில், பூண்டுக் குழம்புடன் கலந்த, நத்தைக் கறி சாப்பிட முயற்சித்தேன். இதை சாப்பிடவே பிடிக்கவில்லை. சமிபாடடைவது சிரமம். மீண்டும் ஒரு முறை அதைத் தொடவில்லை - என்றார்.

### 'ஐஸ்கிரீம்' தான் 'லஞ்ச்'

கடந்த 2003 இல் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ண ஆட்டத்தில் அக்ரம், வக்கார் யூனிஸ், அக்தர் ஆகிய வேகப் புயல்களை சமாளிக்க வேண்டிய 'டென்சனில்' இருந்த சச்சின், மதிய உணவை தவிர்த்து 'ஐஸ்கிரீம்' மட்டும் சாப்பிட்டாராம். இதில் 75 பந்தில் 98 ஓட்டங்கள் எடுத்த இவர், இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்டார்.

இது குறித்து சச்சின் கூறுகையில், இந்த ஆட்டத்தின் உணவு இடைவேளையின் போது, பெரிய கிண்ணத்தில் 'ஐஸ் கிரீம்' மட்டும் சாப்பிட்டேன். நடுவர்கள் களத்தில் இறங்கும் போது சொல்லுங்கள் என்று, சக வீரர்களிடம் கூறிவிட்டு, காதில் 'ஹெட்போனை' மாட்டிக்கொண்டேன். யாரிடமும் எதுவும் பேசவில்லை. அப்போது 'ஐஸ்கிரீம்' மட்டுமே போதுமானதாக இருந்தது - என்றார். (5)



## டோனியுடன் மல்லுக் கட்டும் யுவராஜின் தாய்

யுவராஜ் சிங் உடற்தகுதி எப்படி உள்ளது என்பதை தேர்வாளர்கள் மதிப்பீடு செய்து கொள்வர் என்று அவரது தாய் ஷப்னம் ஆவேசமாக தெரிவித்துள்ளார். யுவராஜின் உடற்தகுதி தொடர்பில் தெரியாமல் டெஸ்ட் தொடரில் இணைப்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்க முடியாது என்று இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்த கருத்துக்கு பதிலடியாகவே யுவராஜின் தாயார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்ட இந்திய அணியின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் துலீப் கிண்ண அரையிறுதியில் இரட்டை சதம் அடித்தார்.

இங்கிலாந்து பதினொருவர் அணிக்கெதிரான பயிற்சியில் அரைசதம் அடித்து, 5 இலக்குகளும் வீழ்த்தினார்.

இவரது உடற்தகுதி குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி கூறுகையில், யுவராஜ் சிங்கினால், இரண்டு நாள்கள் களத்தடுப்பில் ஈடுபட முடியுமா என்பதை முதலில் மதீப்பீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுத்துள்ள யுவராஜ் சிங் தாய் ஷப்னம் கூறுகையில், சரியான உடற்தகுதியை கொண்டு வர யுவராஜ் சிங் கடினமாக போராடினார். இதற்கான பலன் தான் துலீப் கிண்ணத்தில் கிடைத்தது. எனவே அவரது உடற்தகுதி தொடர்பில் தேர்வாளர் மதிப்பீடு செய்து கொள்வர் – என்றார். (5)

## பகலிரவு ஆட்டத்துக்கு பாகிஸ்தான் வரவேற்பு

டெஸ்ட் போட்டி பகலிரவு ஆட்டங்களாக நடாத்தப்பட முடியும் என்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் அறிவிப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வரவேற்றுள்ளது. பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் அந்த ஆட்டங்களை நடத்தும் நாடுகளுக்கு அதிக பெறுமதியை வழங்கும் என்று அந்தச் சபை தெரிவித்துள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் நிலைகளில் மாற்றங்கள் அறிவிக்கப்பட்ட வேளையில் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களுக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியதோடு, இரு நாடுகளும் விரும்பினால் அந்த ஆட்டங்களை நடாத்தலாம் எனத் தெரிவித்திருந்திருந்தது.

இந்த மாற்றத்திற்கு ஏற்கனவே ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தனது ஆதரவையும், வரவேற்பையும் வழங்கியிருந்ததோடு, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.


இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த மாற்றத்தை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் போட்டி காலங்காலமாக மாற்றமடைந்து வந்துள்ளதாகத் தெரிவித்த அந்தச் சபை, இந்த மாற்றம் கிரிக்கெட் போட்டியை மிகச்சிறப்பான நேரத்தில் பார்த்து ரசிப்பதற்குரிய வாய்ப்புக்களை ரசிகர்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.


பாகிஸ்தானில் ஏற்கனவே முதற்தரப் போட்டி பகலிரவு ஆட்டமாக நடத்தப்பட்டிருந்தது. பாகிஸ்தானின் குயைட் ஈ அஷாம் தொடரின் இறுதி ஆட்டங்களை ஜனவரி 2011 இலும், டிசெம்பர் 2011 இலும் பகலிரவு ஆட்டங்களாக நடத்தியிருந்தது.

அந்த ஆட்டங்களில் வழக்கமாக பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்புப் பந்துகளுக்குப் பதிலாக செம்மஞ்சள் நிறப் பந்துகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 83 ஆவது பரிசளிப்பு விழாவின் போது யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (க)



மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களான லீ.லீனஸ் வியாம், கி.ஜெர்ட் மியூலர், ப.நிரோஷினி ஆகியோர் பாடசாலை அதிபர் மி.கிறிஸ்ரியான், வகுப்பாசிரியர் செ.லுமினா சில்வா, பொறுப்பாசிரியர் ம.ம.நிக்சன் ஆகியோருடன் காணப் படுகின்றனர். (க-400-12)



செட்டிக்குளம் காந்தி நகர் மீனாட்சி அம்பாள் சமேத சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சேரமான் பெருமாள் நாயனார் குருபூசை இடம்பெற்றபோது ஆலயத்தலைவர் நந்திக்கொடி ஏற்றி வைக்கின்றார். (க-402)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கான முதலாவது கட்டடப் பணிகள் இடம்பெறுகின்றன. (க-18)



வவுனியா ஆர்.சி.புரம் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகளின் போது (க-405)



மழைக்கு மத்தியிலும் கழிவுகளை அகற்றும் பணியில் வவுனியா நகரசபைப் பணியாளர்கள் ஈடுபடுகின்றனர். (க-400)



துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டு மக்கள் பயன்படுத்துவதற்கு முன்னரே இடிந்து வீழ்ந்த கிணற்றின் உட்பகுதி இவ்வாறு காட்சி தருகின்றது. (க-18)



கிளிநொச்சி ஆனந்தபுரத்திலுள்ள ஏகாம்பரம் சிவசோதியின் அரிசி ஆலை மீது வீழ்ந்த தென்னை மரமொன்று பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயசூரியாவுக்கு சம்பளம் வழங்கவில்லை



கனடாவில் இடம்பெற்ற 'ரி-20' ஆட்டமொன்றில் பங்குபற்றிய 16 வீரர்களுக்கு அந்த ஆட்டத்துக்கான ஊதியம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. சனத் ஜெயசூரிய உட்பட சர்வதேச வீரர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சனத் ஜெயசூரிய, சக்லைன் முஷ்தாக், கைல் மில்ஸ், ஜேக்கப் ஓரம், மார்க் பௌச்சர், டெவோன் ஸ்மித், ரீனா பெஸ்ட், பிரன்டன் ரெய்லர் உட்பட 16 வீரர்களுக்குரிய ஊதியமே வழங்கப்படவில்லை.

கனடாவில் இடம்பெற்ற அனைத்து நட்சத்திர 'ரி-20' ஆட்டத்தில் இந்த வீரர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், அவர்களுக்கென வழங்கப்படவேண்டிய ஊதியத்தை ஏற்பாட்டுக்குழுவினர் வழங்காத நிலையில் அதற்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொறென்டோவில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தை கனடாவைச் சேர்ந்த கற் ரோஸ் கஸ்டம் டிசைன்ஸ் என்ற நிறுவனம் கனடாவின் கிரிக்கெட் சபையின் ஒப்புதலுடன் நடாத்தியிருந்தது. வீரர்களுக்குரிய ஊதியம் வழங்கப்படாமை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்த சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம் மே, ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை வீரர்கள் நிறைவேற்றியுள்ள நிலையில் அவர்களுக்கான ஊதியம் வழங்கப்படாமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும், அதன் காரணமாக சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.(5)


**யாழ்ப்பாண முந்திரிகைப்பழம் (Grapes) உற்பத்தியாளர்களே!**

உங்களுடைய முந்திரிகைப் பழத்துக்கு எங்களிடமிருந்து கூடுதல் விலை வழங்கப்படும்.(பணம் அன்றே வழங்கப்படும்)
தொடர்பு- அஜித் என்ரபிரைசஸ், இல. 45, 5ஆம் குறுக்குத்தெரு கொழும்பு 11
0112423464, 0115739486,0779612110
(24721)(6.9.14)

**German Swiss மொழிகள்**

தமிழ் மொழி பெயர்ப்புடன் German இல் இருந்து வந்த ஆசிரியரால் Goethe institte exam இக்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
தொடர்பு: 10 Palaly Road, Jaffna.
miss. Kajenthini 0771604823
(24180)(3.14)

## Secretary / Personal Assistant

**Required for a MANAGING DIRECTOR of a UK based Construction Company carrying out Projects in North and East of SRILANKA.**

- The Applicant should be fluent in English and must be a Computer literate.
- Excellent career prospect and Salary Rs 25,000+ According to age and Experience

Please Forward your CV to
**citystarkb@gmail.com**
(25005)

## வேலையாள்கள் தேவை

பிரபல நீர்ப்பாசன, கட்டட ஒப்பந்தகாரர் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01. கணக்கு உதவியாளர்
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
உடனடியாகத் தேவை. உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
353/8 G, Mannar Road, Veppankulam, Vavuniya.
T.P: 0773716368
(25065)(3.14)

## மணமகள் தேவை

ஹற்றனில் வசிக்கும் விவாகரத்து பெற்ற 47 வயதுடைய (பெண்பிள்ளை உள்ள) கோயிலில் பூசை செய்யும் மாதவருமானம் 50,000 பெறும் சொந்த வீடு உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்து பெற்றவர்களும் தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
V. வாசுஜயர்
183, டிம்புல றோட், ஹற்றன்.
0777518917, 0718462476
(24998)(3.5.7)

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (Whirl pool), 22'' LCD T.V (sony), 21'' Sony Wega T.V & T.V Stand, LG மைக்ரோ வேவ் அவன் (L.G Microwave oven), Sony CD / DVD Player, Microlab FM, USB Port, SD Memory Card Boofer Speaker set என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
**T.P No : 0777704457** நல்லூர்
(24842)(3.6)

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
* Basic Grammar - அடிப்படை அறிவிற்கு
* Absolute Spoken - உரையாடலுக்கு உத்தரவாதம்
* Advanced Diploma in English - மெருகூட்டிய ஆங்கில அறிவு
* Language Teaching in pre-schools - கற்பித்தல் நுட்பம்
* IELTS - வெளிநாட்டு உயர் கல்விக்கு

எமது நிறுவனக்கிளை இப்போது சுண்டிக்குளியிலும்
T.P- 021 3734121 Hotline- 0771327818

## A/L பரீட்சையின் பின்.. சரியான தெரிவு!

தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

## நீங்களும் அறிவிப்பாளராகலாம்!

வாரணம்FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி
இப்பயிற்சிநெறியில் இணைவதற்கு!
1. க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தமிழ் திறமைச்சித்தி உட்பட உயர்தரம், பல்கலைக்கழக அனுமதிபெறத்தக்க பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.
இவற்றின் விபரம் அடங்கிய சுயவிபரக்கோவையை கீழ்வரும் எமது யாழ். அலுவலக முகவரிக்கு 20.11.2012 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புங்கள்

:: இப்பயிற்சிநெறியில் இணைவோருக்கு ::

சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள். ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, பகுதிநேர ஒலிபரப்பாளர் வாய்ப்பு களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

**வாரணம் FM**



For further details contact
Managing Director
Varanam FM
No.52,Hospital Road,Jaffna.
Phone:077 908 6737
Head Office:
58,Joseph Dias Mawatha, Colombo -15.E.mail:varanamfm@yahoo.com

## வேலையாள்கள் தேவை

பிரபல போன் விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும். யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
யாழ். போன் சொப்
இல. 10, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
T.P : 021 222 3817

## REQUIRED : PRE SCHOOL TEACHER

Applications are invited from female candidates who are having Diploma in Pre school teacher training with min 1 year experience in reputed English medium school.
Last date of submission of applications along with C.V & photocopies of certificates is 15 th of November 2012.
The Manager, AHEAD Pre school & Daycare,
No.10A Wyman road, Nallur Jaffna,
E-mail: aheadtrust @ yahoo.com
+94213202545
(24850)(3.14)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA CD 200 Road master (எலக்ரோனிக்) சிவப்பு, HX-XXXX இலக்கம் கொண்டது உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770872416, 0774016715
(24849)(3.6)

## FRENCH LANGUAGE CENTRE

FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை மேற்கொள்ளும் நிறுவனம்.
விசேட பயிற்சி மூலம் French கதைப்பதற்கான 100% உத்தரவாதம்
Speaking, Listining, Reading, writing தனித்தனி கவனம் செலுத்தப்படும்.
குறுகிய காலத்தில் சர்வதேச தரத்திலான சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். தொடர்புகளுக்கு: 0779789456
No.07, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்துக்கு அண்மையில்) | M.M.V வீதி, காளி கோயிலடி, நெல்லியடி.
German, Swiss (Deutch) வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)

## ஐரோப்பிய நாடான சைப்பிரசிற்கு Students visa மிகக் குறைந்த கட்டணத்துடன்

* 25 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
* பகுதி நேர தொழில் வாய்ப்பின் மூலம்
* மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்
* விசேட கட்டணச் சலுகைகளுடன்

சட்ட ஆலோசனைகளுக்கு விரைந்து வாருங்கள்..........
திசை காட்டி பிறைவேற் லிமிட் டேட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
0212219016



(புதன் கிழமைகளில் எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது.
சனி, ஞாயிறு தினங்களில் திறக்கப்படும்.)
தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் இடம் பெற மாட்டா.
(சி/4552)(3.14)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
**GCE(O/L)** தகமை போதுமானது
Jan/Feb Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14
EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


## மரண அறிவித்தல்கள்



### பத்மினி ஆசைப்பிள்ளை

யாழ். வட்டு கிழக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இல.99/47, 1ஆம் ஒழுங்கை குட்செட் வீதி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பத்மினி ஆசைப்பிள்ளை நேற்று (03.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், நாகரட்ணம், பொன்னாபரணம், கனகாம்பிகை, பரமேஸ்வரி, தேவராஜா, யோகேஸ்வரி, பத்மாவதி, பிரபாவதி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் சின்னத்தம்பி, பத்மலிங்கம், தம்பிராஜா, தியாகராணி, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் ரவிகாந்தன், பொன்ராஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் வவுனியாவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(திருமதி மீனா ஜீவனராஜா)
இல.99/47, 1ஆம் ஒழுங்கை,
குட்செட்வீதி, வவுனியா.
(25067)(3.14)

### இன்னாசிமுத்து மரியதாசன் (மரியதாஸ் மாஸ்ரர்)

(இளைப்பாறிய அதிபர், சென்கென்றியரசர் கல்லூரி, இளவாலை.)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், 92, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து மரியதாசன் (மரியதாஸ் மாஸ்ரர்) நேற்று (03.11.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

92, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
மனைவி.
(25063)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

















# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 04 நவம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# நீதிக்கே நீதியில்லையா



● ஔண்யன்

கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடுமைகளைக் கண்டு, சாதாரண மனிதர்களுக்கே கோபம் வருவது இயல்பு. அப்படியிருக்கையில், நீதி தேவதை மட்டும் எத்தனை நாள்களுக்குத்தான் உறங்குவது போன்று நடிக்க முடியும்? ஆனாலும் நீதி தேவதையின் விழிப்பு அதிகாரத்துக்கு பிடித்தமான ஒன்றல்ல.

அதிகாரத்தால் திரையிடப்பட்டு, நடந்தேறும் தில்லு முல்லுகளை நீதி தேவதையின் விழிப்பு வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். ஆகவே கும்பகர்ணனைப்போல் எப்போதும் நீதியின் துயில் கொள்ளலையே ஆட்சியாளர்கள் விரும்பினர். ஆயினும், தன்னைச் சூழ நடக்கும் அநியாயங்களின் உக்கிரம் தாங்கமுடியாமல் நீதிதேவதையால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. அதிகாரம் தன்னுடைய பொம்மை என்று இதுநாள்வரை நினைத்திருந்த நீதி தேவதை மீள் உயிர் பெற்றாள்.

அரியணை வாசிகளின் அக்கிரமங்கள் ஒவ்வொன்றாக வெளிப்படுத்தப்பட்டு, அவர்களின் ஒவ்வொரு நகர்தலும் கேள்விக் கணைகளால் முற்று கைக்கு உள்ளாகின. தவறு செய்தவர்களுக்கு விழி பிதுங்கியது. அவர்களின் தயவில் ஒட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு பேதி குடிக்காமலே வயிறு கலங்கியது. இனியும் விட்டு வைத்தால், தமது இருப்பு கேள்விக் குறியாகிவிடும் என்பது அதிகாரத்துக்குப் புரிந்திருந்தது. தான் ஊட்டி வளர்த்த கடா மார்பில் பாய்ந்த பின்னர், வாளாவிருக்குமா ஆட்சித் தரப்பு? தொடங்கியது கண்ணுக்குத் தெரியாத போர். நீதியும் இந்தப் போரை எதிர்கொள்ளத் தயாராகவே இருந்தது. தமக்காகப் போராடும் நீதியின் பின்னால் மக்களின் ஆதரவு நிழல் பெரிதாகத் தொடங்கிற்று. புறக்கணிப்புகள், சலுகைக் குறைப்புகள், திட்டமிட்ட பழிச் சொற்கள், அமைச்சர்களின் இடைவிடாத அறிக்கைகள் என்பவற்றை அதிகாரம் [illegible] கொண்டே இருந்தது. எதற்கும் நீதி வளைந்து கொடுப்பதாக இல்லை. நீதியோடு, சீண்டிவிட்டு சும்மா இருக்கவும் முடியாது. இருந்தால் நீதி தன் கைவரிசையை காட்டிவிடும்.

சாம, தான, பேத வழிகளெல்லாம் நீதியின் முன் பயனற்றுப் போய்விட தண்ட வழியைக் கையிலெடுத்தனர் அதிகாரத்தின் அடிவருடிகள். நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண சென்று கொண்டிருந்த வாகனத்தை கம்பிகள், பொல்லுகள் என்பவற்றை கைகளிலேந்திய கும்பல் சூழ்ந்து கொண்டது. உயிர் தப்பியதே பெரிய காரியம் என்று எண்ணும் அளவுக்கு நிகழ்ந்தது தாக்குதல். மஞ்சுள அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அதிகாரத்தின் அடுத்த குறி பிரதம நீதியரசர்தான். அவரை வீழ்த்த காய்கள் வேக வேகமாக நகர்த்தப்பட்டன. இந்தச் சதுரங்க ஆட்டத்தில் தன் பக்கத்தில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனுசரணையோடு, பிரதம நீதியரசருக்கு எதிராக பிரேரணையை அரசு கொண்டு வந்துள்ளது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையோடு இந்தப் பிரரே ரணை நிறைவேற்றப்பட்டால், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்காவை வீட்டுக்கு அனுப்ப முடியும் என்று அரசு எண்ணுகிறது. ஆயினும் இதற்குப் பதிலடியாக சட்டத்தரணிகள் சங்கம், ''திட்டமிட்டே பிரதம நீதியரசர் மீது வீண் பழி சுமத்தப்பட்டு, இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது" என்பதை மக்களிடம் சொல்லி, போராடுவதற்கான ஆயத்தங்களில் இறங்கி விட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பள்ளிகள் மூடப்படுவதையும், பெண்கல்வி பறிக்கப் படுவதையும் அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. காரசாரமாக விமர்சித்தாள். இவ்வளவு ஆவேசமான எண்ணங்களை அந்த சிறுமியிடம் யாருமே எதிர்பார்க்கவில்லை. பாகிஸ்தான் படைகளையும் விமர்சிக்க தவறவில்லை.

# மிகுந்த சோகமானவள்

■ ஜெரா

மலாலா யூசப்சாய். இப்போது பாகிஸ்தான் ஊடகங்களிலும், சர்வதேச ஊடகங்களிலும் அதிகம் உச்சரிக்கப்படும் பெயர். பாகிஸ்தானின் ஸ்வாத் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமி தான் இவள். மலாலா வளர்க்கப்பட்ட சூழல் அவளையும் துப்பாக்கிகளுக்கு முன்னால் நின்று எதிர்க்குரல் எழுப்பச் செய்திருக்கின்றது. அவளின் அப்பா ஒரு கவிஞராக இருந்தார். இயல்பிலேயே முஸ்லிம் பெண்களுக்குரிய இலட்சணங்களைமீறிவளர்ந்தாள்மலாலா. அதற்கு அவளின் அப்பாவே முழுமுதற் காரணி. ஸ்வாத்தின் தெருக்கள் எல்லாம் இருளால் மூடப்பட்ட வேளையிலும், தீவிரவாதிகளின் தேடுதல்களுக்கு மத்தியிலும் அவளின் அப்பா பல விடயங்களைக் கற்றுக் கொடுத்தார். அவருடைய மகன்மாருக்கு அளிக்காத சுதந்திரத்தையும், கல்வியையும் இரவிரவாக இவளுக்கு வழங்கினார். சர்வதேச அரசியல், உள்நாட்டு அரசியல், சமூகநிலை, சினிமா, கவிதை, கலை, இலக்கியம் என அனைத்து விடயங்களிலும் தந்தையும், மகளும் பெரும் விவாதப் போரே நடத்துவர். அதனால் தான் 14 வயதினிலே அவள் துப்பாக்கிகளை எதிர்க்கக் கற்றுக் கொண்டாள்.

**தீவிரவாதிகளின் கோட்டை**

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதிகளில் பெரும்பாலானவை தீவிரவாதிகளின் ஆளுகையின் கீழேயே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக தலிபான்களின் ஆதிக்கமே நிலவுகின்றது. அமெரிக்காவும், பாகிஸ்தானும் என்ன தான் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை மேற்கொண்டாலும் இந்த இரு நாடுகளில் இருந்தும் அதனை அகற்ற முடியாத நிலையை அடையப்பட்டுள்ளது. தீவிரவாதத்துக்கு பாகிஸ்தானின் ஆதரவு இருப்பதும், இந்த நாடுகளில் இருந்து தீவிரவாதம் முற்றாக களையப்பட முடியாமைக்கான காரணம் என சொல்லப்படுகின்றது. பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையாக அமைந்திருக்கும் ஸ்வாத்தும் அதற்கு விதிவிலக்கல்ல. அது தலிபான்களின் கோட்டை. அங்கு இவர்களுக்கிருக்கின்ற ஆதரவைப் பயன்படுத்தி நன்றாக கிளைபரப்பி இருக்கின்றனர். ஸ்வதாத்தில் தாக்குதல் நடத்திவிட்டு ஆப்கானுக்குள் சென்றுவிடுவர். ஆப்கானில் தாக்குதல் நடத்திவிட்டு ஸ்வாத்துக்கு வந்துவிடுவர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காக ஸ்வாத்தில் அதிகளவில் பாகிஸ்தான் படையினர் குவிக்கப்பட்டிருப்பதும், தலிபான்களின் தாக்குதல் இலக்குகளை இலகுபடுத்துகின்றன. இவ்வாறு இராணுவமும், தீவிரவாதிகளும் அடிக்கடி- பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் பொருதிக் கொள்ளும் சூழலில் மலாலா வளர்ந்தாள். அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து துப்பாக்கி வெடிச் சத்தங்களையும், தற்கொலைகுண்டுதாரிகளின் தாக்குதல்களையும், மரணச் செய்திகளையுமே அதிகம் அறிந்திருந்தாள். இந்த தொடர்ச்சியான இடர்கள் பலரை சூறையாடியது. மலாலாவின் நண்பர்கள், உறவினர்கள் எனப் பலர் பலியாகினர். இதற்கு பயந்த பலர் ஸ்வாத்தை விட்டே வெளியேறி, பெருநகரங்களுக்குள் குடிபெயர்ந்து விட்டனர். நிலத்தைக் காதலித்தவர்களும், புலம்பெயர் வசதியற்றவர்களும் ஸ்வாத்திலேயே தங்கிவிட்டனர். அப்படியான குடும்பங்களில் ஒன்றாக மலாலாவின் குடும்பமும் இருந்தது.

**மலாலா முளைத்தாள்**

மலாலா வளர வளர தலிபான்களின் ஆதிக்கமும் அந்த நகரத்தில் அதிகரித்தது. மக்கள் மீது அதிக கட்டுப்பாடுகளை தீவிரவாதிகள் விதிக்கத் தொடங்கினர். பகலில் பாகிஸ்தான் படையினரின் சட்டமிருக்கும். இரவில் தீவிரவாதிகளின் சட்டம் [illegible] முறைக்கு வந்துவிடும். [illegible] செல்ல செல்ல அந்த சட்டங்களையே அனைத்து மக்களும் பின்பற்றினர். இரவுகளில் ஒலிபரப்பாகும் தலிபான்களின் எவ் எம் வானொலிகளில் கட்டுப்பாட்டு சட்ட அறிவிப்புக்கள் ஒலிபரப்பப்படும். பெரும்பாலும் ஒவ்வொருநாளும் அறிவிப்பு வரும். (2006 ஆம் ஆண்டுகளின் யாழ்ப்பாணத்திலும் இதே போன்று தான் பலாலியிலிருந்து அறிவிப்பு வரும் என்பதை இது நினைவுபடுத்துகின்றது) தலிபான்கள் பெண் கல்வியை விரும்புவதில்லை. இதனால் பாடசாலைக்கு செல்லும் சிறுமிகள் மீது அதிக கட்டுப்பாடுகளை தமது வானொலி மூலம் விதிப்பார்கள். பெண்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கு அடிக்கடி மூடுவிழாக்கள் அறிவிக்கப்படும். அதனை அறிவித்தும் மூடாவிட்டால் திடீரென ஒரு நாள் தாக்கப்படும். பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பாடசாலை உணவுகளில் விசம் கலக்கப்படும். இவ்வாறான கொடுமைகளை எல்லாம் கட்டவிழ்த்து பெண்கல்வியை அழிக்க தலிபான் இயக்கம் அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தது. இந்தக் கட்டத்தில் தான், அவர்களின் கட்டுக்குள் இருந்தே மலாலா முளைத்தாள்.

**தந்தையின் வளர்ப்பு**

அவளை அனைத்து துறைகளிலும் சாதனைக்காரியாக வளர்க்க விரும்பிய தந்தை தான் போகும் இடங்களுக்கெல்லாம் அழைத்துப் போவார். கவியரங்கம், பட்டிமன்றம், விவாதமேடை என எதையும் தந்தையும் மகளும் தவறவிடுவதில்லை. ஒருமுறை பெஷாவர் நகருக்கு தந்தையுடன் சென்றாள் மலாலா. பல்வேறு நாடுகளினதும் பிரதிநிதிகள், [illegible] அவளுக்கு பேசும் வாய்ப்பு கிடைத்தது. "எனது அடிப்படை உரிமையான கல்வியை தலிபான்களால் எப்படி பறிக்க முடியும்" என சுதந்திரக் குரல் எழுப்பினாள். அரங்கமே அந்தச் சிறுமியின் விடுதலைக்குரல் கேட்டு அதிர்ந்தது. அவள் அனைவராலும் அடையாளம் காணப்பட்டவளானாள். உடனடியாக அவளின் தந்தையுடன் தொடர்பு கொண்ட பீ.பீ.சி உலக செய்தி நிறுவனம், ஸ்வாத்தில் நிலவும் பெண் கல்வி அடக்குமுறை குறித்து யாராவது எழுத முன்வருவார்களா எனக் கேட்டது. அதற்கு ஆயிசா என்ற மலாலாவின் நண்பி முன்வந்தாள். ஆனால் தலிபான்களின் மிரட்டலாலும், பெற்றோரின் விருப்பமின்மையாலும் தனது முடிவை மாற்றிக் கொண்டாள் ஆயிசா. இந்த இடைவெளியை மலாலா நிரப்ப முன்வந்தாள். பாதுகாப்புக் கருதி யாரோ ஒருவரின் பெயரில் எழுதிக்குவித்தாள் மலாலா. இவ்வளவு காலமும் அடக்கி வைத்திருந்த அனைத்தையும் எழுத்து வடிவுக்கு கொண்டுவந்தாள்.

**அவளின் டயறிக்குறிப்பு**

2009 ஆம் ஆண்டில் மலாலாவின் டயறிக்குறிப்பு வெளியானது. உருது மொழியில் எழுதப்பட்ட அந்தக்குறிப்பை பி.பி.சியின் வலைத்தளம் பொது வெளிச்சத்துக்கு கொண்டுவந்தது. உலகம் முழுதுமிருந்து மாலாலாவுக்கு லட்சக்கணக்கான வாசகர்கள் உருவாகினார்கள். தலிபான்கள் ஸ்வாத் பகுதியில் என்ன செய்கிறார்கள் என்ற தகவலை முழு ஆதாரத்துடன் வெளியிட்டாள். பாகிஸ்தானில் தலிபான்கள் குண்டுவைத்து தகர்த்த பெண்களின் பாடசாலைகள் தொடர்பான முழுவிடயத்தையுமே தனது டயறிக்குறிப்பில் வழங்கினாள். பள்ளிகள் மூடப்படுவதையும், பெண்கல்வி பறிக்கப்படுவதையும் அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. காரசாரமாக விமர்சித்தாள். இவ்வளவு ஆவேசமான எண்ணங்களை அந்த சிறுமியிடம் யாருமே எதிர்பார்க்கவில்லை. பாகிஸ்தான் படைகளையும் விமர்சிக்க தவறவில்லை.தமது நாட்டுக்குள்ளேயே வந்து தாண்டவமாடும் தீவிரவாதிகளை பாகிஸ்தான் இராணுவம் கட்டுப்படுத்த திராணியற்ற சோம்பேறிகள் என விமர்சித்தாள். ஒருவேளை பாகிஸ்தான் பிரதமர் சரிதாரியின் மகள் ஸ்வாத்தில் படித்திருந்தாள், அந்த நாட்டு அரசு இவ்வாறு நடந்து கொள்ளுமா என கேள்வி எழுப்பனாள். அப்படிவசதி படைத்தவர்கள் இங்கு கல்வி கற்காமையே தமது கல்வி பறிக்கப்படுவதற்கான பிரதான காரணம் எனவும் எழுதினாள்.


**பிரபலமடைந்தாள் அவள்**

இடையில் அவளது பாடசாலையும் தலிபான்களால் சீல்வைக்கப்பட்டது.ஆனாலும் மூடப்பட்டவைகள் திறக்கப்படும் என்ற அதீத நம்பிக்கையில் பரீட்சைக்காக இரவுகள் முழுதும் படித்துக் கொண்டேயிருந்தாள். ஆனாலும் அவளது பாடசாலை திறக்கப்படவில்லை. ஏனையவர்களைப் போல மலாலாவின் குடும்பமும் பெசாவருக்கு இடம் பெயர்ந்தது. அகதியாக அலைந்தனர். கிடைக்குமிடங்களில் வாழ்க்கையை நடத்தினர்.

இந்த கட்டத்தில் தான் அவள் எப்படியாவது தனது மக்களுக்கு விடிவு தர வேண்டும் என எண்ணினாள். அதற்கான தனது பயணத்தை விரிவுபடுத்திக் கொண்டாள். தன்னால் கட்டாயம் அவர்களுக்கான மாற்றத்தை உருவாக்கிக் கொடுக்க முடியும் என நம்பினாள். அவளது டயறிக்குறிப்பு வெளியானதன் பின்னர் பிரபலமடைந்தாள்.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“சர்வதேச கட்டமைப்புகள் உலக பொது நன்மைக்காக அல்லது உலக ஒப்பனைக்காக இயங்குபவை. பொது நியாயங்களையும் பொது சட்டங்களையும் ஒவ்வொரு நாடும் எவ்வாறு கடைப்பிடிக்கின்றன என்பது தொடர்பிலும் அவை மீறப்படின் அது தொடர்பான ஆய்வினை நடத்தவுமே அவற்றால் முடியும்.

# அகில கால ஆபத்து

■ விகேளம்

போர் முடிந்து 3 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசுக்கான நெருக்கடி குறைந்தபாடு இல்லை.

இலங்கையில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் விடயங்கள் குறித்து உலக நாடுகளின் கரிசனை காரணமாக இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஆனாலும் அதில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக உள்நாட்டு பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்திய இலங்கை, அதனூடே பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதென உலக நாடுகளுக்கு உறுதியளித்திருந்தது.

இதன் மூலம் தொடர்ச்சியாக ஏற்படவிருந்த நெருக்கடிகள் குறைக்கப்பட்டு சர்வதேச பொறிமுறையிலிருந்து இலங்கை தப்பித்துக்கொண்டது எனலாம்.

உள்நாட்டில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை நடைமுறைப்படுத்துவதென வெளி உலகுக்கு உறுதியளித்ததன் காரணமாக சர்வதேச பொறிமுறை தேவையற்ற தாக்கப்பட்டது.

ஐ.நா.சபையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் உள் நாட்டில் அமைதியான, மீறல்கள் அற்ற நாடாக இலங்கையை மாற்றுதல் என்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட்டது. அதாவது வெளி அழுத்தங்கள் குறைக்கப்படுவதற்கு காரணம் ஆக்கப்பட்டது.

இருந்தாலும் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளால் முன்மொழியப்பட்ட கருத்துக்களையோ உள்நாட்டு பொறிமுறை மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பிரச்சினைகளையோ செவிசாய்த்து நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பூகோள கால மீளாய்வில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

★ இலங்கை அரசு, உள்நாட்டு புதிய யோசனைகளையோ திட்டங்களையோ இன்றுவரை முன்வைக்கவில்லை.

★ இலங்கையில் 18வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிக்காலம் இரண்டு தடவைக்குமலாக நீட்டப்பட்டமை குறித்தும், அரசியல் அதிகாரப்பகிர்வு குறித்த இணக்கப்பாடு எதுவும் இதுவரை எட்டப்படவில்லை.

★ வடக்கு கிழக்கில் இன்னமும் இராணுவ கெடுபிடிகள் அகற்றப்படவில்லை. அங்கு இராணுவ காவலரண்கள் தொடர்ச்சியாக பலப்படுத்தப்படுகின்றன.

★ அத்தோடு பொதுமக்களின் அன்றாட வாழ்விலும், பொருளாதார விவகாரங்களிலும் இராணுவத் தலையீடுகள் அதிகரித்தே உள்ளன.

★ அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு கட்டுப்படுத்தப்படுவதுடன் சுதந்திரம் வரையறுக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

★ காணாமற்போதல்கள், சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலைகள் போன்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

★ மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நிகழ்வுகளில் அரசியல் தலையீடுகள் அதிகார அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

★ அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் துன்புறுத்தப்படுவதுடன் பழிவாங்கப்படுகின்றனர்.

★ ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளதுடன் அவை குறித்து நம்பகமான விசாரணைகளோ, சட்ட நடவடிக்கைகளோ சரியாக எடுக்கப்படவில்லை.

★ நீதித்துறையிலும் பழிவாங்கல்கள் அச்சுறுத்தல்கள் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இவை எதிர்கால நீதிச் செயற்பாடுகளை இல்லாது செய்யும் செயலாகும்.

இவ்வாறு பூகோள கால மீளாய்வில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவால் மீண்டும் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பழைய பல்லவியை பாட முற்படுவதாகவும் அது ஆரோக்கியமாக இருக்காது எனவும் அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் வெளி அழுத்தங்களை எவ்வாறு குறைப்பது என்பது தொடர்பில் பல்வேறு நாடுகளிடம் ஆலோசனை பெற்று வருகிறது. அத்துடன் உள்நாட்டில் மூடி மறைப்புக்களை மேற்கொள்வதன் ஊடாக பிரச்சினைகளை வெளித் தெரியாது தவிர்க்கவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஐ.நா. சபை கூட்டத் தொடர்கள் வெறும் ராஜதந்திர அழுத்தங்களுடன் நின்றுவிடுவதால் உள்நாட்டில் நடைபெறக்கூடிய விடயங்கள் குறித்து உண்மையான தகவல்கள் வெளிவருவதில்லை. வெளிவந்தாலும் அவை ஓரிரு நாள்களுடன் தீர்ந்து போக்கும் பிரச்சினைகளாகவே பார்க்கப்படுகின்றன.

அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துமென பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளியான போதும் அது பேசப்பட்ட அளவுக்கு இலங்கையில் எந்த ஓர் மாற்றத்தையும் கொண்டுவரவில்லை.

இது போலவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைகள் சபையின் மீளாய்வு கூட்டத்தில் உலக நாடுகளில் இடம்பெறக்கூடிய மனித உரிமை மீறல்கள் குறித்த பேசும் அறிக்கையாகவே இருக்கும்.

நாளை திங்கட்கிழமை ஜெனிவாவில் இலங்கை தொடர்பான அறிக்கைகள் வெளியிடப்படவுள்ள நிலையில் அது இலங்கைக்கு பாதகமான நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற போதும் எந்தளவுக்கு அழுத்தம் கொடுக்கும் என்பதில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக பேச்சளவில் நின்றுபோகும் இந்த அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு நெருக்கடியாக மாறும் என்பது சாத்தியமற்றது. அவ்வாறு அமைந்தாலும் போருக்குப் பின்னரான நிலைமைகளை காரணம் காட்டி அவ்வாறான நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் கோரவும் இலங்கை அரசு தகுதிபெற்றிருக்கிறது. இதன் மூலம் அரசு தான் வென்றுவிட்டதாக எண்ணி மீண்டுமொரு இழுத்தடிப்புக்குத் தயாராகும்.

ஊடகங்களில் பேசப்படும் விடயங்கள் போல் இலங்கைக்கு ஆபத்து ஏற்படுமா? என்பதில் துணிச்சலாக இல்லை என்றே சொல்லிவிடலாம். ‘பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை’ என்பது போல வெளி அழுத்தங்களும் பேச்சளவிலேயே நின்றுபோவதால் துணிச்சலாக தனது செயற்பாடுகளை முன்னெடுக்க இலங்கை அரசு தவறவில்லை.

தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் பறித்தெடுத்துவிட்டால் அவர்கள் எதையும் பேசியோ போராடியோ பெறமுடியாது என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. அதாவது மாகாண சபைகளின் அதிகாரங்களை இல்லாது ஒழிப்பதன் மூலமோ அல்லது மாகாண எல்லைகளை மீள் வரையறைக்கு உட்படுத்துவதன் மூலமோ வடக்கு கிழக்கு மாகாணங்களை வேறு மாகாணங்களுடன் இணைத்து நிர்வகிக்கவும் அரசு முயன்றுவருகிறது.

இதன் மூலம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலம் அல்ல என்பதை நிறுவுவதே அரசின் முயற்சியாக உள்ளது.

வெளிஅழுத்தங்களுக்குஅஞ்சிஇலங்கை அரசு இன்றுவரை செயற்படவில்லை. வெளிப்படையாகவே இதனை ஒரு முறை நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார்.

மஹிந்த சமரசிங்கவுக்கோ, சவேந்திர சில்வாவுக்கோ நாம் நினைப்பதைப் போல் எந்த நெருக்கடியும் இல்லை. அவர்கள் ராஜதந்திரிகள் என்ற வகையில் எல்லா மரியாதைகளுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். மாநாடுகளின் போது சிலருக்கிடையே ஏற்படும் வாய்த் தர்க்கம், விவாதம் என்பவை சில நாள்களோடு முடிந்து போவதுபோல இவர்களிடமும் சில இடக்கு முடக்கான கேள்விகள் எழுப்பப்பட்டாலும் மாநாடு முடிந்து வெளியே வரும்போது கை குலுக்கி செல்கின்றனர். இவற்றை வைத்துக்கொண்டு இலங்கை மீதும் தமிழ் மக்கள் மீதும் சர்வதேசம் முழுக் கரிசனை கொண்டிருந்தது என்பதை தீர்மானிக்க முடியாது , அல்லது கைவிட்டு விட்டது என்றும் சொல்லமுடியாது.

அவர்கள் உலக பொது நன்மைக்காக அல்லது உலக ஒப்பனைக்காக இயங்குபவர்கள். பொது நியாயங்களையும் பொது சட்டங்களையும் ஒவ்வொரு நாடும் எவ்வாறு கடைப்பிடிக்கின்றது என்பது தொடர்பிலும் அவை மீறப்படின், அவை தொடர்பான ஆய்வினை நடத்தவுமே அவர்களால் முடியும்.


இந்த பொது விதிகளின்பால் அவர்களை முற்றுமுழுதாக நம்பி ஓர் இனம் அல்லது ஒரு நாடு இருக்க முடியாது. அவ்வாறு இருப்பதும் நியாயமானதல்ல.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் ஞானியாகவும் மேதையாகவும் தன்னை காட்டிக்கொள்ள முற்படுபவர். அதாவது எதையும் சொல்ல மாட்டேன்; செய்து காட்டுவேன் என்ற சவால் விடும் எண்ணத்துடன் இயங்குபவர். சில ஏவலாளர்களை இதற்கென நியமித்து வைத்திருக்கும் அவர் நாட்டில் வரக்கூடிய பெரிய பிரச்சினைகளுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென காட்டிக்கொள்வார். அதாவது 13 ஆவது அரசியல் சீர் திருத்தம் இல்லாதொழிக்கப்படும் எனவும் ஒழிக்கப்படாதெனவும் பல்வேறு கருத்துக்கள் எழுந்த போதும் அது தொடர்பில் மஹிந்த மௌனமாகவே இருக்கிறார்.

மொத்தத்தில் பேச்சு வேறு செயல் வேறு என்ற அடிப்படையிலேயே எல்லா நகர்வுகளும் இடம்பெறுகின்றன. நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் ஓர் இனம் மட்டுமே தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்நோக்கிக்கொண்டுள்ளது. இது இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படும் ஆபத்து என சொல்லிக்கொண்டாலும் அது தமிழ் மக்களுக்கு ஏற்படும் ஆபத்தாகவே பார்க்கப்பட வேண்டும்.

உலக நாடுகளின் நெருக்குதல்கள் ஓர் அளவோடு நின்றுபோக இலங்கை அரசின் நெருக்குதல்கள் தமிழ் மக்கள் மீது தொடருமானால் பூகோள கால ஆபத்து தமிழ் மக்களுக்கே என்றாகிவிடும். இதில் இருந்து தப்பிக்க தமிழ் மக்களுக்கென்று அரசியல் பலம் எதிர்காலத்தில் தேவையான ஒன்றாகவே இருக்கும். அதை அனைவரும் நினைவுறுத்திக்கொள்வதே கடப்பாடாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோதுமை மாவும் மாகாண சபையும்

சந்திரசேகரஆஷாத்

இலங்கையின் அதிஉயர் பௌத்த பீடங்களான மல்வத்தை, அஸ்கிரிய மதபீடங்களின் விகாராதிபதிகளின் ஆசியின்றி ஓர் அணுவும் அசையாது என்று கருதுமளவுக்கு இலங்கையின் ஜனாதிபதி அமைச்சர்கள் உட்பட சகல சிங்கள அரசியல் வாதிகளும் தங்களின் எல்லா நடவடிக்கைகளுக்கும் அவர்களிடம் ஆசிபெறுவது வழமையான ஒரு மரபாகிவிட்டது. அவர்களிடம் ஆசி பெறுவதன் நோக்கம் தெய்வ அனுக்கிரகத்தைப் பெறுவது என்பதைவிட அது சிங்கள மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் தங்கள் நடவடிக்கைகளுக்குச் சுலபமான அங்கீகாரத்தைப் பெறும் ஒரு வழிமுறையாகக் கொள்ளப்படுகிறதோ எனக் கருத வேண்டியுள்ளது.

மாகாண சபைகளுக்கு அடிப்படையாக உள்ள இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அகற்றப்பட வேண்டும் என்ற கருத்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டது. அதையடுத்து அமைச்சர்களான விமல்வீரவன்ச, தினேஷ் குணவர்த்தனா, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஜாதிக ஹெல உறுமய எனப் பலமட்டங்களிலும் அதற்கு ஆதரவாகக் குரல்கள் எழுந்தன. ஐக்கிய தேசியக் கட்சி உட்படப் பல தரப்பினரும் அதை எதிர்த்தனர். எப்படியிருப்பினும் இது நாடு பரந்த பெரும் சர்ச்சையை உருவாக்கியது. தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் விமல் வீரவன்ச மாகாண சபையை அகற்றக் கோரி நாடு பரந்த அளவில் போராட்டங்களை நடத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச மல்வத்தை அஸ்கிரிய பீடங்களின் விகாராதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

அந்தச் சந்திப்பின்போது மாகாண சபைகள் முறை நீக்கப்பட வேண்டும் எனவும் நிறைவேற்று அதிகாரம் அகற்றப்பட வேண்டும் எனவும் விருப்புவாக்கு முறை மாற்றப்பட வேண்டும் எனவும் பீடாதிபதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் என்பது அமைச்சரவை, நாடாளுமன்றம், மாகாண சபை போன்ற சகல அதிகார பீடங்களின் அதிகாரங்களையும் ஒரு தனி நபர் கட்டுப்படுத்தக் கூடிய ஓர் அதிகாரக் குவிப்பாகும். மாகாண சபை என்பது மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களின் ஒரு பகுதியைப் பரவல்படுத்துவதாகும்.

அதிகாரக் குவிப்பையும் நீக்க வேண்டும், அதிகாரப் பரவலாக்கத்தையும் நீக்க வேண்டுமானால் இவர்கள் கோருவது எதை என்ற கேள்வியே எழுகிறது. அதிலிருந்து நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்பது மக்களை ஏமாற்ற முன் வைக்கப்பட்ட ஒரு போலிக்கோஷம் என்பது புலனாகிறது. ஆனால் மாகாண சபை அகற்றப்பட வேண்டும் என்பதுதான் அங்கு வலியுறுத்தப்பட்ட முக்கிய விடயமாகும்.

ஆனால் அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் தொடர்பு அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை நீக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லையெனத் தெரிவித்துவிட்டார். எனினும் மாகாண சபை அகற்றப்பட வேண்டும் என்ற பிரசாரம் தொடர்ந்து அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அப்படியானால் என்னதான் நடக்கப் போகிறது? இந்தச் சர்ச்சைகளும் விவாதங்களும் சில மாதங்களுக்கு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு சிறிது காலத்தில் மங்கிமறைந்து விடும். எல்லாம் ஓய்ந்த நிலையில் இன்னுமொரு சட்டம் வேறு ஒரு வடிவத்தில் வந்து மேலும் மாகாண சபையின் அதிகாரங்களைப் பறிக்கும். அல்லது மாகாண சபையையே இல்லாமல் செய்யும்.

**ஞாயிறு காரம்**

> சகல சுமைகளும் நேரடியான, மறைமுகமான வரிகள் மூலமும் விலைவாசி உயர்வு மூலமும் மக்களின் தலை மீதே சுமத்தப்படும். எனவே நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி சகல தரப்புகளிலும் கொந்தளிப்பான நிலை தோன்றும்.

ஆனால் இப்போது மாகாண சபைகளுக்கு எதிரான பிரசாரம் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதற்கு இரு காரணங்கள் உண்டு.

ஒன்று- சிங்கள மக்கள் மத்தியில் மாகாண சபைகளுக்கு எதிரான கருத்தை உருவாக்கி வலுப்படுத்தல். ஏனெனில் மாகாண சபைகள் அவர்கள் மத்தியில் கூட அதிகாரங்களைப் பரவலாக்குகிறது.

அடுத்தது- எரிபொருள் விலையேற்றம், கோதுமை மா அதிகரிப்பு உட்பட விலைவாசி அதிகரிப்பு காரணமாக மக்கள் மத்தியில் ஏற்படும் எதிர்ப்புணர்வையும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் மேல் சுமத்தப்படும் சுமைகளால் தோன்றக் கூடிய எதிர்ப்பையும் மழுங்கடித்துத் திசை திருப்பிவிடல்.

ஏற்கனவே சம்பள உயர்வு கோரிப் பல முனைகளிலும் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன. அவை பல்வேறு வழிமுறைகளால் அடக்கப்பட்டன. ஆனால் அவை எப்போதும் வெடிக்கக் கூடிய அளவுக்குக் கொதிநிலையில் உள்ளன.

இன்று இலங்கையில் வாழும் மக்களின் 20 வீதமானோர் நாளொன்றுக்கு ஒரு டொலர் வருமானத்தையே பெறுகின்றனர். 40 வீதமானோர் 2 டொலர் வருமானத்தையே பெறுகின்றனர். அதேவேளையில் இலங்கையின் தேசிய வருமானத்தில் 82 சதவீதம் கடன் நிலுவைகளையும் வட்டியையும் கட்டவே செலவிடப்படுகிறது.

இந்த நிலையில் வரவு செலவுத் திட்டம் வரவுக்கும் செலவுக்குமிடையே இட்டு நிரப்ப முடியாத பெரும் இடைவெளியைக் கொண்டிருக்கும். அதை ஈடு செய்ய உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடம் மேலும் மேலும் கடன் பெற வேண்டும். அவர்களிடம் கடன் பெறுவதானால் அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அமையவே வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

அவ்விதமான ஒரு வரவு- செலவுத் திட்டமே முன்வைக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர்களின் நிபந்தனைகளின் படி அரச செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதாவது கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள் போன்றவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி மட்டுப்படுத்தப்பட வேண்டும். சம்பள உயர்வு வழங்கப்பட முடியாது. தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இது மேலும் மேலும் பல்தேசிய நிறுவனங்கள் எமது நாட்டின் மூல வளங்களையும் மனித உழைப்பையும் மலிவான விலையில் கொள்ளையடிக்க வழிகோலும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, ஊழியர் சேமலாப நிதியம் போன்றவை ஊழல் மோசடி திறமையற்ற நிர்வாகம் என்பன காரணமாகப் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன.

எனவே சகல சுமைகளும் நேரடியான, மறைமுகமான வரிகள் மூலமும் விலைவாசி உயர்வு மூலமும் மக்களின் தலை மீதே சுமத்தப்படும். எனவே நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி சகல தரப்புகளிலும் கொந்தளிப்பான நிலை தோன்றும்.

எனவே இந்த வரவு செலவுத் திட்ட காலத்தில் மாகாண சபைப் பிரச்சினை, பூதாகரமாக்கப்பட்டு மக்களின் கவனம் அதை நோக்கித் திசை திருப்பப்படும். அந்த வேலையை அரசுக்குள் உள்ள சிங்களக் கடும் போக்காளர்கள் மூலம் அரசு நிறைவேற்றும்.

தற்சமயம் கூட கோதுமைமா ரூபாவாலும் 4 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டதை ஊடகங்களோ, மக்களோ பெரிதுபடுத்தவில்லை. பாண் விலை அதிகரிப்பு சாதாரண மக்களைப் பாரதூரமாகப் பாதிக்கும் ஒன்றாக இருந்தபோதிலும் மக்கள் திட்டமிட்ட வகையில் மாகாண சபை மாயைக்குள் அமிழ்த்தப்பட்டு விட்டனர்.

13 ஆவது அரசியலமைப்புச் சட்டம் என்பது இருநாடுகளுக்குமிடையேயான ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அதை நீக்குவது என்பது அந்த ஒப்பந்தத்தை மீறும் ஒரு நடவடிக்கையாகும். இது இரு நாடுகளுக்குமிடையேயான ராஜதந்திர உறவில் சிக்கலை ஏற்படுத்தலாம். அதை இரு நாடுகளுமே விரும்பப் போவதில்லை.

ஆனால் மாகாண சபைகள் இருக்கும்போதே அதன் அதிகாரங்களைச் சிறிது சிறிதாகப் பறித்து அதை வெறும் கோதாக்கும் வேலையை அரசு ஏற்கனவே தொடங்கிவிட்டது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் பொலிஸ் நிர்வாக சேவை அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. நீதிமன்ற தீர்ப்பு மூலம் வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டுவிட்டது. திவிநெகும சட்டமூலம் மாகாணங்களின் காணி, நீர்ப்பாசன, சமூக சேவைகள் அதிகாரங்கள் பறிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசியப் பாடசாலைகள் மூலம் கல்வியின் ஒரு பகுதி பறிக்கப்பட்டுவிட்டது.

எஞ்சியிருக்கும் சில அதிகாரங்களும் வெவ்வேறு சட்ட உருவாக்கங்களில் பறிக்கப்பட மாகாண சபை கூடிக் கலையும் ஒரு நிறுவனமாக மாற்றப்படும்.

எனவே தற்சமயம் மாகாண சபை நீக்கப்பட வேண்டும் என்ற கோஷம் மா, எரிபொருள் என்பவற்றின் விலையேற்றம் மூலமும் எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தின் மூலமும் மக்கள் தலைமேல் விழுத்தும் இடியின் தாக்கத்தை உணரவிடாது திசைதிருப்பும் ஒரு தந்திரமாகும். அதுமட்டுமன்றி சிங்கள மக்களைத் தொடர்ந்தும் இனவெறிச் சிந்தனைக்குள் அமுக்கிவைக்கும் நோக்கம் கொண்டதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நவயுகன்

# ஒயில் சுரக்கும் கிணறுகள்

சுன்னாகம் பகுதிக்கு இப்போது வருபவர்கள் ஒரு 'அதிசயத்தைக்' காண முடியும். இங்குள்ள சில நன்னீர்க் கிணறுகள், 'ஒயில் கிணறுகளாக' மாற்றம் பெற்று வருகின்றன. இந்தநிலை நீடித்தால் அரபுக்காரர்கள் தங்கள் நாடுகளை விட்டுவிட்டு இங்கே வந்து எண்ணெய் அகழ்வில் ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இப்படி நன்னீர்க் கிணறுகள், ஒயில் கிணறுகளாக மாற்றம் பெற்ற மாயம் என்ன? அதுபற்றி அலசுவது அவசியம்.

தமிழ் மக்களுடைய வாழ்வாதார முதுகெலும்பாக மண்ணும், நீருமே அமைந்துள்ளன.

இந்த நிலையில் செழிப்பான மண்ணையும், தித்திக்கும் குடி தண்ணீரையும் கொண்ட வலிகாமம் தெற்கிலுள்ள சுன்னாகப் பிரதேசம், போரால் பட்ட காயங்களிலிருந்து மீள்வதற்கிடையில் இன்னொரு சீரழிவுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகளும், அரசின் அடிவருடிகளும் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்பின் யோசிக்காமல், கண்ணை மூடிக்கொண்டு போடுகின்ற திட்டங்களே சுன்னாகம் மக்களின் வாழ்வியலை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது.

சுன்னாகம் மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியை அண்மித்துள்ள வீடுகளின் கிணறுகளிலேயே அண்மைக்காலமாக ஒயில் கலக்கத் தொடங்கியுள்ளது. மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஒயிலே மண்ணுக்குள் பயணித்து கிணற்று நீருடன் ஐக்கியமாவதாக கூறப்படுகிறது.



இன்றைக்கு சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னரே இத்தகைய அபாய நிலை ஏற்படத் தொடங்கினாலும், இதன் முழு வீரியமும் இப்போதுதான் வெளிப்பட்டுள்ளது.

முதலில் ஓரிரண்டு கிணறுகளிலேயே இவ்வாறு நன்னீரில் ஒயில் வாசனை இருப்பதை மக்கள் கண்டறிந்தார்கள். அந்த நிலை படிப்படியாக உயர்ந்து இப்போது மின் நிலையத்தைச் சுற்றியுள்ள அநேக வீட்டுக் கிணறுகளில் ஒயில் சுரக்கத் தொடங்கியுள்ளது.

இந்த அபாய நிலையின் உச்சக்கட்டமாக சுன்னாகத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் கந்தரோடைப் பகுதிக்கு நீர் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட கிணறும் ஒயில் சுரந்து மனிதப் பயன்பாட்டுக்கு ஒவ்வாத நீரைக் கொண்டதாக மாறிவிட்டது. இதனால் கந்தரோடைக்கு நீர் வழங்கும் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

"பட்டினி கிடந்தாலும் எங் கடஉளர் தண்ணீரைக் குடித்து விட்டு காலம் முழுக்க இங்கேயே கிடப்போம்" என்று வார்த்தைக்கு வார்த்தை உச்சரிக்கும் மக்களின் குடிதண்ணீர் பற்றிய அவாவுக்கு மின்சார சபையின் முன்யோசனையில்லாத செயல் வேட்டுவைத்துவிட்டது.

மறுபுறத்தே இத்தகைய நீரில் கலந்த கழிவு ஒயில் காரணமாக விவசாய நிலங்களும் பாதிப்படைந்துள்ளன. பயிர்கள் அழியுமா? பயிர் நிலங்கள் பாதிப்படையுமா? என்ற பயத்துடன் விவசாயிகள் கவலைப்படுகிறார்கள்.

இத்தகைய பாரதூரமான பாதிப்புக் குறித்து பல தடவைகள் மக்கள் முறையிட்டும், அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்குச் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்திலேயே மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, கழிவு ஒயில் கிணறுகளில் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இத்தகைய பாரதூரமான நிலைமை ஏற்படுவதை தவிர்த்திருக்கலாம்.

அரச அதிகாரிகளைப் பொறுத்தவரையில் " சுன்னாகம் பகுதியில் இத்தகைய பாதிப்புகள் ஏற்படவே இல்லை" என்று சத்தியம் செய்வதுடன், அரசுக்கும், அதன் அடிவருடிகளுக்கும் முண்டு கொடுப்பதிலேயே குறியாக உள்ளனர். ஆனால் பிரதேச சுகாதாரத் திணைக்களம் இங்குள்ள கிணற்று நீர்களின் மாதிரியை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு அனுப்பி வைத்திருந்தது. அதில் குறித்த நீரில் கழிவு ஒயில் கலந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் மக்கள் பிரதி நிதிகளைக் கொண்ட பிரதேசசபையில் இந்த விடயம் சம்பந்தமாக கூட்டம் ஒன்று நடத்த முடிவெடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் அழைப்பும் விடுக்கப்பட்டது.

ஆனால் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் பிரதேச செயலரும், மின்சார சபை அதிகாரிகளும் வேறு வேலைபார்க்கச் சென்றுவிட்டார்கள். குடி தண்ணீர்க் கிணறுகளில் ஒயில் கலந்து வருவதற்கு முக்கிய பங் காளர்கள் மின்சார சபையினரே. அவர்களுக்கு பிரச்சினையை எடுத்துரைத்து தீர்வு காணவேண்டியவர் பிரதேச செயலர். இந்த இரு தரப்பும் இல்லாமல் எப்படி அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்க முடியும்.? மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதை விடவும் அவர்களுக்கு வேறு விடயங்களே முக்கியமாகி விட்டன.

இத்தகைய அலட்சியப் போக்கால் தான் இன்றுவரை கிணறுகளில் ஒயில் சுரப்பது தொடர்கின்றது. மின் உற்பத்தி நிலையத்திலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள கிணறுகளைத் தேடி மண்ணின்கீழ் கழிவு ஒயில் ஓடிச் செல்கிறது. இதனை கண்டும் காணாதது போல் வாளாவிருக்கிறார்கள் மின்சாரசபை அதிகாரிகள்.

இதனை உரிய அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முழுமையாக அறிந்திருந்தும் இதனைத் தடுப்பதற்கு முன்னேற்றகரமான எந்தச் செயற்பாட்டையும் முன்னெடுக்கவில்லை.

"குடி தண்ணீரைக் குடிக்க முடியாத அளவுக்கு கிணறுகளில் ஒயில் கலக்கின்றது. இதனைத் தடுத்து நிறுத் துங்கள்" என்று மக்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்தே வருகின்றனர். இத்தகைய எல்லா முறைப்பாடுகளுக்கும் கூறப்படும் ஒரே பதில், "கழிவு ஒயிலை அகற்றுவதற்கும் சேமிப்பதற்கும் விசேட தொட்டிகள் கட்டப்படுகின்றன. அதன் பின்னர் கிணறுகள் பாதிப்படைய மாட்டாது "என்பது தான். ஆனால் அவ்வாறு எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

மக்களும் எத்தனை நாளைக்குத் தான் பொறுக்க முடியும்? அவர்களின் பொறுமையும் கரையுடைந்து, தமது குடிதண்ணீரைக் காப்பாற்றுவதற்காக ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடக்கூடும். அதன்போது மக்களை அதட்டியோ, எச்சரித்தோ, கைது செய்தோ அவர்களின் வாயை அடைப்பதால் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் இவ்வாறு கிளர்ந்தெழாமல் பிரச்சினையை முளையிலேயே கிள்ள உரியவர்கள் முன்வர வேண்டும்.

வாய்ப்பேச்சில் பந்தல் போடுவதை விடுத்து உருப்படியான காரியங்களில் உடனடியாக இறங்க வேண்டியது அத்தியவசியமாகும். கதிரைகளுக்குப் பாரமாக இருப்பதை விடுத்து இனியேனும் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, கிணறுகளில் கலக்கும் கழிவு ஒயிலுக்கு அதிகாரிகள் முடிவு கட்ட வேண்டும். கட்டுவார்களா?★

# நீரிழிவுடன் வாழும்போது...

-எஸ். சுதாகரன்-
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

மற்ற நோய்களைப்போல் நீரிழிவு அல்ல. மனிதன் நினைத்தால் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். திடீர் என்று உங்கள் மீது சுமத்தப்பட்ட இந்த நோயும் அதைச் சார்ந்த முறைகளும் உங்கள் மனதைப் பாதித்த உண்மையை ஏற்றுக்கொண்டு அதனுடன் வாழ முயற்சிக்க வேண்டும். உங்களுக்கு மட்டும் இந்த் நோய் ஏற்படவில்லை, இந்த உலகில் லட்சோப லட்சம் மக்கள் உங்களைப் போல் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணர வேண்டும். எனவே இந்த நோயுடன் வாழும் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்.

1) உங்கள் குருதியில் வெல்ல மட்டம் கட்டுப்பாடான சீரான நிலையில் வைத்திருப்பதற்கு முயலுங்கள். இது உங்களை எப்போதும் பத்திரமான நிலையில் வைத்திருக்க உதவும். இதன் மூலம் இந்த நோயினால் வரும் சிக்கல்கள், விபரீதங்கள், துன்பங்களைத் தவிர்க்கலாம்.

2) உணவைத்தவிர குருதியில் வெல்ல மட்டத்தை அதிகரிக்கக்கூடிய கவலைகள், மன அழுத்தங்கள், கோபங்கள், இவற்றின் ஊற்று எங்கு இருக்கிறது என்பதை அறியுங்கள். உங்கள் மன நிலையில் நிவாரணம் பெற முயற்சி செய்யுங்கள். இத்துறையில் அனுபவசாலிகளின் ஆலோசனைகளை பெறுங்கள்.

3) உங்களுக்கு உள்ள வேறு நோய் நிலைகள், மற்றும் உங்கள் வயது, உங்களின் பொதுவான தேக ஆரோக்கியம் ஆகியவற்றைப் பொறுத்து உங்கள் வைத்தியரால் பரிந்துரை செய்யப்பட்ட உடற்பயிற்சிகளை உதாரணமாக நடத்தல், ஓடுதல், துள்ளல், சைக்கிள் ஓட்டம், நீச்சல், தோட்டவேலை போன்ற ஏதாவது ஒன்றை வாரத்தில் 3 - 5 தடவையோ அல்லது தினசரியோ செய்தல்.

4) பொதுவாக நீரிழிவு நோயாளிகள் தங்களின் எடையைக் கவனத்தில் எடுக்க வேண்டும். உங்களின் உயரத்துக்கு ஏற்ற எடை இருத்தல் சிறப்பானது. உங்கள் எடை அதிகரிப்பானது நீரிழிவின் கட்டுப்பாட்டைப் பாதிக்கும். எனினும் நீங்கள் பிறந்த இனம், மரபணுக்களால் உங்களுக்குக் கிடைத்த உடல்வாகு ஆகியவையும் உங்கள் எடையில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

5) நீரிழிவு நோயாளிகளில் கூடுதலாக இரத்தக் குழாய்களில் (நாடி) கொழுப்பு படிவு ஏற்பட்டு (Arthero Sclerosis) அவற்றின் விட்டம் குறையும். இதனால் உறுப்புகளுக்கான இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு, பக்கவாதம், கால்களில் மாறாத புண்கள் போன்ற சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உங்களின் வாழ்க்கையில் உணவு முறை மாற்றங்களும், பரிந்துரை செய்யப்பட்ட மருந்துகளையும் சீராக எடுத்தல் வேண்டும்.

6) புகைத்தல் மாரடைப்பு ஏற்படும் வீதத்தைக் கூட்டும். எனவே புகைத்தலை முற்றாகத் தவிர்க்க முயல வேண்டும். அத்துடன் மதுபானம் தவிர்த்தல் அல்லது எடுக்கும் அளவைக் கட்டுப்படுத்தல் நல்லது.

7) நீரிழிவு கட்டுப்பாடு இல்லாவிட்டால் உங்கள் பற்களும் முரசுப் பகுதியும் நோய்க்கு ஆளாகலாம். எனவே தினசரி பல்வாய் சுத்தத்துடன் வருடத்துக்கு ஒரு முறையாவது பல்வைத்தியரிடம் உங்கள் பற்கள், முரசுப்பகுதியைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

8) நீரிழிவு நோய் சிறுநீரக பாதிப்புக்களையும் ஏற்படுத்தக்கூடியது. இதன் ஆரம்ப நிலையில் சிறுநீருடன் மைக்கிறோ அல்புமின் (Micro Albumin) வெளியேறுவதை பரிசோதனை மூலம் அறியலாம். ஆரம்பத்திலேயே இதனைக் கண்டறிவதன் மூலம் இதற்குரிய சிகிச்சைகள், மருந்துகள், ஆலோசனைகள் ஆகியவற்றைப் பெறுவதன் மூலம் உங்கள் சிறுநீரகங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

9) நீரிழிவு நோயாளிகள் கண்களில் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிவதற்கு வருடத்துக்கு ஒரு தடவையாவது கண்களைப் பரிசோதிப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

■ ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

22

**மிகையான இலக்கு:** உங்களால் செய்ய முடியாததை நீங்கள் செய்யத் தொடங்கினால், கடைசியில் அது ஏமாற்றத்தில்தான் முடியும். அதற்காக மற்றவர்களிடமிருந்து தீட்டும் வசவும் பெறுவீர்கள்.

**மாற்றத்துக்கு இடமில்லாத வழக்கங்கள்:**

கோடைகாலத்தில் நீண்ட தூரம் நடப்பது நல்லதுதான். ஆனால் அதே போன்று குளிர்காலங்களில் நடப்பது நல்லதல்ல. அதனால் புதிய நடைமுறைக்கு மாறத் தயாராகுங்கள்.

**தொல்லை தருபவரை நேசித்தல்:** அலுவலகத்தில் உங்களுக்குத் தொல்லை தருபவரிடம் கூட அன்பாக நடந்து கொள்ள நினைப்பது நல்ல யோசனை தான். ஆனாலும் அவர்கள் முகத்தில் கடுகடுப்பும் எரிச்சலும் தொடர்ந்து தெரிகின்ற போது எத்தனை நாளைக்கு நீங்கள் இனிமையாக இருக்க முடியும்.

**திடீர் மாற்றம்:** அமைதியான, ஆர்ப்பாட்டமற்ற இடத்தில் பணிபுரிந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில், திடீரென நீங்கள் பல மாற்றங்களைச் செய்துவிடுவது முதலாளிக்குத் தொல்லை கொடுப்பதாய் அமைந்துவிடும். அதனால் பெரும் மாற்றம் செய்வதற்கு முன்னால் ஏற்படும் அபாயங்களையும், அதன் பயன்களையும் தெரிந்து செயல்பட வேண்டும்.

**இளமையானவர் போல நடித்தல்:** அந்த நகரிலே வயதான ஆட்டக்காரர் நீங்கள் தானா? நீங்கள் இசைக்காக ஆடுகிறீர்களா? ஆட வேண்டும் என்பதற்காக ஆடுகிறீர்களா? இதற்காக இளமையானவரைப் போல் நடிக்கவேண்டாம்.

**அதிகமான எதிர்பார்ப்பை அளிக்காதீர்கள்:**

ஏதாவது ஒன்றை உறுதியளிக்கும் போது, செய்ய முடியாதவற்றைச் சொல்லாதீர்கள், அது உங்கள் மதிப்பை குறைப்பதாக அமைந்துவிடும். அத்துடன் மற்றவர்களும் அது பற்றிக் கேள்வி கேட்கத் தொடங்குவார்கள். அதனால் நீங்கள் மிக உறுதியாக நடக்கும் என நினைக்கும் விடயத்தை மட்டும் வெளியில் சொல்லவேண்டும்.

**உண்மையாக இருங்கள்:**

உங்கள்வாழ்க்கைத்துணைவரோடு வாழ்ந்து கொண்டிருந்தால் அவருக்கு உண்மையாக இருங்கள். விளைவுகளை அறியாமல் எந்தத் தவறும் செய்துவிடாதீர்கள்.

**தேவையானதைத் தூக்கியெறிந்து விடாதீர்கள்:**

வீட்டைச் சுத்தம் செய்யும் பரபரப்பில், தேவைப்படலாம் என நினைக்கும் பொருள்களைக்கூட வெளியே தூக்கியெறிந்து விடாதீர்கள். பின்னர் அப்பொருள் நமக்குத் தேவைப்படும் போது வருத்தப்பட வேண்டியதாகிவிடும்.

**கஞ்சத்தனமாக இருக்காதீர்கள்:**

செலவினைக் குறைத்து வாழ வேண்டுமென்று, அளவுக்கு அதிகமாக முயற்சி செய்யாதீர்கள். கடைசியில் அது கஞ்சத்தனத்தில் முடிந்துவிடும்.

**செயலின்மை:** உங்கள் வாழ்க்கையில் பெரிய சேதத்தை விளைவிக்கக்கூடிய பெரிய மாற்றம் மாற்றம்-எதுவும் செய்யாமல் இருப்பதுதான். எந்தமாற்றமும் இல்லையெனில் வாழ்நாள் முழுவதும் உங்கள் கேள்விக்கு விடை தேடிக்கொண்டேயிருப்பீர்கள்.

**பின்பற்றுதல்**

மேற்கண்ட பட்டியலின்படி உங்களால் எதைச் செய்ய முடியுமோ அதை மட்டுமே நீங்கள் சொல்ல வேண்டும் என்பது தெரிகிறது. உங்களின் உற்சாகம் பெரும் திட்டங்களை உருவாக்கி அதை உலகத்தாரிடம் சொல்ல வேண்டுமெனத்துடிக்கும். ஆனால்யதார்த்தத்தில் அது உழைக்கும் பிறகு திட்டத்தை மாற்றியமைப்பது போலாகி விடும். அதனால் ஒரு திட்டத்தின் விளைவுகள் அனைத்தும் தெரிவதற்கு முன்னால் திட்டத்தை யாரிடமும் சொல்லாதீர்கள். அதே போன்று உங்கள் வாழ்க்கையில் நீங்கள் என்ன மாற்றம் செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று யாருக்கும் தெரியாவிட்டால் நீங்கள் தொடர்ந்து அப்பாதையில் செல்லமுடியாது. மற்றவர்களுக்கு உங்கள் திட்டம் பற்றித் தெரிந்தால் அவர்களும் உதவிக்கு வருவார்கள். மாற்றம் செய்ய நினைக்கும் விடயங்களில், யதார்த்தமான சாத்தியமாகக் கூடிய இலக்குகளை நிர்ணயிங்கள். அத்துடன் அவ்வப்போது நீங்கள் செல்லும் திசை சரியானது தானா என்று எடுத்துரைக்க மற்றவர்களையும் அனுமதிக்கிறீர்கள் என்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள்.

**ஆலோசகர்**

உங்களின் சுய மாறுதல் காலகட்டத்தில் முழுவதும் உடனிருந்து உங்களை ஆதரிக்கிறேன் என்று அப்பொறுப்பை எற்றுக்கொள்கிறவர் நம்பிக்கைக்குரிய ஆலோசகர் ஆவார். நல்ல ஆலோசகர் ஆவார். நல்ல ஆலோசகர்கள் நீங்கள் அமைத்த இலக்குகளை அடைய உதவுவார்கள். உங்கள் திறமைகளை வளர்த்தெடுப்பதற்கும் வளர்ச்சிக்கும் ஆலோசகர் என்பது இப்போது பொதுவான விடயமாகி விட்டது. நிறைப்பணியாளர்களைக் கொண்ட நிறுவனத்தில் புதிதாக வேலைக்குச் சேரும் பணியாளர்களை ஆலோசகரிடம் பயிற்சிக்கு அனுப்புவார்கள். பயத்துடனும் பதற்றத்துடனும் இருக்கும் புதிய பணியாளர்களுக்கு தேவைப்படும் ஆலோசனைகளைச் சொல்லி அவர்களை ஆலோசகர் உற்சாகப்படுத்துவார்.

சில பேர் முறைப்படியான ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவ்வாறான ஆலோசகரை விட உங்களைச் சுற்றியுள்ளவர்களையே நீங்கள் ஆலோசகர்கள் ஆக்கலாம். உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமாகியிருக்கும் நபர்களைச் சந்திப்பது உங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது மட்டும் தான் உங்கள் வேலை.

# தேவை மண் மீட்புப் போர்

■ லோ.துஷிகரன்

இலக்குமணனால் மூக்கறுக்கப்பட்ட சூர்ப்பனகை இறுதியாக அண்ணன் இராவணனிடம் சென்று முறையிடுகிறாள். தங்கையின் நிலை கண்டு இராவணன் மிகவும் கொதிப்படைந்தான். இராவணன் ஊடாக தான் நினைத்ததை அடைவதற்குரிய ஆயுத்தங்களை அரங்கேற்றினாள் சூர்ப்பனகை. இராவணன் சினம் கொண்டாலும் அவனது பத்து மூளைகளைக் கொண்ட அறிவு அவனைச் சிந்திக்க வைத்தது.

''நின்னை அவர்கள் இங்ஙனம்
செய்தற்கு
நீ இடை இளைத்த குற்றம் என்ன
கொல்''

என்று சூர்ப்பனகையைக் கேட்கிறான். இது வரை இராவணனது சிந்தனை நேரிய வழியில் நின்றது.

''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்
பினும் அப்பொருள்
மெய்ப்பெருள் காண்பது அறிவு''

என திருவள்ளுவரது வாக்கிற்கு அமைய சூர்ப்பனகை என்ன சொன்னாலும் அவன் கொண்ட கல்வி அறிவினால் உண்மை நிலைகாண விளைந்தான்

''சுத்த அறிவே சிவம் என்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ?''

எனப் புரட்சிக் கவிஞன் பாரதி சொன்னது போன்று சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் அவன் கொண்ட அறிவினாலும் சிவ பக்தனே! எனவே இதுவரை அவன் சிவனாகவே காட்சி தந்தான்.

சூர்ப்பனகை தனது எண்ணத்தை நிறைவேற்ற இராவணன் இடம் தராதது கண்டு சிந்தித்தவள், சீதையைத் துருப்புச் சீட்டாக்கினாள். அண்ணனிடம் உள்ள குறையான பெண் பித்தினை தனக்குச் சாதகமாக மாற்றத்துணிந்தாள். சீதையின் வடிவழகை வர்ணிக்கத் தொடங்கினாள். தனது அதீத கற்பனை நயம் தோன்ற எடுத்துரைத்தாள். சீதையின் வடிவழகைக் கேட்க கேட்க இராவணனது மதி மெல்லக் கழன்றது. மெல்ல மெல்ல நல்லதெல்லாம் மறக்கத்தொடங்கினான். சிவபக்தனான இராவணன் பெண்பித்தன் ஆகிறான்.

''கரனை மறந்தான், தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான், உற்ற
பழியையும் மறந்தான் வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான், கெட்ட
மங்கையை மறந்திலாதான்''

என அப்போது இராவணன் அடைந்த நிலையைக் கம்பன் அழகாகச் சொன்னான். பெண் பித்தினை அடைந்த இராவணன் அனைத்தையும் மறந்தான். ஆனால் சீதையை மறக்க இயலாதவன் ஆனான். இது சூர்ப்பனகையின் திறமையின் வெளிப்பாடு என்றும் சொல்லலாம்.

இராவணன் கல்வியையும் மறந்ததால் அவன் மூளையில் ''பிறர் மனை நயத்தல் பாவம்'' என்ற அறிவு நிலையும் அகன்றது. சீதைமேல் கொண்ட காமம் மட்டும் பத்து தலைகளிலும் ஏற, அவளைக் கடத்தினான். சிறைவைத்தான். அதனால் பெரும் யுத்தமே மூண்டது. சீதை எனும் ஒரு பெண்ணின் மீது கொண்ட காம வயத்தால் நாடே அழிந்தது.

ஏற்றமுற வாழ்ந்தவன் இராவணன். வாரணம் பொருத மார்பையும், கைலாய மலையை ஆட்டம் காண வைத்த வலிமையான தோள்களையும் பத்து தலைகளில் இருந்த இலங்கை முடிகளும் சிவபெருமானால் வழங்கப்பட்ட சந்திரகாசம் என்ற சிறப்புமிக்க வாளையும், அவனுக்கே உரித்தான வீரத்தையும் யுத்த களத்திலே இழந்தான் இராவணன்.

இப்படியான [illegible] முழும் பெருமையும் [illegible] இழந்து வெறும் கையோடு வந்தவன், இறுதியில் உயிரையும் விட்டான். ஏன்! காம வயப்பட்டதே காரணமாயிற்று. அவனைச் சூழ அறிவாற்றல் மிக்கவர்கள் சொன்ன அறிவுரை களையும் அவன் காதுகள் கேட்க மறுத்தன. தாடகை வதத்திலே ''கல்லாம் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளென என போருளெனப் போயிற்றன்றே!'' எனக் கம்பன் கூறியது போல் அறிவிழந்த இராவணன் காதில் அறிவுரைகள் தங்கவில்லை. கல்வி இழந்ததால் கல்லாதவன் போல் செயற்பட்டான். ''கடையரே கல்லாதவன்'' எனத் திருவள்ளுவர் சொன்னது போன்றும், ஔவை கூறிய இழிகுலத்தவர் போலும் ஆனான். இறுதியில் அவனும் அவன் கூட்டமும் அழிந்து ஒழிந்தது.

எமது பிரதேசத்தில் ஒழுக்கம் கெட்டுவிட்டது. நீதி செத்துவிட்டது. அக்கிரமங்கள் அதிகரித்துவிட்டன. இப்படி நாம் கத்த ஆரம்பித்துவிட்டோம். இதற்கு என்ன காரணம் என ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் இராவணன் ஊடாக விடை கிடைக்கும் என்ன, கல்வி நிலை வீழ்ச்சி கண்டுவிட்டது என்பது விடைகளில் ஒன்று. அப்படியானால் கற்றவர்கள் இல்லையா என்றொரு வினாவும் எழவே செய்யும். அதற்கும் இராவணனே விடை. கற்றதையெல்லாம் கழற்றிவிட்டார்கள் கல்வியியலாளர்கள். சுருங்கச் சொன்னால் பெரும்பாலான கற்றவர்களும் கயவர்களாகி விட்டார்கள்.

[illegible] கொள்ளை அடிக்கி [illegible] சகமும், ஏமாற்றல் பேர் வழிகளும் ஆகவும் ஒரு கூட்டம்



அலைய மறு கூட்டம் வாள் வெட்டுக்கள், குழுச்சண்டைகள், போதைப் பாவனை, பெரியோரை மதியாமை, கற்ற பாடசாலையை, பெற்ற மண்ணை அவமதித்தல் என பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். அதுமட்டுமல்ல பெண் பித்துப் பிடித்த காமுகர்களும் எமது மண்ணில் தாராளமாகவே உள்ளார்கள். பாலியல் பலாத்காரம், திருமணத்துக்குமுன்னான உறவு, சிறுவர் துஷ்பிரயோகம் என இவர்களது இந்தப் பட்டியலும் நீண்டுகொண்டே செல்கிறது.


சுருங்கச் சொல்லின் இராவணன் என்று அறிவிழந்தானோ, காமவயப்பட்டானோ அன்றே அவன் புகழ் இழக்கலானான், அவன் வாழ்வில் அழியத்தொடங்கினான். அதே போன்று என்று எமது பிரதேசம் கல்வி நிலையில் இருந்தும் கற்ற கல்வியின் வழி ஒழுகும் நிலையில் இருந்தும் பின்தள்ளப்பட்டதோ அன்றே சீரழிவுக்காக முன்தள்ளப்பட ஆரம்பித்துவிட்டதெனலாம். சமூகத்தொண்டமைப்புகளும், சமூக நலன் விரும்பிகளும் இதைக் கருத்திற்கொண்டு எமது மக்களை மீட்கப் போராடுவார்களா! பார்க்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை



நெடுந் தொடர்

24

1840ஆம் வருடம் லிங்கன் மறுபடியும் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் வெற்றிபெற்றார். அந்த வருடம் தான் ஜெனரல் வில்லியம் ஹாரிசன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். கட்சியின் விசேட கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான வில்லியம் ஹாரிசன் அறிமுகப்படுத்தப்பட்டார். லிங்கன் இல்லினாய்ஸ் மாநிலத்திலுள்ள பல ஊர்களுக்குச் சென்று வில்லியம் ஹாரிசனுக்காக தீவிர பிரசாரம் செய்தார். அந்தத் தேர்தலில் ஹாரிசன் வெற்றி பெற்றார். எனினும் அந்த வெற்றியில் லிங்கனுக்கு பங்கில்லை; ஏனெனில் அவர் பிரசாரம் செய்திருந்த இல்லினாய்ஸ் மாநிலத்தில் ஹாரிசனை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவருக்கே அதிக வாக்குகள் கிடைத்திருந்தன. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் ஹாரிசன் அமெரிக்க ஜனாதிபதியாக ஒரு மாதம் மட்டுமே இருந்தார். அதற்கிடையில் இறந்துவிட்டார்.

இந்தச் சமயத்தில்தான் லிங்கன் மீது ஒரு பெண் காதல் வயப்பட்டார். அவர் பெயர் மேரி டாட்.

லிங்கனின் நண்பர்களில் ஒருவர் நினியன் எட்வர்ட்ஸ். இவர் இல்லினாய்ஸ் மாநில சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவராகவும் இருந்தார். இவரது மைத்துனிதான் மேரி டாட். மேரி டாட்டின் சொந்த ஊர் கென்டகிலியிருந்த லெக்சிங்டன். 1839 ஆம் ஆண்டு சொந்த ஊரிலிருந்து ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தார் மேரி. படித்தவர், அழகானவர், வசதியான பாரம்பரியப் பெருமைமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். மேரி டாட்டின் தாத்தா லெவி டாட், கென்டகி மாநிலத்திலிருந்து செவ்விந்தியர்களை விரட்டி, அமெரிக்காவுடன் இணைந்த படையில் மேஜர் ஜெனரலாக இருந்தவர். அப்படிப்பட்ட மேரிக்கு எளிமையான, கவர்ச்சியில்லாத ஆபிரஹாம் லிங்கன் மீது காதல் வந்ததுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

மேரியின் காதலுக்கு ஆரம்பத்திலிருந்தே முட்டுக்கட்டை போட்டார் அவரது அக்கா எலிசபெத்.

"அவரா? எந்தநேரமும் வேலை வேலை என்று சட்டமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் அலைந்துகொண்டே இருப்பாரே. அவரிடம் என்ன இருக்கு? பண்பு இருக்கா? அழகு இருக்கா? நாட்டியமாடத் தெரியுமா? நாகரிமாகப் பேசத் தெரியுமா? அவரிடம் என்ன இருக்கெண்டு அவரைக் கல்யாணம் பண்ண நினைக்கிறாய்?"

இதுதான் எலிசபெத்தின் வாதம். ஆனாலும் மேரி டாட், லிங்கனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்குக் காரணமும் இருந்தது. பகட்டு, பெருமை, ஆடம்பரம் இவற்றில் மேரிக்கு பிரியம் அதிகம். இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் லிங்கன் அரசியலில் பெரிய ஆளாக வந்துவிடுவார் என்று நம்பினார். லிங்கன் பெரிய ஆளாகிவிட்டால் தான் நினைத்தது எல்லாம் நடக்கும் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

ஆபிரஹாமுக்கும் மேரியைப் பிடித்திருந்தது. ஒருநாள் அவர் மேரியிடம், "நீ என்னைத் திருமணம் செய்யப் போவதாகச் சொன்னது மிகவும் சந்தோஷமான விஷயம். ஆனால் என்னைக் கல்யாணம் செய்ய நினைத்தது தவறு என்று, என்றாவது ஒருநாள் நீ உணர நேர்ந்தால் அதை உடனே என்னிடம் சொல்லவேண்டும். அப்படிச் செய்வாயா?" என்று கேட்டார்.

அதற்கு "சரி" என்றாள் மேரி.

அதுதேர்தல் காலம். லிங்கன் வேட்பாளராக நின்றிருந்தார். அன்றைக்கு ஓர் இடத்தில் தேர்தல் பிரசாரம் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்கு மேரியும் போயிருந்தார். லிங்கன் பேசியதை மூச்சு விடாமல் கேட்டது கூட்டம். மேரி டாட்டும் கேட்டார். பிரமித்துப் போனார்.

கூட்டம் முடிந்ததும் லிங்கன் மேரியைத்தான் தேடினார். அவரிடம் ஓடி வந்தார். "மேரி என் பேச்சைக் கேட்டாயா? எப்படி இருந்தது? நான் இந்தத் தேர்தலில் வென்று சட்டமன்ற உறுப்பினர் ஆவேனா?" என்று ஆவல் பொங்கக் கேட்டார் லிங்கன். கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தாள் மேரி டாட். லிங்கனையே குறுகுறுவென்று பார்த்தாள்.

"உங்கள் பேச்சைக் கேட்டேன். நீங்க சட்டமன்ற உறுப்பினராவதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு நாள் இந்த நாட்டுக்கே நீங்கள் ஜனாதிபதியாவது உறுதி"- என்றாள்.

★

மேரி டாட்டும் லிங்கனும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தார்கள். திருமணத் திகதியைக் கூட முடிவு செய்துவிட்டார்கள். 1841, ஜனவரி முதல் திகதி திருமணம். இருவரும் தங்களுக்கு நெருங்கியவர்களுக்கெல்லாம் திருமணத்தைப் பற்றிச் சொல்லியும் விட்டார்கள். ஆனால் திருமண நாள் நெருங்குவதற்கு முன்பாக இருவருக்கிடையேயும் மெல்லிய திரையாக எழுந்த மனக்கசப்பு, மிகப்பெரிய இரும்புச் சுவராக மாறிக் கொண்டிருந்தது.

மேரிக்கு லிங்கனின் நடை, உடை, பழக்கவழக்கமெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. கோடை காலம் என்றால் லிங்கன் கோட்டோ, கழுத்துப் பட்டியோ அணிய மாட்டார். "இந்த வெப்பத்தில் இது எதற்கு?" என்பார். சட்டையில் பொத்தான் அறுந்துவிட்டதா? உடனே வேறு பொத்தானை தேடி ஓடமாட்டார். அதைச் சரிசெய்ய அவருக்கு ஒரு ஊசியே போதும்.

இதெல்லாம் மேரிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. இவையெல்லாம் மேரியைப் பொறுத்தவரை அநாகரிகமான விடயங்கள். "பொத்தான் அறுந்தால் வேறு பொத்தானைத் தைக்க வேண்டியது தானே. யாராவது உங்களை மாதிரி இப்படி ஊசி குத்திக்கொண்டு போவார்களா.?" என்று அதட்டுவாள் மேரி.

"அவசரத்துக்கு இதுதான் கிடைச்சுது" என்று அசடு வழியச் சிரிப்பார் லிங்கன். அல்லது பதில் பேசாமல் 'உம்'மென்று இருப்பார்.

இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல. நூறு பிரச்சினைகள். தானும் மேரியும் இருவேறு துருவங்கள் என்பது லிங்கனுக்கு மெல்லப் புரிந்தது. எனவே திருமணம் செய்து கொண்டு, பிற்காலத்தில் வருந்துவதை விட மேரியிடமிருந்து விலகிவிடுவதே நல்லது என்று நினைத்தார்.

ஒருநாள் ஜோஷுவா ஸ்பீடின் முன்னால் வந்து நின்றார் லிங்கன்.

"ஸ்பீட்! எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?"என்றார்.

"என்ன செய்யவேண்டும்?" என்று ஜோஷுவா கேட்டார்.

"இந்தக் கடிதத்தை மேரி டாட்டிடம் கொடுக்க முடியுமா? "தயக்கத்துடன் ஒரு கடிதத்தைக் கொடுத்தார் லிங்கன்.

"மேரிக்குக் கடிதமா? எதுவா இருந்தாலும் நேரிலேயே அவளிடம் சொல்லியிருக்கலாமே! கடிதம் எழுதும் அளவுக்கு அப்படி என்னதான் முக்கியமான விடயம்?"

"நான் மேரியை விரும்பவில்லை. அவளை ஒரு போதும் திருமணம் செய்ய முடியாது என்று இதில் எழுதியிருக்கிறேன்." என்று சாதாரணமாகச் சொன்னார் லிங்கன்.

ஆபிரஹாம் சொன்னதைக் கேட்டு ஆடிப்போய்விட்டார் ஸ்பீட்.

"உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? இவ்வளவு நாள் பழகி, திருமணத்துக்கும் நாள் குறித்த பின்னர், இப்போது திடீர் என்று மேரியைப் பிடிக்கவில்லை என்று சொல்கிறீர்களே ? ஊரில் உள்ளவர்கள் எல்லாம் உங்களை எவ்வளவு தவறாக நினைப்பார்கள் என்று தெரியுமா? அதை விடுங்கள். அந்தப் பெண்ணின் மனது எவ்வளவு வேதனைப்படும் என்று தெரியுமா?"


லிங்கன் பதிலே பேசவில்லை. ஸ்பீட் சொல்வதைத் தலையைக் குனிந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார். விடாமல் பேசினார் ஸ்பீட். லிங்கன் கொடுத்த கடிதத்தை சுக்குநூறாகக் கிழித்து, லைட்டரால் கொளுத்தினார்.

"இந்த மாதிரி விடயத்தை கடிதத்தில் சொல்வது கோழைத்தனம். எதுவாக இருந்தாலும் நேரில்சென்று சொல்லுங்கள்" என்றார் ஸ்பீட்.


அதற்குத் தலையை ஆட்டினார் லிங்கன். மெதுவாக எழுந்தார். வெளியே இறங்கி நடந்தார். **(மீட்பர் வருவார்...)**


## கருத்தடை மாத்திரை உனக்கும் தான்!

ஓ.....
ஈ போல் இருந்துகொண்டு
நீயா
ஈட்டிபோல் குத்துகிறாய்?
ஏ.....
நோய் காவியே....
உனக்கு
இரக்கமென்பது
இல்லாததாலா
இதயத்தை எடுத்தான் இறைவன்.
எம்மவர்களின்



சுகமான தூக்கத்தைக்
குழப்புவதில்
உனக்கு மட்டும்
அப்படியென்ன சுகமிருக்கிறது.
கொடிய கொசுவே....
முதலில் தரப்பட வேண்டும்
உனக்குத் தான்
கருத்தடை மாத்திரை!
எதற்காகத் தெரியுமா....?
நின்ற நிலையில்





ஐந்தாறு பேரை
அடித்து விழுத்தவல்ல
சண்டியர்கள் கூட
ஈற்றில் தோற்றுப் போவது
உன்னிடம் மட்டும் தான்!
நீ ஒளிந்திருந்து
குருதிகுடித்து
சத்தமில்லாமல்
உயிர்தின்னும்
கொடிய "டெங்கு நுளம்பு"!

தேனாள் சுரேஷ்
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் உண்டானால் இடமுண்டு

தானா

பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவரும் கட்டுரைகள், பத்திகள் என்பன ஒரு சில சமயங்களில் எமது மனதைத் தொடுவனவாக அமைவதுண்டு. அவை வெளிப்படுத்தும், அவற்றின் உள்ளார்ந்த அர்த்தம் வெளிக்கொணரும் உண்மைகள் வாசகர்களை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் தன்மை கொண்டவையாகவும் அமைவதுண்டு. தனது கற்பனையில் உதித்த கருவுக்கு உருவம் கொடுத்து, அதனை வாசகர்களின் மனதில் ஊன்றிப் பதிய வைப்பதன் மூலம் வாசகர்களது செயற்பாடுகளிலும் நன்னோக்குச் சிந்தனையை ஏற்படுத்தி வைப்பதில் வெற்றி காணும் எழுத்தாளன், மற்றவர்களது மதிப்புக்கு உள்ளாகின்றான். ஒரு வகையில் சமூகத்து அநீதிகளை, அநியாயங்களை அச் சமூகங்களே உணரவைப்பதன் மூலம் எழுத்தாளன் சமூகத்துக்கு வழிகாட்டி ஆகின்றான்.

கட்டுரைகள், பத்திகள், சிறுகதைகள், நாவல்கள் என்ற இன்னோரன்ன ஆக்கங்களும் இந்த வகைக்குள் அடங்குபவையே. சமுதாய நலநோக்குக் கொண்டமைந்தால் அவை நிச்சயமாக வாசிப்போரின் மனங்களை ஈர்த்து, அவர்களைச் சிந்திக்க வைக்கும் என்பது நிச்சயமானதே.

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக, பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளும் கூட சில வேளைகளில் வாசகர்களின் மனதில் உடனடித் தாக்கமொன்றை ஏற்படுத்தி விடுவதுண்டு.

அந்த வகையில் கடந்த சில நாள்களுள் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த இரு செய்திகளை வாசிக்க நேர்ந்த வேளை, மனதில் தலைதூக்கிய ஒன்றுக்கொன்று வேறுபாடான மன உணர்வுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைவதன் வெளிப்பாடே இந்தப் பத்தி.

''மனிதத்துவத்துக்கு இன, மத, குல பேதம் எதுவும் கிடையாது. மனிதாபிமானச் செயற்பாட்டினூடாக மனிதத்துவம் வெளிக்காட்டப்படுகிறது. உலகில் பிறக்கும் எவரும் இம் மனிதத்துவத்தின் நிழலில் இவ்வுலகில் வாழ்கின்றனர். அந்த நிழல் நானாவித வரலாற்றுடன் எம் கண் முன்னால் செயற்படுகிறது. ஒரு சமயம் கல்விஅறிவூட்டும் ஆசிரியராய், ஒரு சமயம் நோய் தீர்க்கும் வைத்தியராய், பிறிதொரு சமயம் உலக நடப்பை வெளிக்கொணரும் ஊடகவியலாளனாய், இன்னும் பல முகங்கள் காட்டிச் செயற்படுகிறது இந்த மனிதத்துவம். இறைவனால் இத்தகைய நிழல்கள் உலகுக்கு அனுப்பப்படுகின்றன. அவை அங்குமிங்கும் அவதரித்து, வாழ்ந்து, உலகுக்குச் சேவையாற்றுகின்றன.

அத்தகைய சற்புருஷரொருவரே அண்மையில் நாம் சந்தித்த வைத்தியக் கலாநிதி ரவீந்திரகுமார் சுதர்ஸன் என்ற பிரமுகர். யாழ் வாசித்துப் பரிசு பெற்ற பாணர் ஒருவரின் பெயரால் சுட்டப்படும் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவர். வைத்தியராக ஆக வேண்டும் என்ற கனவுடன்



'மல்ரிபரல்' வேட்டுச் சத்தத்தின் மத்தியில், அமைதியற்ற சூழலில் கல்விகற்று, தமது கல்வித் திறமையால் யாழ். மருத்துவ பீடத்தில் கற்றுத் தேறி, ஒரு வைத்தியராகப் பட்டம் பெற்றும், வசதிவாய்ப்புக்களை நாடாது பின்தங்கிய பகுதியில் வாழும் சாதாரண ஏழை மக்களுக்காகச் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்குடன் ஹட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையைத் தேர்ந்தெடுத்து வைத்தியத் தொழிலாற்றி வந்தவர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதியன்று திருகோணமலையில் இருந்து ஹற்றன் நகர் நோக்கித் தமது காரில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, எதிர்பாராத விதமாகத் தமது காரின் முன்னால், சாலையில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் வண்டியொன்று மலைப்பாதையில் இருந்து பாதையை விட்டு விலகி, பெரும் பள்ளத்தில் விபத்துக்குள்ளானதை அந்த வைத்தியர் நேரில் கண்ணுற்றார்.

விபத்துக்கு உள்ளான பஸ்ஸில் இருந்த பயணிகள் பலர் படுகாயமுற்று உதவிக்காகக் கூக்குரல் எழுப்பிய நிலையில், தமது காரைப் பாதையோரத்தில் நிறுத்திவிட்டு உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து மற்றவர்களது உதவியுடன் காயமுற்றவர்களை மீட்டதுடன், தாம் கடமையாற்றும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து உடனடியாக அம்புலன்ஸ் வண்டி ஒன்றைத் தருவித்து படுகாயமுற்றவர்களை அவ் வண்டி மூலமும், சிறு காயங்களுக்கு உள்ளானோரை முச்சக்கர வண்டிகள் மூலமும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததோடு, எஞ்சிய காயக்காரர்களை தமது காரில் ஏற்றி வைத்தியசாலைக்கு இட்டுச் சென்றுள்ளார் வைத்தியர் சுதர்ஸன்.

தமக்கென்ன வந்தது என்று விபத்தைக் கண்டும் தம்பாட்டில் தமது பயணத்தை அவர் தொடர்ந்து மேற்கொண்டிருக்கலாம். தமது காரால் மோதுண்டு காயமுற்ற ஒரு பாதசாரியையே வைத்தியசாலைக்கு இட்டுச்சென்று அனுமதிக்காமல், பாதையிலேயே கைவிட்டு ஓடித் தப்பிக்கொள்ளும் எத்தனையோ வாகனச் சாரதிகள் இருக்கும் இந்த நாட்டில், தாமொரு வைத்தியர் என்ற பொறுப்புணர்வுடன் தாமாக விரைந்து செயற்பட்டு விபத்தில் சிக்கிக்கொண்டோருக்கு உதவிய வைத்தியர் சுதர்ஸனது முன்மாதிரி, வைத்திய சாஸ்திரத்தின் பிதா எனக் கொள்ளப்படும் கிப்போகிறெட்டெஸ்ஸின் அர்ப்பணிப்பு உணர்வை வெளிப்படுத்துமொன்றாகக் கொள்ளத் தக்கது.''

மேற்குறித்த செய்தி தமிழ் பத்திரிகைகளில் ஏற்கனவே சிறு செய்தியொன்றாக வெளிவந்திருந்த போதிலும், மேற்கண்ட விதத்தில் வைத்தியர் சுதர்ஸனின் இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வுமிக்க சேவை குறித்து விஸ்தாரமாக விவரித்துப் புகழாரம் சூட்டியுள்ளது தலைநகரில் இருந்து வெளியாகும் பிரபல சிங்களப் பத்திரிகையொன்று. அந்த வகையில் நோக்கும்போது, அரசியல் புலத்துக்கு அப்பால், சமூக ரீதியில் தன்னலமற்ற பொதுநலநோக்குடனான சேவை, அதனை எந்த இனத்தவர், எந்த மதத்தவர் ஆற்றினாலும் அது அனைத்துத் தரப்புகளது பாராட்டுக்கும், கௌரவத்துக்கும் உள்ளாகும் என்பதை என் மனது நிலைநிறுத்திக்கொண்டது.

அதே சமயம், மறுபுறத்தில் கடந்த வார பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியொன்று, மனதில் ஏற்படுத்திவைத்த, இன்னமும் மனதைவிட்டு அகலாது மனதை அலைபாய வைப்பதை வாசர்களுடன் பகிர்ந்து கொண்டாலாவது மனப்பாரம் சற்று ஆறும் என எண்ண வைக்கிறது.

★ 83 வயதான முதியவரான தமது கணவரை அழைத்துக்கொண்டு 75 வயதான மூதாட்டியான அப் பெண்மணி கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு வருகிறார்.

★ ஆறு பிள்ளைகள் இருந்தும் வயதான எங்களை வைத்துப் பராமரிக்க எவரும் இல்லாததால், உணவுக்கும் உறையுளுக்கும் கஷ்டப்படுகிறோம். எமது பிள்ளைகள் எம்மைக் கைவிட்டபடியால் எங்களை இந்த முதியோர் இல்லத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று வேண்டி நிற்கின்றனர் அந்த வயதான தம்பதியர்.

★ இல்ல உத்தியோகத்தர்கள் சட்ட திட்ட ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்து அந்த முதியவரை இல்லத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

★ தனது கணவர் முதியோர் இல்லத்தில் நலமாக இருந்தால் அதுவே தமக்குப் போதும் எனக் கூறி, தாம் எங்காவது ஒருவாறு காலம் தள்ளிக் கொள்வதாகக் கூறி விடை பெற்றுச் செல்கிறார் அந்த மூதாட்டி

ஈழத் தமிழினம் பண்பாட்டுச் சிறப்பியல்புகளை இன்றுவரை பற்றுக்கோட்டுடன் கடைக்கொண்டு ஒழுகிவரும் தனித்துவம் கொண்டதெனப் பெருமை பேசிக் கொள்கிறோம். அதிலும் யாழ்ப்பாணத்தவர்கள் தமிழ்ப் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளுக்கு மதிப்பளித்து வாழ்வதாகப் பெருமை பாராட்டிக்கொள்கிறோம். போரின் பாதிப்பால் அநாதரவாகிப் போனோருக்கு கைகொடுத்து உதவ மனம் கொள்ளுமாறு எம்மவர்களைக் கோரி நிற்கிறோம். ஆனால் இந்த மண்ணில் தாம் பெற்றுவளர்த்த பிள்ளைகளின் புறக்கணிப்புக்கு உள்ளாகி அநாதரவான நிலையில் அல்லல்படும் இந்த முதிய தம்பதியர் போன்று, இன்னமும் எத்தனையோ நம்மவர்கள் வாழ்க்கைச் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கிறார்களே என்பதை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்கிறோமா? எமது சமுதாயத்தில் இதுபோன்ற அவலங்களுக்குள்ளாகி வருந்தும் எம்மவர்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? தனி ஒருவராலோ, ஒரு சிலராலோ இத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்க இயலாது என்பது உண்மையே. ஆனால் சமூகப் பொறுப்புணர்வோடு நாம் ஒவ்வொருவரும் இது குறித்துச் சிந்தித்துச் செயலாற்ற முன் வந்தால், ஒன்றிணைந்து செயற்பட்டால் இத்தகைய சவால்களுக்கு உரிய பரிகாரம் காண்பதொன்றும் இயலாத காரியம் அல்லவே? மனம் கொள்வோமா? ★



## என்னருகில் வருவாய்

என்னை வயிற்றில்
சுமந்த தாய்
என்னருகில்...

என்னை
இதயத்தில்
சுமக்கும் - நீ
எப்போது
வருவாய்
என்னருகில்...?




## எதிர்ப்பு

கறுப்பு
நிறத்தை
காட்டினால்
எதிர்ப்பு - என்று
பொருள்;
அதனால் தான்
என் முகத்தை
பார்த்து
நீ - எதிர்ப்பு
காட்டுகிறாயோ!

சிந்து சிவதாஸ்
சதுமலை தெற்கு, மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ.கஜநந்தி

# யாழ்ப்பாணத்து வட்டிகள்



சிறு கதை

> “ பணக்கொடுக்கல் வாங்கல் செய்யும்போது மட்டும் கட்டிய மனைவியும் கைக்குழந்தையும் யாருக் குமே தெரியாது. வட்டியில் குறையும்போதுதான் மனைவி என்றொருத்தி அந்த மந்தைக்கும் இருப்பதாக பல மனிதர்களுக்குத் தெரியவரும்.

காமாட்சிக்கு கண்ணீர் சூடாய் இறங்கியது கன்னத்தில். “சீ...சீ... ஒரே இதையே யோசிச்சு என்ன செய்யிறது” என்றபடி சிந்திய மூக்கு நீரைத் துடைத்தபடி எழுந்த காமாட்சி வேலையில் ஈடுபடத் தொடங்கியபோதும், மனம் ஏனோ செக்கு மாட்டைப் போலத் தன்னுடைய வாழ்க் கையை நோக்கியே சுற்றிக் கொண்டிருந்தது.

கடந்த சில மாதங்களாக தான் கடந்து வந்த கசப்பான நினைவுகளே அவள் கண்ணில் தாண்டவமாடின. களிப்புடன் ரி.வி. பார்க்கவும் இப்போது முடிவதில்லை. கதிரையில் வந்து சோர்வுடன் அமர்ந்தாள்.

ஒற்றுமையாக வாழ வேண்டிய குடும்ப வாழ்க்கையில் ஒளிவு மறைவு இன்றி எதையுமே கூறாது கட்டிய மனைவியைவிட கடுமையான வட்டிக்குக் கடன் கொடுத்தவனே கடவுள் என்று நம்பியதால் இன்று காடுமேடென்று அலையும் வாழ்க்கையைத் தேடிய தன் கண வனை எண்ணு கையில் எரிச்சல்தான் வந்தது.

முதலுக்கு மேலால் வட்டியால் முத லைகளுக்குத் தீனிபோட்டுவிட்டு இன்று தன்னையும் மூளி அலங்காரி, மூதேவி மாதிரி ஆக்கிவிட்டுச் சென்றானே முட்டாள். வனாந்தர வாழ்க்கையைத் தேடவா ஒவ்வொரு வங்கியும் கடனை வழங்கியது? கண்ணை மூடிக் கொண்டு வங்கிகள் வழங்கிய கடனையும் வட்டி கொடுத்தே வாழ்வை இழந்த வடிகட்டின முட் டாள். ஏமாளி என எரிச்சலுடன் தன்னைக் கட்டி யவனை நொந்தபடி கண்ணீர் வடிந்த தன் கண் களை மூடியபடி கதிரையில் தலையைச் சாய்த்தாள் காமாட்சி.

காற்றுடன் கலந்து வந்த வில்லூன்றி முருகனின் கடைசித் திருவிழாவில் கலக்கும் தென்னிந்திய இசைவித்துவான்களின் தவில்கள், நாதஸ்வரங்களில் இருந்து எழுந்த இன்னிசை நாதம் கடற்கரைக் காற்றுடன் வந்து காமாட்சியின் காதில் மோதின. இனிமையான நாதம். இன்று ஏனோ ஈயத்தைக் காய்ச்சி காமாட்சியின் காதில் ஊற்றியது போன்று இருந்தது. ஒவ்வொரு தவில் ஒலியும் இடியாய் காமாட்சியின் மனதில் இறங் கியது.

தென்னிந்திய கலைஞர்களின் நாதஸ்வர இசையை இரசிக்கத் தெரியாத கல் நெஞ்சக்காரியல்ல காமாட்சி. அல்லாதுவிடின் காற்றுடன் கலந்து வந்த கந்தனின் பூந் தண்டிகையில் இருந்த பூக்களின் வாசனையை முகரத் தெரியாத வெறும் ஜடமுமல்ல அவள்.

இன்று அரிசி, சீனி வியாபாரத்தைவிட வட்டி என்ற கொடிய பிசாசினால் மனித உயிர்கள் விலைபோகின்ற யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற பல மனிதர்களுள் அவளும் ஒருத்தி. ஏ-9 பாதையி னூடு வந்த எண்ணுக்கணக்கற்ற வங்கிகளும் வாழ்க்கையை எப்படி மாற்றின என்பதற்கு இவளும் ஒரு உதாரணமோ தெரியவில்லை. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக் கியமே என்ற பாடலடிகள் இப்போது அவள் மனதில் ஏனோ எட்டிப் பார்த்தன. எதையும் எண்ணி ஆராயாவிட்டால் எல்லாம் சங்கடம் தான் என்ற ஏக்கப் பெருமூச்சு எட்டிப்பார்த்தது.

யாழ்ப்பாணத்தின் இலகுவான தொழிலாக இன்று முன்னிற்பது வட்டித்தொழில் தானே. நாள் வட்டி, மீற்றர் வட்டி, சுந்துவட்டி, குடும் பத்துக்கு தெரியாத வட்டி, கூடுதல் வட்டி, குடும்பங்களின் உயிரை எடுக்கும் வட்டி. அப்பப்பா எவ்வளவு வகைவகையான பெயர்கள். இயமனின் வேலையை இலகுவாக்குவதை மட்டும் நோக்காகக் கொண்ட பெயர்கள்.

வட்டியில் மட்டுமா பலவகைகள்? பல வகை வட்டிக்கு கொடுத்தோரும் அப்படித்தானே. ஓய்வுபெற்ற அதிபர், ஒருநாளும் சுவாமிக்கு பூப்போடத் தவறாத பக்தி மான்கள், புனித பைபிளைக் கையிலெடுத்த புண்ணியர்கள். கோயில்கட்டுவோர், கும்பாபிஷேகம் செய்வோர், வானிலிருந்தும் வகையாக பூத்தூவுவோர், பல குடும்பப் பெண்களின் கூந்தல் பூக்களைப் பிய்த்து எறிந்துவிட்டு இறைவனுக்குப் பூந்தண்டிகை கட்டு வோர். அப்பப்பா இன்னும் எத்தனை எத்தனை வகை மாதிரிகள். அகராதியிலும் பொருள் இல்லை.

வட்டிக்கு கொடுத்தோர் பல வகை மாதிரி. ஆனால் குணம் யாவும் ஒரே மாதிரி. அதுதான் பணக்கொடுக்கல் வாங்கல் செய்யும்போது மட்டும் கட்டிய மனைவியும் கைக்குழந்தையும் யாருக் குமே தெரியாது. வட்டியில் குறையும்போதுதான் மனைவி என்றொருத்தி இருப்பதாக பல மனிதர்களுக்குத் தெரியவரும். ‘பிறகென்ன குடும்பத்துக்குள் தினம் கரைச்சல் கொடுத்ததே, அவையின்ர குருதி வற்று மட்டும் கோட்டுக்கு இழுத்தெண்டாலுமோ, காசைப் பிடுங் குவதுதானே’. அழுகை அழுகையாக வந்த காமாட்சி தன்னை ஆசுவாசப்படுத்த முனையும் முயற்சியில் தோற்றுப்போய் பெருமூச்சு விட்டபடி கதிரையில் இருந்து எழமுயன்ற வேளை, பார்வதியின் மகன் பாலனின் குரல் தடுத்தது.

“காமாட்சி அக்கா! இந்தாங்க எங்கட முருகன் கோயில் பூந்தண்டிகையில பிடுங்கின பூ... சாமி உள்ளுக்கை போகேக்க எல்லாரும் விழுந்தடிச்சுப் பிடுங்கிப் போட்டாங்கள். கடைசியா இந்தப் பூ மட்டும்தான் மிஞ்சினது. பூ பிஞ்சாலும் பர வாயில்லையெண்டு இழுத்துப் பறிச்சுப் பிடுங்கிப் போட்டன்” என்று கூறியபடி ஈர்க்கில் கோர்க் கப்பட்ட பூவைக் கொடுத்தான். அதில் பிய்த்து இதழ் கறுத்து தலையைக் கவிழ்த்தது போன்று இருந்த தேமாப்பூவை பார்த்த காமாட்சிக்கு கடைவாயில் சிரிப்புத்தான் வந்தது.

பெடியன் கடைசியா பிடுங்கின பூ எண் டாலும் பரவாயில்லை என்ற வரிகள் காமாட்சி யின் மனதில் தன்நிலையை உணர்த்தியது. வட்டியும் முதலும் எண்டு முதலுக்கு மேலால் வட்டியக் கொடுத்து இன்று மூச்சே விட முடி யாது மூழ்கிப் போனவனிடம் சென்று இனிப் பிரயோசனமில்லை. கையில் ஒரு தொழிலெண் டாலும் அவனின்ரை பெண்சாதியிட்ட இருக்கு. இனி என்ன பரிசிகெடுத்தாவது பணத்தைப் பிடுங்க வெளிக்கிடுவம்’ என்று கிளப்பிய சில பிரகிருதிகளை நினைத்தாள் காமாட்சி.

கால் வயிற்றுக்கு கஞ்சி ஊற்றுகின்ற தொழி லில் கால்பங்கை வேண்டியெண்டாலும் குறையும் கோடியை நிரப்ப மற்றவர்களை மனதுக்குள் ளேயே திட்டினாள் காமாட்சி.

குனிந்து நிமிர்ந்து பாடுபடாத தொழிலான வட்டித் தொழிலுக்கு இன்று எத்தனை குடும்பங்கள் பலியாகிவிட்டன. ஒவ்வொரு ஏழைகளின் குடும்ப வாழ்க்கைகளே சில ஆதாமிகளின் அரையடி வீட்டையும் அடுக்கு மாடிகளாக்கி விட்டன. வாழவேண்டிய இளமையான வாழ்க்கைகளை கயிற்றிலே பலியிட்டுவிட்டு பல செல்வந்தர்களின் வாயிற் படியிலிடப்பட்ட விலை கூடிய கால் துடைப்பங்களாகின சிலரின் வாழ்க்கைகள்.

“நானும் பல மைல்களுக்குச் சென்று பணியாற்றிப் பாடுபட்ட பணம் யாவும் நான் பாடையிலே போகமுன்பே பலருக்கு என்ரை உத்தம புருஷன் வாய்க்கரிசி போட்டு விட்டானே” என வயிறெரிந்தாள் காமாட்சி.

வாழ வேண்டிய வயதில் வட்டியின் பெயராலே பலர் இளமையை, இல்லற சுகத்தை, இனிமையான குடும்ப வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு வாழ வழியற்று அலைகிறது வாழத் தெரியாத சில மனித இனம்.

கடவுள் கூட இப்போ காசுக்காய் மாறி விட்டாரே. பலரின் வயிறு பட்டி னியால் கொதிக்கிறது. பலரின் தொந்தி பணத்தால் பெருக்கிறது என்று சிறு கவிதையை ஆக்க முயன்றாள் காமாட்சி.

“ என்ன காமாட்சி கோயில்ல திருவிழா ஒண்டுக்குமே உன்ர தலைக்கறுப்பைக்காணேல்லை” என்றபடி விடுப்புக்காய் வந்தாள் வேதவல்லி.

“என்ன செய்ய எல்லாத்தையும் யோசிச்சு கடவுளக் கையெடுக்கவும் மனம் ஏவுதுமில்லை. என்ரை வயிறெல்லே பத்தி எரியுது”, என்றாள் காமாட்சி.

“நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை. இப்ப கொஞ்சக் காலத்துக்கு அநியாயத்துக்கு காலம் வேலை செய்யும்”

“மெய்யே பிள்ளை முதலுக்கு மேலால வட்டி போனாப் பிறகும் உன்னையும் தரச் சொல்லி நிக்கினமாமே. கோட்டில கேஸ்போடப் போயினம் எண்டு எங்கட சங்கக் கடையில அந்தப் பெரியவர் சொல்லிக் கொண்டு நிண்டாரே”

“நீயென்னெண்டு குடுக்கப் போற? இந்த வாத் தித் தொழிலில் அப்படியென்ன கனக்கவே வருகுது. அதுவும் நீ லோனை எடுத்து வங் கிக்கு கடன் கட்டிறியாமே ஏன் இவையின்ரை கோடியில சொச்சக் காசேதும் குறையுதே!!”

“அக்கா, படைச்சவன் படியளப்பான் தானே. ஒவ்வொருவரும் விதைக்கிறதை தானே அறுக்க வேணும். தான் தான் தேடுற பணமும் பழியும் பிற்சந்ததிக்குத்தானே. ஏதோ நடக்கிறதைப் பார்ப்பம்.

“நீதி இன்னும் சாகேல்லை. நீ நம்பிக்கையா இரு பிள்ளை”

“ஓமக்கா நீதி நீதியாகவே இருக்கும் எண்ட நம்பிக்கையிலதான் எந்தக் கோட்டோ, கச்சேரியோ ஏறித்தானே பார்ப்பம்” என்றபடி தலைநிமிர்ந்தாள் காமாட்சி. அவளுக்குள் இன்னும் வாழ்வின் மீதான நம்பிக்கை வற்றவில்லை. உழைப்பின் மீது நம்பிக்கை அதிகரித்தது. வட்டிச் சுமை விரைவில் பறந்து போகும் என்ற எண்ணம் பரவ மனம் அமைதியானது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே

ம.தேனுஜன், தரம்-4பி,
யா/ புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடை தெரியுமா? 184

### உங்களுக்கும் பரிசில்கள்

1. ஈழத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பாக இலக்கியம் படைத்த முன்னோடிகள் யாவர்?
2. காலை நேரத்தில் பாடப்படும் இராகம் எது?
3. இளங்கோ அடிகள் எழுதிய காப்பியத்தின் பெயர் என்ன?
4. இலங்கையில் அச்சுக்கலை எப்போது ஆரம்பமானது?
5. ஈராக்கின் தலை நகரம் எது?

### விடைகள் 181

1. நோர்வே
2. கல்லடி ச.வேலுப்பிள்ளை
3. A,B,AB,O
4. கோலாலம்பூர்
5. நாகமரம்


### வெற்றி பெற்றோர் விவரம் (182)

* கு.மாதங்கி, தரம் -4ஏ, யா/ இணுவில் இந்துக் கல்லூரி
* ப.ஆரணி, யா/ நெல்லியடி மே.மி.த.க.பாடசாலை.
* சூ.பிரியதக்ஷி, தரம் -8சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
* சி.சௌமியா, தரம் -5, மு/குமுளமுனை ம.வி.
* தி.சுஜீவன், தரம் -7பி, ஹாட்லிக் கல்லூரி.
* கி.கிரிதர்ஷன், தரம்-6ஏ, யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.


சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் ''சிறுவர்கதிர்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 10 .11.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.




அ.சுபானா, தரம்-2,
மன்/ பெரியபண்டிவிரிச்சான் ம.வி.



செ.ஜோதிகா, தரம்-7,
யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்



ம.மதுநி, தரம்-9சி,
யா/ இந்து மகளிர் கல்லூரி



தெ.கேஷினி, தரம்-10,
யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்



ச.தக்ஷிகன், தரம்-7பி,
யா/ கொக்குவில் இந்து கல்லூரி




டெல்லி மாநகரத்திலிருந்து ஒரு மஜிக் வித்தைக்காரன் விஜய நகரத்துக்கு வந்திருந்தான். அவன் மஜிக் செய்வதில் வல்லவன். அவன் அரண்மனையில் மன்னர் கிருஷ்ண தேவராயர் முன்னிலையில் கல்லைப் பொன்னாக்கினான். மண்ணைச் சர்க்கரை ஆக்கினான். மேலும் வெறும் தாளை ரூபாய் நோட்டுக்கள் ஆக்கினான். மேலும் அவன் தலையையே வெட்டி அவன் கைகளில் ஏந்தினான். இந்த நிகழ்ச்சியைப் பார்த்த மன்னர் மகிழ்ந்தார்.

அப்போது மன்னரிடத்தில் ''என்னை வெல்ல உங்கள் நாட்டில் யாரேனும் உண்டா .......'' என்று சவால் விட்டான். இது மன்னருக்கு பெருத்த வேதனை அளித்தது.

அறிஞர் பெருமக்கள் பலரையும் அழைத்து ''டெல்லி மஜிக் வித்தைக்காரனை உங்களில் யாரேனும் வெல்ல முடியுமா? அப்படி வென்றவருக்கு 1000 பொன்பரிசு'' என்றான் மன்னர். ''என்னால் அந்த மஜிக் வித்தைக்காரனை வெல்ல முடியும்'' என்றான் தெனாலிராமன். அதைக் கேட்ட மன்னர் மகிழ்ந்தார். மறுநாள் போட்டியைப் பார்க்க அரண்மனையில் கூட்டம் கூடிவிட்டது.

போட்டி ஆரம்பம் ஆகியது. மஜிக் வித்தைக்காரனைப் பார்த்து தெனாலிராமன் ''நான் கண்ணை மூடிக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்வேன். அதே காரியத்தைக் கண்ணைத் திறந்து கொண்டு உன்னால் செய்ய இயலுமா?'' என்றான் தெனாலிராமன்

''இது என்ன பிரமாதம். நீ கண்ணை மூடிக்கொண்டு செய்யும் காரியத்தைக் கண்ணைத் திறந்துக்கொண்டே என்னால் செய்ய இயலும்'' என்றான் மஜிக் வித்தைக்காரன் போட்டியை ஆரம்பி என்றான் மஜிக் வித்தைக்காரன். உடனே தான் தயாராக வைத்திருந்த மிளகாய்ப்பொடியை எடுத்துக் கண்ணை மூடிக்கொண்டு கண்மேல் வைத்தான். ''இதே வித்தையைத்தான் நான் உன்னைக் கண்ணை திறந்து கொண்டு செய்யச் சொன்னேன். செய் பார்க்கலாம்'' என்றான். தன்னால் இயலாது என்றுணர்ந்த மஜிக் வித்தைக்காரன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான். மன்னர் தெனாலிராமனின் தந்திரத்தைப் பாராட்டி ஆயிரம் பொன் பரிசளித்தார்.

## தூங்கும் பறவை



விசித்திரமான பறவை இனம் மேற்கு மற்றும் மத்திய வட அமெரிக்க காடுகளில் காணப்படும். இது இரவில் பறக்கும் பூச்சிகளை உண்டு வாழும். இந்தப் பறவை 'இப்' என்னும் சத்தத்துடன் பாடிக் கொண்டே பறக்கும். இதை அமெரிக்க பழங்குடியினர் 'தூங்கும்' பறவை என்றே அழைத்தனர்.

முதன் முதலில் இந்தப் பறவையை தூங்கிய நிலையில் கண்டபோது இறந்துவிட்டதாக விஞ்ஞானிகள் நினைத்தனர். காரணம் மூடிய நிலையில் உடம்பு சில்லிட்டிருந்தது. பறவையை தொட்டவுடனேயே பறந்து விட்டது. அப்போது இந்தப் பறவையினங்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்திய பின்னர் இவை மாதக் கணக்கில் தூங்கும். இதனால் உடலில் உஷ்ணம் குறைந்து விடும். அதனால் உடம்பில் 7 கிராம் அளவு தான் கொழுப்புச் சத்து இருக்கும். இந்தக் கொழுப்பு 70 முதல் 100 நாள்கள் வரை இந்தப் பறவை உயிர் வாழ உதவி செய்கிறது. அதனால் இந்த விசித்திர பறவையினம் தூங்கும் பறவை என அழைக்கப்படுகிறது.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## துயரம் விரட்டிடுவேன்

காலையிலே கண் விழிப்பேன்
கடமைகள் பலவும் செய்திடுவேன்
சோலை மலர் போல் சிரித்திடுவேன்
சுறு சுறுப்பாக உலாவிடுவேன்

வேளைக்கே நான் பள்ளி செல்வேன்
விவேகத்துடன் கற்றிடுவேன்
நாளை உலகை நலமாக்கும்
நலமாம் பணிகள் செய்திடுவேன்

கற்றோன் என்ற பட்டத்தைக்
காவித் திரிதல் விட்டிடுவேன்
சுற்றம் வாழக் கற்றது போல்
சூழும் துயரம் விரட்டிடுவேன்

எஸ்.அபிஷா,
சோலை, பல்லவராயன்கட்டு.

## அறிந்து கொள்ளுங்கள்

பசுமைப் புரட்சி - விவசாய உற்பத்திப் பெருக்கம்
வெண்மைப் புரட்சி - பால் உற்பத்திப் பெருக்கம்
மண்ணிற புரட்சி - மரபுசாரா எரிபொருள் பெருக்கம்
மஞ்சள் புரட்சி - எண்ணெய் உற்பத்திப் பெருக்கம்
நீலப் புரட்சி - மீன் கடல் உயிர் உற்பத்திப் பெருக்கம்
ஒரேஞ் புத்தகம் - நெதர்லாந்து அரச அறிக்கைகள்
வெள்ளைப் புத்தகம் - போர்த்துக்கல், சீன அரச அறிக்கைகள்
நீலப் புத்தகம் - பிரிட்டிஷ் அரச அறிக்கைகள்
கிரேக்க புத்தகம் - ஜப்பானிய பெல்ஜிய அரச அறிக்கைகள்
பச்சைப் புத்தகம் - இத்தாலிய ஈரானிய அரச அறிக்கைகள்
மஞ்சள் புத்தகம் - பிரான்ஸ் அரச அறிக்கைகள்

பா.லக்ஷிப்பிரியா,
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்படட்டும் கனவுகள்

த.அஜந்தகுமார்



> தமிழ்ப்பாடம் என்பது 'எடுப்பார் கைப்பிள்ளை' நிலைக்கு வந்துவிட்டது. யாரும் தமிழைப் படிப்பிக்கலாம் என்ற நிலையை கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்குப் பரிந்துரைத்து இருக்கின்றது போலத் தெரிகிறது.

"இன்று தமிழ்ப்பாடம் சார்ந்த உயர்தரக்கல்வியானது இரசனை முறையில் இருந்து முற்றாக விலகி ஓடிவிடும் அபாயச் சூழலில் அந்தரித்து நிற்கின்றது. மாணவர்கள் பரீட்சை நோக்கத்துக்காக தயார்படுத்திக் கொள்ளுகின்ற சூத்திரப்பாவைகளாய் 'மனன இயந்திரங்களாய்' இயங்குகின்றார்கள். பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம் என்று தமிழ்ப்பாடம் மாறி மாறிக் கற்பிக்கப்பட்டாலும் தமிழ் ஆற்றலுள்ள மாணவர்களைக் கண்டடைவது அரிதாகவே உள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களையே பெரும்பாலும் மாணவர்கள் நம்பி இருக்கும் சூழல் இருப்பதால் பெரும்பாலான பாடசாலைகளில் 'சமாளிக்கும் கடமைகளே' நிறைவேறி வருகின்றன. ஆனால் பாடசாலைகளிலேதான் தமிழ்ப்பாடம் சார்ந்த இரசனைமுறையை ஆர்வத்தை வளர்ப்பதற்கான சந்தர்ப்பம் அதிகம் எனலாம். எனக்கு க.பொ.த உயர்தர தமிழ் வகுப்பு முதல்நாள் தொடங்கியபோது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அப்போது கற்பித்த குப்பிழான் ஐ. சண்முகன் ரஞ்சகுமாரின் கோசலை சிறுகதையை வாசித்துக் காட்டினார். அடுத்த வகுப்பில் அது தொடர்பான எமது கருத்துக்களை 'ஒப்படை' யாக எழுதி வரச் சொன்னார். இது நல்லதொரு முறையெனலாம்.

பாடத்திட்டத்தில் உள்ளவற்றை 'திணிக்கும்' மனனமாக்கவைக்கும் சூழலில் இருந்து சற்றேனும் மாணவர்களை விடுவித்து சிறுகதையை, கவிதையை செய்யுளை தானே விளங்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும். 'ஒருவனுக்கு மீன் சாப்பாட்டைக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே மேலானது' என்ற சீனப்பழமொழியின் உள்ளார்த்தத்தை தமிழாசிரியர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தனியார்கல்வி நிறுவனங்களில் படித்து விட்டோம் என்று மாணவர்கள் சொல்லி விட்டால் போதும்' சில ஆசிரியர்கள் மகிழ்ச்சியோடு அப்பாடத்தைக் கடந்து செல்கிறார்கள். அல்லது பாடலையும் பொருளையும் 'வாசித்துச்' செல்கிறார்கள்.

ஒரு பாடலை, கவிதையை, சிறுகதையை ஒரு நோக்கிலேதான் கற்பிக்க முடியுமா? முடிந்த அர்த்தம் இலக்கியங்களின் இயல்பா? அப்படியென்றல் திருக்குறளுக்கோ அல்லது சங்க இலக்கியங்களுக்கோ ஓர் உரையாசிரியர் எழுதிய உரை போதுமென்று நினைத்திருக்கலாமே? உரையாசிரியர்கள் ஆழ்ந்தும் ஆய்ந்தும் பல விடயங்களை பொருள்களை அதில் இருந்து கண்டடைந்தார்கள் அல்லவா? அப்படியான

முறையில் மாணவர்களையும் சிந்திக்கத் தூண்டும் கற்பித்தலை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்ப்பாடம் என்பது 'எடுப்பார் கைப்பிள்ளை' நிலைக்கு வந்துவிட்டது. யாரும் தமிழைப் படிப்பிக்கலாம் என்ற நிலையை கல்வித் திணைக்களங்கம் பாடசாலைகளுக்குப் பரிந்துரைத்து இருக்கின்றது போலத் தெரிகிறது. சிறு வகுப்புகளுக்கு தமிழை - தொடர்பில்லாத துறையினர் படிப்பிக்கின்ற போது புத்தகங்களை வாசித்து - யாரோ எழுதிய பயிற்சிப் புத்தக விடையைக் கொடுப்பதோடு 'பாடம் முடிந்து விடுகிறதாம். இந்தச் செயற்பாடுகள் 'குரங்கின் கைப்பூமாலையாய்' தமிழ் இரசனை அழிவுக்குத் தூபமிடுகின்றன.

### ஒரு சோம்பேறியின் பக்கம்

மாணவர்கள் பரீட்சையில் ஒரு சங்கப் பாடலைக் கொடுத்து 'சொந்த மொழியில் பொருள் எழுதுக' என்றல் ஆசிரியர் கொடுத்ததை அப்படியே எழுதும் சூழலே உள்ளது. பாடலின் முதல்வரியைக் கண்டதுமே பாட்டின் பொருளை எழுதி முடித்து விடுகின்றார்கள். பாடலின் இடையில் இருந்து பொருளைக் கேட்டால் தடுமாறி விடுகின்றார்கள். 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லும்' செயற்பாட்டிற்கு ஆசிரியர்கள் மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அரும்பதங்கள், கொண்டு கூட்டல் முறைகளை, தனது கருத்துக்களை சொல்லிக் கொடுத்து விட்டு மாணவனை தானே எழுதிப் பார்க்கவிடவேண்டும்.

பாடத்திட்டத்தில் இல்லாத ஒரு புதிய பாடலைக் கொடுக்கின்ற போது மாணவன் விளங்கிக் கொள்கின்றனா? உள்வாங்கிக் கொள்கின்றனா? தனது கருத்தை வெளியிடுகிறனா? என்பதை அவதானிக்கவேண்டும். பல கணக்குகளை செய்து பார்க்கும் மாணவன் அதில் தேறினால் புதிய கணக்கொன்றை எதிர்கொண்டு அதைச் செய்துமுடிப்பது போல் மாணவர்களும் தமிழ்ப்பாடத்தில் இரசனை சார்ந்து தேறுவதற்கு நாம் இடமளிக்க வேண்டும்.

மொழி சார்ந்த பாடத்தின் தேய்வுகளுக்கு நாமே துணைபோகக்கூடாது. மொழியாசிரியர்கள் கற்பனை வளமுள்ளவர்களாகவும் - தேடலுள்ளவர்களாகவும் - ஊக்குவிப்பவர்களாகவும் இருந்து மாணவ சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும்.

இந்தக் 'கனவு மெய்ப்பட வேண்டும்'

# என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?


"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்பது ஔவையார் ஆணை. இது அரிச்சுவடி கற்கும் சிறுவர்களுக்கு மாத்திரமன்று; சிறுவர் தொடக்கம் முதியோர் வரைக்கும் பொருந்தும்.

அது போலவே, திருவள்ளுவர், ஒருவன் சாகும் வரையும் கல்லாமல் இருப்பது எப்படி.? எனக்குரல் எழுப்புகிறார்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு (குறள் 397)**

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; அவர்களுக்கு எந்த நாடும் எந்த ஊரும் சொந்தமானது; யாதும் ஊரே; யாவருங்கேளிர் என்ற மனப்பாங்கு உடையவர். அப்படியிருக்கும் போது ஒருவன் சாகும் வரை கல்லாமல் இருக்கலாமா? என்பது வள்ளுவரின் வினாவாகும்.

இதே பொருளில் வழங்கும் முதுமொழி ஒன்று "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்பதாம். இறந்தவர்களைப் பாடையில் சுமந்து சுடுகாடு செல்வது வழக்கம். ஆகவே, இறக்கும் வரை படிப்பைக் கைவிடாதே என்பதே அம்முதுமொழியின் கருத்து ஆகும்.



நமது பள்ளிக்கூடம் அல்லது பாடசாலையில் படிப்பவர்கள் மாணவர்கள். மாணவர் என்பது பிரமச்சாரி என்றும் பொருள்படும். ஆனால், கரையில்லாதது எனப் பெற்ற கல்வியை, கலைகளை, இந்த மாணவப் பருவத்தில் மாத்திரம் பெற்றுவிட இயலாது. அதனால்வாழ்நாள் முழுவதும் கற்றாலும் முற்றுப்பெறாத கல்வியை, வாழ்நாள் முழுவதுமாவது கற்க வேண்டியது அவசியமாகிறது. பலகலை அறிவு பெறுவது ஒன்றும் வீண்போகாது. ஆகவே வாழ்நாள் முழுவதும் நாம் இல்லறத்தில் இருந்தாலும் வயோதிபத்தில் இருந்தாலும் மாணவர்களாக இருக்க வேண்டும் என்பது அறிஞர் பெருமக்களது விருப்பமாகும்.




மேலைத் தேசங்களில் இந்த "வாழ்க்கை முழுவதும் கல்வி"(Life Long Learning -3L) என்ற கோட்பாடு நெடுங்காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற ஒன்றாக இருக்கிறதை நாம் அறியலாம். கீழைத்தேசங்களில் குறிப்பாக தமிழகத்தில் இந்த நிலை குறைவாக இருக்கிறது. ஆயினும் சுதந்திரம் கிடைத்த பின்னர் கொஞ்சம் முன்னேற்றம் இருப்பதை நாம் காணலாம்.

ஒரு தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான கல்வியைப் பெற்ற பின்னரும், அந்தத் துறையில் அல்லது விரும்பிய வேறுதுறையில் கல்வி பெற முயல வேண்டும். இன்றைய காலத்தில் தொழில் வாய்ப்பு பெற அயல் நாடுகளுக்குச் செல்கின்ற மக்கள், மேற்படி எமது கல்விக் கொள்கையை அனுபவத்தில் காண்கின்றனர்.

முதலில் தாம் சேர்ந்த நாட்டு மக்கள் பேசும் மொழியைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்துடன் தாம் [illegible] தொழில் மேம்பாட்டிற்கான அறிவையும் பொது அறிவையும் பெற வேண்டும்.

இந்த வகையில் மேலைத்தேயங்களில் எல்லா வகையான கலைகளையும் பெற்றுக் கொள்ள, வளர்த்துக் கொள்ளத் தேவையான கலைக்கூடங்களை உண்டாக்கி, அவற்றை வருடம் முழுவதும் நாள் தவறாமல் இயங்க வைத்திருக்கிறார்கள். அங்கு ஒருவர், தமக்கு ஒழுங்கான ஒரு கால அட்டவணையை வைத்து வாரத்தில் ஒரு நாளோ இரண்டு நாளோ சென்று கற்றுக் கொள்ள முடியும். குடும்பத்தில் உள்ள அங்கத்தவரும் சுழற்சி முறையில் அங்கு சென்று கல்வியை வளர்க்க முடியும்.

அந்த வகையில் கல்வியை வளர்த்துக் கொள்வதற்கு வயது, குடும்பநிலை, இரவு பகல் என்பன உதவியாக இருக்குமே ஒழிய தடையாக இருக்காது.

இவ்வாறு இல்லாமல், நாம் ஔவையார் சொன்ன "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்ற உபதேசத்தையும் "யாதானும் நாடாமால் ஊராமால், என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு" என்ற திருவள்ளுவர் வேத வாக்கையும் மனப்பாடம் செய்து வைத்திருக்கிறோம். அவை நமது முன்னேற்றத்துக்கு உதவும் எனக்கொண்டு அவற்றின் வழியில் வாழப்பழகிக் கொள்ளவில்லை.

ஆகவே, இனி இதற்கொரு விதிசெய்வோம்; வீண்பொழுது போக்காமல் வாழ்நாள் முழுவதும் கல்விகற்று அறிவைப் பெருக்குவோம். அறிவு வீண் போகாது. அறிவு அற்றம் காக்கும்.



மட்டுவில் நா.நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாவில் எழுந்த இடையூறு

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

இலக்கியவிழா நிகழ்ச்சிக்கு பேராசிரியர் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை தலைமை தாங்குவதற்கு ஏற்பாடு. நிகழ்ச்சி நிரலிலும் இவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தது. காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்து மக்கள் உணவருந்தப் போகக் கூட மனமில்லாமல் போனார்கள்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட நேரத்துக்கு நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்த வேண்டியவர்களும் மேடைக்கு வந்து காத்திருந்தார்கள். இலக்கிய விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டிய பேராசிரியர் சேதுப்பிள்ளை வரக் காணோம். இப்போதுபோல் அந்தக் காலத்தில் கைபேசியில்லை. தொலைபேசியே அரிதிலும் அரிது. மதிய உணவுக்கு மருதனார்மடம், இராமநாதன் கல்லூரிக்குச் சென்ற பேராசிரியர் ரா.பி. வரத் தாமதமானது. நேரடி ஒலிபரப்புக்குப் பொறுப்பாக இருந்த சோ.சிவபாதசுந்தரம் பொறுமை இழந்துவிட்டார். நேரடி ஒலிபரப்பை இப்படி வைத்துக் கொண்டிருக்க முடியாது. முதலில் பேசுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பவரை உரையாற்றச் சொல்லுங்கள் என்று வற்புறுத்தினார். இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தனிநாயகம் அடிகளார் மேடைக்கு வந்து ஒலிவாங்கியின் முன்னின்று "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று தமது கணீரென்ற குரலில் உரையாற்றத் தொடங்கினார். வெள்ளம் போல் திரண்டிருந்த தமிழர் கூட்டம் மூச்சுவிடும் சத்தம்கூடக் கேட்காதவாறு அப்படியே அவர் பேச்சில் சொக்கிப் போயிருந்தது.

அடிகளார் உரையாற்றிக் கொண்டிருந்தபோது தலைமைதாங்க வேண்டிய பேராசிரியர் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை மேடைக்கு வந்தார். அடிகளார் அவரைத் திரும்பிப் பார்க்கவும் "தொடர்ந்து பேசுங்கள் என்று பேராசிரியர் கையால் சைகை செய்துவிட்டு மேடையில் அமர்ந்து கொண்டார்.




அடிகளார் உரையாற்றி முடிந்து மேடையில் அமர்ந்ததும் பேராசிரியர் ரா.பி. எழுந்து "இது தனிநாயகம் அல்லவா, இதற்கு ஒரு சபாநாயகம் தேவையா?" என்றாரே பார்க்கலாம். அந்த மைதானமே அதிரும்படி மக்கள் கரவொலி செய்தனர். அத்துடன் சிரிப்பொலியும் எழுந்தது.

இதன்பின் சிலப்புச்செல்வர் ம.பொ.சிவஞானகிராமணியாரை பேச அழைத்த பேராசிரியர் ரா.பி. இடியும் முழக்கமும் அதிரப் போகுது" என்று அறிமுகம் செய்தார்.

ம.பொ.சி. எழுந்து ஒலிவாங்கியின் முன்னின்று "அந்தக் காலத்தில் சேதுவின் துணையால் இராமன் இலங்கைக்கு வந்தான். இப்போது நான் இந்த சேதுவின் (சேதுப்பிள்ளை) துணையோடு மேடைக்கு வந்திருக்கிறேன்" என்றார். விழாவில் கரவொலி.

மூன்று நாள் தமிழ் விழா நிகழ்ச்சிகளையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்த வெள்ளம் போல் திரண்டிருந்த தமிழர்களை பந்தலுக்குள்ளேயோ கூடாரத்துக்குள்ளேயோ கட்டுப்படுத்தி வைப்பது பெரும் பாடாகிப் போனது. நின்று பார்க்கும் மக்களை இருத்துவதற்கு எடுத்த முயற்சிகள் தோற்றுப்போயின. இதில் எங்களையும் அனுப்பிவைத்தனர். நாங்கள் பந்தலுக்குள் நுழைந்த சிறிது நேரத்தில் ஆளுக்கொரு திசையில் நின்று நிமிர்ந்து பார்த்தோம். பந்தல் கூரையைக் காணோம். வானம் தெரிந்தது.

பெரிய பாய்க் கப்பல்களை நங்கூரமிட்டபின் மொத்தக் கயிற்றினால் கரையிலுள்ள இரும்புத் தூண்களோடு அவற்ற பிணைத்துவிடுவது வழக்கம். அந்தப் பெரிய மொத்தக் கயிறுகள், விழாப் பந்தலில் ஒரு பகுதியிலிருந்து உள்ளே மக்கள் கூட்டம் நுழைந்துவிடாமல் தடுப்பதற்குக் கட்டப்பட்டிருந்த அவற்றையும் தாண்டி விழாவின் இறுதி நிகழ்ச்சியாக நடந்த இசையரசி எம்.எல்.வசந்தகுமாரியின் இசை விருந்தை ரசிக்க கூட்டம் முட்டி மோதியபோது நன்றியுரையாற்றிக் கொண்டிருந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொரியா போர் நடந்து கொண்டிருப்பதை நினைவுபடுத்தி 48 ஆவது அட்சரேகையைக் கடந்துவிட வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ் விழாவுக்கு தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரிலிருந்து வந்திருந்த கண்ணபிரான் எம்.பிள்ளை என்ற வாட்டசாட்டமான தோற்றமுடைய பிரமுகரை தமிழ் விழாவில் முதலில் வரவேற்றவன் நான் தான். அவருக்குத் தமிழ் தெரியாது. அங்குள்ள தமிழர்கள் தமிழ் தெரியாமலிருப்பதற்கான காரணத்தைச் சொல்லி, அடுத்த தமிழ் விழாவை டேர்பனில் நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்.

பின்னர் இவர்தான் மருத்துவ கலாநிதியும் பிரபல எழுத்தாளருமான லக்சுமியைத் திருமணம் செய்துகொண்டார். யாழ்ப்பாணத் தமிழ் விழாவை 'தெய்வதரிசனம்' என்ற தலைப்பில் ஆசிரியர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி சில வாரங்கள் 'கல்கி'யில் தொடர்ந்து எழுதினார்.

பரமேஸ்வராவில் தண்ணீர் குடித்த சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, இந்தத் திருநெல்வேலி தண்ணீரைக் குடித்துக் கொண்டே சாப்பிடாமலிருக்கலாம் என்று வியந்துபோற்றினார்.

ஆனால் இன்று பல்கலைக்கழகத்தில் திருநெல்வேலித் தண்ணீர் கிடைப்பது அபூர்வம். 'கைலாசபதி கலை அரங்கில்' நடக்கும் நிகழ்ச்சிகளின்போது 'மினரல் வாட்டர்' போத்தல்களைத்தான் பார்க்கலாம். கலை அரங்கம் செல்லும் வழியில் பரமேஸ்வரன் கோயிலுக்குத் திரும்பும் சந்தியில் இருந்த தண்ணீர்க் குழாய் காணாமல் போய்விட்டது. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் தொடங்குவதற்கு முதல் நாள் இதே கொட்டகையில் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்த வந்திருந்த அன்றைய வெளிவிவகாரச் செயலர் சேர்.கந்தையா வைத்தியநாதன் ஆங்கிலத்தில் உரையாற்றத் தொடங்கி தாம் தமிழில் உரையாற்றாமைக்கு வருத்தம் தெரிவித்து சுருக்கமாகப் பேசி முடித்தார். அவர் பின்னர் சேர்.ஜோன் காலத்தில் அரசியல்வாதியாக் கப்பட்டதும் தமிழ் கூட்டங்களில் நன்கு பேசத் தொடங்கினார். மன்னார் தொகுதியில் ஒரு தடவை தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சேர் கந்தையா, பின்னர் அரசியலிலிருந்து ஒதுங்கி திருக்கேதீச்சரத் திருப்பணியில் முழுநேர ஊழியனாகத் தன்னை இணைத்துக் கொண்டு திருக்கேதீச்சரத்திலேயே 'குடில்' அமைத்து வாழ்ந்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் யாழ்ப்பாணத் தமிழ் விழாதான் தனிநாயகம் அடிகளார்' பின்னர் உலகத்தமிழாராச்சி மன்றம் தொடங்குவதற்கும் "உலகெலாம் தமிழோசை பரவும் வகை செய்வதற்கும்" கால்கோளாய் அமைந்தது என்று சொல்லலாம்.

எஸ்.பி.மயில்வாகனம் றேடியோ சிலோன் மயில்வாகனம் ஆனதும் செந்தில்மணியை மணந்து கொண்டதும் இந்தத் தமிழ் விழாவின் பின்னர்தான்.

இந்தியத் தமிழ் அறிஞர்களுடன் ஈழத்தமிழ் அறிஞர்கள் தனிநாயகம் அடிகளார், வித்துவான் க.வேந்தனார், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, புலவர் நல்லதம்பி போன்றவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தியத் தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள் இங்கு வந்து கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளும் நமது மக்கள் எங்கள் அறிஞர்கள், கலைஞர்களுக்கு இந்தியாவிலிருந்து வந்து கலந்துகொள்பவர்களுக்குக் கொடுக்கும் வரவேற்பைக் கொடுக்கத் தவறுவது வழக்கம். இதைச் சிலர் வெளிப்படையாகத் தெரிவித்தும் கூட இங்குள்ள தமிழ் மக்களுக்கு அந்தப் பண்பு இன்னும் குறைவாகவே உள்ளது. யாழ்ப்பாணத் தமிழ் விழாவிலும் வித்துவான் வேந்தனார் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சிலர் இடையூறு செய்ய முயன்றனர். இதை ஒரு சிலர் தட்டிக் கேட்ட பின்னர் அடங்கியது.

இதேபோல் இந்தியாவில் சிறந்த நாடகக் கலைஞர்களில் மதிப்புப்பெற்ற டி.கே.சண்முகம் குழுவினர் இலங்கை வந்து கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நாடகங்கள் நடித்து மதிப்பைப் பெற்றிருந்தனர்.

டி.கே.எஸ்.குழுவினர் நாடு திரும்புமுன் கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடந்தது. இப்போதுள்ள மண்டபம் அல்ல அது. அறைச் சுவருக்கு வெளியேயும் நின்று மக்கள் கலந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இந்தக் கூட்டத்துக்கு அழைப்பின் பேரில் வந்திருந்த கலையரசு சொர்ணலிங்கம் [illegible] மக்கள் [illegible] துதுபேச்சைத் தொடரமுடியவில்லை. (தொடரும்)

# 'சின்ன' முதல்வர்



■ ஒளசிஸ்

கட்டார் நாட்டில் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மாநகர சபைகளின் முதல்வர்களுக்கான கூட்டமொன்று பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு நாட்டில் இருந்தும் வந்திருந்த மாநகர முதல்வர்கள் தத்தம் முறை வந்ததும் ஒலிவாங்கிகளை பிடித்துக்கொண்டு, தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டிருந்தனர். இந்த வரிசையில் அடுத்ததாக பலஸ்தீன மாநகர சபை முதல்வரின் முறை.

எல்லோரது கண்களும் பலஸ்தீன மாநகர முதல்வர் இருந்த பக்கமாகத் திரும்பின. அடுத்த கணம் அதே விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தன. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் பலஸ்தீன மாநகர முதல்வர் 15 வயது நிரம்பிய பஷீர் ஒத்மன் என்னும் சிறுமிதான். அவள் சிறுமி என்ற போதும், தன்னுடைய ஆளுமைமிக்க உரைமூலம் அங்கிருந்தோரின் கரகோசத்தை தனதாக்கிக் கொண்டாள்.

எந்த நேரமும் இஸ்ரேலில் இருந்து ஏவப்படுகின்ற ஏவுகணைகள் வந்து வீழலாம் என்ற நிலையின் மத்தியிலும் இயல்பாகவே இயங்கிக்கொண்டிருக்கிறது, பலஸ்தீன நகரத்தின் மாநகர சபை. உலகுக்கே முன்னுதாரணமாக ஒரு செயற்பாட்டை இந்தச் சபை மேற்கொண்டதன் விளைவே உலகின் வயது குறைந்த முதல் பெண் முதல்வராக பஷீர் ஒத்மன் தெரிவாகக் காரணம்.

உண்மையில் பலஸ்தீன மாநகர சபையின் முதல்வராக மக்களால் தெரிவானவர் ஷா ஷாடிட். இவர் தலைமையிலான 11 மாநகர சபை உறுப்பினர்களும் 'இளைஞர் சக்திக்கு வழியமைத்தல்' என்ற திட்டத்தின் கீழ் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடம் இரு மாதங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை கையளித்துள்ளனர். இந்த மழலையர் குழுவிலுள்ள 11 பேரில் 6 ஆண்களும், 5 பெண்களும் உள்ளனர். இவர்களில் இருந்து பஷீர் ஒத்மன் முதல்வராகத் தெரிவானார்.

பஷீர் ஒத்மன் தலைமையிலான சிறார் குழு மாநகர நிர்வாகத்தை கையில் எடுத்துக்கொண்டவுடன், அந்த மாநகர சபைக்குள் உள்ளடங்கும் 9 ஆயிரம் மக்களும் ஒரு கேலிப் பார்வையோடே இவர்களை நோக்கினர்.

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பதே அவர்களின் எண்ணம். ஆனால் அதனை மாற்றியமைத்தனர் பஷீர் ஒத்மன் தலைமையிலான மழலையர் குழுவினர். நிதிக் கையாளுகையைத் தவிர்ந்த மற்றைய எல்லா அதிகாரங்களும் இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் மாநகர சபையில் இதுவரை காலமும் நிலவி வந்த இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு பஷீர் ஒத்மன் தீர்வு கண்டிருக்கிறார்.

அடிக்கடி நிகழும் தீ விபத்தால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க மாநகர சபைக்கென தனியான தீயணைப்புத் துறையை உருவாக்குதல், நகர மத்தியில் சிறுவர்களின் விளையாட்டுத் திடலை உள்ளடக்கியதாக பொதுப்பூங்கா ஒன்றை அமைத்தல் என்பன பஷீர் ஒத்மன் நிறைவேற்றிய இரு தீர்மானங்கள்.

"பலஸ்தீன நகரில் இளையோர் வேலையற்று இருத்தல் பெரும் பிரச்சினை. வேலை தேடுவதற்காக பலஸ்தீன – இஸ்ரேல் எல்லையை சட்டவிரோதமாகக் கடப்பவர்களும் உண்டு. அங்கும் மிகக்குறைந்த சம்பளத்துக்கே அவர்கள் நாள் முழுதும் உழைக்க வேண்டியுள்ளது. எனவே என்னுடைய இந்த இரு மாத பதவிக் காலத்துக்குள் வேலையற்ற இளைஞர்களின் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரத் திட்டமொன்றை கொண்டு வருவதே எனது பிரதான இலக்கு" என்று கூறும் "சின்ன" முதல்வர் பஷீர் ஒத்மன், நாள் தவறாமல் மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறார்.

"பஷீர் ஒத்மன் தலைமையிலான குழுவிடம் மாநகர சபையின் அதிகாரத்தை கையளித்ததன் மூலம், அரசியலில் பலமிக்க பொறிமுறையை இளையோர் உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பஷீர் ஒத்மனை நான் உட்பட மாநகர மக்கள் அனைவரும் நேசிக்கிறோம்." என்கிறார் மாநகர சபையின் நிரந்தர முதல்வர் ஷா ஷாடிட்.

தமது கதிரையை சுடலைக்குப் போகும் வரை விட்டுக் கொடாமல் ஒட்டிக்கொண்டிருக்கும் எம்மின அதிகாரப் பேர்வழிகள், பலஸ்தீன மாநகரசபையைப் பார்த்தாவது கொஞ்சமேனும் திருந்தட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துண்டங்களால் ஒரு செய்நேர்த்தி

ஆதங்கன்

கோடிக்கணக்கான முதலீடு, நட்சத்திர நடிகர்கள், வெளிநாட்டில் படப்பிடிப்பு மற்றும் இசைக் கோர்வை, லட்சக் கணக்கில் விளம்பரச் செலவு என்றெல்லாம் பெரும் எடுப்பில் வெளியாகி, ரசிகர்களின் பாலாபிஷேகங்களோடு திரைகளுக்கு வந்து எரிச்சலூட்டும் தமிழ் திரைப்படங்களுக்கு மத்தியில் அண்மையில் வெளிவந்த பீட்சா ஒரு நல்வரவு.

வழமையான ஜனரஞ்சக தளத்திலேயே இந்தப் படமும் பயணித்தாலும், அண்மைக்கால பெரிய நடிகர்களின் படங்களைப் போல ரசிகர்களின் பொதுப் புத்தியின் மீது காறி உமிழும் செயலை இது கொண்டிருக்கவில்லை. மாறாக ஜனரஞ்சக, வணிகமயப்பட்ட திரைப்படத்தைக் கூட பார்வையாளர்களை மதித்து படைக்க முடியும் என்பது பீட்சா சொல்லியிருக்கிறது. துண்டங்களான வெளிநாட்டு உணவுப் பண்டம் ஒன்றின் பெயரை கொண்டிருந்தாலும், ஏதோ ஒரு கவர்தல் தன்மையை தனக்குள் இந்தத் திரைப்படம் வைத்திருக்கிறது.

பெரிதளவான ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி சீரான கதைத் தளத்தில் நகர்கிறது பீட்சாவின் கதை. கண நேரத்தைக் கூட தவறவிடாது தன்னுடன் பார்வையாளர்களை இறுகப் பிணைத்திருக்கும் உத்தியை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கொண்டிருக்கிறது.

பீட்சா விநியோகிக்கும் இளைஞரான விஜய் சேதுபதி, தன்னுடைய காதலி ரம்யாவின் வயிற்றில் தன் குழந்தை இருப்பது தெரியவர காதலியையே மணக்கிறார்.

அவரது மனைவி ரம்யா நம்பீசன் ஒரு நாவல் எழுதுவதற்காக பேய்களை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார். எப்போதும் பேய்ப் படங்களை பார்ப்பதும், பேய்களை பற்றி சிந்திப்பதுமாக இருக்கிறார் ரம்யா. இதன்போது ''நீ பேயை பார்த்திருக்கிறாயா? தூக்கில் தொங்கியவர்களின் சடலத்தைப் பார்த்திருக்கிறாயா?'' என்று பேய் சம்பந்தமான விடயங்களைச் சொல்லி கணவர் விஜய் சேதுபதியை அடிக்கடி பயம்கொள்ள வைக்கிறாள்.

''பேய் இருக்கு! அது உனக்கும் ஒரு நாள் தெரிய வரும். அந்த நாள் ரொம்ப தூரத்தில் இல்லை!'' என்று தன் மனைவி சொன்ன வார்த்தைகள் அவ்வப்போது இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது விஜய் சேதுபதிக்கு.

ஒருநாள் யதார்த்தமாக அவர் பீட்சா விநியோகிக்க ஒரு வீட்டுக்கு போகிறார். ஆனால் முகவரி மாறி இன்னொரு வீட்டுக் கதவை தட்டுகிறார். அந்தத் தட்டலோடு திரையில் கிளம்புகிறது திகில்.

அந்த வீட்டில் பீட்சாவை வாங்கிக்கொண்டு காசை எடுப்பதற்காக உள்ளே சென்ற பெண் நீண்ட நேரமாக வெளியே வரவில்லை. என்னவென்று பார்க்க உள்ளே செல்கிறார் விஜய் சேதுபதி. அங்கே அந்த பெண் பிணமாக சுவற்றில் தொங்குகிறார். மின்சாரம் திடீரென நின்றுபோக எங்கும் இருள். கதவையும் திறக்க முடியவில்லை. தப்பிக்க வழி தெரியாமல் விஜய் சேதுபதி படும் பாடுகள் சொல்லில் அடக்க முடியாதவை. ஒரு நொடி கூட கவனத்தை சிதற விடாமல், இருக்கையின் நுனிக்கு கொண்டு வந்து, திக் திக் நிமிடங்களால் நம்மை அதிர வைக்கிறது இயக்குநரின் செய் நேர்த்திமிக்க் திரைக்கதை.

இதையெல்லாம் எப்படி நம்புவது? இதெல்லாம் உண்மையா? அல்லது காதில் பூச் சுற்றலா? என்றெல்லாம் சிந்திக்க இடம் கொடுக்காமல், நடக்கவே முடியாத ஒரு முரண் யதார்த்தக் கதையை, தன்னுடைய திறமை மூலம் பார்வையாளர்களை நம்ப வைத்திருக்கிறார் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ்.

• விஜய் சேதுபதி நல்ல நடிகர் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருகிறார். தமிழ் சினிமாவில் அவருக்கான தனி இடம் இருக்கப்போவது உறுதி. விரிந்த கண்களோடு, வியர்வையில் பயந்தபடியே பேய் வீட்டில் அல்லாடும் காட்சிகளிலும் , காதல் காட்சிகளிலும் இயல்பை மீறாமல் நடித்திருக்கிறார்.

அனுவாக வரும் ரம்யா நம்பீசனும் இயல்பாக தோன்றி காட்சியில் ஒன்றிக்கிறார். படத்தில் வரும் சின்னச்சின்ன கதாபாத்திரங்களில் வரும் நடிகர்கள் கூட மிகையில்லாமல் தேவையான அளவு நடிப்பை படத்துக்கு வழங்கியுள்ளனர். குறிப்பாக வீர சந்தானம், நரேன், ஜெயக்குமார் அனைவருமே தத்தம் கதாபாத்திரங்களை அப்படியே பிரதிபலிக்கிறார்கள்.


படத்தின் மிகப் பெரிய பலம் அதன் தொழில்நுட்ப கலைஞர்கள் தான். ஒளிப்பதிவாளர் கோபி அமர்நாத், ஒரு வீட்டுக்குள் ரோர்ச் லைற், மெழுகு வர்த்தி என்பவற்றை வைத்தே ஒளிப்பதிவில் வித்தை காட்டியுள்ளார்.

இசை சந்தோஷ்நாராயணன். எங்கு இசை தேவையோ அங்கு மட்டும் அதை தந்து ரசிகர்களின் கவனத்தை அங்குலமும் நகரவிடாமல் செய்திருக்கிறார். படம் கச்சிதமாக வந்ததற்கு இன்னொரு காரணம் படத்தொகுப்பாளர் லியோ ஜோன் பால்.இவரது தயவால் படம் அசுர வேகத்தில் பயணிக்கிறது. படத்தில் தொய்வென்பதையே காண்பது அபூர்வம்.

திகில் குளத்தில் பார்வையாளர்களை மூழ்கவிடுகிறது பீட்சா. பின்னர் அத்தனையும் மாயையே என்று தன்னைத்தானே பார்வையாளன் பார்த்து வெட்கப்படும் அளவுக்கு, விம்பங்களின் மருட்சியை இறுதிக் கணங்களில் உடைக்கவும் செய்கிறது. ஜனரஞ்சக சினிமாவில் கூட இத்தகைய செய் நேர்த்திமூலம் ரசனைக்கேற்ற திரைப்படங்களை தரலாம் என்பதற்கு பீட்சா ஒரு நல்ல உதாரணம்.



# விலையும் விடுதலையும்




பிந்தி வந்த
செய்திகளின் படி
சிறுகச் சிறுக
சிரமத்துடன் சேர்த்த
பொதுச் சொத்தான
பொக்கிஷங்கள்
உயிரைக் காக்கவும்
பெரிது முதவும்

விலை பேசி
வலை வீசினால்
பதவிகள் கூட
பாதங்களில் மண்டியிடும்
வெற்றி வெற்றியென்று
பொத்திப் பொத்தி
பாதுகாத்தவை
போகும் போக்கு
இப்போது .......
சிறிது கூட
அறமில்லா
புறம் போக்கு.

சாரங்கன்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 259




அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. நள்ளிரவு
4. பச்சை பசேல் என்ற தன்மை
6. இது ஒரு மூல மந்திரமாம்
7. பயிர்ச் செய்கை நடவடிக்கை
9. பிரி
11. இந்து மதத்தின் உட்பிரிவு ஒன்று
12. வாத்தியார் கையிலிருக்கும் கோல்
14. ஒருவனின் பண்பு
15. வேதனம்
17. கெட்ட
18. தமது
19. எண்ண
20. தடுமாறுதல்

### மேலிருந்து கீழ்

1. அற்பத்தனமான ஆசை
2. பொறுமைத்தன்மை
3. தலை
4. சிறுவரின் விளையாட்டுப் பொருள்
5. தூர அலகு
8. நாவிதன் தொழில்
10. குத்து விழுவது இப்படி
12. சடலம்
13. விடிதல்
14. விலங்குகளின் அடிப்பாதத்தில் இருப்பது
15. இலை, குழை காய்ந்தால் வருவது
16. பொருத்தமான நிலை
17. இரும்பில் பிடிப்பது
19. படி

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 237 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) ஐம்பது (4) வாக்கு (6) திப்பிலி (7) பகுப்பு (9) பதம் (11) சிம்பு (12) சர்ப்பு (13) கொடு (14) கம்மல் (16) கவிதை (18) தலைவன் (20) தினம் (21) குனிதல்

**மேலிருந்து கீழ்**

(1) ஐப்பசி (2) பதிப்பு (3) துப்பு (4) வாலிபர் (5) குறும்பு (8) கும்பம் (10) தப்புவி (12) சுடு (13) கொல்லை (14) கத்தி (15) மதம் (16) கன்னி (17) தையல் (19) வகு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 259**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (14.11.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.239இல்வெற்றி பெறுவோர்களது விவரம்18.11.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 237 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**கெ.சுவர்ணலதா,**
சாமியன் அரசடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
**சு.சோபியா,**
சத்தியசாயி பல்பொருள் வாணிபம்
பி.டபிள்யு.டி. வீதி, முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**
**வை.இரத்தினசிங்கம்,**
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
**ந.ஜெயகணேசன்,**
பண்டித்தாழ்வு, காரைநகர்.

**5 ஆம் பரிசு**
**கிருஷ்ணகுமாரி,**
இல.11, அரசடி லேன்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**த.சிவநேசம்,**
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

**இ.சிவசிறிதரன்,**
அல்பா மிக்சர்கடை, சங்கானை

**எஸ்.திருப்பரங்கிரிநாதன்,**
இமையாணன், உடுப்பிட்டி

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# கற்க-பின் நிற்க.....



அபிதவன்

விழுந்த இடத்தில் புதைந்து போகாமல்
நீரில், மூன்று தெறிப்புக்களால் கெஞ்சி
நான்காவதில் ஓய்ந்து மறைகின்றது கல்!
விளிம்புகள் தட்டையான கூழான்களை
தேடிப் பாய்வதற்குள் தொலைந்து போவதில்லை
விரல்களின் 'சுழற்சி வேகம்'!!

ஒரு விரல் தள்ள,
மறு விரல் இழுப்பதில்
பிசிறற்ற நேரக் கணிப்பும்
சந்திக்கும் புள்ளி–அன்றைய அந்தியின்
வெற்றியாளனை, புல்நுனிகளிலிருந்து
ஒன்றிரண்டு அடி உயரத்தில் தீர்மானித்தது!

முந்தைய நாள் அவள், நேற்று இவள்
இன்று நான், நாளை எவன்?
நடுவரில்லாத நீடிப்புகளின் திருத்தமின்மை
பிரிக்க முயன்று தினம் தினம்,
தோற்றுப் போனது எம் முதுகுகளின் பின்னால்!

''நாளை என்னுடையதாகும்''–நம்பிக்கையை
குதிக்கால் உரோஞ்சி,
குறைவாளியில் முகம்கழுவி
சமுகக் கல்வியின் பதினெட்டாம் பக்கம் வரை
இறக்கி வைப்பதேயில்லை!

புவிக்கோணம் 45 இல் தான்,
பூரணவீச்சு பெறப்படுமென்பதை
'குமரன் சேரை' சந்திக்க முன்னரே
பட்டறிந்த நாட்களின்
இறுதிச் சுற்றுப் படபடப்பை விட
கோபப்படுகிறேன் இப்போதெல்லாம்,
பரவு கற்களின் நிரவல் துல்லியத்தின் மேல்!

பேராதனை முடித்து,
பட்டியோடு போராடும் தொப்பை
படிந்த தாசுடன் கம்பீரக் காலணி,
பாதிநாளில் தூய்மையிழக்கும் மேலாடை,
வெள்ளத் தொப்பியினுள் மறைத்த
இள வழுக்கையோடு, இன்றைய வியாபாரமும்,
நேற்றைய விளையாட்டுக்கான,
கற்களோடு!!

இரண்டு வருடங்களாய் இருக்கும் வீதியின்
இடது புறம் 'இருபாலைச்' குளம்.
''படிக்காட்டி, றோட்டுத் தாண்டா உங்களுக்கெல்லாம்''
அன்பால் அடித்த வார்த்தைகளை,
இந்தக் குழந்தைகளிடமும் சொல்லிவிடாதீர்கள்
மீண்டும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

04.11.2012 முதல் 10.11.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- நண்பர், உறவினர்களிடம் பெருந்தன்மை குணத்துடன் நடந்து கூடுதல் நல் அன்பைப் பெறுவீர்கள். புத்திரர் படிப்பில் கூடுதல் வளர்ச்சி பெற, தேவையான வழிகாட்டுதலும் தாராள பணச்செலவும் செய்வீர்கள். அவர்களிடம் விலகிப் பணிகளை முழுக்கவனத்துடன் செய்வதால், தகுந்த வெற்றி பெறுவீர்கள். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, சில புதிய யுக்திகளை நடைமுறைப்படுத்துவீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள், வெளிவட்டாரப் பழக்கத்தைக் குறைத்து, படிப்பில் கவனம் கொள்வதால் முன்னேற்றம் பெறலாம்.

**இடபம்**- தாராள பணவரவு கிடைத்து குடும்பத்தின் முக்கிய செலவுகளுக்குப் பயன்படுத்துவீர்கள். சமூகத்தில் நல்ல மதிப்பு, அந்தஸ்து அதிகரிக்கும். புத்திரர் நற்குணம், நற்செயல் பின்பற்றி படிப்பில் முன்னேற்றம் பெறுவர். உறவினர்களின் அன்பு, உதவி கிடைத்து, மனதில் மகிழ்ச்சி கொள்வீர்கள். சிறியளவில், சுற்றுலா பயணம் நண்பர்களுடன் சென்று வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் உற்பத்தி, விற்பனையை அதிகரிப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்**- சோம்பல் குணத்தை ஒதுக்கி வைத்து, சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். இதனால் நன்மைகளும் எதிர்பார்த்த பணவரவும் கிடைக்கும். குடும்பத்தின் தேவைகளை பெருமளவில் நிறைவேற்றுவீர்கள். இளைய சகோதரருக்கு வேண்டிய உதவி புரிவீர்கள். புத்திரர் உரிய பயிற்சிமுறையைப் பின்பற்றி படிப்பில் சிறந்த தேர்ச்சி அடைவர். தொழில் வியாபாரம் செழிக்க அதிக பணி செய்வீர்கள். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்புக் கிடைத்து குறித்த காலத்தில் இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் சக மாணவர்களின் உதவி கிடைத்து, படிப்பில் இருந்த குறையை சரி செய்வர்.

**கடகம்**- எண்ணத்திலும், செயலிலும் மறுமலர்ச்சி பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உறுதுணையாக இருந்து தேவையான உதவிகளை வழங்குவர். சமூகத்தில், உங்களைப் பற்றி உயர்ந்த மதிப்பீடு உருவாக, அனுகூலமான காரணிகள் பலம் பெறும். புத்திரர் எதிர்பார்ப்பு மனதுடன், உங்களிடம் அணுகுவர். உடல் நல ஆரோக்கியம் நல்ல விதமாக இருக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். வெளியூர் பயணம் பயன் கருதி மேற்கொண்டு உரிய நன்மை பெறுவீர்கள். மாணவர்கள், அக்கறையுடன் படித்து கூடுதல் தரதேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்**- மனதில் உத்வேகமும், செயல்களில் கூடுதல் திறமையும் பரிமளிக்கும். வாகன பயணத்தில் கவனம் தேவை. உடல் நல ஆரோக்கியத்தை பொறுப்புடன் பேணிக்காக்கவும். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். இல்லறத் துணை அன்பு, பாசத்துடன் நடந்து குடும்பத்தில் மகிழ்ச்சிகர சூழ்நிலையை உருவாக்குவார். பணியாளர்கள் பணித்திறமை வளர்த்து, அதிக வேலைவாய்ப்பு, சன்மானம் என்பனவற்றைப்பெறுவர். பணிபுரியும் பெண்கள் இலக்கை நிறைவேற்றி நிர்வாகத்திடம் நற்பெயர் சலுகை ஆகியவற்றைப் பெறுவர்.

**கன்னி**- உங்களின் திறமை மிகு செயல்களால் மற்றவரின் கவனத்தை உங்கள் பக்கம் கொண்டுவருவீர்கள். புத்திரர் கவனக்குறைவான செயல்களால் சிரமம் அடைவர். அவர்களுக்குத் தகுந்த ஆறுதல் சொல்லி, பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள உரிய வழி காட்டுவீர்கள். சிறியளவிலான பணக்கடனை நேர் செய்வீர்கள். இல்லறத் துணை, உங்கள் கருத்துக்களை ஏற்று நடந்து உறுதுணை புரிவார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று கூடுதல் இலாப விகிதம் தரும். மாணவர், ஆர்வமுடன் படித்து ஆசிரியர், பெற்றோரிடம் நன் மதிப்பு பெறுவர்.

**துலாம்**- திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவதில் புதிய யுக்தியும் கூடுதல் உழைப்பும் மேற்கொள்வீர்கள். இல்லறத் துணை உங்களின் பணி சூழ்நிலைகளை உணர்ந்து உதவிப் பாங்குடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் திட்ட இலக்கை நிறைவேற்றி பாராட்டுப் பெறுவர். சுய தொழில் புரியும் பெண்கள் கூடுதல் ஆர்டர் கிடைத்து தாராள பணவரவு பெறுவர். மாணவர்கள், தகுந்த பயிற்சி பெறுவதால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சியை அடையலாம்.

**விருச்சிகம்**- மனதில் ஆன்மிக நம்பிக்கை நிறைந்திருக்கும். செயல்களில், புதுமைகளைப் பின்பற்றி நண்பர், உறவினர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். இளைய சகோதரர், உங்கள் கருத்துக்களை மதித்து நடந்து தம் வாழ்வில் முன்னேற்றம் காண்பர். உங்களுக்கும் உறுதுணையாக செயற்படுவர். இல்லறத்துணை உங்கள் நலனில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவார். தொழில், வியாபாரம் கூடுதல் உழைப்பினால் சிறந்த முன்னேற்றம் பெறும். ஆதாய பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். பணியாளர்கள், இலகுவாக செயற்பட்டு இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவர்.

**தனுசு** - மனதில் புத்துணர்வும், செயல்களில் பரிமளிப்பும் உண்டாகும். உடன் பிறந்தவர்களுக்கு உரிய உதவிகளை மனமுவந்து வழங்குவீர்கள். புத்திரர், உங்கள் சொல்லை வேதம் எனக் கருதி செயற்படுவர். இல்லறத் துணையின் கருத்துக்களை மதித்து நடப்பதால், குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். நண்பர்களிடம் தகுதிக்கு மீறிய அளவில் பணம் கடன் கொடுக்க, கேட்க கூடாது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் இருந்த தாமதநிலை மாறும். பணவரவு அதிகரிக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்பதால் சிரமம் ஏற்படலாம். கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் சிறந்த முன்னேற்றம் காண்பர்.

**மகரம்** - உங்கள் வாழ்வின் முக்கிய தேவை பெருமளவில் நிறைவேறும். உறவினர்களிடம் பழைய விவகாரம் குறித்து எதுவும் பேச வேண்டாம். இதனால் உறவினர்களிடம் அதிருப்தி வராமல் தவிர்க்கலாம். எதிரி, உங்களின் வியத்தகு வாழ்வு முறை கண்டு விலகுவர். இல்லறத் துணை, குடும்பத்தின் எதிர்கால நலனில் மிகுந்த அக்கறை கொள்வர். தொழில், வியாபாரத்தில் தேவையான மூலதனம் செய்து உற்பத்தி, விற்பனையை உயர்த்துவீர்கள். பணியாளர்கள் ஆர்வமுடன் செயற்பட்டு இலக்கு நிறைவேற்றுவர்.

**கும்பம்** - வாழ்வில் செயற்படுத்த வேண்டிய பணிகளை கூடுதல் கவனத்துடன் நிறைவேற்றுவது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். குடும்ப செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். இளைய சகோதரர் நல்வாழ்வு பெறத் தேவையான ஆலோசனை வழங்குவீர்கள். இல்லறத் துணை உங்களின் வாழ்வியல் நடைமுறை சிறப்புப்பெறத் தேவையான உதவி வழங்குவார். மாணவர்கள் வெளிவட்டாரப் பழகத்தைக் குறைத்து ஆர்வமுடன் படிப்பதால் கல்வியில் முன்னேறலாம்.

**மீனம்**- எந்தச் செயலையும் தகுந்த முன்யோசனையுடன் செய்து திருப்திகரமான அளவில் நன்மை பெறுவீர்கள். சமூகப் பணியிலும் இயன்றளவு ஆர்வத்துடன் செயற்படுவீர்கள். பாராட்டுக் கிடைப்பதை விட, சிலரது விமர்சனத்தை எதிர்கொள்ளும் நிலை வரலாம். கவனம் தேவை. புத்திரர் நல்ல குணங்களைப் பின்பற்றி [illegible] பெறுவர். எதிரியிடமும் விஷப்பிராணிகளிடமும், விலகிப்போவதுவும், தேவையற்ற [illegible] தவிர்க்கலாம். எதிர்பார்த்தளவில் பணவரவு உண்டு. மாணவர்கள், கவனம் சிதறாமல் படிப்பில் ஆர்வம் செலுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்பு அல்லது பிரிவு பற்றிய இரு கவிதைகள்

சத்தியமலரவன்



இருப்பதும் இல்லாததும் நம் கதைபோல
கேள்வியும் பதிலும் இப்படியாகவே
கடலும் கரையும் ஊதும் விழிகளும்
நான் கடக்கிறேன்
என்ன சொப்பனம் இப்படியா இழவு பரவுகிறது
பாரபட்சமாய் எங்கெங்கெல்லாமோ இப்படியாக
எங்களின் இருப்பும் முள்ளந்தண்டில்லாத கேள்விதான்
என் செல்வமும் தகர்ப்பில்லா வெளியும்
ஏன் இப்படியாக மூச்சு
தயக்கம் காலாற விழுதெறியும் காலம் வரும்
நமக்குள் இருப்பாய் மாமலையின் சிகரமென
நீயும்.

அவலப் பொழுதொன்றில் நீ வந்திருக்கிறாய்
என் இதயமே வெடித்துச் சிதறும்
ஆனாலும். உன்முகம் காணாமல் எப்படிப் பிரிவேன்
இயல்புக்கும் தவிப்புக்குமிடையே பெரும்போர்
எனதுடம்பு சின்னாபின்னமாக
திருக்கோயில் திருவிளக்கு வேவுகிறது
அந்த ராத்திரி மாலையில் நீ உறங்கிக் கிடந்தாய்
மீட்கமுடியா துயரத்தில்
பிரிவு இருவரையும் துண்டாடிப் போயின
ஆனாலும் வளர்ந்ததும் இலையுதிரவில்லை
கடலும் கரையவில்லை
நீளவும் எல்லோரின் மூச்சும் பரவுகிறது
இருப்பின் கேள்வியும் பலமாக
தீயின் தீவிர வெடியில் சிதறுசன்னம்
நாலா திசையும் உடைப்பு நானோர் அதிரும் கணம்
பிரிவென்பது மேலும் நிஜமாயிற்று
நீயும் பிரிந்தாய்
நானும் அப்படியே.

## செவ்வாய் அழுகிறது

பொன்னான
பூமியை
புகைபோட்டு
மாசாக்கியவன்
பசுமை
நிலங்களை
பாலையாக்கியவன்
சிகரங்களை
சிதைத்துவிட்டு
ஆழக்கடல்களை
அசுத்தமாக்கியவன்
மோட்சம் தந்த
நதிகளை
மோசமாக்கியவன்
பாவி
மனிதன்
இங்கு ஏன் வந்தான் ?

- நிலவன் -
அச்சுவேலி.



# வரதட்சணை!

தமிழ்நிலா
சாவகச்சேரி

தனக்குப் பின் தாரம்
வேணும் என தாயவள்
தொடர்ந்தாள் தேடல் பயணத்தை
பெண் தேடி அலைந்தாள்
பையனுக்கு பெருமையுடன்

முத்தரின் மூத்த மகளுக்கு
தன்மகனை மணமுடிக்க
முடிவெடுத்த முத்தம்மா
சம்பந்தம் செய்ய நாள் குறிச்சு
காத்திருந்தாள்

ஒரு வழியா பேச்சுக்கு
வந்தது கல்யாண வியாபாரம்
ஏலத்தில் விடப்பட்ட
மாப்பிள்ளைக்கு முதல் விலையே
முப்பது லட்சம்

காணி, வீடு, நகை எண்டு
நீண்டது கணக்கு
எப்படியும் 50 தேறும்
என்று நினைச்ச முத்தருக்கு
மூச்சு இழுத்து முடிஞ்சு போச்சு

முத்தான சொத்து
மூன்று பெண்ணுக்கும்
வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி
சேர்த்த பத்தில் முடிஞ்சது
ஐந்து.. முத்தரின் செலவுக்கு...

சீதனக் கொடுமையால்
சிதைவுறும் சீத்தாக்களுக்கு
ராமர்கள் கேக்கவில்லை
இராவணர்கள் வேண்டாம் இங்கே...

# பெண்களே வாழ்வில் வெற்றிபெற சில வழிமுறைகள்



எம்.சுதா
அஞ்சலேவி


★கெட்ட மனிதர்களை நண்பர்களாகவோ நம்பிக்கைக்குரியவர்களாகவோ ஏற்றுக்கொள்ளாதீர்கள்.
★தன்னம்பிக்கையுடன் கடவுள் நம்பிக்கையும் கொண்டு சுமுகமான சூழலில் வாழப்பழகுங்கள்.
★பல்துறை ஆழமான அறிவுநிலைப்பட்ட திறம் வாய்ந்தவர்களாக உருவாகுங்கள்.
★சட்டத்திற்கு கட்டுப்பட்டு நல்ல செயல்களையும், நல்ல சொற்களையும் பகிர்ந்து கொள்ளும் நல்லவர்களுடன் தார்மிக வாழ்வை ஆரம்பியுங்கள்.
★பாவத்திற்கு அடிமையாகாது தாழ்வு மனப்பான்மையற்ற நல்ல காரியங்களை நல்ல நேரத்தில் செய்யத்துணியுங்கள்.
★கிடைப்பதைக் கொண்டு திருப்திப்படுவதுடன், கீழ்ப்படியவும் கற்றுக்கொள்ளுங்கள்.
★உயரிய உணர்வுகளையும் மேன்மையான நடத்தைகளையும் உற்றுநோக்கி அறிந்திருங்கள்.
★சந்தேகம் போக்கி சந்தோஷக் கண் கொண்டு விட்டுக்கொடுப்புடன் வாழப்பழகுங்கள்.
★எந்தப் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள். முடியாதவிடத்து முரண்படாதீர்கள். அமைதியாய் இருங்கள்.
★அடுத்தவர் பேச்சையும் செயலையும் மட்டுமே எண்ணிக் கொண்டிருப்பதையும் அவதானிப்பதையும் விட்டுவிடுங்கள். அதுவே மிக உயர்ந்த வாழ்வின் வெற்றிக்கு வழிகோலும்.

# வாழ்க்கையின் குறிக்கோள்

சு.கௌசிகா

வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில்
முதலிடம் யாருக்கு?
எண்ண அலைகள் ஒன்று
என்னுள் படர்ந்தது
விடைகாண முயன்றேன்
வினாவையே தொலைத்தேன்
ஓடும் போது வேகம் மட்டும் தான் வேண்டுமா?
ஓரளவு நியாயமும் வேண்டும்
பிறர் தனை தட்டிவிட்டோடல்
குறுக்கு வழியிலோடல்
பழகி விட்டது பலருக்கு
கடைசியாக வந்தாலும்
கவலையில்லை எனக்கு
விழுந்து விழுந்து எழுந்ததில்
கற்றுக் கொண்டேன் பாடம் பல
முதலிடமோ கடைசியிடமோ
முதன்மையில்லை
முயற்சி ஒன்றே முன்னிலை






# வாழ்க்கை...

சிவாஜினி

நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கையானது எமக்கு விரும்பிய படி அமையவில்லை என்ற கவலைகள் எம்மனதை வாட்டத்தான் செய்கின்றன. இருப்பினும் அனைத்தையும் மறந்து வாழ்ந்து முடிப்பது தானே எமது கெட்டித்தனம். இந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட நெருக்கடிகள் துன்பங்கள் அனைத்தை யும் நாளாந்தம் தாண்டியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் நிச்சயமாக இருக்கின்றது.

உண்மையில் எமது வாழ்க்கையில் இளமைக்காலங் களில் எத்தனை விதமான ஆசைகள், காதல், திருமணம், தொழில் கல்வி, விரும்பிய துறைசார் தொழில்வகை இப்படியே பல ஆசைகள் அனைத்தும் எம் வாழ்வில் நிறைவேறுகின்றதா? இல்லை ஏதோ ஒன்று இரண்டு எமது விருப்பப்படி நடக்கும். அனைத்தும் எமது விருப்பம் போல நடைபெற்றதாக வரலாறுகளோ இல்லை. இது தான் இயற்கையின் நியதியும் கூட...

இளமைக் காலத்தில் கட்டிய கற்பனைகள் யாவும் நிறைவேறாத போதும், அமைந்துவிட்ட வாழ்க்கையை விரும்பி அதற்கேற்ற வகையில் வாழ்கின்றோம், அப்படி வாழாது போனால் எமது வாழ்வே நடு வீட்டு நரக மாகிவிடும்.

வாழ்க்கை வாழ்வதற்க்கே, அலுத்து சலித்து சோர்ந்து போவதற்கல்ல. இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்வை மகிழ்ச்சியாக மாற்ற முயற்சிக்க வேண்டும். எமது குடும்பத்துக்காக எமது சுகங்களை சுருக்கி சுகம் காண்கின்றோம். விரும்பிய தொழிலை எம்மால் செய்ய முடியவில்லை. வீட்டுப் பொருளாதார நிலை வறுமை போன்றவை எம்மை மூழ்கி வாழும் படி செய்துள்ளன.

இன்று எமது வாழ்க்கையில் தொழில் என்ற ஒன்று இல்லாது போனால் வாழ்க்கையெனும் வண்டியை ஓட்டவே முடியாது. நிச்சயமாக நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்ய வேண்டும் என்று பேராசை கொண்டிருப்போம். இருந்தாலும் அந்த தொழில் ஊடாக எமக்கு கிடைக்கின்ற ஊதியம் போதாமை யால் வேறு தொழிலைச் செய்ய வேண்டிய நிர்ப் பந்தம் கட்டாயம் உருவாகின்ற போது எமது வேலையானது பொருளாதார பிரச்சினையை தீர்ப் பதற்கும் பணம் வேண்டும் என்ற வகையில் பல மாற்றங்களை உருவாக்குகின்றது.

அந்த வகையில் விரும்பியோ விரும்பாமலோ குடும்ப வறுமை காரணமாக கௌரவமாக நேர்மை யாக அந்த வேலையைச் செய்கின்றோம். இருப்பி னும் எமது குடும்பத்துக்காக எமது விருப்பு வெறுப் புக்கள் அனைத்தையும் துறந்து வாழும் போதும் நிச்சயமாக நாம் விரும்பிய துறையில் தொழில் பார்க்கவில்லையே என்ற ஆழ்மனத் தாக்கம், கவலை போன்றவை இருந்து கொண்டேதான் இருக்கும்.

இப்படி எத்தனையோ விதமான நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். "ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே; வாழ்வென்றால் போராடும் போர்க்களமே, நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்" என்பது போல் நாம் செயற்பட்டு எம்மை மாற்றுவோம்.

எமது வாழ்க்கை இன்று பல்வேறுபட்ட கடுமையான போராட்டங்களோடு ஓடிக்கொண்டி ருக்கிறது. இருந்தாலும் அதிலும் வறுமை காரண மாக எமது திறமைகள் யாவும் திசைமாறி பிரகாச மிழந்து மறைக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் தங்கம் எங்கிருந்தாலும் அதன் மாற்றுக் குறையாது. கோயில் கோபுரம் மீது காகம் எச்சமிட்டாலும் அந்த கோபுரத்தின் பெறுமதி குறையுமா? அது போன்றே தங்கமாக நாம் இருக்கும் வரை எம்மை மறைக்கும்மாசுகள் யாவும் தூசிகளே. என்றோ ஒரு நாள் நாமும் மின்னுவோம். சாதாரணமாக அல்ல. முழு உலகமே எமது ஒளியில் இருக்கும் படியாக மின்னுவோம் பெரும் ஒளியாக.

அதுவரைக்கும் அனைத்தையும் ஏறி மிதித்து நிமிர்ந்து உழைப்போம். நாம் ஏறி மிதிப்பவை யாவும் துன்பங்கள், துயரங்களே. அதனால் நிச்சயம் எமது வாழ்வு பெருவிருட்சமாக தளிர்க்கும். இன் றைய இலை உதிர் காலம் நாளைய தழைப்பிற் கானது. வற்றுகின்ற கிணறு தான் ஊற்றெடுக்கும்.

அதுபோலவே எமது நிலையும். ஓட்ட வற்றி விட்டோம் ஊற்[...]தை... எமது வாழ்க்கை நிச்சயம் ச[...]ந்ததே. சவாலை சமாளிப்பே[...]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடத் தெரியாதவனுக்கு....

டிலீப்



கனவான்களின் விளையாட்டு எனப்படுகின்ற கிரிக்கெட் அதன் மதிப்பை இன்று இழந்து வருகின்றது. இந்த மதிப்பை இழந்து வருவதனால் எதிர்காலத்தில் இந்த விளையாட்டின் மீதான ரசிகர்களின் ஈர்ப்பும் குறைந்து போகலாம். முக்கியமாக சூதாட்டம், கிரிக்கெட்டை கனவான்களின் விளையாட்டு என்ற அந்தஸ்திலிருந்து கீழிறக்குகின்றது.

தொடர்ச்சியாக வீரர்கள், நடுவர்கள் என்று கிரிக்கெட்டின் பல தரப்பட்டவர்களும் சூதாட்ட குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். முன்னர் பாகிஸ்தானிய வீரர்கள் மாத்திரமே சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்ற எண்ணம் இருந்தாலும் தற்போது சகல நாட்டவருமே பணத்துக்கு அடிமையாகியிருப்பதால் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு ஐ.பி.எல். போன்ற பணம் கொழிக்கும் விளையாட்டுக்களும் ஒரு காரணம் எனலாம்.

மற்றொரு வகையில் சூதாட்டம் என்ற வகையில்லாது கிரிக்கெட்டின் மதிப்பை கெடுக்கும் வகையில் சில வீரர்கள் செயற்பட்டு வருகின்றனர். மிகச் சிறந்த விளையாட்டு வீரனுக்கு பழி வாங்கும் எண்ணம் வரவே கூடாது. ஆனால் இன்று இந்தியாவின் சுரேஷ் ரெய்னா வெளிப்படையாகவே தனது பழிவாங்கலை வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்துக்கு கடந்த வருடம் இந்திய அணி சென்ற போது 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரையும் இழந்து டெஸ்ட் தரவரிசையின் முதலிடத்தையும் இழந்து வெறுங்கையுடன் நாடு திரும்பியது.

இதற்குப் பழி வாங்கும் வகையில் தற்போது இந்தியாவில் இடம்பெறவுள்ள இங்கிலாந்துடனான தொடரில் வெல்ல வேண்டும் என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். வலிகளைத் தந்தவர்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று பழிவாங்கும் எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இதனை விட இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் மற்றும் விராத் ஹோக்லி இருவரும் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான மைதானங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். அத்துடன் இவர்களுக்கு ஆதரவாக சுரேஷ் ரெய்னாவும் தமது சொந்த மண்ணில் தொடரை நடாத்தும் போது கிரிக்கெட் சபையினால் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் பந்தையும் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்து வீச மாட்டார்கள் என்றும் தமது இந்திய வீரர்கள் மிகச் சிறப்பாக செயற்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


இந்திய அணியைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு இப்போதைக்கு வெற்றி என்ற ஒன்று கட்டாய தேவையாக இருக்கின்றது. அதனைப் பெறுவதற்கு எத்தகைய கீழ்த்தரமான - கேவலமான - நிலைக்கும் இறங்க அவர்கள் தயாராக இருக்கின்றனர் என்பதும் தெளிவாகவே இந்திய வீரர்களின் கூற்றுக்கள் நிரூபிக்கின்றன.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் அணியின் தலைமைப் பதவி தற்போது ஊசல் ஆடத் தொடங்கியிருக்கின்றது. அதற்கு பிரதானமாக அணியில் ஏற்பட்டுள்ள பிளவுகளே காரணமாகும். சேவாக் - டோனியிடையே வெடித்த மோதல் இன்று வரையில் சுற்றிச் சுழன்று சுழன்று அணிக்குள் மேலும் பிளவை உருவாக்கியுள்ளது. டோனி, ரெய்னா, ரோகித், அஸ்வின் ஒரு அணியாகவும், சேவாக். கம்பீர், ஹோக்லி, ஹர்பஜன் இன்னொரு அணியாகவும் முட்டி மோதுகின்றனர். டோனியைப் பொறுத்த வரையில் அடுத்த அணித் தலைவராக ரெய்னாவை அழகுபடுத்திப் பார்க்க நினைக்கின்றார். அதற்கான பரீட்சார்த்தத்தை சம்பியன்லீக் தொடரில் நடத்திக் காட்டினார். மறுபுறத்தில் ஹோக்லிக்கு தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்படுகின்றது.

இந்திய அணியின் தொடர் தோல்விகளே டோனியின் தலைமைப் பதவி மீதான கேள்விகளை உருவாக்கியுள்ளன. அந்நிய மண்ணில் இடம்பெறுகின்ற டெஸ்ட் தொடர்களில் தொடர் தோல்வி மற்றும் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற முக்கோண கிரிக்கெட் சுற்றுத் தொடர், ஆசியக் கிண்ணம், ரி-20 உலகக் கிண்ணம் என்று இந்திய அணி வரிசையாக இறுதி ஆட்டத்துக்கு கூட தகுதி பெறாமல் வெளியேறியது. இந்தத் தொடர் தோல்விகள் ஒரு புறம் இருந்தாலும் அத்தனை தொடர்களிலும் விராத் ஹோக்லி சிறந்த பெறுபேற்றை தொடர்ச்சியாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதனாலேயே டோனி மீதான எதிர்பார்ப்பு குறைந்து தற்போது ஹோக்லி மீதான எதிர்பார்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. இதுவே அணிக்குள் தலைமைக்கு தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினை ஏற்கனவே சுழன்றடித்த டோனி - சேவாக் மோதல் பிரச்சினையுடன் கூட்டுச் சேர்ந்ததால் இந்திய அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து ரசிகர்களின் வெறுப்புக்குள்ளாகியுள்ளது.

எனவே எப்பாடுபட்டாவது சொந்த மண்ணில் இங்கிலாந்துடனான தொடரில் வெல்ல வேண்டும் என்று இந்திய அணி கங்கணம் கட்டி நிற்கின்றது. இந்தத் தொடரில் வெல்வதன் மூலம் தலைமை மீதான பிரச்சினையையும் அணியின் உள்வீட்டுப் பிரச்சினையும் ஓரளவு சமாளிக்க முடியும் என்று நம்புகின்றனர். மாறாக இந்தத் தொடரையும் இழந்தால் இந்திய அணி புதிய தலைவருடன் அடுத்த தொடரில் களமிறங்கும்.



மேலும் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆடுகளங்கள் இயற்கையாகவே வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்கள். ஆசிய மைதானங்கள் சுழற் பந்து வீச்சுக்கு சாதகமானவை. இந்த நிலையில் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான மைதானங்களை சுழலுக்கு மேலும் சாதகமாக மாற்றியமைப்பது இந்திய அணி தனது சுழல் பந்து வீச்சுப் படையை நம்பியும், இங்கிலாந்து வீரர்கள் சுழலுக்கு திணறுவார்கள் என்பதாலுமே.

மறுபுறம் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் தங்களது ஆடுகளங்களை இயல்பாகவே பேணுவார்களே ஒழிய அவற்றை வெற்றிக்காக மாற்றியமைப்பதில்லை. இதனால்தான் இந்திய அணி சொந்த நாட்டில் தனக்கு மாத்திரம் சாதகமான மைதானங்களை அமைத்து வெற்றியை தேடிக் கொள்கின்றது. அந்நிய மைதானங்களுக்குச் சென்றால் சுருண்டு மண்டியிடுகின்றது.

ஒவ்வொரு அணியும் தனக்குச் சாதகமான மைதானங்களை அமைக்குமாக இருந்தால் கிரிக்கெட் மீதான சுவாரஸ்ஸியம் அற்றுப் போகும். அத்துடன் அந்தந்த அணிகளே வெற்றிகளையும் குவிக்கும். எந்த மைதானத்திலும் துணிவுடன் ஆடுவதே திறமையான அணிக்கு அழகு.

ஆடத் தெரியாவதனுக்கு மேடை சரியில்லை என்ற நிலையில்தான் இப்போதைக்கு இந்திய அணி இருக்கின்றது.

## பாம்புக்கு இரையான காவலன்



பாம்பென்றால் படையும் நடுங்கும் உலகத்தில், பாம்புகளுக்கே பாதுகாவலனாக இருந்தவர்களில் ஒருவர் ''ஸ்னைக்'' நிர்மல். தமிழகத்தின் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இயல்பாகவே உயிரினங்கள் மீது அனுதாபங்கொண்ட இவர் பாம்புகள் மீது விசேட கவனம் செலுத்தினார்.

இயற்கை பாதுகாப்பு சார்ந்த அமைப்புகளோடு கை கோர்த்துக்கொண்டார் நிர்மல்.


எங்கு பாம்புகள் தென்பட்டாலும் நிர்மலின் கை பேசி சிணுங்கும். பயத்துடன் பாம்பைக் கண்டவர்கள் அறிவித்தவுடன் குறித்த இடத்துக்கு பறந்து செல்வார் நிர்மல். மிக லாவகமாக எப்பேர்ப்பட்ட கொடிய விஷமுடைய பாம்பையும் மடக்கிப் பிடித்துவிடுவார் நிர்மல். பின்னர் பாம்பை பத்திரமாக ஒரு கொள்கலனுக்குள் இட்டு நீலகிரி மலைப் பிரதேசங்களில் அவற்றை விட்டுவிட்டு வருவார். இதன் மூலம் அவருக்கு ஒரு சதம் கூட வருமானம் இல்லை. ஆயினும் பாம்புகளை காக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே நிர்மல் தொடர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டார்.

''மனிதர்கள் பெரும்பாலும் பாம்புகள் தம்மைத் தீண்டிவிடும் என்ற பயத்திலேயே அவற்றை அடித்துக்கொல்கிறார்கள். அதேபோன்று மனிதர்கள் தம்மை கொன்றுவிடுவார்களோ என்ற அச்சத்தில் தான் பாம்புகளும் தீண்டுகின்றன. இந்த இரு உயிரினங்களும் ஒன்றை ஒன்று தாக்காது தத்தம் வழியில் பயணித்தால், மனிதர்களால் பாம்புகளுக்கோ, பாம்புகளால் மனிதருக்கோ தீங்கு ஏற்பட வாய்ப்பில்லை. அபூர்வமான பாம்பினங்களின் தோல்களை பதனிட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யும் சிலரால் பாம்புகளின் எண்ணிக்கை அருகி வருகிறது. இதனை இல்லாமல் செய்து இயன்றவரை பாம்புகளை உலகில் வாழ வைப்பதன் மூலம் இயற்கையின் சமநிலை தளம்பாமல் பார்த்துக்கொள்ள முடியும்.''

பாம்புகளை பாதுகாத்தல் என்ற பொருளில் நிர்மல் ஆற்றிய உரையே இது.

ஆனால் எந்தப் பாம்புகளையும் பாதுகாக்க நினைத்தாரோ அதே பாம்பினமே அவரது உயிருக்கு உலை வைத்துவிட்டது. வழமைபோன்று புடையன் பாம்பொன்றை மீட்கச் சென்ற நிர்மலை, அந்தப் புடையன் பாம்பு தீண்டிவிட்டது அதனை அலட்சியம் செய்துவிட்டு அந்தப் பாம்பை பத்திரமான இடத்தில் விட்ட பின்னரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றார் நிர்மல். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டது. கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோவை அரச மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி நிர்மல் உயிரிழந்தார்.

முதலைகளின் பாதுகாப்புக்காக போராடிய பிரபல சாகச வீரர் இர்வின், விஷ மீன்களால் தாக்குண்டு இறந்ததைப் போன்றே நிர்மலின் சாவு நிகழ்ந்துள்ளது. நிர்மலின் மறைவுக்கு மனிதர்கள் அஞ்சலித்தார்களோ இல்லையோ கட்டாயமாக எல்லாப் பாம்புகளும் ஒரு துளி விழி நீரை சிந்தியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

# நாயின் அருமை

காணவில்லை- பொக்சர் பப்பி- ஆண்- வயது 5 மாதம் கண்டுபிடித்து தருபவருக்கு அல்லது கண்டு பிடிக்க தகவல் தருபவருக்கு ரொக்கப்பரிசு ரு 100,000.

ஒரு நாயைக் கண்டுபிடித்து தருவதற்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசா? என்று சிலர் ஆச்சரியப் படலாம். ஆனால் அருமை தெரிந் தவர்கள் அவ்வாறு நினைக்க மாட்டார்கள்.



அசை போட ஒரு விடயம்

51

"1995 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சென்றபோது உடன் கொண்டு செல்லாமல் விட்ட எங்கள் நாய் ஆறுமாதம் கழித்து திரும்பி வந்ததன் பின்னர் மோப்பம் பிடித்துக் கொண்டு எங்கிருந்தோ திரும்பி வந்து சேர்ந்ததை என்னவென்று சொல்வது?

செல்லப் பிராணிகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக சிலர் நாய் வளர்க்கிறார்கள். நாய்களாக மட்டுமல்ல, பூனைகள், வெளி நாட்டு பறவைகளையும் பலர் ஆசைக்காக வளர்க்கிறார்கள். இன்னும் சிலர் விற்பனைக்காக- ஒரு வியாபாரத் தொழிலாகவும் இதை செய்கிறார்கள்.

விலை உயர்ந்த வெளிநாட்டு நாய்களை ஆடம்பரத்துக்காக வளர்ப்பவர்களும் உண்டு. எந்த விதமானவையாக இருந்தாலும் அதனை முறையாகவும் அன் போடும் வளர்த்தால் அது சிறந்த நண்பனாக சில வேளைகளில் உதவியாகவும் இருப்பதுண்டு.

அண்மையில் பத்திரிகை யொன்றில் ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. தனது வளர்ப்பு நாய் தனது மார்பகத்தின் ஒரு பகுதியை அடிக்கடி முகர்ந்து பார்ப்பதை அதன் எஜமானி கவனித்திருக்கிறார். சில நாள் கள் இப்படி நடந்த பின், ஒரு நாள் அந்த நாய் அவரது மார் பகத்தை முகர்ந்து பார்த்தது மட் டுமன்றி முன்னங்கால்களால் விறாண்டவும் ஆரம்பித்தது. இது அடிக்கடி நடைபெற்றதால் அவர் டாக்டரிடம் சென்று விப ரித்திருக்கிறார்.

டாக்டர் சோதித்து பார்த்ததில் அப்பெண்மணிக்கு மார்பகப்புற்று ஆரம்ப கட்டத்தில் இருந்தது தெரிய வந்தது. குணமாக்கவும் முடிந்தது.

இவ்வாறு நாய்களை வளர்ப்ப வர்கள் அவைகள் பற்றிய செயற் பாடுகளை அறியலாம். பொது வாக ஊர்நாய்கள் முறையாக வளர்க்கப்பட்டால் விசுவாசமாக வும், நல்ல வீட்டு காவலர் களாக வும் இருக்கும். குறிப்பிட்ட இடைவெளியில் அவைகளை குளிப்பாட்டுவதும், காலத்துக்கு காலம்தடுப்பூசிகள், பூச்சி மருந் துகள் கொடுப்பதும் அவசியம்.

பொலிஸார் வளர்க்கும் மோப்ப நாய்கள் பிரத்தியேக மானவை. அவை குறிப்பாக சில இனங்களைச் சேர்ந்தவை. ஆனால் எந்த நாய்க்கும் மோப்ப சக்தி சாதாரண மனிதர்களை விட அதிகமாகும். உள்ளூர் நாய்களை எவரும் இந்த மாதிரி பயிற் சிகளுக்கு பழக்கியதாகத் தெரிய வில்லை.

1995 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சென்றபோது உடன் கொண்டு செல்லாமல் விட்ட எங்கள் நாய் ஆறுமாதம் கழித்து திரும்பி வந்ததன் பின்னர் மோப்பம் பிடித்துக் கொண்டு எங்கிருந்தோ திரும்பி , வந்து சேர்ந்ததை என்னவென்று சொல் வது?

மோப்ப நாய் பற்றிய செய்தி யொன்று அண்மையில் சில தினங்களுக்கு முன் கொழும்பு பத்திரிகையில் வெளிவந்துள் ளது. அது வருமாறு:

பதுளையில் பால் விற்பனை நிலையமொன்றை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த திருடன் ஒருவன் பணம், மற்றும் சொக்க லேட்டுக்கள், கேக்குகள் மற்றும் சிகரெட்டுக்களைத் திருடிக் கொண்டு சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஓர் இடத்துக் குச் சென்று ஒளிந்திருந்தான். அவனை மோப்ப நாயின் துணை கொண்டு பொலிஸார் பிடித்து வந்துள்ளனர்.

ஹாலியெல போகாமடித்த என்ற இடத்தைச் சேர்ந்த 33 வயது திருடன் ஒருவன் பால் விற்பனை நிலையமொன்றின் பூட்டை உடைத்து பணம் மற் றும் பல பொருள்களைத் திருடி யுள்ளான். ரொக்கப்பணத்தை எடுத்தவன் பிளாஸ்ரிக் கோப்பை யில் இருந்த சில்லறைகளை எடுக்கவில்லை. பதுளை பொலி ஸார் ஷெடோ என்ற மோப்ப நாயைக் கொண்டு வந்தனர். பிளாஸ்டிக் கோப்பையை முகர்ந்து பார்த்த நாய் மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்த திருடனின் வீட்டு வாசற்படியில் போய் நின்றது. விசாரணையில் திருடன் மேலும் பல வழக்கு களில் சம்பந்தப்பட்டு பிணை யில் இருந்தவன் என்பது தெரிய வந்தது.



# இயற்கையின் சிறையில் சுதந்திரதேவி

அமெரிக்காவின் புகழ்பெற்ற சுதந்திரதேவி சிலைக்கு, புனர்வாழ்வு கிடைக்கும் விடு தலை கிட்டவில்லை.

150 அடி கொண்ட இந்தச் சிலை நியுயோர்க் நகரில் உயர்ந்து நின்று அந்த நகருக்கு கம்பீரத் தையூட்டுகிறது. அமெரிக்கா வின் அடையாளங்களில் இந்தச் சிலையும் ஒன்று. உண்மையில் இது அமெரிக்காவின் சொத் தல்ல. பிரான்ஸ் நாட்டின் அன்ப ளிப்பே. உள்ளூர் அமெரிக்கர் களை மட்டுமன்றி உல்லாசப் பயணிகளையும் தன்னுடைய பிரமாண்டத்தாலும், கலை நயத் தாலும் கவர்ந்திழுத்தாள் சுதந்திர தேவி. இதனால், எந்தநேரமும் ஆயிரக்கணக்கான பார்வையாளர் களால் சூழப்பட்டு, திணறிக் கொண்டிருந்த சுதந்திரதேவிக்கு திடீரென வந்தது வருத்தம்.

சுதந்திரதேவி சிலையில் உச்சிவரை செல்லக்கூடிய வசதி யுண்டு. அளவுக்கு அதிகமான பார்வையாளர்கள் ஒரே தட வையில் மேலே செல்ல முற்ப டுவதால், அந்தப் பாரத்தின் காரணமாக மெல்ல மெல்ல சுதந்திரதேவி சிலையில் வெடிப் புகள் தோன்ற ஆரம்பித்தன. இந்த வெடிப்புகளை அப்படியே விட்டால், '2012' என்ற படத்தில் வருவது போன்று ஒரு நாள் சுதந்திரதேவி சுக்குநூறாகி விடக் கூடிய அபாயம் எழுந்தி ருந்தது.

எனவே, சுதந்திரதேவியைப் பார்ப்பதற்கு தடைவிதிக்கப் பட்டு, அவசர அவசரமாக புனர மைப்பு வேலைகள் அமெரிக்க அரசால் முடுக்கப்பட்டன.

கடந்த ஒரு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தீவிர 'சிகிச்சையின்' பின் இந்த மாதம் சுதந்திரதேவி சிலையை மீளவும் திறந்துவிட முடிவெடுக் கப் பட்டிருந்தது. ஆனால் புனர் வாழ்வு பெற்ற சுதந்திரதேவிக்கு விடுதலை கிடைக்காதபடிதடை போட்டு விட்டது 'சண்டி' புயல்.

ஒக்ரோபர் மாத இறுதி வாரத்தை அமெரிக்காவில் இருளைப் பரப் பியது இந்தப் புயல். இயற்கை யின் சீற்றத்துக்கு முன்னால், உலக வல்லரசின் முன்னால் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியவில்லை.

உலக வர்த்தக மையத்தின் தீவிரவாதத் தாக்குதலைப் போன்று மீண்டும் ஒருமுறை அமெரிக்கா உறைந்து போனது. ஒரு வாரத் துக்கு மேலாக அமெரிக்காவின் அனேக மாகாணங்களில் சூரி யனை காணவே முடியவில்லை. எங்கும் இருள் சூழ்ந்த மேகக் கூட்டங்கள். சுழன்றடிக்கும் பேய்க் காற்றில் உதிர்ந்தன கட்டடக் காடுகள்.

காற்றின் கதிக்கு ஏற்ப, தாளம் போட்ட அலைகள் உயர்ந்து எழுந்து, குதித்ததில் நகரங்கள் பலவும் வெள்ளத்தில் நீச்சல் அடிக்க வேண்டியிருந்தது.


இந்த நிலையில் சுதந்திர தேவி சிலைக்கும், சண்டியால் ஆபத்து ஏற்படும் நிலை உரு வாகியிருந்தது. எனவே, இரு நாள் களுக்கு முன்னரே திரை விலகி, அமெரிக்க மக்களுக்கு தன் முகத்தை காட்டிய சுதந்திர தேவி, மீளவும் யாரும் அணுக முடியாதபடி மூடிக்கட்டப்பட் டாள்.

அமெரிக்கத் தேர்தல் நெருங் கியுள்ள சூழலில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றத்தால், ஒபா மாவின் வெற்றி வாய்ப்பு கேள் விக் குறியாகியுள்ளது. இந்த நிலையில், புயலால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சீர்செய்து, சரிந்து கிடக்கும் தன்னுடைய செல்வாக்கை மீண்டும் நிமிர்த்த ஒபாமா படாத பாடுபடுகிறார்.

எனவே தன்னுடைய செல் வாக்கின் குறியீடாக மீண்டும் சுதந்திரதேவி சிலையை திறக்க ஒபாமா நாள் குறித்திருக்கிறார். அனேகமாக இந்தவாரம் சுதந்திர தேவி புனர்வாழ்வின்பின் சமூ கத்துடன் ஒன்றிணைக்கப்பட வுள்ளாள். இதற்குப் பிரதி உபகாரமாக சுதந்திரதேவி ஒபாமாவுக்கு கைமாறாக என்ன செய்யப் போகிறாள் என்பது விரைவில் தெரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தீர்வு எமக்கானதே



■ Dr.இ.சிவசங்கர்

நாகரிகம் அடைதல் என்பது பண்படைதலே. அதுவே உண்மையான நாகரிகமடைதலாகும், ஆழ்ந்த நோக்கில் அன்பு நிலையே பண்படைந்த நிலையாகும். அன்பின் வெளிப்பாடு அகிம்சை எனப்படுகின்றது. அகிம்சை மட்டுமன்று, அடுத்தவரின் நலனில் அக்கறை கொண்டு செயல்படுவதுமாகும். அன்புடைமை ஏனையோரின் முன்னேற்றத்தில் ஆர்வமுடைமையையும் தாண்டி தனது கடமையாகவும் காண்பதே அன்பின் உயர்படியாகும். இப்படி உயர்படிக்குரிய குணாம்சமே பண்பட்ட நிலையாகும், இதுவே நாகரிகம் அடைந்த நிலையெனலாம்.

சமய வரலாற்றுச் சின்னங்கள் பெரிய அளவில் இலங்கையில் காணப்பட்டாலும் அடுத்தவரை அழித்த போர்ச் செயற்பாடுகளே இலங்கையின் வரலாறாக உள்ளது. இப் போர்கள் தற்காப்புப் போர்கள் அல்ல, மாறாக ஆணவத்தின் போர்களாகும் இவற்றையே இலங்கையின் நாகரிகமாக இது வரைகாலம் பார்க்கிறோம்.

இயற்கையின் போக்கு என்பது வளர்ச்சிக்குரியதாகும். கூர்ப்படைதல் என்பதும் வளர்ச்சி நிலையை சுட்டுகின்றது. "தக்கன பிழைத்தல்" என்ற கூர்ப்பு சார் கூற்றில் திறமை என்பதை விட உயரிய நிலையை அடைதல் என்பதே தொனிப் பொருளாக உள்ளது. உயரிய நிலையை அடைபவர்களே வாழ்வுக்கு தேர்வு செய்யப்படுவர். இதன் இறுதி உயர்நிலையே புத்த பகவானின் "உன்னத மனிதம்" எனும் நிலையாகும்.

"உன்னத மனிதம்" எனும் நிலையை நோக்கியே இயற்கை எம்மை உந்துகின்றது. எனினும் எம்மிடம் "முயற்சி" இல்லையேல் அதை அடைய முடியாது. மனித முயற்சி தேவைப்படும் ஒரே ஒரு இடம் இதுவே, ஞானிகளின் துணிவும் அதுவே. சித்தார்த்தனும் முயற்சியினூடாகவே கௌதம புத்தர் எனும் பிரேமை சொரூபமான உன்னதமனிதம் எனும் நிலையை அடைந்தார்.

இயற்கையின் கூர்ப்பில் "பிரிவடைதல்" எனும் படிநிலை எற்படுகின்றது. இருபால் அங்கியாக தொடங்கி வளர்ச்சியடைதலில் ஆண், பெண் பால் அங்கிகளாக பிரிவடைகின்றது. மனிதர்கள் ஒரே குழுமமாக தொடங்கி வளர்ச்சி நிலையில் பல குடும்பங்களாக பிரிகின்றனர். உற்று நோக்கினால் இவை பயனுள்ள வினைத் திறனை தருகின்றன.

இருவரின் நன்மை கருதியோ, அடுத்தவரின் நன்மை கருதியோ பிரிவை ஏற்று கொள்ளல் என்பது வளர்ச்சியடைந்த, பண்பட்ட நாகரிகம் அடைந்த அகிம்சை நிலையாகும். இதன் எதிர்நிலை அடுத்தவரின் சுயத்தை மறுத்தலாகும். அது அகிம்சையின் எதிர் நிலையாகும்.

இலங்கைத் தீவு இரண்டாக செயற்படுதல் சிங்களவருக்கு லாபமாகவும், தமிழருக்கு நட்டமாகவும் காணப்படுகின்றது. இதனை நான் முன்னரும் குறிப்பிட்டுள்ளேன்.

இங்கு சேர்ந்து வாழ்வதற்கான விருப்பம் காணப்படவில்லை. எனவே தனித்து வாழ விடுதலில் பயம் ஒன்றே காரணமாக வருகின்றது. இதனைப் பாதுகாப்பின்மையாக உணர்வதாகவும் குறிப்பிடலாம்.

பார்வையில் பாதுகாப்பின்மை உணர்வு அர்த்தமற்றதாகவும் இருக்கலாம். ஆனால் இங்கு அர்த்தமுடையதாகவே அது பார்க்கப்படுகிறது. அடுத்தவரின் வரலாற்றுக்கால செயற்பாட்டையும், திறமையுடன் தீங்கிழைத்த செயலின் விளைவையும் கருத்தில் கொள்ளும் போது பாதுகாப்பின்மை உணர்வு அர்த்தமுடையதாகின்றது. சேர்ந்து வாழ்தலில் உரிமை வழங்க மறுத்தலிலும், தனித்து வாழவிட மறுப்பதிலும் பாதுகாப்பின்மை உணர்வே தொக்கி நிற்கின்றது. இதன் அடியோட்டத்தில் நல்லிணக்கம் அற்ற நிலையும் இழைந்துள்ளதைத் தெளிவாகக் காணலாம்.

"நடைமுறை யதார்த்தம் மிகப்பெரிய உண்மையை வெளிப்படுத்தும். கடந்த பல நூற்றாண்டுகளாகவும், சுதந்திரத்திற்கு முந்திய கால கட்டமும் நல்லிணக்கம் அற்ற நிலையையே வெளிப்படுத்துகின்றது. கடந்த மூன்று வருட செயற்பாடுகளும் காட்டுவதும் இதையேயாகும். அதனாலேயே "அர்த்தமுள்ள நல்லிணக்கம்" காணப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. பாதுகாப்பின்மை உணர்வு இருக்கும் வரையில் நல்லிணக்க நகர்வு சாத்தியம் [illegible] முடிவாகும்.

குடும்பங்கள் ஒரு சமூகமாக சேர்ந்தியங்குவதின் பரஸ்பர நன்மைகள் தெளிவாகுவதால் தனித்துவம் கெடாத ஒருங்கிணைந்த வாழ்வு அனைத்து குடும்பங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது அமைதியையும், வளர்ச்சியையும், அதனூடான ஒன்றிணைந்த முன்னேற்றத்தையும் உறுதி செய்கின்றது.

> "தற்போது அரசியல் வாதிகள், இராணுவத்தினர், சமயவாதிகள் என்போர் சக சமூகத்தவர்களின் நலன்களை ஏற்றுக்கொள்ளல் சாத்தியமா? அந்த நிலைக்கு அவர்கள் பண்பட்டுள்ளனரா..? நடைமுறை யதார்த்தம் அதற்கு "இல்லை" எனும் பதிலையே தருகின்றது. இதன் காரணமாகவே இரு மிலேனிய காலத்திற்குத் தொடர்ந்த முரண்பாட்டுப் போர்கள் சுதந்திரம் அடைந்த பின்னரும் தொடர்ந்தது. இதன்படி இனிவரும் காலங்களும் இப்படியே அமையும் எனும் விடை வருகின்றது. அப்படி என்றால் இதற்கு தீர்வு காண இன்னொரு வகையினரே வரவேண்டியுள்ளது."

குழுமமாக செயற்பட்டால் இத்தகைய தனித்த ஒருமித்த வளர்ச்சி, முன்னேற்றம் சாத்தியமில்லை.

மேற்கூறிய உதாரணம் பூமி உலகிற்கும் பொருந்துகின்றது.. பல நாடுகளாக கண்டங்களாக இருப்பது உலக வளர்ச்சிக்கும் நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாகின்றது. பண்பட்ட நிலையில் பல நாடுகள் பயனுள்ள விளைவையே தருகின்றன.

"அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு" எனும் நிலைப்பாடு அனைத்து சமூகங்களின் நலன்களும் உறுதிப்படுத்தப்படும் தீர்வாக அமையும் போதே சமாதான வாழ்வுடன் வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படும். அனைத்து சமூகங்களின் நலன்களையும் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ள முன்வருதலே தீர்வுக்குத் தேவைப்படும் பண்பாகும்.

சக சமூகங்களின் நலன் விருத்தியை ஏற்றுக் கொள்ள கூடிய பண்பாட்டு வளர்ச்சியை ஏற்படுத்துவது யார்?. அவர்களே நல்லிணக்கத்தை எற்படுத்தும் தகுதியானவர்கள் ஆவர். தம்மளவில் பண்பட்டவர்களாலேயே சமூகத்தில் பண்பாட்டு வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

தற்போது அரசியல் வாதிகள், இராணுவத்தினர், சமயவாதிகள் என்போர் சக சமூகத்தவர்களின் நலன்களை ஏற்றுக் கொள்ளல் சாத்தியமா? அந்த நிலைக்கு அவர்கள் பண்பட்டுள்ளனரா..? நடைமுறை யதார்த்தம் அதற்கு "இல்லை" எனும் பதிலையே தருகின்றது. இதன் காரணமாகவே இரு மிலேனிய காலத்திற்குத் தொடர்ந்த முரண்பாட்டுப் போர்கள் சுதந்திரம் அடைந்த பின்னரும் தொடர்ந்தது. இதன்படி இனிவரும் காலங்களும் இப்படியே அமையும் எனும் விடை வருகின்றது. அப்படி என்றால் இதற்கு தீர்வு காண இன்னொரு வகையினரே வரவேண்டியுள்ளது.

அவர்கள் யார்? அன்பு நிலையில் அகிம்சையையும், சக சமூக முன்னேற்றத்தையும் தமது கடமையாக வரித்துக் கொண்டோரே அவர்கள். இத்தகையோர் இலங்கைத் தீவில் உள்ளனரா, அவர்களால் சமூக தலைமையை பொறுப்பெடுக்கும் சாத்தியம் உண்டா. தற்கால சமூக அரசியல் சூழ்நிலைகள் இதன் சாத்தியப்பாட்டை உறுதிப்படுத்துகின்றதா? இத்தகைய கேள்விகளுக்கு "ஆம்" எனும் பதில் வந்தால் மட்டுமே அர்த்தமுள்ள காத்திரமான தீர்வு சாத்தியமாகும்.

எமக்கான எமது தீர்வு என்பதே பொருத்தப்பாடாகும். மற்றவர்களின் நலன்களுக்காக ஏற்படுத்தப்படும் "தீர்வு", தீர்வை தரப்போவதில்லை, அது பிராந்திய அமைதியின்மையையும் ஏற்படுத்தும். இந் நிலையில் மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்ளலும், அகிம்சை நிலையும் வல்லரசுகளிடம் எதிர்பார்க்கலாமா? தத்தமது நலன் சார்ந்த அழுத்தங்களை இவை ஏற்படுத்துமா? ஆம் எனின் நமது இருப்பு பாதுகாப்பற்றதாகி விடுமா? இவற்றுக்கான விடைகள் தீர்வு முயற்சியின் தளத்தை தீர்மானிக்கும்.

இத்தகைய சூழ்நிலைகளுக்கூடாக "உண்மையான தீர்வு"க்கான களநிலை உண்டா? அதற்கேற்ப களநிலை என்ன? அவற்றை எவ்வாறு உருவாக்குவது, முன் நகர்த்துவது? என்பன குறித்து கண்டறியப்பட்டு அதற்கான பொறிமுறை வடிவமைக்கப்பட்டதா? இல்லையாயின் எவரால் எப்போது வடிவமைக்கப்படலாம்.

தன் குடும்பியை அடுத்தவனிடம் கொடுப்பதோ, தமக்கான அப்பம் பிரித்தலை குரங்கிடம் கையளிப்பதோ பொறுப்புடைமையும், புத்திசாலித்தனமுமாகுமா? தன்னைத் தன்னால் உயர்த்திக் கொள்ளல் எனும் கீதையின் கூற்று அர்த்தமுடையது அதற்கான செயற்பாட்டில் செயற்படுகின்றோமா? இல்லையெனில் எப்போது?

எமது இருப்பு, வாழ்வியல் சார்ந்த விடயத்தில் எமது சிந்தனையைச் செலுத்துவோம். இப்பிரதேசத்தில் உயிர் வாழ்ந்து இறப்பை சந்திக்காதவர்கள் தீர்வை சிந்திப்பது, முன்வைப்பது, செயல்படுவது தவறாகாது. எமது கருத்துக்கள் தீர்வுக்கு உதவும் வகையில் முன்வைக்கப்படுவதில் தவறில்லை. பொருத்தமான தீர்வை தேர்வு செய்ய அது உதவலாம். அதிக பயனுள்ள தீர்வைக் கண்டு கொள்ள இவை அவசியமாகலாம்.

எமக்குரிய தீர்வு எம்மால் மட்டுமே கண்டுகொள்ளப்பட முடியும், அது எமது கடமையும், பொறுப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலைகளின் காவலனாய் திகழ்பவர்

■வயாவிளான் தவமைந்தன்

## கலாகீர்த்தி சி.மௌனகுரு பற்றிய பதிவுகள்

ஈழத்தின் தமிழ் நாடகத் துறை வரலாற்றின் முன்னோடிகளாக விளங்கும் சிலருள் ஒருவராகவும் மிகச் சிறந்த கூத்துக் கலைஞராகவும் நாடக நெறியாளராகவும் எழுத்தாளராகவும் தமிழர் கலைகளிற்கு உயிரூட்டி வருகின்ற மறுமலர்ச்சியாளனாகவும் எமது கலைத்துறையில் புதுமைகளை ஏற்படுத்தி வருகின்ற புரட்சியாளனாகவும் பேராசிரியர் சு.வித்தியானந்தனோடு பணியாற்றிப் புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்த சாதனையாளராகவும் தமிழர் கலைகளின் காவலனாகவும் ஆய்வாளராகவும் கடந்த ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாக இளமைத் துடிப்போடு கலைப் பணியாற்றி வருபவர் கலாநிதி சி.மௌனகுரு.

மறைந்த கூத்துக் கலைஞரான சின்னையா முத்தம்மா தம்பதியரின் மகனாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அமிர்தகழி, சீலாமுனை என்னும் சிற்றூரில் 09.06.1943இல் இவர் பிறந்தார். அமிர்தகழி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் கற்ற காலத்தில் செயல்திறன் கொண்ட மாணவராக அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கிய இவர் 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமாவையும் கலாநிதிப் பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டவர்.

மட்டு. நகரின் பல பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த இவர் 1966இல் நிரந்தர ஆசிரிய நியமனம் பெற்று கல்முனை சாகிராக் கல்லூரி, உவெஸ்லிக் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் 1983வரை பணியாற்றி அதன் பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் நுண்கலைத்துறைத் தலைவராகவும் கலைப்பீடாதிபதியாகவும் சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரியின் இணைப்பாளராகவும் நீண்ட காலம் பணியாற்றி 2008இல் ஓய்வு பெற்றவர்.

ஆழமான தேடலும் கூர்மையான அறிவும் நீண்ட காலப் பட்டறிவும் கொண்ட பெரும் கல்வியாளனாக விளங்குகின்ற இவரது கலைப்பணியானது ஈழத்தின் கலைத்துறை வரலாற்றில் தனியான, தனித்துவமான இடத்தைக் கொண்டதாகவே விளங்குகின்றது. பாசுபதம் என்னும் கூத்தினூடாக வித்தியானந்தனின் மதிப்பைப் பெற்றுக்கொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்ற காலத்தில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன் போன்ற கலைப்படைப்புக்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து பெரும் புகழைத் தனதாக்கிக் கொண்டார்.

1972இல் இருந்து நான்காண்டுகள் கொழும்பு கல்வி அமைச்சின் பாடநூல் எழுத்தாளராகப் பணியாற்றிய காலத்தில் இலங்கை வானொலியில் சங்கநாதம், கிராமசஞ்சிகை போன்ற நிகழ்வுகளைத் தயாரித்து வழங்கி வந்ததுடன் மெல்லிசைப் பாடல்களையும் எழுதி வந்தார். இந்தக்காலத்தில் அ.தாசீசியசால் தயாரிக்கப்பட்ட புதியதோர் வீடு, கந்தன் கருணை போன்ற நாடகங்களிலும் நடித்து வந்தார்.

1977இல் யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்ற இவர் வீரியம் கொண்ட கலைஞனாக யாழ்ப்பாணத்தில் தனது கலைப்பணியை விரிவுபடுத்திக் கொண்டார். பாடசாலை மாணவர்களிற்கான நாடகங்களை நெறிப்படுத்தி வந்த இவர் யாழ்.நாடக அரங்கக் கல்லூரியின் சங்காரம், அபசுரம், குரு சேத்திரோபதேசம் போன்ற வரலாற்றுப் படைப்புக்களை நெறிப்படுத்தித் தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொண்டார். அத்துடன் 1983இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாபெரும் நாடகப் பயிற்சிப் பட்டறையை நிர்வாகத் திறன் கொண்ட அமைப்பாளராகவும் இருந்து செவ்வனே நடத்தி முடித்தார்.

1992இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது கல்வி, கலைப் பணிகளை தொடர்ந்த இவர் புதியதொரு வீடு, இராவணேசன் போன்ற நாடகங்களை மேடையேற்றியதுடன் இன்னிய அணி, கிழக்கிசை, மேளப் பேச்சு, ஈழத்துத்



## 68

## சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்

தமிழர் நடனம் போன்ற புதிய கலை முயற்சிகளையும் நாடக விழாக்களையும் நடத்தி வந்தார். அத்துடன் மாணவர்களிற்கான நாடகப் பயிற்சிப் பட்டறைகளையும் ஆசிரியர்களிற்கான கருத்தரங்குகளையும் இன்று வரை மனவிருப்புடன் தொடர்ந்து வருகின்றார்.

பதினைந்திற்கும் அதிகமான நாடகங்களைப் புதிதாக எழுதியும் முப்பதிற்கும் மேலான ஆய்வு நூல்களை வெளியிட்டும் நூற்றைம்பதிற்கும் அதிகமான கட்டுரைகளை ஆக்கியும் பரந்து பட்ட அறிவு முதிர்ச்சி கொண்ட பேராசானாக விளங்கும் இவர் எண்பதிற்கும் மேற்பட்ட நாடகங்களை நெறிப்படுத்தியும் ஏராளமான நாடகங்களில் நடித்தும் உள்ளமை மலையென உயர்ந்து நிற்கும் இவரது புகழிற்கான சில எடுத்துக் காட்டுக்கள் ஆகும்.

கலைஞனாக, கல்வியாளனாக மட்டுமல்லாமல் சமூகப் பணிகளிலும் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்ற இந்தக் கலைஞரின் இராவணேசன் என்னும் நாடக ஆற்றுகையானது ஐந்தாவது தலைமுறை வரை இவராலேயே நடத்தப்பட்டு வந்துள்ளமை போற்றுதற் குரியதாகும். ஏராளமான கூத்து அண்ணாவிமார்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தியிருக்கும் இவரது கலைத்துறையின் பொன்னான நினைவுகளும் துறைசார்ந்தோரால் ஆவணப்படுத்தப்பட வேண்டியவையே.


தற்காலத்தில் செந்நெறிக் கலைகளாக விளங்குகின்ற கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் போன்ற கலைகள் எமது மக்கள் மத்தியில் முன்னர் நிலவிய கூத்திலிருந்தும் இனக்குழும இசையில் இருந்துமே தோன்றின. எனினும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பரத நாட்டியமும் கர்நாடக இசையுமே கற்பிக்கப்படுகின்றன. இந்த உயர் கல்வி நிறுவனங்கள் அந்தக் கலைகளின் கருப்பையை மறந்து விட்டன.

1986இல் பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி ஆகியோரின் முயற்சியில் யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் மண்ணின் கலைகளைப் பயிற்றுவிக்கும் முயற்சியானது மேற்கொள்ளப்பட்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை. இங்கே எனக்குக் கிடைத்த அனுபவங்களும் படிப்பினைகளும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழர் கலைகளைக் கற்பிக்கும் நடைமுறைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவின என்றே சொல்ல வேண்டும்.

தமிழரின் அடையாளங்களைத் தாங்கி நிற்கும் கலைகளை இளம் தலைமுறையினரிற்குக் கடத்த வேண்டிய பொறுப்பு யாழ்.பல்கலைக் கழகத்திற்கும் உண்டு எனத் தனது ஆழமான கருத்துக்களை அச்சமின்றிக் கூறுகின்றார் பேராசிரியர் சி.மௌனகுரு.

# அஜீரணத்தை அகற்றும் சாரணை

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்



### சாரணை

*வேறுபெயர் - சத்திச்சாரணை, சாறணை, சாருவேளை, சட்டிக்கீரை, வெள்ளைச் சாரணை, விருச்சிகம்.*
*தாவரவியற்பெயர் Trianthema decandra (றையாந்தீமா டெகண்ட்ரா)*
*குடும்பம்-Aizoaceae (அய்சோசியே)*
*சிங்களப் பெயர்- சாரண*
*சமஸ்கிருதப் பெயர்- புநர்னவா*

சாரணையில் சாதாரண சாரணை, சாருவேளை என்ற பேதங்களுண்டு. சாருவேளையைக் குப்பைச் சாரணை என்றும் அழைப்பர். சாரணை பூண்டினத்தைச் சேர்ந்தது. தனி இலைகள் முட்டைவடிவானவை, தண்டு, இலை என்பன சற்று சதைப்பற்றானது, இலையின் மேற்புறம் கரும்பச்சை நிறம். பூக்கள் வெண்மை, ஊதா நிறம்.

**மலக்கட்டுக்கு**

சாரணை இலையைக் கறியாகச் சமைத்து சாப்பிட்டு வர மலச்சிக்கல், நீர்க்கட்டு, வீக்கம் என்பன நீங்கும்.

**சொறி, சிரங்குக்கு**

சாரணை வேரைக் குடிநீர் செய்து காலை, மாலைபருகிவரசொறி,சிரங்குகரப்பன், குன்மம் என்பன் நீங்கும். சிறுநீரும் நன்கு கழியும்.

**கீல்வாயுக்கு**

சாரணை இலைச்சாற்றுக்குச் சமவளவு நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிப் பூசிவர மாறும்.

**சலக்கடுப்புக்கு**

பசுப்பாலுடன் அரைப்பங்குசாரணையிலைச் சாறு சேர்த்துக் கலக்கிக் குடிக்க சலக்கடுப்பு நீங்கும்.

**மந்தத்துக்கு**

சாரணைவேர், வேர்க்கொம்பு சமஅளவு எடுத்துக் குடிநீர் செய்து குடித்துவர மந்தம், அஜீரணம் என்பன நீங்கும்.

**கை, கால் வீக்கத்துக்கு**

சாரணைவேர், வேப்பம்பட்டை, பேயப்புடோல், சுக்கு, கடுகுரோகணி, சந்தில், மரமஞ்சள், கடுக்காய் என்பன சம அளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை, மாலை1/2 கோப்பை அளவில் பருகிவர கை, கால் வீக்கம், மூட்டு வீக்கம், கரப்பன், மலச்சிக்கல் என்பன மாறும். சிறுநீரும் நன்கு வெளியேறும்.

### மிளகரணை

*வேறுபெயர் - காண்டை, கட்டுமிளகு, மிளகரணை*
*தாவரவியற்பெயர் - ToddaLia asiatica (றேட்டேலியா ஏசியேற்றிக்கா)*
*குடும்பம்- Rutaceae (ருற்றேசியே)*
*சிங்களப் பெயர்- குடுமிரிச*
*சமஸ்கிருதப் பெயர்- தகன*

இது உலர் வலயத்துக்குரிய பற்றைக்காடுகளில் காணப்படும். கொடிவகுப்புக்குரியது. தண்டுகளிலும் இலைகளிலும் வளைந்த முட்களுண்டு. இலைகள்- கூட்டிலைகள் சிறைப் பிரிப்பானவை. முட்டை அல்லது நீள்வட்டமானவை, புள்ளிகள் காணப்படும். பூக்கள் சிறியவை. மஞ்சள் அல்லது வெண்மை நிறம். இதன் இலை, வேர், பட்டை என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

**வயிற்று உபாதைகளுக்கு**

காண்டை இலையைப் பச்சையாக மென்று தின்ன வயிற்றுப்பொருமல், வாய்வு, வேதனை என்பன தீரும்.

**சுரத்துக்கு**

காண்டையிலை அல்லது பட்டையைக் குடிநீரிட்டுக்குடிக்க சுரம் நீங்கும்.

**இரைப்பிருமலுக்கு**

காண்டை வேர்ப்பட்டை, கடுகு ரோகணி என்பன சம அளவில் எடுத்து குடிநீரிட்டு காலை, மாலை குடித்துவர இரைப்பிருமல் முட்டு என்பன மாறும்.

**வீக்கங்களுக்கு**

மிளகரணை வேரை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயிலிட்டுக் காய்ச்சி மூட்டுவாத வீக்கங்களுக்குப் பூசிவர வீக்கம் வற்றும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் பலமுனைத் தாக்குதல்



## திண்டாடும் இலங்கைப் பிரதிநிதிகள்

> "இந்தப் பலமுனைத் தாக்குதலால் இம்முறை ஜெனிவாவில் இலங்கை அரசுக்குப் பெரும் இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

■ அதிரன்

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர் இலங்கை அரசுக்குப் பலத்த நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் அமெரிக்கா, இந்தியா, கனடா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கூட்டாகக் கடும் தாக்குதல் நடத்தியதால் இக்கூட்டத்தொடர் இலங்கைக்கு ஒரு பலப் பரீட்சையாக அமைந்துள்ளது.

குறிப்பாகப் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம், 13ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்வது தொடர்பான விடயம், வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இந்த நாடுகள் இலங்கையைத் துளைத்தெடுத்தன. இதனால் திக்குமுக்காடிப் போனார் இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

இந்த நாடுகளின் கேள்விகளைச் சமாளிப்பதற்கு இலங்கை அரசதரப்பும் கடும் முயற்சி எடுத்ததால், இந்தக் கூட்டத் தொடர் ஒரு போர்க்களம் போல் காட்சியளித்தது. பிரதம நீதியரசருக்கு எதிராக இலங்கை அரசால் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை குறித்து ஐ.நா மனித உரிமைகள் சபையின் முதல்நாள் அமர்வில் அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட்டது.

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை மூலம் இலங்கை அரசு நீதித்துறையில் தலையிட்டுள்ளதாக ஜெனிவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி எலீன் சம்பர்லைன் டோனகே குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் மீள்குடியேற்றம் மற்றும் கட்டமைப்புப் பணிகள் குறித்து அமெரிக்கா கடும் கவலை கொண்டிருப்பதாகவும், அளிக்கப்பட வாக்குறுதிகளையும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜெனிவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி எலீன் சம்பர்லைன் டோனகே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இலங்கை அரசு ஏற்கனவே முன்வைத்த வாதங்களைத் தான் இன்றும் முன்வைத்துள்ளது. புதிய யோசனைகளையோ திட்டங்களையோ முன்வைக்கவில்லை.

இலங்கையில் 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரங்கள் குவிக்கப்பட்டமை குறித்தும், அரசியல் அதிகாரப்பகிர்வு குறித்த இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாதது குறித்தும் நாம் கவலை கொண்டுள்ளோம். முன்பு போர் நடந்த இடங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் அன்றாட வாழ்விலும், பொருளாதார விவகாரங்களிலும் இராணுவத் தலையீடுகள் உள்ளன. 2010 தொடக்கம் அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ளன.

காணாமற்போதல்கள், சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலைகள் போன்ற தீவிரமான மனிதஉரிமை மீறல்கள் தொடர்கின்றன. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் துன்புறுத்தப்படுகின்றனர், தடுத்து வைக்கப்படுகின்றனர், தண்டிக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த நம்பகமான விசாரணைகளோ, சட்ட நடவடிக்கைகளோ இல்லை.

கடந்த 30 நாள்களுக்குள் நீதித்துறைச் சுதந்திரத்தில் அரசியல் தலையீட்டுக்கு எதிராக கேள்வி எழுப்பிய நீதிபதி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தும் சட்டவரைவுக்குச் சவால் விடுத்த அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் கொழும்பில் தாக்கப்பட்டுள்ளார். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்தக் கவலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அமெரிக்கா சில பரிந்துரைகளை முன்வைக்கிறது.

1. பொதுமக்களின் நிகழ்வுகளில் இருந்து இலங்கைப் படையினரை வெளியேற்றுதல், காணாமற்போனோர், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் குறித்துப் பதிலளிப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல், மரணச்சான்றிதழ் வழங்கல், காணி சீர்திருத்தம், அதிகாரப்பகிர்வு, ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குதல் உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. அரசசார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை பொதுமக்களுக்கு அளிக்க வேண்டும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யவேண்டும்.

3. மனிதஉரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வந்து, வெளிப்படைத்தன்மையானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டும்.

4. பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுவதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இலங்கை அரசு நீதித்துறையில் தலையிடுவதை நிறுத்த வேண்டும்." என்று தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்தும் விடயத்தில் கனடா மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகவும், வடமாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது இலங்கை அரசின் கடமை என்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஜெனிவாவுக்கான கனடாப் பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண இலங்கை அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது இந்தியாவின் விருப்பாக உள்ளதாக ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி நபானிற்றா சக்ரவர்த்தி கூறியுள்ளார்.

போரின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்றம், போராளிகளுக்கான புனர்வாழ்வு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மனித உரிமைகளின் மேம்பாடு குறித்து இந்தியா ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி, இலங்கை அரசு வடமாகாண சபைத் தேர்தலை 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் நடத்தும் என்று இந்தியா எதிர்பார்த்துள்ளதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், மனித உரிமைகள் மேம்பாடு குறித்து ஏற்கனவே அளித்துள்ள வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றுமென்று இந்தியா நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில்

தெரிவிக்கப்பட்ட பெருமளவு பொதுமக்களின் இழப்புகளுக்கு காரணமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதனிடையில் இந்தக் கூட்டத் தொடரில் கருத்து வெளியிட்ட ஜெனிவாவுக்கான ஜேர்மன் பிரதிநிதி, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்து ஜேர்மன் கவலை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ஐ.நா மனித உரிமைகள் சபையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தின் முதல்நாள் அமர்வு இலங்கை ஒரு அக்கினிப் பரீட்சையாகவே அமைந்திருந்தது. இந்நிலையில் இலங்கை அரசு ஜெனிவாவில் அளித்துள்ள வாக்குறுதிகள் பொய்யானவை. 'அவற்றை நம்பவேண்டாம் எனச் சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பலமுனைத் தாக்குதலால் இம்முறை ஜெனிவாவில் இலங்கை அரசுக்குப் பெரும் இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை விடயத்தில் உலக நாடுகள் பலவும் கடுமையான போக்கை ஜெனிவாவில் கடைப்பிடிப்பதால் அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரசின் பிரதிநிதிகள் தடுமாறிவருவதாகவும் கூறப்படுகிறது. பிரதான அமர்வுக்கு பக்க அமர்வுகளாக நடைபெறும் கூட்டங்களிலும் இலங்கை அரசு மீது தாக்குதல்கள் தொடுக்கப்படுவதால் பெரும் திண்டாட்டமான நிலையில் இலங்கை அரசின் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் அவரது குழுவினரும் ஜெனிவாவில் விழி பிதுங்கி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறுகின்ற பயணங்கள்

■ சுகந்தன்

"திவிநெகும என்ற ஒரு சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டத்தையே தூக்கி எறிய முற்பட்ட அரசின் செயல் எதிர்காலத்தில் அரசியல் தீர்வை முன்வைக்க காத்திரமான செயலில் இறங்கும் நாட்டம் இல்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.



அந்தத் தெரு வழியாக ஒரு மனிதன் வேயர்த்து விறுவிறுக்க நடந்து சென்று கொண்டிருந்தான்.

பார்ப்பதற்கு ஏதோ நீண்ட தூரப் பிரயாணிபோல காட்சியளித் தான் ஒரு பை நிறைய உணவுப் பொட்டலங்கள் மறுபுறம் போத்தல் நிறையத் தண்ணீர்.

வழியில் ஒரு நபர் எதிர்ப் பட்டார் அவரை அணுகிய அவன் ஏதோ ஒரு இடத்தின் பெயரைக் கூறி அது இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென வினாவி னான்.

அதற்கு அந்த நபரும் 3 மைல் தூரம் இருக்குமெனக் கூறிச் சென்றார். சற்றுப் பெருமூச்சு விட்டபடி தான் எடுத்துவந்து உணவுப் பொட்டலங்களில் சில வற்றை எடுத்து ஒரு காட்டுக் காட்டிவிட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தான்.

வெகுதூரம் சென்றபின் மறுபடி யும் வேறொரு மனிதன் எதிர்ப் பட்டான். அவனிடமும் அதே கேள்வியைக் கேட்டான்.

அதற்கு அந்த மனிதன் இங்கி ருந்து 8 மைல் தூரம் இருக்கும் என்று கூறினான்.

மீண்டும் அவனது பயணம் தொடர்கிறது. உணவுப் பொட் டலங்களும் காலியாகிவிட்டது. மறுபடியும் எதிரே வந்த ஒருவரை மறித்து அந்தக் கேள்வியைக் கேட் டான்.

அதற்கு அந்த மனிதன் இங் கிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் அந்த இடம் இருப்பதாகக் கூறினான்.

இவனும் மீண்டும் தனது பய ணத்தைத் தொடர்ந்து கொண்டிருக் கிறான். ஒரு கட்டத்துக்கு மேல் அவனால் நடக்கவே முடியவில்லை.

இதை வாசிக்கும் போது தாங் கள்மனதில்எழும் கேள்வி புரிகிறது. எப்படி தூரம் கூடும், வழிப்போக் கர்கள் தவறாக சொல்கிறார்களா? ஆனால் அவ்வாறு இல்லை இந்த முட்டாள் தனது இலக்கிலிருந்து எதிர்த்திசையில் முழு வீச்சோடு தனக்கு தோன்றுகின்ற திசையில் நடந்து கொண்டிருக்கிறான்.

வழிப்போக்கர்களிடம் அரை குறையாக வினவிவிட்டு அவசர அவசரமாக திசைமாறிச் செல்வது அவனுக்கே புரியவில்லை.

இந்தக் கதைக்கும் தமிழர்களது அரசியல் தீர்வு நகரும் திசைக்கும் ஏதேனும் தொடர்புகள் இருக்கின் றன போலவே தெரிகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இன்றுவரை பெரும்பான்மை இனத்தவர்கள் வசம் குவிந்துள்ள அதிகாரங்கள் மூலம் அவர்களது செயற்பாடுகள் சிறுபான்மையினரை நசுக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

எனவே எங்களை நாங்கள் ஆளக்கூடிய விதத்தில் சிறுபான் மையினத்தவர்களுக்கும் அதிகா ரங்களைப் பகிர்ந்து வழங்க வேண்டுமென்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அவற்றுக்குச் சிறிது செவிசாய்க்காத பேரினவாதம் சிறு பான்மையினர் மீது தனது அடக்கு முறைகளை வலிந்து திணித்துவரு கிறது. இந்த அடக்கு முறைகள் கார ணமாக ஆயுதப் போராட்டம் தோற்று விக்கப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் தலை யிட்ட இந்தியா மத்தியில் குவிக் கப்பட்டுள்ள அதிகாரத்தை பகிர்ந் தளிக்க வேண்டுமென 13 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவர வழிகோலியது.

இந்தப் 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் இலங்கையில் மாகாண சபைகள் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் இதில் மாகாண சபை களுக்கான முக்கியமான காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற எவையும் உள்ளடக்கப்படவில்லை.

இதனால் எமக்குரிய தீர்வாக இது அமையாது எம்மை நாமே ஆளக்கூடிய வகையில் அதிகா ரங்களை பகிர்ந்தளிக்கக்கூடிய தீர்வை முன்வைக்க வேண்டு மெனத் தமிழ் கட்சிகள் போராடி வருகின்றன.

ஆனால் அரசு இப்போது தான் யுத்தம் நிறைவடைந்து நாடு மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. படிப்படியாக தீர்வை முன்வைப்போம். எடுத்த எடுப்பில் எதையும் செய்துவிட முடியாதென வெளிநாடுகளுக்கு கூறிவரு வதுடன் தெரிவுக்குழு அமைத்துப் பேசியே முடிவெடுக்க வேண்டும். எனவே அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேண்டு மெனக் கூறியே தனது காலத்தை அரசு நகர்த்தி வருகிறது.

மறுபுறத்தில் உலகநாடுகள் இலங்கை அரசுக்கு உரிய அழுத் தத்தை வழங்கி தீர்வைப் பெற் றுத் தருமென தமிழர்கள் இலவு காத்த கிளியாக காத்துக்கிடக் கின்றனர்.

இது இவ்வாறிருக்க அரசு கடந்த மாதம் திவிநெகும எனப் படும் சட்டமூலத்தை கொண்டு வந்தது. அதை நிறைவேற்ற வேண்டு மானால் மாகாண சபைகளிடம் அனுமதி பெற வேண்டிய ஒரு இக் கட்டு நிலை அரசுக்கு ஏற்பட்டது.

காரணம் மாகாண சபைகளுக்கு கீழ் இருக்கும் சமுர்த்தி அதிகார சபை கந்துரட்ட அதிகார சபை, தெற்கு அதிகார சபைகள் போன் றவற்றின் அதிகாரங்கள் "திவிநெ கும" சட்டமூலம் நிறைவேறி னால் மத்திய அரசில் அதுவும் ஒரு அமைச்சுக்குக் கீழ் சென்றுவிடும்.

திவிநெகும எனும் வாழ்வெ ழுச்சித் திட்டத்தின் மூலம் நன்மை கள் இருக்கிறது. ஆனால் தலை கீழாக நின்றாலும் மாகாண சபை களின் அதிகாரம் எள்ளவும் குறைக் கப்படுவதைத் தாம் அனுமதிக்க மாட்டோம் என்கிறது தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு.

தனது சட்டமூலத்தை நிறை வேற்ற விடாமல் முட்டுக்கட்டை யாக இருக்கும் 13 ஆவது திருத் தத்தையே ஒட்டுமொத்தமாக இல்லா தொழிக்க வேண்டுமென்ற கோஷங் கள் தற்போது அரச தரப்பிட மிருந்து வலுத்து வருகிறது.

மாகாண சபைகளுக்கு, மேலதிக அதிகாரங்களை வழங்கி அதிகாரப் பகிர்வு கிடைக்கும், உலக நாடுகள் பெற்றுத்தரும் என்று இருந்த தமிழர் தரப்புக்கு கடைசியில் 13 ஆவது திருத்தத்தையும் பறிகொ டுப்பதா. தீர்வாக கிடைக்கப் போகிறதென்ற கேள்வியே நம் மத்தியில் எழுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந் தியா எந்தவித அழுத்தத்தையும் தமக்கு வழங்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ். இந்திய நாளிதழுக்கு வழங் கியுள்ள செவ்வியொன்றில் தெரி வித்துள்ளார். ஆக மொத்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தமி ழருக்கும் இடையிலான பயணத் தூரம் ஆர்முடுகிக்கொண்டே செல் வதாகத் தெரிகிறது.

இதேவேளை 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் யோசனை பிழையானது. 13 ஆம் திருத்தச் சட்டத்திலுள்ள குறை பாடுகளை இனங்கண்டு அவை நிவர்த்தி செய்யப்படுவதுடன் காத்திரமான ஓர் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதுடன் கிராம மட் டங்களில் அந்த அதிகாரப் பகிர்வு அமைய வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரி வித்துள்ளார்.

அமைச்சர்களான திஸ்ஸவி தாரண, வாசுதேவ நாணயக்கார மற்றும் டியூகுணசேகரா ஆகியோ ரின் இதுபோன்ற கருத்துக்களை அரசு நிதானமாக கேட்டுச் சிந் தித்துச் செயற்படுமா அல்லது மேலே கூறப்பட்ட கதையில் வரும் மனிதனைப் போல அவசர முடி வில் திசைமாறிப் பயணிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திவிநெகும என்ற ஒரு சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டத்தையே தூக்கி எறிய முற்பட்ட அரசின் செயல் எதிர்காலத்தில் அரசியல் தீர்வை முன்வைக்க காத்திரமான செயலில் இறங்கும் நாட்டம் இல்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.

இதை நன்கு உணர்ந்து இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் அரசியல் தீர்வு தொடர்பில் தமது காய்களை எவ்வாறு நகர்த்தப் போகின்றன என்பதே இன்றைய கேள்வியாகும்.

# நீதிக்கே நீதியில்லையா..?

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை அந்தப் பதவியில் விருப் பப்பட்டு அமர்த்தியவரே ஜனாதிபதிதான். ஆனால் அதிகாரம் நினைத்த திசையில் நீதியின் தராசை வளைக்க ஷிராணி இடங்கொடுக்கவில்லை. இதற்கு முன்னரும் தனக்குச் சார்பாக நீதியை வளைக்க ஜனாதிபதி முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குற்றம்சாட்டியுள்ளார்.

"ஒரு வழக்கில் மஹிந்தவை நான் விடுதலை செய்ததால் தான் இன்று அவர் ஜனாதிபதியாக முடி சூடிக்கொள்ள முடிந்தது" என்று எந்த வெட்கமும் இல்லாமல் நீதியை மஹிந்தவுக்காக அடகு வைத்த கதையை சரத் என் சில்வா போட்டு உடைத்திருக்கிறார். ஆனால், ஷிராணி அப்படியல்ல, அவர் சரத் என் சில்வாவைப்போல சுடலை ஞானம் வந்து தத்துவம் பேசாமல், நிகழ்கணத்தி லேயே தன் கைகளில் கறை படியாமல் பார்த்துக் கொள்ளவே விரும்பினார். அதற்குப் பரிசே அவரது பதவியைப் பறிக்கும் முயற்சிகளும், அதன் விளை வாக வந்துள்ள பிரேரணைகளும்.

அறம் பிழைத்த நாட்டில் அறமே கூற்றாக மாறும். இதற்கு புராணங்கள் முதல் கிட்டியகாலம் வரை நிறைய உதாரணங்கள் உண்டு. தனக்கு எதிராக கருத்துத் தெரிவித்தமைக்காக உயர் நீதிமன்ற நீதிபதியின் பதவியைப் பறித்த மாலை தீவு ஜனாதிபதி, தன்னுடைய கதிரையைப் பறிகொடுக்க வேண்டியிருந்தது.

அதேபோன்று பாகிஸ்தான் ஜனாதிபதியும் உயர் நீதிமன்றத்தோடு [illegible] பிடித்ததால் தன்னுடைய பதவிக்கு எப்போது முற்றுப்புள்ளி விழப்போகிறதோ என்று நிம்மதியின்றி ஏங்கிக்கொண்டிருக்கிறார். தன்னுடைய மிக நெருக்கமான நட்பு நாடுகளான மாலைதீவு, பாகிஸ்தான் போன்றவற்றின் ஜனாதிபதிகள் செய்த தவறையும் அதனால் எழுந்த விளைவையும் கண்முன் கண்ட பின்னும் நீதித்துறையோடு சண்டித்தனம் செய்வதிலேயே குறியாக இருக்கின்றனர் இலங்கையின் ஆட்சியாளர்கள். யார் கண்டது, கெடுகாலம் வந்துவிட்டால் கண்ணும் அறிவும் கெட்டுவிடுமாம். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ் காரம் செய்வதால் எதுவும் நடக்கப்போவதில்லை. நீதி தேவதையே தனக்கு நீதிகோரி [illegible] இலங்கைத் திருமணி நாட்டில் மட்டுமே நிகழும் அதிசயம். நடப்பதை எல்லாம் கைகட்டிக்கொண்டு, பார்ப்பது மட்டுமே எம்மால் முடிந்த காரியம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாய்ப் பேச்சும் நாய்படாப் பாடும்



“ பத்திரிகையாளர்களையே சந்திக்காத, தனது எந்த செயலுக்கும் பத்திரிகைகளிடம் பதில் சொல்லாத ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்களும் இருக்கும் தமிழகத்தில் தான் மட்டும் ஏன் கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டும் என்று விஜயகாந்த் நினைத்தால் அதில் எல்லா நியாயமும் உண்டு. எனினும் ஒரு கௌரவமான எதிர்க்கட்சித் தலைவராக விஜயகாந் பயன்படுத்திய சொற்களை ஏற்றுக் கொள்ளமுடியாதவை.

■ தகனன்

மக்களுடனும் கடவுளுடனும் தான் கூட்டணி என்ற கோசத்துடன் அரசியலுக்கு வந்தவர் நடிகர் விஜயகாந். 2006 தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து அவரது கட்சியான தே.மு.தி.கவின் செல்வாக்கு உயரத் தொடங்கியது. தொடர்ந்து வந்த தேர்தல்களிலெல்லாம் தே.மு.தி.கவின் வாக்குவங்கி அதிகரித்த வண்ணமே இருந்தது. ம.தி.மு.க., பா.ம.கபோன்ற கட்சிகள் அரசியல் பின்னடைவை சந்தித்த நேரம் விஜயகாந்தின் கட்சி மாற்று சக்தியாக பார்க்கப்பட்டது. தே.மு.தி.க. தமிழகத்தின் மூன்றாவதுபெரும் கட்சியாக, ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்தது.

எனினும் கடந்த 2011 சட்டமன்றத் தேர்தலில் பல சர்ச்சைகளுக்கு மத்தியில் அ.தி.முக.வுடன் கூட்டணிவைத்துக் கொண்டதே. மு.தி.க 29 ஆசனங்களை கைப்பற்றிக்கொள்ள விஜயகாந் எதிர்க்கட்சி தலைவராக பதவியேற்றார். தேர்தலுக்கு முன்னர் இரு தலைவர்களும் சந்தித்துக் கொள்ளவில்லை. தேர்தலில் ஒரேமேடையில் இவர்கள் பிரசாரம் செய்யவும் இல்லை. தேர்தல் முடிந்தகையோடு இரு கட்சித் தலைவர்களும் நேருக்குநேர் மோதத் தொடங்கினர். சட்டமன்றத்தில் அநாகரிகமாக நடந்து கொண்டதற்காக விஜயகாந் சட்டமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். இதன்போது பேசிய ஜெயலலிதா ''உங்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டதற்காக வெட்கப்படுகின்றேன், வேதனைப்படுகின்றேன்'' என்றார்.

தே.மு.தி.க எப்போதுஅ.தி.மு.கவுடன் கூட்டணிஅமைத்துக் கொண்டதோ அன்றிலிருந்தே. மு.தி.க. வின் செல்வாக்குபடிப்படியாகச் சரியத் தொடங்கியது. தே.மு.தி.கவை பலவீனப்படுத்தும் திட்டங்களை ஜெயலலிதா வகுத்து செயற்படுத்த தொடங்கினார். அதில் அவர் வெற்றியும் கண்டுவருகின்றார். தற்போது தே.மு.தி.க. உறுப்பினர்களை அ.திமு.க. பக்கம் வளைத்துப் போடும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி தே.மு.தி.கவைச் சேர்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களான தமிழரசன் மற்றும் சுந்தர்ராஜன் ஆகிய இருவரும் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து அ.தி.மு.கவுடன் இணையவிருப்பம் தெரிவித்திருந்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டு நாள்கள் கழிந்தநிலையில் சினிமாத் துறையில் ஆரம்பகாலத்தில் இருந்தே விஜயகாந்துடன் நட்பாக இருந்த பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருண் பாண்டியனும் ராதாபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பனர் மைக்கேல் ராயப்பனும் ஜெயலலிதாவைச் சந்தித்து அ.தி.மு.கவிற்கு ஆதரவு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து தே.மு.தி.கவைச் சார்ந்த மேலும் 10 சட்டமன்ற உறுப்பனர்கள் அதிமுகவில் இணைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச் சம்பவங்கள் விஜயகாந்துக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்துள்ளன.

கடந்தவாரம் கப்டன் சென்னையிலிருந்து மதுரை செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்ததுமே செய்தியாளர்கள் அவரை மொய்க்கத் தொடங்கினர். அதில் தனியார் தொலைக்காட்சி ஒன்றைச் சேர்ந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் பாலுஎன்பவர் இது குறித்து கேள்வி எழுப்ப சட்டென கோபமடைந்த விஜயகாந் ''போய்யா.. போய்.ய்யா'' என்று கடுப்பாக மிரட்டினார்.

பின்னர் மைக்குகளை நீட்டிக் கொண்டிருந்த பத்திரிகையாளர்களிடம் வந்த அவர், ''நாட்டுல எவ்ளோ பிரச்சனை.. மின் வெட்டை பத்தி பேசலாம்.. டெங்குவை பத்தி பேசலாம். அதை விட்டுவிட்டு..'' என்று கூறிக் கொண்டிருந்தவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டனர் பத்திரிகையாளர்கள். இதில் ஆவேசமடைந்த விஜயகாந்த், ''போய் ஜெயலலிதாவை கேளுய்யா. போய் அங்கெல்லாம் கேளுய்யா'' என்று ஆக்ரோஷமாக கூறியதுடன் தனது படங்களில் பாகிஸ்தான் தீவிரவாதிகளை மிரட்டுவதுபோல ''அடிச்சிருவேன்'' என்றும் கையை ஓங்கியபடிவிமான நிலையத்துக்குள் நுழையமுயன்றார்.

அப்போது பத்திரிகையாளர் பாலு மீண்டும் கேள்வி எழுப்ப., ''நாய்.. நாய்களா... வந்துட்டாங்க.. உங்க கம்பெனியா சம்பளம் கொடுக்குது.. பேட்டிகொடுக்க...'' என்று ஆவேசமாகக் கூறியபடியே சென்றார். அப்போது செங்கல்பட்டு தொகுதி தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் அனகை முருகேசன் அந்த பத்திரிகையாளரைத் தடுக்க அவர் கீழே விழுந்ததால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியார் தொலைக்காட்சி நிருபர் பாலு, சென்னைவிமான நிலைய பொலிஸில் புகார் செய்தார். இந்நிலையில் நேற்று விஜயகாந்த் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர் அனகை முருகேசன் ஆகிய இருவர் மீதும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டுதல், 294 (ப),கொலைமிரட்டல் , 506 (2), கையால் தாக்குதல், 323 தள்ளிவிடுதல், 341 ஆகிய 4 பிரிவுகளில் பொலிஸார் வழக்கு பதிவுசெய்தனர்.

இந்த வழக்குக்கு விஜயகாந் முன் ஜாமீன் பெற்றிருந்ததால் கைதுசெய்யப்படாமல் தப்பித்தார். ஆனால் அவரதுகட்சி உறுப்பினர் அனகைமுருகேசனை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர். இதனால் தமிழகத்தில் தே.மு.தி.கவினர் ஜெயலலிதாவின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


''நாயே.. அடிப்பேன்'' என்று செய்தியாளர்களை நோக்கி கூறியதற்காக விஜயகாந்த் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று பத்திரிகையாளர் சங்கத்தினர் கோரிக்கை வைத்துவருகின்றனர்.

பத்திரிகையாளர்கள் தமிழகத்தில் தொடர்ந்துதாக்கப்படும் தமிழக சூழலில் இந்தத் தாக்குதல் வன்மையாக கண்டிக்கத் தக்கது. தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியிலிருந்துபலஎம்.எல்.ஏக்கள் கட்சி மாறக்கூடிய சூழலில் அந்தக் கட்சியின் தலைவருக்குபதில் சொல்லவேண்டிய எல்லாதார் மீகபொறுப்பும் இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் ஊடகங்கள் நேரடியாக அரசியல் கட்சிகளால் நடத்தப்படுகின்றன. பலசமயங்களில் ஒருகட்சியின் பிரதிநிதிகளாகத்தான் ஊடகங்கள் செயல்படுகின்றன என்கிற கசப்பான உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

பத்திரிகையாளர்களையே சந்திக்காத, தனது எந்த செயலுக்கும் பத்திரிகைகளிடம் பதில் சொல்லாத ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்களும் இருக்கும் தமிழகத்தில் தான் மட்டும் ஏன் கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டும் என்று விஜயகாந்த் நினைத்தால் அதில் எல்லா நியாயமும் உண்டு. எனினும் ஒரு கௌரவமான எதிர்க்கட்சித் தலைவராக விஜயகாந் பயன்படுத்திய சொற்களை ஏற்றுக் கொள்ளமுடியாதவை.

ஆனாலும் விஜயகாந் ஜெயலலிதா மோதல் தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்த நிலையை விஜயகாந் எப்படி சமாளிக்கப் போகிறார்? ஜெயலலிதாவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்பதுஅடுத்தசில வாரங்களில் தெரிந்துவிடும்.

## மிகுந்த சோகமானவள்...



(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு நாட்டவரும், ஊடகங்களும் அவளைத் தேடின. நியூயோர்க்கை சேர்ந்த ஒரு ஊடகத்துக்கு அவளைப்பற்றிய தகவல்கள் கிடைத்தது. எப்படியோ தொடர்பு கொண்டு மலாலா பற்றிய ஆவணப்படம் ஒன்றை அந்த ஊடக நிறுவனம் சுடச்சுட தயாரித்து வெளியிட்டது. அந்த ஆவணப்படத்தோடு மலாலா பாகிஸ்தானின் பட்டிதொட்டியெங்கும் உச்சரிக்கப்பட்டாள். தொலைக்காட்சி, நாளிதழ்கள். சஞ்சிகைகள் அனைத்திலும் அட்டைப்படமானாள். பேட்டிகள் கொடுத்தாள். இவளின் இந்த தீவிர அமைதி சார் நடவடிக்கைகளுக்காக சர்வதேச அமைத்திக்கான குழந்தைகள் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டாள். பாகிஸ்தான் அரசும் தேசிய குழந்தைகள் விருதை வழங்கியது.

**தீவிரவாத்தின் இலக்கு மனித நேயம்**

இதையெல்லாம் தலிபான்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். தமது வன்முறைகளை மலாலா வெளிச்சமிடுவதை வெறுத்தனர். அவர்களின் கண் அவளில் விழுந்தது. அவளும் தாக்குதலுக்கு இலக்கானாள். கொன்று விடுவது என முடிவெடுத்தார்கள்.

கடந்த மாதத்தின் இரண்டாம் திகதி அவளுக்கான மரண நாள் குறிக்கப்பட்டது. அன்றைய நாள் தலிபான்களின் குழுவொன்று அவளின் பள்ளிக்கு சென்றது. மலாலாவைத் தேடிக் கண்டுபிடித்தது. அவளின் கழுத்திலும், தலையிலும் சரமாரியாக சுட்டனர். அந்த இடத்திலேயே வீழ்ந்தாள். ஆனால் உயிர் பரிந்துவிடவில்லை. அவர்களுக்கு தெரியாமலேயே அவளிடம் கொஞ்ச உயிர் மீதியாயிருந்தது. அனைத்து ஊடகங்களிலும் அவள் சுடப்பட்ட செய்தி வந்தது. அமைதிப் பிரியர்கள் கொதித்தனர். மலாலாவுக்காக பிரார்த்தித்தனர். போராடினர். முதலில் ராவில்பண்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாள். வைத்தியசாலைக்கு முன் கூடிய மதத் தலைவர்கள், அவளுக்காக கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அவளுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்பட்டது. அதற்கு பிரிட்டன் உதவியது. விமான அம்புலன்சில் லண்டன் அழைத்து செல்லப்பட்டாள். அங்குள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க புதிய அதிபர் யார்....



## நாளை மறுநாள் முடிவு

■ ரெங்கன்

இன்னும் இரண்டு நாள்கள் அதாவது நாளை மறுநாள் உலகம் முழுவதுமே எதிர்பார்க்கின்ற அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கிறது.

பொதுவில் பதவியில் இருக்கும் அமெரிக்க ஜனாதிபதியானவர் முதல் தடவை மக்கள் கவனத்தை நல்ல மாதிரியாக கவர்ந்து நல்லாட்சியை வழங்கியிருப்பாரானால் அவரை இரண்டாவது தடவையும் தெரிவு செய்து பதவியில் அமர்த்தி விடுவார்கள் அமெரிக்க மக்கள்.

அதற்கு தேர்தல்தான் நிலைக் கண்ணாடி. பதவியில் இருக்கும் அதிபர் தமக்கு இன்னுமொரு தடவை சந்தர்ப்பம் தாருங்கள், முதலில் ஆரம்பித்த வேலைத் திட்டங்களை முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன் என்பதாக, முதல் நான்கு ஆண்டு காலத்தில் தாம் சாதித்தவைகளையும், சாதிக்க ஆரம்பித்தவைகளையும், இனி சாதிக்கப் போகிறவைகளையும் மக்கள் முன்வைத்து வாக்குக் கேட்பார்கள்- அதைத்தான் இப்போது பராக் ஒபாமா செய்து கொண்டிருக்கிறார்.

அதேநேரம் பதவியிலிருந்த அதிபர் செய்த தவறுகள், அவர் முன்வைத்த கொள்கைகளின் கோணங்கள், இனிமேலும் அவர் தொடர்ந்து பதவியில் இருந்தால் ஏற்படப்போகும் பாதக விளைவுகள் பற்றி மட்டுமன்றி தாம் பதவிக்கு வந்தால் என்ன செய்வார், நாட்டை எந்த வகையில் முன்னேற்றுவார், அதற்கான தமது கொள்கைத் திட்டம் என்ன என்பதை விளக்கி தமக்குவாக்களிக்கும் படி கோரிநிற்பார் எதிர்த்து நிற்கும் வேட்பாளர். அதைத்தான் இப்போது மிட் ரோம்னி செய்து கொண்டிருக்கிறார்.

பராக் ஒபாமா ஜனநாயக கட்சி வேட்பாளராகவும் மிட் ரோம்னி குடியரசு கட்சி வேட்பாளராகவும் போட்டியிடுகிறார்கள்.

இரண்டு வேட்பாளர்களுமே நாடு முழுவதும் தீப்பறக்கும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

அமெரிக்க அதிபரானவர் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவதில்லை. 538 பேர் கொண்ட தேர்தல் குழுவே அதிபரையும், துணை அதிபரையும் தெரிவு செய்யும். இந்தத் தேர்தல் குழுவின் 270 பேராளர்களின் வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அதிபராக தெரிவுசெய்யப்படுபவராவார். அவ்வாறு எந்த வேட்பாளரும் வாக்குகளைப் பெறாது போனால் மக்கள் பிரதிநிதிகள் சபையே புதிய அதிபரைத் தெரிவு செய்யும்.

ஒபாமாவுக்கு முன்னர் பதவியில் இருந்த ஜோர்ஜ் டபிள்யு.புஷ் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவரே.

**பெண் வாக்காளர்களை தம் பக்கம் இழுக்க...**

போட்டியிடும் இரு கட்சி வேட்பாளர்களிலும் எவரை தெரிவு செய்ய வேண்டும் என்பது குறித்து இன்னமும் முடிவொன்றுக்கும் வராதிருக்கும் வாக்காளர்களின் ஆதரவைத் தம் பக்கம் சாய்த்துக் கொள்வதிலேயே தற்போது இரு வேட்பாளர்களும் கருத்தை செலுத்தி வருகிறார்கள் என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

குடியரசுக் கட்சியின் வேட்பாளரான மிட் ரோம்னிக்கு ஆதரவு பெருகிவருவதாக அந்தக் கட்சியினர் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் மிட் ரோம்னிக்குப் பாதகமாக அமையலாம் என்று கூறப்படுகின்றது.





தீர்மானிக்கும் சக்தி பெண்கள் கையில்?

உலக நடப்புகள் ஒரு பார்வை

அமெரிக்க செனெட் சபைக்கான குடியரசுக் கட்சி வேட்பாளர் றிச்சர்ட் மஷர் டொக்ஸ் என்பவர் கர்ப்பிணித்தன்மை மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து அமெரிக்க பெண்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கருத்தரங்கொன்றில் அவர் பேசியபோது பாலியல் வல்லுறவு நிலையில் ஒருவரின் வாழ்வு உருவாகிறதென்றால் அது கடவுளின் விருப்பத்தின்படி நிகழ்ந்த ஒன்று என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்து பல பெண்களின் மனங்களை ரோம்னிக்கு எதிராக மாற்றியிருப்பதாக கூறப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் பெரும்பாலும் பெண்களின் வாக்குகளே முடிவை தீர்மானிக்கும் வாக்குகளாகஇருக்கும் என்று கருதப்படுகின்றது. சுகாதாரம் மற்றும் கருத்தடை போன்ற விடயங்களில் வேட்பாளர்களின் கொள்கைகள் பெண்களை அதிகம் பாதிப்பதாக இருக்கும்.

அமெரிக்க தேர்தல்களில் 53 வீதம் பெண்களாய் இருக்கின்றனர். வாக்களிப்பிலும் ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிகமாக கலந்து கொள்கின்றனர். எனவே தேர்தல் முடிவு அவர்களின் முடிவிலேயே தங்கி இருக்குமென்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

அமெரிக்காவில் பொருளாதார பிரச்சினை இப்போது முதல் இடத்தை வகிக்கிறது என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அரசு சமூக அபிவிருத்தி விடயங்களிலேயே அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பது பெரும்பாலான பெண்களின் விருப்பம். இதனையே ஒபாமாவும் விரும்புகிறார். இந்தக் கொள்கையை மிட் ரொம்னி எதிர்த்து நிற்கின்றார்.

2008 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் 56 பெண்களின் வாக்கு பராக் ஒபாமாவுக்கு கிடைத்திருந்தது.

பெண்களின் பொருளாதார சீரமைப்பு மற்றும் சுகாதார நல்வாழ்வு ஆகியவை தொடர்பாக ஒபாமாவின் கொள்கைகளால் பெண்கள் விவகாரங்களில் ஒபாமா நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றார். ஆனால் ஒபாமாவின் இந்தத் திட்டங்களை மாற்றி அமைக்கப் போவதாக ரோம்னி கூறி வருகிறார். திட்டமிட்ட குடும்ப வாழ்வு என்றகொள்கைக்கு அரசு நிதி வழங்குவதை ரோம்னி எதிர்க்கிறார். இந்தத் திட்டமானது கரு அழிப்புக்கு குறிப்பாக வருமானம் குறைந்த பெண்களுக்கு ஆதாரமாக இருந்து வருகின்றது.

**நியுயோர்க் ரைம்ஸ் ஒபாமாவுக்கு ஆதரவு**

பிரபலமான நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை அமெரிக்காவின் புதிய அதிபராக பராக் ஒபாமாவே நீடிக்க வேண்டுமென்பதாக ஆதரவு தெரிவித்து தலையங்கம் தீட்டியுள்ளது.

சுகாதாரத்துறையில் விரைவான சீர் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளார். மேலும் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் தடுத்தார். ஈராக் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். இவைகள் அவர் செய்துள்ள பல நல்ல காரியங்களில் சிலவாகும் எனஅந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அல்குவைதா தலைமைத்துவத்தை நிர்மூலமாக்குவதில், ஒஸாமா பின்லேடனைக் கொன்றது முதற்கொண்டு ஒபாமா நிர்வாகம் தீர்க்கமானமுடிவுடன் செயற்பட்டுள்ளது என்று ரைம்ஸ் பத்திரிகை தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஒபாமா மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவதை நாம் ஆதரிக்கிறோம், அவரது வெற்றியுடன், கொள்கை களுடன் இணக்கமாக செயற்படும் காங்கிரஸ் சபையும் அமையும் என்று கருதுகிறோம் என்று அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

**மிட் ரோம்னிக்கு "ஐஓவா" பத்திரிகை ஆதரவு**

இதே வேளை ஐஓவா பிரதேசத்தின் மிகப்பெரிய பிரபல பத்திரிகை டெஸ் மொயின் ரெஜிஸ்டர் மிட் ரோம்னியே புதிய அதிபராக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளது. நான்கு வருடங்களுக்கு முன் ஒபாமாவை ஆதரித்து நின்ற அந்தப் பத்திரிகை இப்போது மாற்றுக் கருத்தை வெளியிட்டிருப்பது அவருக்கு பாதகமாக அமையலாம் என்று கருதப்படுகின்றது. எமது ஆசிரிய பீடம் அதிபர் தேர்தலை ஆதரிப்பது என்பது குறித்து காரசாரமான விவாதத்தை நடத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை யார் காப்பாற்றுவார், அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவார், வரவு-செலவுத் திட்டத்தை சமநிலையில் நிறுத்துவார் மற்றும் காங்கிரஸ் சபையின் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவார் என்று ஆராய்ந்ததில் மிட் ரோம்னியே சரியான தெரிவு என்ற முடிவுக்கு வந்துள்ளோம் என்று அந்தப் பத்திரிகை எழுதியுள்ளது.

**சிரிய உள்நாட்டுப் போரில் வல்லரசுகளின் முரண்பாடு**

சிரியாவில் போர் நிறுத்தம் ஒன்றை முஸ்லிம்களின் விழாக் காலத்தில் கடைப்பிடிக்க செய்வதற்கு சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பிசுபிசுத்துப்போன நிலையில், சிரியாவில் போராடும் எதிர்த்தரப்பு புரட்சியாளர்கள் அமெரிக்க ஆயுதங்களைப் பாவிப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

அதிபர் பாஷார் அல் அஸாத்தின் படைகளை எதிர்த்துப் போராடும் புரட்சி வாதிகள், தோளில் சுமந்து செல்லும் ஏவுகணை செலுத்திகளையும் பாவிக்கிறார்கள். அவைகளின் அமெரிக்க தயாரிப்புக்களான ஸ்ரிங்கர் ஏவுகணை செலுத்திகளும் உண்டென்று ரஷ்ய இராணுவத் தளபதி நிக்கொலாய் மிக்காரோல் தெரிவித்துள்ளார். அதே சமயம் அல் அசாத்தின் சிரிய அரசுக்கு ரஷ்யாவிலிருந்தே பெரும்பாலான ஆயுதங்களும் தருவிக்கப்படுகின்றன.

அமெரிக்க புரட்சி வாதிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கான கருத்தை வொஷிங்டன் உடனடியாகவே மறுத்துள்ளது. சிரியாவில் அரச படைகளுடன் போரிடும் புரட்சி வாதிகளுக்கு பல நாடுகளில் இருந்து ஆயுதங்கள் கிடைக்கின்றன என்று எமக்கு தகவல் வந்துள்ளது. அவைகளில் தோளில் சுமந்து நிலத்தில் இருந்து விண் நோக்கி செலுத்தும் அமெரிக்க தயாரிப்பான ஸ்ரிங்கர் ஏவுகணைகளும் உண்டு என்று ரஷ்ய தளபதி மக்காரோவ் கூறியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கா வலுவாக நிராகரித்திருப்பதுடன் நிரூபிக்கும்படி ரஷ்யாவைக் கேட்டிருக்கிறது.

ஸ்ரிங்கர் எதனையும் நாம் வழங்கவில்லை, வழங்கப் போவதுமில்லை என்று ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் போர் ஓய்வு தோல்வி கண்ட நிலையில் கடந்த ஞாயிறு அன்று புரட்சிப் படைகள் சிரியாவின் டமஸ்கஸ் நகரின் பல இராணுவ நிலைகளின் மீது கடும் தாக்குதல்களை நடத்தினார்.

அரசபடைகள்புரட்சியாளர்களின் நிலைகள் மீது விமானத்தாக்குதல்களை நடத்தியதை அடுத்து அவர்கள் இத் தாக்குதலை நடத்தினார்கள். அதே போல் டமஸ்கஸ் நகரின் புறநகர்ப்பகுதிகளில் மூன்று இராணுவ நிலைகளைப் புரட்சியாளர்கள் கைப்பற்றியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சர்க்கரைவள்ளி கிழங்கு

சர்க்கரைவள்ளி கிழங்கு உலகின் மிகச் சத்தான உணவுகளில் ஒன்றாகும். சர்க்கரை வள்ளி கிழங்கில் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன. அதில் விற்றமின் ஏ மற்றும் சி சத்துக்கள் குறிப்பிடத்தக்கது. ஆராய்ச்சி மூலம் சர்க்கரை வள்ளி கிழங்கில் ஒட்சி சனற்ற நிறமியாகிய பூநிலம் ஏராள மாக உள்ளது என்று நிரூபிக்கப்பட் டுள்ளது. இது புற்றுநோய்ய தடுக்கும் குணம் கொண்டது.. இது கடின உலோகங்கள் மற்றும் பிராணவாயு உறுப்புக்களில் உண்டாகும் ஆபத்தை குறைக்கிறது. ஒட்சிசனற்ற பண்புகள் சர்க்கரை வள்ளி கிழங்கின் சேமிப்பு நொதிகளை உற்பத்தி செய்கின்றது-. சர்க்கரை வள்ளிக் கிழங்கு சேதமடைந்து இருப்பின் தன்னுடைய பகுதிகளை சரிசெய்து கொள்ள அண்டிஅக்சி டெண்ட் திறனைப் பயன்படுத்தி சரி செய்து கொள்கிறது. ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சர்க்கரை வள்ளிக் கிழங்கை உணவில் சேர்த்து சாப்பிட்டு வாழ்வை ஆரோக்கியமாகுங்கள்.




**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## வசம்பின் மருத்துவ குணங்கள்

இயற்கையில் கிடைக்கும் ஒவ்வொரு மூலிகையிலும் ஒவ்வொரு மருத்துவ குணம் உள்ளது. அதை முறையாகப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். அதற்கு அதில் உள்ள மருத்துவ குணங்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். வேப்பிலை, வில்வம், அத்தி, துளசி, குப்பைமேனி, கண்டங்கத்தரி, கீழா நெல்லி, வசம்பு என சொல்லிக் கொண்டே போகலாம். இதில் பிள்ளை வளர்ப்பான் என்று அழைக்க கூடிய வசம்பின் மருத்துவ குணத்தைப் பார்க்கலாம்.

A : P õ µ ì  P õ » Ó ì (Acorus Calamus) என்ற அறிவியல் பெயர் கொண்ட இது ஆங்கிலத்தில் ஸ்வீட் ஃப்ளாக் (Sweet Flag) என்று அழைக்கப்படுகிறது. பாட்டி வைத்தியம் என்று எம் முதியோர்கள் அடிக்கடி வீட்டு வைத்தியத்தில் சேர்ப்பது இந்த வசம்பைத் தான். கிராமத்தில் உள்ளவர்கள் இன்றளவிலும் சரி காய்ந்த வசம்பை சூடுபடுத்தி பாலில் கலந்து குழந்தைகளுக்கு கொடுப்பார்கள்.இதனால் குழந்தைகளுக்குப் பசியின்மையோ, சிறிய வகையான தொற்றுநோய்களோ வராமல் தடுக்கப்படுகிறது. இதனாலேயே இது பிள்ளை வளர்ப்பான் என்று கூறப்படுகிறது. சுடு தண்ணீர், கருவேப்பிலை, மஞ்சள் தூள் ஆகியவற்றுடன் வசம்பைக் கலந்து கிருமி நாசினியாகப் பயன்படுத்தலாம்.

வசம்பை தூள் செய்து இரண்டு தேக்கரண்டி அளவு எடுத்து தேனில் கலந்து சாப்பட்டால் எல்லா வகையான தொற்று நோய்களும் நீங்கி விடும். இது எல்லா நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

இதில் முக்கிய விடயமாக சொல்ல வேண்டுமென்றால் வசம்பை விஷம் அருந்தியவர்களுக்கு உடனேயே இரண்டு, மூன்று தேக்கரண்டி கொடுத்தால் விஷம் வெளியே வந்து விடும்.

கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் பயன்படுகிறது.

பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் பசியைக் கொடுக்கவும், சோம்பலை நீக்கவும் வசம்பு பயன்படுகிறது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஓரிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஓரிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

சிரேஷ்ட பிரஜைகளின் 12 மாத நிலையான வைப்புகளுக்கு +17.5% வட்டி


(வ.மொ.வ.வீ. 17.5%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865606
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602


# பக்கவாதத்தைத் தடுக்க



பக்கவாதம் என்பது மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவதாலோ அல்லது இரத்தக் குழாய்களில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுவதாலோ, மூளைக்குச் சரியான அளவில் இரத்தம் செல்லாமல் இருப்பதால், முளையின் செயல்பாடு குறைகிறது.

எவ்வாறு மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவதால், எந்த ஒரு செயலையும் சரியாக செய்ய முடியாமல் போகிறது. உதாரணமாக, சரியாகப் பேச, புரிந்து கொள்ள முடியாதது, சில உறுப்புகள் இயங்காமல் போவது என்பன.

இத்தகைய பிரச்சினை 50 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்குத் தான் பொதுவாக ஏற்படும். அதிலும் இந்த பிரச்சினை பரம்பரை பரம்பரையாக இருந்தாலும், வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் காரணமாகவும் ஏற்படும். இதில் பரம்பரையாக வந்தால், குணப்படுத்துவது கடினம். ஆனால் மற்ற காரணங்களால் வந்தால் சரிசெய்து விட முடியும்.

மேலும் உடலில் அதிக உயர் இரத்த அழுத்தம், அதிக கொலஸ்ட்ரால், இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாயிருத்தல் போன்றவற்றாலும் ஏற்படும். ஆகவே அத்தகையவற்றை சரிசெய்ய நாம் உண்ணும் உணவுகளில் கட்டுப்பாடு வேண்டும். எந்த ஒரு உணவையும் கட்டுப்பாடின்றி சாப்பிடக்கூடாது.

*பீன்ஸ் மற்றும் மற்ற ஃபோலேட் நிறைந்த உணவுகள்:*

பீன்ஸ் இதயத்திற்கு மட்டுமின்றி மூளைக்கும் மிகவும் சிறந்த உணவுப்பொருள். ஏனெனில் இதில் விற்றமின் பி ஃபோலேட் அதிகம் நிறைந்துள்ளது. மேலும் பக்கவாதத்தைத் தடுக்கும் சிறந்த உணவுகளில் பீன்ஸ் மற்றும் ஃபோலேட் அதிகம் உள்ள உணவுப் பொருள்களை சாப்பிட்டால், பக்கவாதம் வராமல் தடுக்கலாம் என்று ஆய்வின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது.


சலிப்பு வேண்டாம் வரட்சியான சருமம் உங்களது இனிய நாளைப் பாழாக்கிவிடும்!

புதுப்பொலிவுடனான, மென்மையான, மெருதுவான, அழகான சருமத்தைப் பெற்றுக்கொள்ள NNO இனை உபயோகியுங்கள்

உங்களுடைய வாழ்க்கைமுறை எத்தனை நெருக்கடி மிக்கதாக இருப்பினும், நீங்கள் தினசரி காலையில் எழுகின்ற சமயங்களில் காலப்போக்கில் ஏற்படக்கூடிய உலர்ந்த சருமம், மடிப்புக் கோடுகள், சுருக்கங்கள் மற்றும் கண்ணிற்கு கீழ் ஏற்படுகின்ற கருவளையங்களை அகற்றி புதுப்பொலிவுடன் தோற்றமளியுங்கள். அழகாகவும், புதுப்பொலிவுடனும், போஷாக்கு நிறைந்ததாகவும் திகழும் அழகான சருமத்தைப் பெற்று பேணிப்பாதுகாத்து அதன் பயனாக நீங்கள் தினந்தோறும் அனைவரையும் வசீகரியுங்கள்.

30 தடவைகள் உபயோகத்திற்கான பெட்டி ஒன்று ரூபா 750




NNO
போஷாக்கு தரும் இரவுநேர எண்ணெய்
ஜோஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் ஈ யினால் வளமாக்கப்பட்டது
சருமத்திற்கு போஷாக்கை வழங்கி புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது

We care
அனுமதிப்பத்திரம் வழங்கியவர் அவுஸ்திரேலியாவில் மெகா லைபியன்ஸ் நிறுவனம்
74/A, 2வது மாடி, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
துரித அழைப்பு : +94 77 3410071 | தொலைபேசி : +94 11 4305366 | இயைணத்தளம் : http://www.megawecare.lk/nno


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தக்காளி மாதிரி வருவதற்கு... ...அதனைச் சாப்பிடுங்கள்



காய்கறிகளில் மிகவும் எளிதிலும், விரைவாகவும் ஜீரணமாகக் கூடியது தக்காளி. உடம்புக்கு ஆரோக்கியம் அளிக்கும் மூன்று விதமான புளிப்புகளும் தக்காளிப் பழத்தில் இருக்கின்றன. முதலாவது, அப்பிள் பழத்தில் இருக்கும் போலிக் அமிலம்.இது பழத்துக்குப் புளிப்புத் தன்மை தருகிறது. இரண்டாவது எலுமிச்சம்பழம், சாத்துக்குடி, நாரத்தை முதலியவற்றில் இருக்கும் சிட்ரிக் அமிலம் இதன் புளிப்பு கிருமிகளைக் கொல்லக் கூடியது. மூன்றாவது போஸ்ப்போரிக் அமிலம். இது நரம்பு நாடி, நாடி சம்பந்தமான நோய்களுக்கு மிகவும் நல்லது.சாப்பாட்டில் அரிசி அதிகமாக இருப்பதால் உடம்புக்கு நோய் தான் ஏற்படும். தக்காளி உடலில் சேரும் கிருமிகளைக் கொன்று, அவை சுரக்கும் அமிலங்களைச் சக்தியற்றவையாக்குகிறது. பலவீனம், சோம்பல் இவற்றை நீக்கிச் சுறுசுறுப்பைத் தருகிறது. இருதய சம்பந்தமான நோய்களுக்கு இது ஏற்றது. தக்காளியில் ஒரு விதமான ரசம் இருக்கிறது. அது உடலில் கட்டியிருக்கும் கபத்தைக் கரைத்து விடுகிறது. எனவே எளிதில் சளி வெளிவந்து விடுகிறது. மலச்சிக்கலை நீக்கவும் ஏனைய உணவுப் பதார்த்தங்களை விடத் தக்காளியில் அதிக அளவில் மக்னீசியம் இருக்கிறது.இதில் மக்னீசியத்தைத்தவிர இரும்பு, பொஸ்பரஸ், பொட்டாசியம், செம்பு, சிறிது கல்சியம் ஆகியவையும் இருக்கின்றன. தக்காளியிலுள்ள மக்னீசியம் எலும்புகளையும் பற்களையும் உறுதிப்படுத்துகிறதுவிற்றமின் சி குறைவு காரணமாக உடலில் அங்கங்கே வீக்கம் ஏற்படும். சக்தியும் குறையும், பல்லும் ஈறும் பலவீனப்படும். உடம்பு வளராமல் குள்ளமாகவே மனிதன் நின்றுவிடுவான். இதையெல்லாம் போக்கக் கூடிய விற்றமின் சி தக்காளியில் அதிக அளவில் கிடைக்கிறது.



# வாய் துர்நாற்றத்தை தடுக்கும் வாசனைப் பொருள்கள்



நல்ல சுவையான உணவுகளை உண்ட பின், வாயிலிருந்து வரும் நாற்றத்தை தாங்கவே முடியாது. ஏனெனில் அதில் பூண்டு, வெங்காயம் போன்றவற்றை அதிகம் சேர்ப்பதால் நாற்றம் ஏற்படுகிறது. வீட்டில் இருக்கும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் தரும் ஒரு சில பொருள்களை மெல்லலாம்.

உணவு உண்ட பின், பாக்குகளை போடாமல் சமையலறையில் இருக்கும் ஏலக்காயை வாயில் போட்டு 20 நிமிடம் மென்றால், துர்நாற்றம் இல்லாமல் இருக்கும். கொத்தமல்லியைச் சாப்பிட்டால் வாய்நாற்றம் போகும் என்பது நம்ப முடியாது தான். ஆனால் உண்மையில் கொத்தமல்லியை உணவுக்கு பின் சாப்பிட்டால் வாய் துர்நாற்றத்தை தடுக்கலாம். உணவில் காரம் மற்றும் மணத்திற்குப் பயன்படும் பொருளான கிராம்பு மற்றும் லவங்கம், வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும்.

மேலும் ஆயுர்வேத மருத்துவத்தில் கிராம்பை சாப்பிட்டால், சளி மற்றும் இருமல் சரியாகி விடும் என்று சொல்லப்படுகிறது.

அத்தகைய சிறப்பான கிராம்பு துர்நாற்றத்தை மட்டும் நீக்காமல், தொண்டை கரகரப்பையும் சரிசெய்யும். நிறைய உணவில் மேலே அலங்கரிக்க புதினாவை எதற்குப் பயன்படுத்துகிறோம் என்று தெரியுமா? உணவு நன்கு கலராக இருப்பதோடு, வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும் என்பதால் தான்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பறக்கும் வீடுகள்












வீடுகள் வானில் பறக்கும் அதிசயமிக்க காட்சிகளை படங்களிலே பார்ப்பதுண்டு. ஆனால் பிரான்சைச் சேர்ந்த ஓவியர் ஒருவர் 'பறக்கும் வீடுகள்' என்ற தலைப்பில் வீடுகள் பறக்கும் வகையிலான ஓவியங்களை வரைந்து பார்வையாளர்களை பிரமிக்க வைத்துள்ளார். மேற்படி தலைப்பில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் வீடுகள் மின்சாரக்கம்பிகளின் தொடுப்பில்; இணைக்கப்பட்ட நிலையில் தொங்கும் வகையிலும் அந்தரத்தில் வீடுகள் பற்றியெரியும் வகையிலும் மற்றும் அந்தரத்தில் தொங்கும் கடைத்தொகுதிகள் என்பனவும் காணப்படுகின்றன.

பிரான்ஸைச் சேர்ந்த லோரன் செஹேரா என்ற ஓவியரே இத்தகைய காட்சிகளை வரைந்துள்ளார். இவரது ஓவியங்களானது டிஸ்னி திரைப்படத்தில் தோன்றும் காட்சிகளை ஒத்தவகையில் காணப்படுகின்றன. இந்த கனவு ஓவியங்களானது புதிய கோணங்களில் வரையப்பட்டுள்ளதுடன் பார்வையாளர்களின் சிந்தனையைத் தட்டியெழுப்பும் வகையில் வரையப்பட்டுள்ளன. மேற்படி 'பறக்கும் வீடுகள்' ஓவியங்களானது கடந்த 25 ஆம் திகதியிலிருந்து பாரிஸில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## சிரித்து பழகும் சீனர்கள்

ஒருவரை வசீகரிப்பதற்காக பலரும் பல யுக்திகளை கையாண்டு கொண்டிருக்கின்ற நிலையில் சீனாவைச் சேர்ந்த சுங்க அதிகாரிகள் ஒருவரை வசீகரிப்பதற்காக சிரிப்புப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். மேற்படி அதிகாரிகள் தமது பற்களில் நீளமான குச்சிகளை வைத்து சிரிப்பு பயிற்சியை பெற்று வருகின்றனர்.

சீனாவின் லியோனிங் மாகாணத்தில் சிரிப்பது எப்படி என்ற கற்கைநெறியொன்று தொடரப்பட்டு வருகிறது. இக் கற்கைநெறியிலே சுங்க அதிகாரிகளுக்கு சிரிப்பது எப்படி பயிற்சி வழங்கப்படுகின்றது.

வாடிக்கையாளர்கள் இடத்தில் சுங்க அதிகாரிகள் தமது தரத்தினை உயர்த்திக்கொள்வதே இப்பயிற்சி நெறியின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. வசீகரத் தன்மை, நெறிமுறை மற்றும் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதாக மேற்படி பயிற்சி நெறி அமைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.




## உலகில் ஒளியப் போகிறீர்களா?
## உலகில் ஒளிரப் போகிறீர்களா?

தகவல் தொடர்புகள் மேலும் மேலும் வளர்ச்சியை நோக்கிக் காலடி எடுத்து வைப்பதால் உலக நாடுகளிடையே, தூரங்களும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே செல்ல, முழு உலகுமே ஒரு அண்டவெளிக் கிராமமாகச் சுருங்கிக்கொண்டே வருகின்றது.

பல்வேறு நாடுகளின் கண்டுபிடிப்புகள், அறிவு, மற்றும் பொருளாதார உதவிகளும் வேறு நாடுகளுடன் விரைவாகவே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. இவ்வாறு தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒன்றிணைந்து முன்னேறிச் செல்லும் நாடுகளிடையே கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தகவல், குடிவரவு குடியகல்வு நடவடிக்கைகள் போன்றே காணிகளை முகாமைத்துவம் செய்வதும் உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுடன் அமைவது அத்தியாவசியமாகிறது. உங்கள் காணிகளுக்கு இலங்கைக்குள் மட்டுமன்றி உலகினால்





ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைச் சான்றிதழ்களை வழங்குதல் "நில சக்தி" செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இதில் வெளிநாட்டு முதலீடுகளுக்காக உங்கள் காணியைப் பயன்படுத்த நீங்கள் எண்ணினால், இலகுவாக நம்பிக்கையை உறுதி செய்துகொள்ள முடிவதுடன், இலங்கை முதலீடுகளுக்கான சிறந்ததொரு நாடு என்று உலகெங்கும் பிரபலமடையும்.

எனவே "நில சக்தி" செயற்றிட்டத்திற்கு ஆதரவை வழங்குவது நம் அனைவரதும் கடமையாகும்.

விசாரணைகளுக்கு
செயலாளர்
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு**
"மிஹிகத்த மதுற",
1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல
தொலைபேசி: 011 2885070, பக்ஸ்: 011 2887442
மின்னஞ்சல்: pmltd@sltnet.lk
இணையம்: www.bimsaviya.gov.lk

බිම් සවිය
நில சக்தி
BIM SAVIYA



## உங்களுக்கு தெரியுமா?

- 2011ஆம் ஆண்டில் உலகில் 366 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டார்கள். மேலும் 280 மில்லின் மக்கள் குளுக்கோஸ் சகிப்பாற்றல் குறைவினால் பாதிக்கப்பட்டார்கள்.
- உலகில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட மக்களில் அநேகமாக ஐந்தில் ஒரு பங்கினர் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் வசிக்கிறார்கள்.
- நிரிழிவு நோயாளர்களில் 50% சதவீமானோர் தங்கள் நிலைமை பற்றி அறியாதிருக்கிறார்கள்.
- நீரிழிவு நோய் சம்பந்தப்பட்ட கோளாறினால் ஒவ்வொரு 7 வினாடியிலும் ஒருவர் மரணமடைகிறார்.
- நிரிழிவு நோயினால் மரணம் அடைவோரில் 48 சதவீதமானோர் 60 வயதிற்கு உட்பட்டவர்களாவர்.
- கூடுதலாக இளம் வயதினரே இந்த ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள்.
- ஒவ்வொரு 10 வினாடியிலும் 3 பேர் நீரிழிவு நோய்க்கு ஆளாகிறார்கள்.
- ஆரோக்கியமான உணவுகளை உண்பதன் மூலமும் கூடுதலான உடல் செயற்பாடுகளின் மூலமும் வகை 2 நீரிழிவு நோய் ஏற்படுவதை 80% சதவீதம் வரை கட்டுப்படுத்தலாம்.

"ஆரோக்கியமான வாழ்க்கை ஒரு விருப்பத் தேர்வு அல்ல கட்டாய தேவையாகும்"
**சீனியை தள்ளுங்கள்**

சோலோவுக்கு மாறுங்கள்




சோலோ உடன் உங்கள் தேநீர் ஆரோக்கியமானது.

HEMAS
Enriching Lives


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EXECUTIVE DEVELOPMENT PROGRAMMES

JAFFNA
TRAINING

PUBLIC SPEAKING
& PRESENTATION SKILLS
21st November 2012 | 9am to 5pm

MANAGEMENT SKILLS
DEVELOPMENT
22nd November 2012 | 9am to 5pm

VENUE Gnanams Hotel, Jaffna
INVESTMENT Rs. 5,900/= + VAT (Per programme)

" Register for both training programmes and get 20% off on the second programme "

Register Now
Call 0727 002 002 OR
email workshop@rensj.com

McQuire Rens & Jones
www.rensj.com

# திகில் படங்களைப் பார்த்தால் கலோரி குறையும்

உடற்பயிற்சி செய்தால் உடலில் கலோரி குறையும் என்பார்கள். ஆனால் திகில் படங்களைப் பார்ப்பதன் மூலம் உடலில் கலோரி குறையும் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

உடல் பருமன் பிரச்சினை இன்றைக்குப் பலரையும் வாட்டி வதைக்கிறது. உடலை இளைக்க வைக்க டயட்டில் இருக்கின்றனர் பலர்.



உடற்பயிற்சி செய்து கலோரியைக் குறைக்க முயற்சி செய்கின்றனர் ஏராளமானோர். ஆனால் புதிதாக திகில், திரில்லர் படங்களை பார்ப்பதன் மூலம் உடல் இளைக்கும் என்று கூறி ஆச்சரியப்படத்தக்க செய்தியை வெளியிட்டுள்ளனர் ஆய்வாளர்கள்.

90 நிமிடங்கள் திகில் படங்கள் பார்த்தால் 113 கலோரி குறையும் . 1980 ஆம் ஆண்டு வெளியான தி சைனிங் என்ற திரைப்படத்தைப் பார்த்தால் 184 கலோரிகள் குறையும் . ஜாஸ் படத்தை பார்த்தவர்களுக்கு 158 கலோரிகள் குறைவடைந்ததாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 10 திகில்படங்களைப் பார்வையிட பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் இதயத்துடிப்பு, ஒட்சிசன் எடுத்துக்கொள்வது, காபன் டை ஒட்சிசன் வெளியேற்றம் போன்றவைகளின் செயற்பாடு கண்காணிக்கப்பட்டது. திரில்லர் படங்களைப் பார்க்கும் போது உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களினால் அவர்களின் கலோரி எரிக்கப்படுவது கண்டறியப்பட்டது. திகில் படங்களினால் மனிதர்களின் நாடித்துடிப்பு அதிகரிக்கிறது இதயத்துடிப்பை எகிறுகிறது என்கிறார் வெஸ்ட்மினிஸ்டர் பல்கலைக்கழக பேராசிரியர் ரிச்சர்ட் மெக்கன்சி. இதனால் ரத்த ஓட்டம் உடலில் வேகமாகச் செலுத்தப்படுகிறது. தேவையற்ற கலோரிகள் குறையும் என்கின்றனர் ஆய்வாளர்கள். திகில் படம் பார்ப்பவர்கள் ஆசன நுனிக்கு வந்து விடுவார்கள். தலைமுடி கூட சிலருக்கு குத்திட்டு நிற்கும். தலையணையை அழுத்தமாக பிடித்துக்கொள்வார்கள். இதுபோன்ற செயல்கள் உடலுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களின் உடலில் தேவையற்ற கலோரிகளை குறைவடையச் செய்கின்றனவாம்.

STUDY MEDICINE (MD / MBBS)

குறைந்த செலவில் ஆங்கில மொழியில் வைத்திய பட்டப்படிப்பு

இலங்கையில் மருத்துவ உயர்கல்வி வழங்கலில் முன்னோடி நிறுவனமாகிய PATHE STUDY MEDICINE தகைமை வாய்ந்த மாணவர்களை மலேசியா, பெலாறுஸ், பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலுள்ள பிரசித்திபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு மிகவும் கட்டுப்படியான செலவில் வைத்தியப் பட்டப்படிப்பு கற்பதற்காக இலங்கையிலிருந்து அனுப்பிவருகின்றது.

| | |
|---|---|
| MD 6 years | Vitebsk State Medical University (Belarus – Eastern Europe) |
| MD 6 years | Angeles University Foundation - (Philippines) |
| MBBS 5 years | College of Medical Science (Kathmandu University) – Nepal |

இந்த மருத்துவ பட்டதாரிநெறிகள் உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organization) அங்கீகார அனுமதிப் பட்டியலில் அங்கீகாரம் பெற்றவையும் அட்டவணைப்படுத்தப்பட்டவையும் ஆகும்.

| | |
|---|---|
| SLMC | Sri Lankan Medical Council (Sri Lanka) |
| ECFMG | Education Commission for Foreign Medical Graduates (USA / Canada) |
| GMC | General Medical Council (United Kingdom) |
| AMC | Australian Medical Council (Australia) |

2012 நவம்பர் பிரவேசத்துக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அழையுங்கள் : 0777 662233

PATHE Study Medicine
No 111 ½ Maya Avenue, Colombo 06.

PATHE STUDY MEDICINE

TVS

wego
BUILT TO PLAY

வாங்குங்கள், ஓட்டிச்செல்லுங்கள்
பதிவுசெய்தல் இலவசம்
(நவம்பர் 1 முதல் 15 வரை மட்டுமே)




பொடி பலன்ஸ் தொழில்நுட்பம்

முன்பக்க ஈர்ப்பு மையம்

சிறந்த உறுதிநிலையைப் பெறுவதற்காக பெரிய 12" சக்கரம்

எடுப்பான தோற்றமும் உருக்கிலான சட்டமும்



ரூ. 190,982 + vat

பின்வரும் நிறங்களில் கிடைக்கும்



Cappucino Brown
Golden Beige
Midnight Black
Sporty White

உடனடி அழைப்பு:
0770 777 888

TVS Lanka (Pvt) Ltd.
இல.757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு 14, இலங்கை.
தொலைபேசி: +94 11 4 605200
தொலைநகல்: +94 11 4 614909
வலைத்தளம்: www.tvslanka.lk

பிரதான காட்சியறை - 0114 605246
நகர காட்சியறை - 0114 710416
ஜா-எல காட்சியறை - 0114 979189

GENUINE PARTS
தொலைபேசி: 0114 605242/228

நாடெங்கிலும் இணையற்ற பராமரிப்புச் சேவை மற்றும் உதிரிப்பாக நிலையங்கள்
தொலைபேசி: 0112 325800

SCOOTER OF THE YEAR 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் உயர்திரு தம்பியப்பா சண்முகலிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சைவபரிபாலனசபையின்
தலைவரும், முதுபெரும் சமயத்தொண்டரும், சைவக்காவலரும்
சைவத்திருமுறை மாநாடுகள் பலவற்றை ஏற்பாடுசெய்து
சைவத்தமிழறிவாராய்ச்சியை நிலைநிறுத்தியவரும் எமது
ஆலய அனாவர்த்தன மகாகும்பாபிஷேக விழாவை
நெறிப்படுத்திய சைவப்பெருந்தகை பெரியார், சைவச்சீலர்,
சைவத்தண்ணளியாளர்

**உயர்திரு. தம்பியப்பா சண்முகலிங்கம்**

பெருந்தகையின் சிவபதப்பேறு குறித்த

### இரங்கல் அஞ்சலி

சீலம் அறம் தருமம் வாய்மை ஒழுக்கநெறி
தானம் தவம் மற்றும் தண்ணளியுங் கொண்டநல்லோன்!
தேசம் முழுதும் தழுவிப் பணிசெய்தோன்!
பேசப்பெரிதும் பெருமை தரவல்ல
ஞாலம்புகழும் சைவநெறி பரப்பும்
பாசம் மிகக்கொண்ட பண்புடையோன்!
சைவத்தமிழ் ஆராய்ச்சித்துறையில் விருப்புடையன்
உண்மைநெறி கற்றுணர்ந்த உத்தமனாம்
பெரியார்சண்முகலிங்கம் பெயரினியார்!
எண்ணித் திருப்பணிகள் பலபுரிந்தாய்!
மண்ணில் சிவநெறியை வாழவைத்தாய்!. ஐயாவே!
நுமை ஈன்றமண்ணின் மகத்துவமோ? வாய்த்தபெரும்
பெற்றோரோ? எண்ணிக்கருமம் புரிந்தநல்வித்தகமோ?
மண்ணில் வாழ்நல்அறிஞர் பலர்தொடர்பால்
நும்பணிகள் வென்றபல நிகழ்வுகளை நாம் கண்டோம்!
அல்லல்,அவலம் எதனையுமே வென்று நின்று
நல்ல பலமாநாடு நயமாய் நடத்துவித்த வல்லவனே!
சிவநெறியை வாழ்வித்த சிவத்தொண்டர்!
சைவசித்தாந்தம்,திருமுறைகள்,கிரியைவழி பிரசாரம்
செய்த பெரும் தலைவா! - நின்னுள்ளம்
என்றும்,இனியும் தமிழ் சைவவளர்ச்சியையே
அல்லும் பகலும் அவாவியதை நாமறிவோம்! ஐயகோ!
தில்லைச் சிவன் பாதம் சென்றடைந்து
இனியெதிர்காலத் திட்டங்கள் தீட்டும் திருவுளமோ நுந்தனுக்கு!
மண்ணில் எமைவிட்டு நீர் தனித்துச் சென்றதற்கு
வேறென்ன நியாயம் நாம் கற்பிப்போம்! காவலனே!
உம் பணிகள் எண்ணி வியக்கின்றோம்!
எம்மை வழிநடத்தும்நல்லபல திட்டங்கள் ஆவலுடன் வேண்டுகிறோம்
புன்சிரிப்பால் எமைக்கவர்ந்த பெருந்தலைவா!
சைவநெறி வித்தகரே! - தவிக்கின்றோம் உமையிழந்து! நின்றன்
ஆத்மசாந்திக்காய் அம்பலவன் அடிதொழுதுவெம்பி அழுகின்றோம் உமையிழந்து!
தவிக்கும் குடும்பத்தார்க்கு ஆறுதல்கள்,அஞ்சலிகள்!
ஐயா! நும் நற்பணிகள் அகிலத்தில் நிலைத்து நிற்கும்!
வெல்லும் நினதுபுகழ் மேதினியில் நிச்சயமாய் !

**ஆ.நவரெத்தினராசா,** செயலாளர்,
**கோவிற்குளம் சிவாலயம், அருளகம் சிறுவர் இல்லம்,**
**சிவன் முதியோர் இல்லம், வவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/4397)(2-6-7)